கல் மாடும்
கல் நெஞ்சும்



குருசாமியின் குத்தூசிக் கட்டுரைகள்

குத்தூசி குருசாமி
நூற்றாண்டு விழாவை நோக்கி...

“

குத்தூசி குருசாமி : பெரியாரின் இளைய தோழர். சுயமரியாதை இயக்கம் உருவாக்கிய அறிவாளர்களில் முதன்மையானவர். இயக்கத்தின் வளர்ச்சிக்கும் சுயமரியாதை, சமதர்ம கொள்கையின் வெற்றிக்கும் தனது அனைத்தையும் வழங்கி உழைத்தவர்களில் இவரும் ஒருவர். சாதியொழிப்பு கருத்தியலை பெண் விடுதலையி னூடாக விளக்கியவர், விவாதித்தவர். திராவிட தேசியத் தைத் தாழ்த்தப்பட்டவர்களின் நலம், விடுதலை ஆகிய வற்றுடன் தொடர்புபடுத்தியவர். டாக்டர் அம்பேத்கரின் கருத்துகளைத் தமிழகத்தில் பரப்பியவர்களில் முதலானவர், முக்கியமானவர். கம்யூனிஸ்டுகளின் தோழர், வர்க்கமும் சாதியும் இணைந்த ஒடுக்குமுறையைத் தெளிவாக அடையாளப்படுத்தியவர். பண்பாட்டு தளத்தில் புதுமை களைப் புகுத்தியவர், அத்தளம் விரிவடைய செயல்பட்டவர். உலகளாவிய அறிவு மரபுகள் பலவற்றை – பகுத்தறிவு மரபு, நாத்திக மரபு, பொருளாயுத மரபு, பண்பாட்டு விமர்சன மரபுகள், மொழி குறித்த சிந்தனைகள் முதலியவற்றை – தமிழ்ச் சூழலுக்கு தனது எழுத்துகளின் மூலமாக, குறிப்பாக தான் தேர்ந்தெடுத்து கொண்ட தனிச்சிறப்பான அங்கத நடையின் மூலமாக அறிமுகப்படுத்தியவர்.

”

கல் மாடும் கல்நெஞ்சும்

குத்தூசி குருசாமி

பொன்னி
2/1758, சாரதி நகர், என்ஃபீல்டு அவெென்யூ,
மடிப்பாக்கம், சென்னை - 600 091.

கல்மாடும் கல்நெஞ்சும்
குருசாமியின் குத்தூசி கட்டுரைகள்

விலை : ரூ. 55

முதற்பதிப்பு : டிசம்பர், 2004

தொகுப்பாசிரியர் : **குருவிக்கரம்பை சு.வேலு**

குருசாமி கோட்டோவியம் : வீர.சந்தானம்
பெரியார் கோட்டோவியம் : புகழேந்தி

ஒளியச்சு : மதர்போர்டு, சென்னை - 600 014.
அட்டை வடிவமைப்பு : ட்ரீம்ஷாப், சென்னை - 600 014.

அச்சு : பொன்னி அச்சகம், சென்னை - 600 091

நூலாக்கம் பற்றி : 1 x 8 டெம்மி
144 பக்கங்கள்
10 புள்ளி எழுத்துகள்
சாதாகட்டு

நூல் வெளியீடு : **பொன்னி**
2/1758, சாரதி நகர்,
என்ஃபீல்டு அவென்யூ,
மடிப்பாக்கம்,
சென்னை - 600 091.

திருவள்ளுவராண்டு 2035 மார்கழி மாதம். பொன்னிக்காக இந்நூலை வெளியிடுபவர் கோ.இந்திராதேவி.

குறிதவறாது சிந்திக்க வைத்தவர் குத்தூசி

தமிழ்ச்சமுதாயம் மௌனத்தில் மூழ்கடிக்கப்பட்டிருந்தபோது மக்களின் பெருமூச்சின் ஊடாகக் கலகக் குரலாக மாறியவர் குத்தூசி குருசாமி அவர்கள்.

ஆதிக்க சாதியில் பிறந்தாலும் முற்றிலும் சாதியத்தைத் துடைத்து எறிந்தவர். சுய சாதி மீது கடும் வெறுப்பைக் கக்கியவர். தந்தை பெரியாரின் கருத்துக்களுக்கு வளம் சேர்த்ததோடு ஒடுக்கப்பட்ட மக்களின் குரலை முன்னெடுத்துச் சென்றவர்.

பழமைப் பாசிப் படர்ந்த கலைகளையும் இலக்கியங்களையும் ஏளனம் செய்தவர், கிண்டல் பார்வையில் சிரிக்க வைத்தவர் என்றாலும் குறிதவறாது சிந்திக்க வைத்தவர். இவற்றுக்கு ஊடாக பழமையை ஆழமாகக் கற்றவர். வரலாறு, புராணம், இலக்கியம் என்று எதைப் பற்றி எழுதினாலும் தீர்க்க தரிசனத்தோடு அணுகியவர்.

சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம், ஆகிய இயக்கங்களின் நிறுவன மூலவர்களில் ஒருவராக விளங்கியவர்.

தந்தை பெரியார், தலைவர் காமராசர், பொதுவுடைமைப் புயல் ஜீவா, அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் ஆகிய அனைத்துப் பெரு மக்களாலும்போற்றப்பட்டவர் குத்தூசி குருசாமி அவர்கள்.

பழமைக் கருத்துக்களிலிருந்து விடுபட்டு புரட்சிக்கவிஞராகப் புறப்பட்ட பாரதிதாசனின் புதுமைக் கவிதைகளைத் தொகுத்து முதன்முதலாக தமிழகத்துக்கு வழங்கியோர் குஞ்சிதம் - குருசாமி ஆகியோர்தான்.

பிற்போக்கு அடிப்படைவாதிகள் வெறித்தனத்தோடு பழமை மீட்பில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிற காலகட்டமிது. மக்கள் நலம் நாடுகிற பகுத்தறிவாளர்கள், முற்போக்காளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு இயங்க வேண்டிய தேவையான நேரத்தில் குத்தூசி குருசாமி நூற்றாண்டு விழா தொடங்கியுள்ளது. அனைத்துத் தரப்பினரும் அவருடைய படைப்புகளை ஆயுதமாக ஏந்தவேண்டும் என்ற நோக்கத்தில் அவருடைய முதன்மையான நூல்களைத் தொடர்ந்து வெளியிட இருக்கிறோம்.

குத்தூசி குருசாமி பகுத்தறிவியக்கத்தின் கலங்கரைவிளக்கு, ஒரு சகாப்தம், தியாகத்தின் திருவுருவம். பொதுவாழ்க்கையைப் பணம் தேடும் வழியாக அமைத்துக் கொள்ளாதவர். வாழ்வின் இறுதிவரை எளிமையாக வாழ்ந்தவர். ஏழையாகவே மறைந்தவர். பெருமிதமிக்க மதிப்புக்குரியவரான குத்தூசி மறக்கப்பட்டவராக ஏன் மாற்றப்பட்டார்? பகுத்தறிவாளர்கள் தங்கள் முன்னோடிகளை மறக்கலாமா? மறக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் குத்தூசி குருசாமி கட்டுரைத் தொகுப்புகளைக் கொண்டு வருகிறோம்.

குத்தூசி குருசாமி இன்னும் நினைவிற்குரியவராக இருக்கிறார் என்றால் அதற்கு முழு முதற்காரணமானவர் வேதவித்தகர் குருவிக்கரம்பை சு.வேலு அவர்கள்தான். இந்நூல்களின் தொகுப்பாசிரியரும் அவரே.

குருசாமியின் படைப்புகளைக் கண்போல் பாதுகாத்து வருபவர்கள் குருவிக்கரம்பை வேலு, கழிஞ்சூர் செல்வராஜு ஆகியோராவர்.

குஞ்சிதம் - குருசாமி இணையரின் பங்களிப்பைக் கண்டெடுத்து போற்றுபவர்கள் மார்க்சிய சிந்தனையாளர்கள் வ.கீதா அவர்களும் எஸ்.வி.ராஜதுரை அவர்களும் ஆவர். தம் இடைவிடா எழுத்துப் பணி மூலம் இன்னமும் குத்தூசி குருசாமியை நினைவுபடுத்திக் கொண்டிருப்பவர் சின்னக்குத்தூசி அவர்கள்.

பெரியார் முன்னுரையோடு 'பலசரக்கு மூட்டை' எனும் பெயரில் 1948ஆம் ஆண்டு ஒரு நூலும், புதிய குத்தூசித் தொகுப்பு எனும் பெயரில் 1953ஆம் ஆண்டு ஒரு நூலும் வெளிவந்தது. அவ்விரு நூல்களையும் நான்கு தொகுப்புகளாகப் பகுத்து **அம்பே சிவம், கல்மாடும் கல்நெஞ்சும், மியூசிய நாதர் கோவில், தோற்பதே நல்லது** எனும்பெயர்களில் வெளியிடுகிறோம்.

இந்நூல்களுக்கு முன்னுரை எழுதியவர்கள் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், வ.கீதா, எஸ்.வி.ராஜதுரை, ஏ.பி.வள்ளிநாயகம் ஆகியோராவர்.

நூலுருவாக்கப் பணியில் ஒத்துழைப்பு நல்கி ஒளியச்சு செய்தவர் நண்பர் பாலமுருகன் அவர்கள். ஒருசில நூல்களை ஒளியச்சுக்கோர்வை செய்தவர் எம் புதல்வி பா.சங்கீதா அவர்கள். வெளியீட்டுப் பணிகளில் பல்வேறு நிலைகளில் நெறிப்படுத்தியவர்கள் பேராசிரியர் இரா.இளவரசு, க.சந்திரசேகரன், முனைவர் க.மா.வேணுகோபால் ஆகியோராவர்.

இவர்கள் அனைவருக்கும் எம் நெஞ்சம் நிறைந்த நன்றி.

- பொன்னி

சுயமரியாதை இயக்கம் உருவாக்கிய அறிவாளர்களில் முதன்மையானவர்

குத்தூசி குருசாமி ஃ பெரியாரின் இளைய தோழர். சுயமரியாதை இயக்கம் உருவாக்கிய அறிவாளர்களில் முதன்மையானவர். இயக்கத்தின் வளர்ச்சிக்கும் சுயமரியாதை, சமதர்ம கொள்கையின் வெற்றிக்கும் தனது அனைத்தையும் வழங்கி உழைத்தவர்களில் இவரும் ஒருவர். சாதியொழிப்பு கருத்தியலை பெண் விடுதலையினூடாக விளக்கியவர், விவாதித்தவர். திராவிட தேசியத்தைத் தாழ்த்தப்பட்டவர்களின் நலம், விடுதலை ஆகிய வற்றுடன் தொடர்புபடுத்தியவர். டாக்டர் அம்பேத்கரின் கருத்துகளைத் தமிழகத்தில் பரப்பியவர்களில் முதலானவர், முக்கியமானவர். கம்யூனிஸ்டுகளின் தோழர், வர்க்கமும் சாதியும் இணைந்த ஒடுக்கு முறையைத் தெளிவாக அடையாளப்படுத்தியவர். பண்பாட்டு தளத்தில் புதுமைகளைப் புகுத்தியவர், அத்தளம் விரிவடைய செயல்பட்டவர். உலகளாவிய அறிவு மரபுகள் பலவற்றை - பகுத்தறிவு மரபு, நாத்திக மரபு, பொருளாயுத மரபு, பண்பாட்டு விமர்சன மரபுகள், மொழி குறித்த சிந்தனைகள் முதலியவற்றை - தமிழ்ச் சூழலுக்கு தனது எழுத்துகளின் மூலமாக, குறிப்பாக தான் தேர்ந்தெடுத்து கொண்ட தனிச்சிறப்பான அங்கத நடையின் மூலமாக அறிமுகப்படுத்தியவர்.

குருசாமியின் மேற்குறிப்பிட்டுள்ள அக்கறைகள் அனைத்தும்இந்த தொகுப்பிலுள்ள கட்டுரைகளில் வெளிப்பட்டுள்ளன. இரண்டு அல்லது மூன்று பக்கங்களுக்குள் - ஒரு மிக கனமான செய்திகளையும் சிக்கலான விளக்கங்களையும் அவர் உள்ளடக்கியுள்ளதுடன், அவற்றை வாசகரின் மனத்தில் பதியவைக்க, நினைவில் தக்கவைக்க தொடர்ந்து சுவையான வகையில் மொழியைக் கையாண்டுள்ளார். இக்கட்டுரைகள் நம்மைச் சிரிக்க வைக்கின்றன, நம்மில் அருவருப்பையும் எரிச்சலையும் தோற்றுவிப்பவை யாய் உள்ளன. சாதி, பார்ப்பனீயம், போலி தேசியம் ஆகியவற்றை நமக்காக அடையாளப்படுத்துகின்றன. அவற்றைக் குறித்து நம்மை சிந்திக்க வைப்ப துடன், அவை குறித்த தெளிவான நிலைப்பாட்டை நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றன.

இக்கட்டுரைகளை இவ்வாறாக பிரிக்கலாம் :

- பார்ப்பனர், பார்ப்பனீயம் ஆகியவற்றை அன்றாட வாழ்வின் நிகழ்வுகளிலும் நடத்தைமுறைகளிலும் காணப்படுவனவற்றைக் கொண்டு விளக்கும் கட்டுரைகள்
- சுதந்திர இந்திய அரசினைப் பல கோணங்களிலிருந்து விமர்சிக்கும் எழுத்துக்கள்
- சுதந்திர இந்தியாவில் அரசியல் வாழ்வு சீரழிந்து போயுள்ளதை இடித்துரைக்கும் கட்டுரைகள்
- திராவிடம், தமிழ்த் தேசியம், தமிழ்ப் பண்பாடு குறித்த கட்டுரைகள்.
- சுயமரியாதை சமதர்ம கொள்கைகள் தொடர்பான கட்டுரைகள்

இக்கட்டுரைகள் யாவும் 1950 - 51ஆம் ஆண்டுகளில் எழுதப் பட்டவை. தற்கால சூழலை குறித்த செய்திகளையொட்டியே இவை எழுதப்பட்டுள்ள போதிலும், 1930களிலிருந்து குருசாமியின் கவனத்தை ஈர்த்திருந்த சாதி, சமய எதிர்ப்பு, காங்கிரஸ் தேசியத்தின் போலித்தனங்கள், பகுத்தறிவுக்குப் புறம்பான பண்பாட்டு நடவடிக்கைகள் என்பன போன்ற விஷயங்களும் அவற்றையொட்டிய பொதுவான வாதங்களும் இவற்றில் இடம்பெற்றுள்ளன. ஆனால் 1930களில் இவரது எழுத்துகளில் தெரிந்த நன்னம்பிக்கையும், புது உலகம் கண்டிப்பாக படைக்கப்படும், சாத்தியப்படும் என்ற நெஞ்சுறுதியும், உலகத்தின் அறிவு அனைத்தையும் தனது உள்ளங் கைக்குள் அடக்கிவிட்டாற் போன்ற உணர்வை ஏற்படுத்திய அறிவு கம்பீரமும் 1950களில் எழுதப்பட்ட கட்டுரைகளில் சற்று குறைவாகவே காணப் படுகின்றன. தார்மீக கோபம் மேலிட்ட இடத்தில் அங்கதமும் எள்ளலும் காணப்படுகின்றன; இலட்சிய வெறியும் வேட்கையும் இருந்த இடத்தில் விமர்சன பொறுப்பு ஏற்படுத்தும் சலிப்பின் சாயலும் கூடியுள்ளதைக் காணலாம்.

சுயமரியாதை இயக்கம் திராவிடர் கழகமாக பரிணமித்திருந்ததன் பெயரில் ஏற்பட்ட மாற்றங்களாக இவற்றை நாம் கொள்ளலாம். பல்வேறு விதமான சமுதாய பிரச்சனைகளை பல்வேறு நிலைகளிலும், வேறுபட்ட யுத்திகளின் மூலமாகவும் எதிர்கொண்டு செயல்பட்ட ஒரு இயக்கம், எல்லாவற்றையும் அக்குவேறாக ஆணிவேறாக பிரித்துப் போட்டு, புரட்டிப் பார்த்து ஆய்ந்தறிந்த அரசியல், இந்திய வரலாற்றைத் தலைகீழாக மாற்றியமைப்பதை தனது இலட்சியமாகக் கொண்டு செயல்பட்ட எண்ணற்ற இளைஞர்களின் கனவுகள் - இவை அனைத்தும் 'திராவிடம்' என்ற சொல்லுக்குள் அடக்கப்பட்டு திராவிட தேசியம் என்ற ஒன்றினை ஆதாரமாகக் கொண்டு செயல்பட வேண்டிய வரலாற்றுத் தேவைக்கு

ஆட்பட்டுப்போயின. கனவுகளுக்கு எல்லைகள் ஏற்பட்டன, எதிர்ப்புக்கு வரையறுக்கப்பட்ட இலக்குகள் உருவாயின, காலத்தைப் புரட்டிப் பார்த்த புரட்சிகரமான அறிவானது வரலாற்று சூழ்நிலைமைகளுக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுப் போனது.

குருசாமி இந்தச் சவாலை அவருக்கே உரிய வகையில் எதிர் கொண்டார். நகைச்சுவை, பகடி, அங்கதம் ஆகியவற்றை மேலும் துல்லிய மாக கையாளத் தொடங்கினார். புதிய கருத்துகளை அறிமுகப்படுத்து வதற்குப் பதில் பழையனவற்றை புரிந்துகொண்டு புறந்தள்ள வேண்டிய தேவையைத் தொடர்ந்து வலியுறுத்துவதை தனது கடமையாகக் கொண்டார். சமதர்மம், புரட்சி குறித்து ஓயாது முழங்கியவர், இவற்றை கட்டுப்படுத்துவன யாவை, அரசியலுணர்வும் அறிவும் வளராமலிருக்க ஆன்மீகமும் முட்டாள் தனமான நம்பிக்கைகளும் எந்தெந்த வகைகளில் காரணமாக உள்ளன என்பன குறித்து தொடர்ந்து எழுத வேண்டியதன் தேவையை உணர்ந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, சுதந்திர இந்திய அரசின் முரண்பட்ட தன்மை, மதச்சார்பின்மை போன்ற விஷயங்களில் வெளிப்பட்ட அதன் மெத்தனம், சுதந்திர இந்தியர்வின் அரசியல் வாழ்வில் ஏற்பட்டிருந்த சீரழிவுகள் ஆகியனவற்றை குறித்து உடனுக்குடன் எழுத வேண்டியிருந்ததை காலத்தின் கட்டாயமாக ஏற்று செயல்பட்டார். அதேசமயம்தனக்கு வேறொரு கடமையும் வாய்த்திருந்ததை அவை உணர்ந்திருப்பார் போலும் தமிழர்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் சக்திகளில் பெருஞ்சக்தியாக உருவாகிக் கொண்டிருந்த சினிமாவையும் அதை சுற்றி ஏற்பட்டிருந்த பண்பாட்டு அரசியலையும், இவற்றின் நீட்சியாக அரசியல் சமுதாயத்தில் வேர்கொள்ள தொடங்கியிருந்த 'நடிப்பு'ப் பண்பாடும் குருசாமியின் விமர்சன அறிவை சோதித்தன. இவற்றைக் குறித்து இவர் நிறைய எழுதவும் காரணமாக யிருந்தன - இந்தப் பின்னணியில்தான் தமிழர் சமுதாயம் குறித்து அவருக்கு ஏற்பட்டிருந்த அவநம்பிக்கையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். பார்ப்பனர்களைச் சாடுவதைப் போலவே இன்னும் சொல்லப் போனால் சற்றே கூடுதலாக தமிழர்களை, அதாவது பார்ப்பனரல்லாதவரை அவர் சாடியிருப்பதையும் இக்கட்டுரைகள் நமக்கு உணர்த்துகின்றன.

எதிர்மறையான விமர்சன பார்வையை மட்டுமே பல கட்டுரைகள் வெளிப்படுத்தினாலும், ஆக்கப்பூர்வமான, இலட்சிய நியாயத்துடன் கூடிய கருத்துகளை முன்வைக்கும் கட்டுரைகள் சிலவும் இத்தொகுப்பில் உள்ளன. பெண் விடுதலை, கம்யூனிசம், உழைக்கும் மக்களின், உழைப்பின் உள்ளார்ந்த உன்னதம், அறிதல் என்ற செயல்பாட்டிற்கேவுரிய மாண்பு ஆகியவற்றை பற்றிப் பேசும் கட்டுரைகளில் சுயமரியாதை இயக்கத்தின் ஆதிநாட்களில் மாற்றுலகம் குறித்தும் புரட்சி குறித்தும் பேசிய, முழங்கிய குருசாமியை காணமுடிகிறது.

குருசாமி போன்றோரின் வாழ்க்கையும் எழுத்துகளும் இத்தனை காலமும் நமக்கு படிக்க கிடைக்கப் பெறாமல் போனதற்கு காரணம் தமிழக அரசியல், அறிவுச் சூழல்களில் காணப்படும் அறிவு - விரோத பண்பாடும், பகட்டுத்தனமான ஆரவாரமான நமது பொது வாழ்க்கையும்தான். (வேலுவின் நூல்தான் குருசாமியை பற்றி பொது புத்தியில் பதிந்துவிட்ட மௌனத்தை முதலில் உடைத்தது.)

பார்ப்பனீயம் இவரைப் போன்றவர்களின் அறிவுச் செயல்பாடுகளை வெறுத்து ஒதுக்குவதென்பது ஒன்றும் புதிதல்ல - இவ்வாறு செய்வதன் மூலமும், ஒதுக்க முடியாதவரை உள்வாங்கிக் கொண்டு ஒன்றும் இல்லாமல் செய்வதன்மூலமும் தான் தனது மேலாண்மையை அது கட்டமைத்து கொள்கிறது. ஆனால் திராவிட இயக்கத்தவர்கள் தமது அறிவு மரபினை, புரட்சிகர மரபினை மறப்பதும், தேவையில்லை என்று அலட்சியப்படுத்து வதும் எவற்றின் பொருட்டு, எதை கட்டிக் காப்பாற்றுவதற்காக என்ற கேள்வியையும் நாம் எழுப்ப வேண்டியுள்ளது.

திராவிட இயக்கத்தின் இலட்சியங்கள், வரலாறு, சாதனைகள் ஆகியன குறித்து அன்றும் சரி, இன்றும் சரி விமர்சனங்கள் தொடர்ந்து முன்வைக்கப் பட்டுள்ளன. அன்று விமர்சித்தவர்களில் பெரும்பாலானோர் பார்ப்பனர்கள், அல்லது பார்ப்பனீயத்தை ஏற்றுக்கொண்ட, விமர்சனப்படுத்தாத அறிவாளிகள் (இவர்களுள் கம்யூனிஸ்டுகளும் அடங்குவர்). இன்று அவ்வியக்கத்தின் அடிப்படைகளை, குறிப்பாக பெரியார் போன்றவர்களின் கருத்தியலை, செயல்பாடுகளை விமர்சிப்பவர்களில் பலர் தலித்துகளாக உள்ளனர் - இவ்விமர்சனங்கள் குறிப்பிட்ட வரலாற்று சூழ்நிலைமைகளைக் கருத்தில் கொள்ளாமலும் தக்க சான்றுகளைக் கைகொள்ளாமலும், தமது விவாதக் களத்தைக் கறாராக வரையறுக்காமலும் தமக்குள் குமுறிக் கொண்டிருக்கும் கோபத்தை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு வழங்கு கின்றன என்றால், அதற்கொரு முக்கிய காரணம் திராவிட இயக்கம் தனது வரலாற்று பங்களிப்பைக் குறித்த ஆழமான, விமர்சன ரீதியான பார்வையைப் பொது அறிவிற்குள் புகுத்தாமல் போனதுதான். மேலும் திராவிட இயக்கம் உருவாக்கிய அரசியல் கட்சிகள் அவ்வியக்கத்தின் இலட்சியங்களை எத்தகைய வகைகளில் மறுத்தன, எவ்வாறெல்லாம் வரம்புக்குட்படுத்தின என்பன போன்றவற்றைக் கறாராக அலசும் விமர்சனப் பண்பாடும் இங்கு வளராமல் போனதால் அவ்வியக்கத்தைப் பற்றிய வரலாற்றுரீதியான பார்வை உருவாகாமலே போய்விட்டது.

அது மட்டுமல்ல - திராவிட கட்சிகளின் அரசியல் புனைவுகள் அவை செயல்படுத்திய வர்க்க, சாதி அரசியலின் முரண்பாடுகளை மூடி மறைத்தன. திராவிட கட்சிகளின் அறிவாளிகளும் தலைவர்களும் தாங்கள் புனைந்த சொல்லாடல்களுக்கு வளம் சேர்க்க, நியாயம் வழங்க தங்களுக்குச்

சௌகர்யமான, தங்களது செயல்பாடுகளை உறுதிப்படுத்தக்கூடிய மரபு ஒன்றினை வரையறுத்துக் கொண்டனர். சாதியொழிப்பு கருத்தியலைக் கொண்டு சாதி பாகுபாடுகள் நிறைந்த சமுதாயத்தின் மேல் - கீழ் வரிசை முறையை நியாயப்படுத்தவும் பாதுகாக்கவும் முற்பட்டனர். வரலாறு காணாமல் போனது, வாய்ப்பேச்சும் வாதமும் மட்டுமே எஞ்சி நின்றன.

நம் அனைவருக்கும் பொதுவான அந்த வரலாற்றை நாம் தொடர்ந்து கற்றறிவதும் விமர்சனப்படுத்துவதும் கடந்த காலத்தை குறித்த நமது புரிதலை செழுமைப்படுத்த உதவுவதுடன், தற்கால வாழ்க்கைக்குரிய வரலாறாக, காலத்தின் கொடையாக நாம் அதனை சுவீகரிக்கவும் உதவும் என்பதில் சந்தேகமில்லை. மேலும் நமது மரபு, வரலாறு குறித்த விவாதங்களை நாம் மேலும் சீராக, நேர்மையாக வளர்த்தெடுக்கவும் இது உதவும்.

அந்த வகையில் இதுபோன்ற நூல்கள் தொடர்ந்து வெளியிடப்பட வேண்டும்.

- வ.கீதா

கல்மாடும் கல்நெஞ்சும்

1. ஒரு கண்ணில் சுண்ணாம்பு

(17.4.50)

ஒரு கண்ணில் வெண்ணெயும் மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் பூசுவது கூடாது என்பார்கள்! வெண்ணெயில் மாவைக் கலந்து பிசைந்து விற்கின்ற ஆஸ்திக வெண்ணெய் வியாபாரிகள் மலிந்திருக்கும் இந்தக் காலத்தில் கூட வெண்ணெயைக் கண்ணில் பூசிக் கொள்ள மாட்டார்கள், மனிதர்கள்! நம் கடவுள்கள்தான் எதை எங்கே வேண்டுமானாலும் பூசிக்கொள்ளும்! ஊற்றிக்கொள்ளும்! வாயில் ஊற்ற வேண்டியதைத் தலையில் ஊற்றிக் கொள்ளும்! நாக்கினால் சுவைக்க வேண்டியதை மேலே பூசிக் கொள்ளும்!

பக்தர்கள் தங்களுக்குப் பிரியமானதைத் தான் கடவுளுக்குக் காணிக்கையாகத் தருகிறார்கள்! சில கடவுள்களுக்கு கள்ளும் சுருட்டும் தருகிறவர்கள் கூட இருக்கிறார்கள்! ஆதலால் மூக்குப் பொடி போடுகிற பக்தர்கள் மூக்குப்பொடி தரலாம்! முகத்தில் பவுடர் போட்டுக் கொள்கிறவர்கள் கடவுளுக்கும் (அல்லது அம்மனுக்காவது) ஒரு டின் 'குட்டிக்குரா' பவுடர் தரலாம்!

ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் மற்றொரு கண்ணுக்குச் சுண்ணாம்பும் பூசுவது தப்புத்தான்! வெண்ணெயையே பூசக்கூடா தென்றால் சுண்ணாம்பை மட்டும் பூசலாமா?

ஹரித்வாரத்தில் நடைபெற்ற கும்பமேளாவுக்கு இந்திய சர்க்கார் 36 லட்ச ரூபாய் செலவழித்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

''நான் ஜாதிச் சார்பற்றவன், எல்லா ஜாதிகளும் எனக்கு ஒன்றுதான்,''

என்று கூறிக்கொண்டே 5 ரூபாய் டிக்கெட் வாங்கிக் கொண்டு ஜாதி மாநாட்டுக்குச் சென்றால் என்னைப்பற்றி என்ன நினைப்பீர்கள்?

''மதுவிலக்குக்காகவே நான் மூன்று தடவை சிறைக்குப் போயிருக்கிறேன்,''

என்று சொல்கிற ஒருவர் கள்ளுக்கடை கண்ட்ராக்ட் எடுத்தால் அவரைப்பற்றி என்ன நினைப்பீர்கள்?

''பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசம் பிடித்திட்டுக் கண்ணால் மயக்குவதை'' எதிர்த்து நின்று முற்றுந் துறந்ததாகக் கூறுகின்ற முனி புங்கவர் ஒருவர், வேசி வீட்டில் கிருஷ்ணலீலை செய்துகொண்டிருந்தால் அவரைப்பற்றி என்ன நினைப்பீர்கள்?

'மதச் சார்பற்ற சர்க்கார்' என்று பல்லவி, அநுபல்லவி, சரணம் ஆகிய மூன்றிலும் வைத்துப் பாடிவருகின்ற மத்திய சர்க்கார் ஹரித்வார கும்பமேளத்திற்காக 36 லட்ச ரூபாய் செலவழித்திருக்கிறார்கள்!

வேளாங்கண்ணி மாதாவின் திருவிழாவுக்கும், நாகூர் கந்தூரி விழாவுக்கும் இனிமேல் விகிதாசாரம் பணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்!

ஒரு கண்ணில் வெண்ணெயும் மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் தடவமாட்டார்கள், நீதி நெறி நிற்கின்ற நேரு சர்க்கார்! நிச்சயம் இது!

கிருஸ்தவர்களும் முஸ்லிம்களும் மத்திய சர்க்காருக்கு எழுதி உடனே தங்கள் தங்கள் பண்டிகைகளுக்குப் பண உதவி பெறுமாறு நினைவூட்டுகிறேன்!

மதச்சார்பற்ற சர்க்காராகையால் நிச்சயம் கொடுப்பார்கள்! கேட்பதையும் சற்றுத் தாராளமாகக் கேளுங்கள்! கருமித்தனம் வேண்டாம்! மூன்று லட்சத்திற்குக் குறையாமல் கேளுங்கள்!

புதுக்கோவில் கட்டுகிறவர்கள் கூடப் பணம் கேட்கலாம்! மதச் சார்பற்ற சர்க்காராதலால் நிச்சயம் பணம் கிடைக்கும்!

2. வால் நட்சத்திரம்!

(18.4.50)

''டேய் மண்டு! காந்தி காந்தீன்னு அடிச்சீண்டிருக்கியே! அவர் பேச்சைக் கேட்டு 4 தடவை ஜெயிலுக்குப் போய் உன் படிப்பையும் பாழாக்கீண்டியே! உன் காந்தி கொல்லப்பட்டபோது வால் நட்சத்திரம் விழுந்துதாடா?''

''என்னங்க சார், என்னை மண்டூங்கறீங்க? ரமணரிஷி செத்தபோது வால் நட்சத்திரம் விழுந்ததுக்காகத் தானே இப்படிச் சொல்றீங்க?''

''ஆமாண்டா, ஆமாம்! சும்மாவா விழுந்தது? தென் கிழக்குத் திசையை நோக்கியாக்கும் போச்சு! சர்க்கார் தலைமைக் காரியதரிசியே சொல்லியிருக்கிறாரே! 'மெயில்' பேப்பரைப் படிச்சியோ?''

''போங்க சார்! சும்மா புளுகாதீங்க சார்! நான் தான் விழுந்ததைப் பார்த்துக்கிட்டிருந்தேனே! தென் மேற்கிலிருந்து புறப்பட்டு வடகிழக்குத் திசையை நோக்கீல்ல போச்சு? ஆமா! அதனாலே அவர் ரொம்ப பெரியவராயிட்டாரோ? மனுஷர்களுக்கு சேவை செய்வதிலே மகாத்மா கால்தூசிகூடப் பெறமாட்டாரே, உங்கள் ரமணரிஷி! 10 - 15 மாசமா உடம்பிலே வீக்கங் கண்டு தானே செத்தார்? அதிலென்ன பெருமை? தினம் எத்தனையோ அநாமதேயக்கிழடுகள் இந்த மாதிரிச் சாகுதே! எங்கள் மகாத்மா இப்படிச் சாகவில்லையே! நெஞ்சில் குண்டு பாய்ந்து தன் கொள்கைக்காக இரத்தத்தையல்லவா சிந்தினார்? மானிட சிப்பிக்குள்ளே மகாத்மா ஒரு தனி முத்து சார்! முத்து! இந்த மாதிரிச் சாவு எந்தத் தலைவனுக்கு சார் கிடைக்கும்?''

''டேய்! அதிகப் பிரசங்கி! னோக்கு ஒண்ணுந் தெரியாதுடா! பகவான் ரமணரிஷி சாகல்லேடா! அது தெரியுமோ? ஜீவன் முத்தரான பகவான் விதேஹ முத்தராகிவிட்டார்! அவர் சடலம் வீழ்ந்ததேயொழிய சான்னித்தியம் விழவில்லையடா! தனிப்பெருந் ஜோதி மறைந்து விட்டதடா!''

''அப்படீங்களா? அந்த ஜோதி சுரண்டிவைத்த சொத்துக்க ளெல்லாம்?''

''டேய் மகாபாபி! மகாபாபி? சுரண்டியதல்லடா! பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியதடா! அதெல்லாம் அப்படியே இருக்குடா! கோசம்ரட்சணை, வேதப் பிர்ாமணாள் சம்ரட்சணை, தம்பி நிரஞ்சனா னந்த் ஸ்வாமி குடும்ப சம்ரட்சணை - ஆகிய சத் காரியங்களுக்காக 'உயில்' எழுதி வைத்திருக்கிறாரடா!''

''உயிலா? ஜோதியாங்க எழுதுச்சு? அடாடா! என்ன ஞானோதயம்! எவ்வளவு பற்றற்ற பரந்த மனம்! ஞானயோகி யென்றால் இவரல்லவோ ஞானயோகி! என் தலைவர் மகாத்மா, மனைவி மக்கள் இருந்தும் காலணாக் கூட சேர்த்துவைக்க வில்லை! உங்கள் பகவான் பிரம்மசாரி யாகவே வாழ்ந்தும், பல லட்சம் சேர்த்து வைத்து ''உயிலும்'' எழுதி விட்டார்! அடாடா!''

''டேய் குறும்புக்காரா! போதும் உன் கிண்டல்! மூடு, உன் வாயை! நாக்கு அழுகிப்போகும்! ஜாக்கிரதை! பெரியவாளை இப்படிச் சொன்னியோ, அந்திய காலத்தில் உன் உடம்பில் புற்று வைத்துத்தான் புழுப் புழுத்து மரணாவஸ்தைப்பட்டுச் சாகப் போகிறாய்!''

''அப்படீங்களா? அப்படியானால் நான் சாகும்போதும் வால் நட்சத்திரம் விழுங்களா? என்னமோ போங்க! ஊரிலே மழை யில்லாட்டிப் போனாலும் உங்க காட்டில்தான் மழை! பனகால் ராஜா இறந்ததற்குத் தலையங்கம் எழுதாத மவுண்ட்ரோடு மகாவிஷ்ணுக

ளெல்லாம் ரமண ரிஷிக்காகத் தலையங்கம் எழுதுகிறதென்றால், முட்டாள்கள் எண்ணிக்கை எவ்வளவு பெருகி விட்டது என்பதுதானே தெரிகிறது!''

(இந்தச் சமயத்தில் சுமார் 15 வயதுள்ள சிறுவன் ஓடி வந்தான்.)

''அப்பா! அப்பா! நான் படிப்பை நிறுத்தீடப் போறேன்! போதும் இந்தப் படிப்பு! திடீரென்று எனக்கு ஒரு மாதிரி ஜோதி தோணித்து! திருவண்ணாமலை தீபம் மாதிரித் தெரிஞ்சுது! நான் அங்கே போகப் போறேன்! இந்த உடலம் அநித்தியம் அப்பா! உலகமும் அநித்திய மப்பா!''

''டேய்! டேய்!! முட்டாள்! என்னடா சொன்னே? உடலம் அநித்தியமா? ஓரணாவுக்கு கவுரிபாஷாணம் வாங்கித் தின்னுட்டாவது சாகேண்டா! சோம்பேறிப்பயல்! ஜோதி தோணித்தாம், ஜோதி!''

இந்த மாதிரி அர்ச்சனை செய்தார், தந்தையார்! வரப்போகும் ரமணரிஷி மீது! இது நீதியா? நீங்களே சொல்லுங்கள்!

3. லெட்டர் பேப்பர் தலைவர்!

(21.4.50)

தலைவர்களில் பல ரகங்களுண்டு! அவைகளில் இதுவுமொன்று என அறிக!

ஒரு வேலையுமே செய்யாமல் சுகவாசியாகக் காலந்தள்ளிக் கொண்டு, அதே நேரத்தில் நாட்டின் பெருந் தலைவர்கள் பட்டியலில் சேர்ந்திருக்கிறவர்களை எப்படித் தெரிந்துகொள்வது?

அவர்களுடைய லெட்டர் பேப்பரைப் பார்த்துத்தான்! யாரோ ஒரு அய்யர், ஏதோ ஓர் ஊரில்,

பஞ்சாயத்து போர்டுத் தலைவர்
கோவில் டிரஸ்டி
உணவுக்கமிட்டித் தலைவர்
காங்கிரஸ் கமிட்டித் தலைவர்
கூட்டுறவு சங்கத் தலைவர்
ஜில்லா போர்டு மெம்பர்
பாங்க் உப தலைவர்

ஆகிய இத்தனை மகத்தான பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண் டிருக்கிறார் என்றும், இவ்வளவும் பார்த்துக் கொண்டு வக்கீல் தொழிலும் செய்கிறார் என்றும், பட்டுக்கோட்டையிலிருந்து ஒரு நண்பர் எழுதி யிருக்கிறார்!

வக்கீல் தொழிலில் நம்மவர்கள் முன்னேற வில்லையென்றால் எப்படி முன்னேற முடியும்? சகல பொறுப்புக்களையும் தங்கள் தலையிலேயே தூக்கிப் போட்டுக்கொண்டால் அல்லவோ முடியும்?

இதென்ன ஆச்சரியம்? எனக்கு அறிமுகமான லட்சாதிபதி ஒருவர் இருந்தார்; ஏழை பங்காளர். அதாவது சென்னையிலிருக்கும் ஏழைகளின் வீடுகளையெல்லாம் தம் வீடுகளாகவே கருதி, கடன் மேல் கடன் கொடுத்து தம் சொந்த வீடுகளாக்கிக் கொண்டவர்! (ஏழைபங்காளர் ஏழைகளின் சொத்துக்களைப் பங்கு போட்டுக் கொள்பவர்!) அவருடைய லெட்டர் பேப்பரில் சரிபாதி அவரது பதவிகளைக் குறிப்பதாகவே இருக்கும். அவ்வளவு அமைப்புக்களில் அவர் தலைவர்; அல்லது உபதலைவர்! அல்லது அரையணாவும் கொடுத்தறியாத புரவலர்! (போஷகர்!)

இன்னொருவர் இந்த மாதிரி லெட்டர் பேப்பரை கண்ணாடி போட்டே வைத்திருக்கிறார்!

இன்னொருவர் எங்கெங்கேயோ இருக்கிறவைகளுக்கெல்லாம் தலைவராகவும், பொருளாளராகவும், செயலாளராகவும் இருந்து வருகிறார்!

ஒரே மனிதர் இத்தனை மகத்தான பொறுப்புக்களை எப்படி ஏற்று நடத்தி வருகிறார்? அதிசயந்தான்! இப்பேர்ப்பட்ட லெட்டர் பேப்பர் தலைவர்களைச் சாமான்ய மனிதர்களாகவே கருதி விடக்கூடாது! அற்புதப் பிறவிகள்! ஒரே நேரத்தில் எத்தனை வேலைகளை வேண்டுமானாலும் பார்க்கக்கூடியவர்கள்! அஷ்டாவதானிகள்! சதாவதானிகள்!

இவர்களை யழைத்து 'எஞ்சின் டிரைவர் வேலையும் அதே நேரத்தில் 'கார்டு' வேலையும் பார்த்துக் கொள்ளச் சொல்லுங்கள்! 'முடியாது' என்று கூறவே மாட்டார்கள்! உடனே லெட்டர் பேப்பரில் சேர்த்து விடுவார்கள்! நடிகர் வேலையையும் படுதா இழுக்கும் வேலையையும் ஒரே நேரத்தில் பார்த்துக் கொள்வார்கள்! கவர்னர் வேலையையும் கான்ஸ்டபிள் வேலையையும் ஒரே சமயத்தில் பார்த்துக் கொள்வார்கள்! ஆனால் ஒரே ஒரு நிபந்தனை! 'லெட்டர் பேப்பரில்' இவைகளை யெல்லாம் அச்சிட வேண்டும்!

''வேறு அவசர அலுவல் இருப்பதனால் வர முடியாமலிருப்பதற்கு மிக வருந்துகிறேன்,''

என்பதையும் அச்சுப்போட்டு வைத்துக்கொண்டால் நல்லது!

காந்தியாருக்குச் சொந்த 'லெட்டர் பேப்பர்' இருந்ததா? அப்படியானால் என்னென்ன பதவிகளை அவர் அதில் அச்சிட்டிருந்தார்? என்பதை அறியவேண்டும் என்பது என் ஆசை!

எனக்குத் தெரிந்த தலைவர் ஒருவர் 'மூட்டைப் பூச்சி ஒழிப்பு சங்கம்' தவிர மற்றெல்லா சங்கங்களிலும் முக்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார்!

என்னைப் பொறுத்த மட்டில் நான் 'மூச்சு விடுவோர் சங்கத்தின்' தனிப் பெருந்தலைவராகிவிட்டேன்! இதன் ஆண்டு விழாவுக்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று உறுப்பினர் அனைவரும் என்னை மன்றாடிக் கேட்டுக் கொண்ட போதிலும், 'அலுவல் மிகுதியால்' ஒப்புக் கொள்ள முடியவில்லை என்பதை இப்போதே தெரிவித்துவிட்டேன்!

4. ''நானா உதவாக்கரை?''

(24.4.50)

''ஏண்டாப்பா, மந்திரிகள் மாதிரி சதா ஊர் சுற்றிக் கொண்டே யிருக்கே! ஏதாவதொரு வேலையைப் பார்க்கக் கூடாதா? சுத்த சோம்பேறியா யிருக்கிறியே! மற்றவர் உழைப்பில் இப்படி உடலை வளர்க்கிறாயே, வெட்கமா யில்லையா?''

''இந்தாப்பா! இந்த மாதிரி பேசுறதை இன்னையோட விட்டுடு. நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துட்டேன்; இனிப் பொறுக்க முடியாது. இனி நீ என் பேச்சுக்கு வரக்கூடாது!''

''டேய்! என்னடா சொன்னே? உன் பேச்சுக்கா? அவ்வளவு பெரிய மனுஷனாயிட்டியோ, நீ? உன்னை படிக்க வச்சு, துணி மணி வாங்கிக் கொடுத்து, இத்தனை வருஷமா வளர்த்து எருமைக்கடா மாதிரி ஆக்கினது யார் என்பதைக் கூட மறந்துட்டுத்தானே இப்படிப் பேசுறே? மானங் கெட்ட பயலே! சுத்த உதவாக்கரை!''

''போதும்! நிறுத்தப்பா! யாரைப் பார்த்து உதவாக்கரைங்கிறே! நான் சினிமாவிலே சேரப்போறேன், தெரியுமா? நான் பெரிய நடிகரானப் புறம் என்கிட்டே வந்து தொங்கப்போறே! 'என் மகன்தான் இவன்' என்று நீ அப்போ சொல்வே!''

''அடாடா! எவ்வளவு பெரிய நிபுணர் இவர்? சினிமாவிலே சேரப் போறாராமில்லே, சினிமாவிலே! என்ன யோக்யதையடா இருக்கு உனக்கு சினிமாவிலே சேர? புத்தி யிருக்கா? நல்ல படிப்பிருக்கா? அல்லது நடிப்பாவது இருக்கா? ஒண்ணுமே இல்லியேடா!''

''அதனாலேதான் பெரிய நடிகராகலாமென்ற நம்பிக்கையிருக்கு! தெரியுமா? நாலாவது வரையிலே நீ படிக்க வச்சிருக்காட்டிப் போனா, நிச்சயம் லட்சம் லட்சமாச் சம்பாதித்திருப்பேன்! இப்போ இந்தப் படிப்புத்தான் இடைஞ்சலாயிருக்கு, தெரியுமா?''

''படிப்பா? சுத்த தற்குறியா இருக்கனுமூங்கிறியோ? ரொம்ப சரி! உன்னைப்போல் ஒரு முட்டாளை நான் பார்த்ததே யில்லையடா! நீ

எங்கேயாவது ஒழிஞ்சு போனாலும் நிம்மதியாயிருப்பேன். உன்னைக் காணும்போதெல்லாம் என் வயிறு வேகுதுடா! கிராப்பு வேறே! ஷர்ட் வேறே! இதிலெல்லாம் குறைச்சலில்லே! ஒரு தம்பிடிக்குப் பிரயோஜன மில்லாட்டிப் போனாலும் வீண் ஜம்பத்திலே மட்டும் குறைவைக் காணோம்! அது சரி! நீ என்னதான் நினைச்சுக்கிட்டிருக்கே? சொல்லித் தொலையேண்டா!''

''நானா? சினிமாவிலே சேர்ந்து பணம் சம்பாதிச்சுகிட்டு அப்புறம்மந்திரியாகப் போகிறேன்.''

''மந்திரியாகவா? இதென்னடா, கிறுக்கா பிடிச்சிருக்கு, உனக்கு?''

''கிறுக்கல்லப்பா, கேளு! இந்தக் காலத்திலே எல்லாத் தலைவர்களை விடவும் ஜனங்களிடத்திலே அதிக செல்வாக்கிருக்கிற வர்கள் யார் தெரியுமோ? சினிமா நடிகர்கள்தான்! நாளைக்கு வருகிற தேர்தலிலே, நல்ல சினிமா நடிகரில் நாலு பேர் காங்கிரஸ் பேராலே தேர்தலுக்கு நின்றால், அவர்களை எதிர்த்து எந்த தியாகி அல்லது பணக்காரன் நின்றாலும் ஜெயிக்க முடியுமா? நல்லா யோசித்துப் பார்!''

''அப்படியா? சரி! ஜெயிக்கிறதாவே வச்சிக்கோ! ஜெயிச்சா மந்திரியாகிவிட முடியுமோ?''

''ஆகா! பணமிருக்கே, பணம்! அதைவீசி எறிஞ்சா மந்திரி வேலைதானே வருது! நம் நாட்டுக்கு அரசியல் சட்டம் வகுக்கிறதுக்காகப் போன ஆசாமிகள் பெயரெல்லாம்உனக்குத் தெரியுமல்லோ?''

''மந்திரியா வருவதுண்ணா அவ்வளவு சுளுவாப் போச்சுண்ணா நினைக்கிறே? நல்ல படிப்பு வேணும்! அனுபவம்வேணும். நாணயம் வேணும்! அன்பு வேணும்! தெரியுமா?''

''அதுதான் தப்பு! நீ அந்தக் காலத்து மந்திரிகளை நினைச்சுகிட்டுப் பேசுறே!' இதெல்லாம் எதுவுமே இல்லாட்டித்தான் மந்திரியாக முடியும், இந்தக் காலத்திலே! தெரியுமா? பிற்காலத்திலே மந்திரியா வரப்போகிற உன் மகனை நீ இப்படி 'உதவாக்கரை'ன்னும், 'சோம்பேறி'ன்னும் திட்டுறியே!''

''அடெ, சே! விளையாட்டுக்காகத் திட்டினா, நிஜமுன்னா நினைச்சுக்கிட்டே! (அடியே! உன்னைத் தானே!) தம்பிக்கு ஓவல்டின் கொண்டாந்து கொடு டீ! என் சட்டைப் பையிலே யிருந்து மூணு ரூபா எடுத்தாந்து கொடு! ஏதோ புது சினிமாப் படம் வந்திருக்காம்! தம்பி! போயிட்டு வர்றியாடா? பத்திரமா பார்த்துப் போ! நடு ராத்திரியிலே வர்ற போது தனியா நடந்து வராதே! ஏதாவது மோகினி கீகினி பிடிச்சுக்கப் போவுது! ரிக்ஷாவிலே ஏறிவா! அடியே! இவன் வந்தப்புறம் திருஷ்டி சுற்றிப் போடுடீ! நான் கடைக்குப் போகணும், நாழியாச்சு!''

(சினிமா நடிப்புக்கும் மந்திரி வேலைக்கும் தகுதியோ, திறமையோ தேவையில்லை என்று இந்த 'உதவாக்கரை' நம்பி யிருப்பதைப் பற்றி வாசகர்கள் என்ன நினைக்கிறார்களோ, அறியேன், அம்பலவாணா!)

5. சிவப்பு வர்ணம்!

(27.4.50)

''சீனா முழுதும் சிவப்பாகி விட்டதாமே! உண்மைதானா ஸார்? திபேத் எல்லைக் கோட்டைச் சேர்ந்த மலைப் பிரதேசத்திலிருந்த 10,000 தேசிய சீனப் படைகளை விரட்டிவிட்டு கம்யூனிஸ்ட் சீனப் படை அந்த இடத்தையும் பிடித்துக்கொண்டு விட்டதாமே? இத்துடன் சீனாவில் ஒரு கை அகலங் கூடப் பாக்கியில்லையாமே?''

''ஆமா, ஸார்! நான் கூடப் படித்தேன்! தென்மேற்கு சீனா பூராவும் அந்தப் படுபாவிகள் வசமாகிவிட்டதாமே? அதுமட்டுமா? ஹெய்னான் தீவையும் பிடித்துவிட்டார்களாம்! தலைநகர் போய்விட்டதாம்! தேசீய சீனர்கள் குதிகால் பிடரியில் படும்படியாக ஓடிவிட்டார்களாமே!''

''அடேயப்பா! இதென்ன இவ்வளவு வேகமாகப் பரவிக்கொண் டிருக்கிறார்கள்? இந்தோ சீனாவிலும் அவர்கள் தொல்லையாம்! தாய்லாண்டிலும் தொல்லையாம். பர்மாவிலும் தொல்லையாம்! மலேசியாவிலும் தொல்லையாம்! இந்தியாவை (பாரத பூமியை)ச் சுற்றி இப்படி ஒரே களேபாரமாயிருக்கே! இந்தியாவுக்கும் ஒரு வேளை பரவிவிடுமோ?''

''சே! சே! இந்தியாவுக்கா? அதெல்லாம் முடியாது, ஸார்! 'ஹிந்து மதம் உள்ளவரையில் இங்கே கம்யூனிசம் பரவாது' என்று மேல்நாட்டுப் பத்திரிகை எழுதிற்றே! அது ரொம்ப சரி, ஸார்!''

''அதுதான் மதச் சார்பற்ற சர்க்கார் என்று நம் சர்க்கார் சொல்லி விட்டார்களே! இவர்களா ஹிந்துமதத்தைக் காப்பாற்றப் போகிறார்கள்?''

''மதச் சார்பற்ற சர்க்காரா? யார் சொன்னது? அதெல்லாம் விளையாட்டுக்கு ஸார்! பாகிஸ்தானை ஏமாற்றுவதற்கு ஸார்! நம் போஸ்டல் ஸ்டாம்புகளைப் பாருங்கள்! எதுமதச் சார்பற்ற சர்க்கார்? அசல் ஹிந்து மத சர்க்காரே தான்! சந்தேகம்வேண்டாம்!''

''சீன கம்யூனிஸ்ட் சர்க்காரை ஒப்புக்கொண்டு இந்தியத் தூதுவரைக் கூட அங்கு அனுப்பிவிட்டார்களே! அது என்னமோ எனக்குப் பிடிக்கவே யில்லை! எதற்காக அந்தச் சர்க்காரை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்? கம்யூனிசத்தை ஒப்புக்கொண்டதாகத் தானே அர்த்தம்?''

''அப்படியல்ல! கம்யூனிஸ்ட் சர்க்காரை ஒப்புக்கொண்டதால், 'தயவுசெய்து எங்கள் நாட்டிற்குத் தொல்லை கொடுக்காமலிருங்கள்,' என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்வதாக அர்த்தம். அவ்வளவுதான்!''

''அப்படியா, சங்கதி? இப்போதுதான் விஷயம் விளங்கிற்று! எங்கே கம்யூனிஸம் நம் நாட்டுக்கும் வந்து விடுமோ என்று எனக்கு எப்போதும் ஒரே நடுக்கமாகவே இருக்கிறது!''

''இங்கேயாவது, கம்யூனிஸமாவது, வருவதாவது? கண்ட கண்ட இடத்தில் சுட்டுத் தள்ளினால் எப்படித் தலை நீட்ட முடியும்? வெலிங்டன் காங்கிரஸ்காரரைச் செய்ததை விடக் கொடுமையாக நடத்துராளே, நம்ப சர்க்காரிலே! கம்யூனிசம் இங்கே தலை தூக்குமா?''

''அய்யய்யோ! அப்படிச் சொல்லாதிங்கோ ஸார்! வெலிங்டனுக்குப் பிறகு காங்கிரஸ் வளர்ந்தது மாதிரியே இங்கேயும் கம்யூனிசம் வளர்ந்துடப்போகுது!''

''நீங்க என்ன ஸார், இப்படிப் பயந்து சாகுறீங்க? சதா கடவுள், மதம், வேதம், சாஸ்திரம், புராணம் தலைவிதி, அதிர்ஷ்டம், ஜோசியம், நல்ல நாள், பண்டிகை - இந்த மாதிரி யெல்லாம் பேசிக் கொண்டும், எழுதிக்கொண்டும், நடத்திக் கொண்டு மிருந்தால், கம்யூனிஸமாவது கத்தரிக்காயாவது?''

''என்னமோ ஸார், சீனாப் படத்தைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை! அவ்வளவு பெரிய தேசமே இரண்டு வருஷத்துக்குள் இப்படி ஒரே சிவப்பு வர்ணமாகிவிட்டதென்றால் நம் நாடு எம்மாத்திரம், ஸார்?''

''ஏன் ஸார், இப்படி நடுங்குறீங்க? அப்படியே மீறி கம்யூனிஸம் வந்தால்தான் என்ன குடி முழுகிப் போகும்? நீர் லட்சாதிபதியா, என்ன? என்னைப்போல நீங்களும்ஓர் அன்றாடம் காய்ச்சிதானே! கம்யூனிசம் வந்தால் உங்களுக்கும் நல்லதுதானே, ஸார்?''

''அய்யய்யோ! இதோ கம்யூனிஸ்ட்! இதோ கம்யூனிஸ்ட்! போலீஸ்! போலீஸ்!! அண்ணாமலைப்பிள்ளை! அண்ணாமலைப் பிள்ளை!! காமராஜ் நாடார்! காமராஜ் நாடார்!! இதோ ஒரு கம்யூனிஸ்ட்! பிடியுங்கள்! அடியுங்கள்! சுடுங்கள்! கொல்லுங்கள்!''

6. உடை வகைகள்!

(28.4.50)

தலை மயிர் வளர்ப்பதில் (அல்லது வெட்டுவதில்) பல வகைகள் இருப்பது போலவும், நெற்றியில் சித்திரம் வரைவதில் பல வகைகள் இருப்பது போலவும், உடைகளிலும் பல வகைகள் இருக்கின்றன.

இம்மாதிரி உடைதான் உடுத்திவர வேண்டும் என்று நீதிஇலாகா சிப்பந்திகளுக்கு சென்னை ஹைகோர்ட் உத்தரவு ஒன்றைப் பிறப்பித் திருக்கிறது. துணி கிராக்கியான இந்தக் காலத்தில் பணப் பஞ்சத்தில் சிக்கியிருக்கின்ற ஏழை குமாஸ்தாக்களும் இதர சிப்பந்திகளும் இஷ்ட மான ஏதோ ஒரு உடையில் வந்தால் என்ன? ஷர்ட் அணியக்கூடாது; கோட் அணியவேண்டும்; திறந்த கோட்டாயிருந்தால் கழுத்தில் சுருக்கு ('டை') போட்டுக் கொள்ளவேண்டும். தலைமயிர் கிராப்பாயிருந்தால் குல்லாய் வேண்டியதில்லை. உச்சுக் குடுமியாகவோ, முழுக்குடுமி யாகவோ, அடுப்புக்கட்டிக் குடுமியாகவோ, சிவலிங்கம் தலையாகவோ இருந்தால் தலையில் (அவரவர் தலையில்) குல்லாப் போடவேண்டும்!

இதென்ன விபரீதமாயிருக்கிறது, பார்த்தீர்களா? நீதி இலாகா குமாஸ்தாக்களுக்கு மட்டும் இந்தத் தண்டனை எதற்காக?

மந்திரிகளிலேயே சிலர் வெட்டியான் வேஷம்போட்ட மாதிரி வருகிறார்களே! இவர்களுக்கெதிரில் ஏழை உத்யோகஸ்தர்கள் மட்டும் சூட்டும்கோட்டும் போட்டுவர வேண்டியதாயிருக்கிறதே! இல்லா விட்டால் மந்திரிகள் முகம் பெண்டாட்டியைச் சாகக்கொடுத்தவன் முகம் மாதிரி மாறிவிடுகிறதே! இது ஏன்?

உடைகளில் பல ரகம் என்று பீடிகை போட்டேனல்லவா?

வரதாச்சாரி உடை! டம்பாச்சாரி உடை! ரமண ரிஷி உடை! கவர்னர் - ஜெனரல் உடை! தேச பக்தர் உடை! சினிமா ஸ்டார் உடை! பள்ளி ஆசிரியர் உடை! பழைய தமிழ்ப் பண்டிதர் உடை!

இப்படியாகப் பல வகைகள் உண்டு! ஒருவர் உடை மற்றொரு வருக்குப் பிடிப்பதே யில்லை! ஒரே தினுசு உடையை அணிகின்றவர் களிலும் வேற்றுமை!

''ஏய்! பட்டிக்காட்டான்! முதுகிலே துணியைப் போடுடா! முதுகு வேர்வை பின்பக்கம் ஒட்டினால் ஒரே நாற்றமாய் நாறும்'', என்கிறார், பஸ் கண்டக்டரும், ட்ராம் கண்டக்டரும், பிரயாணியைப் பார்த்து.

ஆனால் ஒரு புரோகிதர் அதே மாதிரி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால் மூச்சுப் பேச்சுக் கிடையாது! பயபக்தியாக அவர் அருகில் சென்று, ''சாமி! டிக்கட் வாங்கிட்டீங்களா?'' என்கிறார்!

'சாமியின்' முதுகு வேர்வையானது இந்தக் கண்டக்டருக்கு ஜவ்வாது வாசனை யடிக்கும் போலிருக்கு!

ஒரு மந்திரி கதர் ஜிப்பா போட்டுக்கொண்டு, மடிப்புக் கலையாத இரண்டு முழத்துண்டை நான்காக மடித்து சாமி தூக்குகிறவன் மாதிரி (அல்லது சமையற்காரர் மாதிரி) தோளில் போட்டுக்கொண்டு ஹைகோர்ட்டுக்குள் நுழையலாம்!

ஆனால் 50-ம் 60-ம் சம்பளம் வாங்குகின்ற குமாஸ்தாக்கள் மட்டும் இப்படி உடுக்கவேண்டும்; அப்படி நடக்க வேண்டும்!

உடையில் கூட ஏழைக்கு ஒரு விதி! பணக்காரருக்கு ஒரு விதி! விதி மட்டுமா? ஊரார் தராசும் அப்படித்தானே நிறுக்கிறது?

காலஞ்சென்ற வடபாதி மங்கலம்சோமசுந்தர முதலியார் ஒரு மெல்லிய ஜிப்பாவும் ஆறணா சிட்டைத் துண்டுந்தான் அணிவது வழக்கம்!

''பார், அவரை! சாட்சாத் லட்சுமி புத்திரன்! எட்டாயிரம் ஏக்கருக்கு மேல் நிலமுள்ளவர்! பல லட்சக்கணக்கில் ரொக்கமுள்ளவர்! எவ்வளவு ஏழ்மையான உடை உடுத்துகிறார் பார்! இடுப்பில் ஒரே ஒரு 4 முழ மல்வேட்டி! அரைக்காசுக் கில்லாததுகளெல்லாம் ஜரிகை அங்கவஸ்திரம் போட்டுகிட்டு டம்பாச்சாரி மாதிரித் திரியுதுகளே!'' என்று கூறுவதை நானே பலதடவை கேட்டிருக்கிறேன், திருவாரூரில் பள்ளிப் பிள்ளையாயிருந்த காலத்தில்.

ஆனால் அதை நினைத்துக்கொண்டு என்னைப் போன்ற ஆசாமிகள் அதே உடையைப் போட்டுக் கொண்டால், என்ன சொல்கிறார்கள்?

''இதோ! ஒரு அன்னக்காவடி! நல்ல துணிகூட இல்லாமல் திரிஞ்சுக்கிட்டிருக்குது!'' என்றுதான் சொல்கிறார்கள்!

சரி! சரி! நடக்கட்டும்! இந்த அக்கிரமத்துக்கெல்லாம் ஏதாவது ஒரு முடிவு காலம் வராமலா போய்விடும்?

7. அய்யர் தீர்த்தம்!

(16.5.50)

கறுப்புச் சட்டைக்காரன் கலையத்தில் மொண்டு தந்தால், அது வெறும் தண்ணீர்! அதையே 'கல்கி' ஆசிரியர் கெண்டியில் மொண்டு தந்தால் தீர்த்தம்!

மாட்டுக் கொட்டிலில் கிடப்பது சாணி! அதையே கூம்பாச்சியாகப் பிடித்து மிட்டாய்ப் பொட்டலம் மாதிரி வீட்டுக்குள் வைத்தால் பிள்ளையார்!

நம் வீட்டு அரிசியையும் மஞ்சள் தூளையும் கலந்து எதிர் வீட்டு அய்யர் நம் தலையில் போட்டால் அது அட்சதை!

நம் வீட்டுப்பெண்கள் நாட்டியம்ஆடினால், தேவடியாள் சதிர்! அதே நாட்டியத்தை அக்கிரகாரப்பெண்கள் ஆடினால் நடன குமாரியின் பரத நாட்டியம்!

நாம் பிச்சையெடுத்தால் பிச்சை! சங்கராச்சாரியார் பிச்சையெடுத்தால் பிட்சை!

நாம் சிரைக்கிற தொழில் செய்தால் நம்மைத் தீண்டக்கூடாது! அவர்கள் தினசரி காலையில் அதே தொழிலைச் செய்தால் அதற்குப் பெயர் 'ஸெல்ஃப் ஷேவ்!'

நாம் வைத்திருப்பது மளிகைக் கடை; அவர்கள் அதே கடை வைத்தால் அது ப்ரொவிஷன் ஸ்டோர்!

நம் வீட்டுப் பெண்களில் யாராவது ஒழுக்கக் கேடாக நடந்தால் அவள் விபசாரி! ஆனால் அதே தொழிலை அவர்கள் உயர்ந்த ரகத்தில் செய்தால் சினிமா ஸ்டார்!

நாம் ஒரு வேலை செய்துவிட்டுப் பணம் கேட்டால் அதற்குப் பெயர் கூலி! அவர்கள் சோம்பேறி வேலை செய்துவிட்டுப் பணம் கேட்டாலும்அதற்குப் பெயர் தட்சணை!

இவைகளைப்போல் இன்னும் எத்தனையோ உண்டு! அவர்கள் கை பட்டாலே அதில் தனி மகிமையுண்டு! பழங்காலத்தில் மலையாளத்தில் நம்பூதிரிகளுக்கு இருந்த உடற்சேர்க்கை உரிமையை மட்டும் நினைத்தே இப்படிச் சொல்லவில்லை. பொதுவாகவே சொல்கிறேன்!

அவர்கள் மாவிலையினால் தோய்த்து நம் வீட்டில் தெளிக்கும் தண்ணீர் லைசால் மாதிரி கிரிமிகளைக் கொல்வதாக நினைத்துக் கொண்டிருக்கும் அதிபுத்திசாலிகள் எத்தனையோ ஆயிரம் இன்றைக்கும் இருக்கிறார்களே!

''இந்தியாவில் ஹிந்தி ஏகாதிபத்தியத்தையே நிலைநாட்டிவிடப் பிரியப்படுகிறார்கள். மற்ற பாஷைகளையும் மற்ற பாஷைக்காரர் களையும் ஹிந்தி பாஷைக்கு அடிமையாக்கிவிடவே எண்ணுகிறார்கள்.''

''தாய் மொழியையன்றி வேறொரு மொழியின் உதவி நமக்கு அவசியம் என்று ஏற்படும் பட்சத்தில், ஹிந்தியைக் காட்டிலும் ஆங்கிலத்தையே நாம் ஒப்புக்கொள்ளலாம்.''

''ஆங்கிலத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஹிந்தியை உபயோகிப்பது என்பது முழு மடமையேயாகும்.''

''மற்றபடி அறிவைத் தேடுவதற்கோ பண்பாட்டை வளர்ப் பதற்கோ ஹிந்தி பாஷையினால் பயன் ஒன்றுமில்லை.''

இப்படியெல்லாம் 'சதிர்' ஆடியிருப்பது தாசி குலத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்ணல்ல. அக்கிரகாரத்தைச் சேர்ந்த நடனக்கலை நங்கை! அதாவது, 'கல்கி'! 7.5.50 'கல்கி'யில் 'ஹிந்தி ஏகாதிபத்தியம்' என்ற தலைப்பில் வந்திருக்கும் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டவை!

இதையே நாம் கூறினால் தேசத்துரோகி! இங்கிலீஷ் அடிமை! வெள்ளைக்காரன் குலாம்!

ஹிந்தி ஏகாதிபத்தியம் கூடாதென்றால் சும்மாவே இப்படி எழுதி விட்டால் போதாது! எதை எதை ஏகாதிபத்தியத் திட்டம் என்று 'கல்கி'க் கூட்டம் கருதுகிறதோ, அதையெல்லாம் ஒழிப்பதற்கு முன்வரவேண்டும்.

பள்ளிகளில் கட்டாய ஹிந்தி வைப்பது 'ஏகாதிபத்தியத் திட்ட' மல்ல வென்றால், தமிழ்நாட்டு ரயில் நிலையப் பலகைகளில் ஹிந்திப் பெயரை எழுதியிருப்பதாவது ஏகாதிபத்தியத் திட்டம் என்றுதானே ஒப்புக்கொள்ள வேண்டும்? அதை அழிப்பதற்கு ஒரு டின் 'தாரும்' ஒரு 'பிரஷ்ஷும்' எடுத்துக்கொண்டு 'கல்கி'யார் ஏன் புறப்படக் கூடாது? நானும் வேண்டுமானாலும் துணைக்கு வருகிறேன்! 'கல்கி'யார் ஒரு பக்கமும் நான் ஒரு பக்கமுமாக அழிக்கலாமே!

இதுவும் பிரியமில்லையென்றால், ஹிந்தி ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதற்கு வேறு என்ன திட்டம் வகுத்திருந்தாலுஞ்சரி, என்னைப் போன்றவர்கள் பலர் அதில் ஈடுபடத் தயாராயிருக்கிறார்கள்!

போகட்டும்! வசிஷ்டர் வாயினால் (கையினால்?) வந்ததே! அதுவே இந்த நாட்டு அசுரர்கள் செய்த தவப்பயன் அல்லவோ?

'ஹிந்து' பத்திரிகை இனிமேல் 'ஹிந்தி'யில் தான் வெளிவரும் என்ற என் நம்பிக்கை இதன்மூலம் சிறிது ஆட்டங் கண்டிருக்கிறது!

8. வனஸ்பதியா? ராஷ்ட்ரபதியா?

(22.5.50)

தலைவர் என்று சொன்னால் என்னமோ சப்பென்று இருக்கிற தல்லவா? அதற்காகத்தான் சில தமிழ் மேதாவிகள் 'ராஷ்ட்ரபதி' என்று சொல்லி வருகிறார்கள்! கடலெண்ணெய் என்று சொன்னால் பெரிய மனுஷாளில் யார் வாங்குவார்கள்? அதற்காகவே வனஸ்பதி என்ற பெயர்!

வனஸ்பதி சச்சரவை காந்தியார்தான் முதன்முதல் கிளப்பி விட்டார். வனஸ்பதி உற்பத்தி முதலாளிகள் அத்தனைபேரும் கிட்டத் தட்ட வடநாட்டுக்காரரே என்பதையறிந்ததும் அவர் அதைக் கடுமை யாகக் கண்டித்தார். 'நெய்' உருவத்தில் டப்பிகளில் அடைப்பதால் மாட்டு நெய்யுடன் கலந்து ஏமாற்றுவதற்கு வசதியாயிருக்கிறதென்று கூறி, அந்த உற்பத்தியையே எதிர்த்து வந்தார். பிறகு காங்கிரஸ் பண மூட்டைகளிற் சில கண்ஜாடை காட்டின! ''எப்படியோ நாசமாய்ப் போங்கள்!'' என்று வெறுத்துப் போய்க் கூறிவிட்டு சும்மாயிருந்து விட்டார்!

பிறகு பிரபல டாக்டர்களில் பலர் வனஸ்பதி உடலுக்குக் கெடுதி என்று தீர்ப்புக் கூறினார்கள்! வெறும் கடலெண்ணெயைப் பயன்படுத்தி னால் நல்லது; அதை விட்டு அத்துடன் தீமையான சரக்கைக் கலந்து கெட்டியாக்கி உண்பதுதான் தப்பு என்பது இந்த டாக்டர்கள் கருத்து.

இதனால் கொஞ்சம் கொந்தளிப்பு ஏற்பட்டது. வனஸ்பதி முதலாளிகள் ஒன்றுகூடி ஆலோசித்தனர். இறுதியில் கடந்த ஒரு மாத காலமாக ஒரு விளம்பரம் வந்து கொண்டிருக்கிறது!

ஆராய்ச்சி நிபுணர்கள் கூறிவிட்டார்களாம், வனஸ்பதியினால் கெடுதல் இல்லையென்று! இந்தத் தீர்ப்பை உணவு இலாகா மந்திரி பார்லிமெண்டில் படித்தாராம்! யு.பி. சுகாதார மந்திரியும் இதை ஆமோதித்து விட்டாராம்!

சென்னை சட்டசபையில் வனஸ்பதி உற்பத்தித் தடை மசோதா ஒன்றைக் கொண்டு வரப்போகிறார், ஓர் உறுப்பினர். அதுபற்றி வழக்கம் போலப் பொதுமக்கள் கருத்தைக் கேட்டிருக்கிறார்கள், சர்க்கார். எண்ணெய்வித்து வியாபாரிகள் சங்கம் தன் கருத்தைத் தெரிவித்திருக் கிறது. தடை மசோதாவை எதிர்த்திருக்கிறது, இந்தச் சங்கம்!

வனஸ்பதி ஏழைகளுக்குப் பயன்படுகிறதாம்! ஏழை பங்காளரான இந்த வியாபாரிகள் சங்கம் கூறுகின்ற காரணங்களில் இதுவும் ஒன்று! நியாயந்தானே! வனஸ்பதி மட்டுமா? ராஷ்ட்ரபதி கூட ஏழைகள் பிரதிநிதி என்று தானே கூறிக் கொள்கிறார்? டால்மியா கூட அப்படித்தான் கூறுகிறார்! 3 லட்ச ரூபாய்க்கு நம் வரிப் பணத்தில் மாஸ்கோவில் தட்டுமுட்டு சாமான்கள் வாங்கிய விஜயலட்சுமி பண்டிட் கூட ஏழைகள் பிரதிநிதிதானே?

ரேஷன் அரிசி வாங்கவே ஏழைகளிடத்தில் காசைக் காணோம்! வனஸ்பதியாம், வனஸ்பதி!

இது ஒரு இமிடேஷன் வைரம்! வனஸ்பதி ரங்கூன் டயமண்ட்! உடலுக்கு நல்லதா? கெட்டதா? அல்லது இரண்டுக்கும் நடுவிலா? என்பது ஒருபுறமிருக்கட்டும். அதை நெய் மாதிரிச் செய்வானேயப்பா?

அசல் கடலையெண்ணெயை அவ்வப்போது வாங்கிச் சமைப்பதை விட்டுவிட்டு, அதை நெய்யாக்குவானேன்? வர்ண மேற்று வானேன்? 'டின்'னில் அடைப்பானேன்? எட்டணா பெறும் படியான சரக்குக்கு மூன்று ரூபாய் கொடுப்பானேன்? தேங்காய்ப் பிண்ணாக்கை வெள்ளிக் காகிதத்தில் சுற்றி 'செக்கு சாக்லெட்' என்ற பெயரால் விற்றா ஏமாற்றவேண்டும்?

கடலெண்ணெய் உடலுக்கு நல்லது என்ற உண்மையை வனஸ்பதி மூலமாகவா பிரசாரஞ் செய்யவேண்டும்?

காந்தியார் இன்று உயிருடனில்லை. ஆதலால் காங்கிரஸ் சர்க்கார் வனஸ்பதி உற்பத்தியைத் தடை செய்யப் போவதில்லை. மக்கள் ஏமாந்து போனாலென்ன? நல்ல நெய்யில் வனஸ்பதியைக் கலந்தாலென்ன? எது

எப்படியானாலென்ன? காங்கிரஸ் எலெக்ஷனில் வெற்றிபெற வேண்டும்; மீண்டும் அதிகாரஞ் செலுத்த வேண்டும்! இதுதானே இன்றுள்ள பிரச்னை? எல்லா சங்கதிகளும் இந்த உரைகல்லில்தானே உரைக்கப்படுகின்றன? எலெக்ஷன் பைத்தியம் முற்ற முற்ற இன்னும் எத்தனையோ துணிகளைக் கிழிக்கப் போகிறார்கள், அதிகார நாற்காலியில் அமர்ந்துள்ள தியாகிகள்!

9. வாசனின் பண வாசனை!

(24.5.50)

''ஓய்! எப்படீங்காணும் சாப்பாடு! பார்த்தீரா! ஒரு இலை நாலு ரூபா பெறுங்காணும், இந்தப் பஞ்சகாலத்திலே! மகராஜா தீர்க்காயுசோடே இருக்கணும்!''

''நானும் இந்தக் கையாலே அள்ளி வாயிலே போட்டிருக்கிற விருந்து எத்தனையோ இருக்கும்! சுமார் ஆயிரத்துக்குக் குறையாது ஓய்! ஆனால் இந்த மாதிரி விருந்து சாப்பிட்டதேயில்லை! பரம்பரைப்பெரிய மனுஷாள் பெரிய மனுஷாள்தான்! சிலதுகளுக்குப் புதுசா நாலு காசு கிடைச்சுட்டா பகலிலே வாண வேடிக்கை வைக்கிறதுகளே, அது மாதிரியா?''

''அப்படிச் சொல்லாதேயும், ஓய்! இவர் கூடப்புதுப் பணக்காரர் தான். ஆனாலும் எவ்வளவு அன்பு! எவ்வளவு பெருந்தன்மை பார்த்தீரோ? அடாடா! என்ன கூட்டம்! வந்திருந்த பட்டுப் புடவைகளும் வைர நகைகளும் மட்டும் என்ன மதிப்பிருக்கும், ஓய்? கோடி ரூபாய் இருக்குமா?''

''நன்னா சொன்னீர்! கோடி ரூபாயா? சினிமா ஸ்டார்கள் ஒன்றுகூட பாக்கியில்லே! நம்பளவா பொம்மனாட்டிகள் ஒருத்தர் கூட அன்னிக்கு வீட்டிலே இல்லேன்னா, பார்த்துக்குமே! பத்து அல்லது பதினைந்து கோடி ரூபாய்க்குக் குறையவே குறையாது, ஓய்! அசல் குபேர பட்டணந் தான்! லட்சுமீபுரம் என்று கூடச் சொல்லலாம்! அது சரி! சுமார் நாலாயிரம் பேர் ஒவ்வொரு வேளைக்கும் சாப்பிட்டிருப்பாளே! இந்தக் கஷ்ட காலத்திலே இத்தனை பேருக்கு அரிசி எப்படிக் கிடைச்சுது இவருக்கு?''

''எப்படியா? நன்றாய்க் கேட்டீர், ஒரு கேள்வி! இவருக்கு அரிசி இல்லேன்னா, சர்க்கார் கிடங்கிலேயே அரிசி இல்லேன்னுதான் அர்த்தம்! இவர்தான் சர்க்கார்! சர்க்கார் தான் இவர்! யாராரெல்லாம் வந்திருந்தா பார்த்தீரோன்னோ?''

''ஆமா! ஜட்ஜ்களெல்லாம் கூட வந்திருந்தாளே!''

''ஜட்ஜ்களா? அது ரொம்ப சாதாரணம் ஓய்! இந்தக் காலத்திலே ஜட்ஜ்கள் வராத இடம் ஏதாவது ஒன்று சொல்லும்! அது ஒரு பிரமாத மில்லை ஓய்! தலைவர்கள்! சர்க்கார் தலைமை உத்தியோகஸ்தர்கள்! பத்திரிகை ஆசிரியர்கள்! யார் தான் பாக்கி?''

''இவ்வளவு பேருக்குத்தான் விருந்து வைக்கணும் என்று ஏதோ சட்டமிருக்காமே? இவர் எப்படி நாலு நாளைக்கு இத்தனை ஆயிரம் பேருக்கு விருந்து வைத்தார்?''

''சட்டமா? அது ஒரு ரப்பர் ஓய்! ஆளுக்குத் தகுந்த மாதிரி நீண்டு கொடுக்கும்! செத்துப்போன கிழவிக்காக தவறுதலாக அதிக ரேஷன் வாங்கின ஒரு ஏழைக்கு தண்டனை கொடுத்தாளா இல்லையா, சில மாதங்களுக்கு முன்னே, இதே மயிலாப்பூரிலே? இப்போ பார்த்தீரா? எல்லாம் பணங்காணும் பணம்! ஈஸ்வரனைக் கூட புஷ்பத்தாலே அர்ச்சனை பண்ணாமே பணத்தாலே அடிச்சுப் பாரும்! உடனே காட்சி கொடுப்பார்! இந்தக் காலத்திலே உம்மையும் என்னையும் போலே பிராமணார்த்தத்துக்காக நாக்கைத் தொங்கப் போட்டூண்டு தெருத் தெருவா திரிஞ்சீண்டிருந்தா, ஒரு நாய் கூட நம்மை மதிக்காது ஓய்!''

''நம்மளவா இப்போ ஒவ்வொரு துறையிலேயும் முன்னுக்கு வந்திண்டிருக்கா! அது ரொம்ப விசேஷந்தான்! சதா உத்யோகம் உத்யோகம் என்றுஅதையே கட்டீண்டு அழாமே! ஒரு 'டி.வி.எஸ்.' என்ன! ஒரு 'ஹிந்து' பத்திரிகை என்ன! ஒரு 'ஜெமினி' என்ன! ஒரு 'உட்லண்ட்ஸ்' என்ன! ஒரு 'சேஷசாயி' என்ன! ஒரு 'சிம்ப்ஸன்' என்ன! இவைக ளெல்லாம் இருக்கிறதாலே தான் லட்சக்கணக்கான நம்மளவாளெல்லாம் பிழைக்க முடியுது! இல்லாட்டிப் போனால் இந்தக் காலத்திலே திண்டாடித் தெருவிலே நிற்க வேண்டாமோ?''

''அதிலென்ன சந்தேகம்! சூத்திரன்களுக்குள்ளே பணக்காரனா யிருப்பவன்களுக்கு இந்த மாதிரிப் புத்தியும் இன உணர்ச்சியும் இல்லையே அது ஏன், ஓய்?''

''அவன்கள் நாசமாய்ப் போகட்டும்! நமக்கென்ன ஓய்! பணக்கார சூத்திரன்களுக்குப் புத்தி யில்லாமலிருந்தால் தானே நீரும் நானும் அவன்களைச் சுரண்டிக் கொண்டிருக்க முடியும்? சரி! சித. பெரி. மு. மூளைக்கோளாறு செட்டியார் ஆத்திலே நாளைக்குத் தானே வருஷாப்தீகம்? அங்கேயும் நம்மளவாளுக்குத் தான் நல்ல வேட்டை! நல்ல அசடுகள் நமக்குக் கிடைச்சுது ஓய்! ஆயுசோட இருக்கணும், இந்த அசடுகளெல்லாம்! பிராமணர்களை ஒழிக்கப் போறாளாம், ஒழிக்க! சூரியன் புறப்படுகிறவரையிலே தூக்கிக் கொண்டிருக்கிற இந்தத் தூங்கு மூஞ்சிகளா நம்மை ஒழிக்கப் போறதுகள்? அதிகாலையிலே நாலு மணிக்கு எழுந்திருக்கிற நம்மை? சுத்த அசடுகள்!''

10. கடவுளும் கருஞ்சட்டையும்!

(27.5.50)

கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர். கதர்ச்சட்டை, கறுப்புச் சட்டை, கம்யூனிஸ்ட், நாஸ்திகர், ஆஸ்திகர், அரை ஆஸ்திகர் - யாராயிருந் தாலும் அவருக்கு ஒன்றுதான்! சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளை விடப் பல்லாயிரம் மடங்கு பாரபட்சமற்றவர்! இதற்காக யாரும் அவரைப் பற்றி சோதனை செய்துகொண்டிருக்க வேண்டியதில்லை. ராஜ வாழ்த்துப் பாடாதவனுக்குக்கூட ராஜாவின் நீதிகள் வழங்கப்படும்! ''இனிப்பே உன்னால் எனக்குக் களிப்பே!'' என்று வெல்லத்தைப் போற்றிப் பாடாதவனுக்குக்கூட வெல்லம் இனிப்பைத்தான் தரும்! வெல்லத்தைப் போற்றித் துதிக்காதவனுக்கு வெல்லம் வேப்பங்காயாயிருப்பதில்லை!

நம் சுயமரியாதைத் தோழர்களுக்கு ஏதாவது சுறுசுறுப்பான வேலை இருந்தாலொழிய முடியாது போலிருக்கிறது. எனக்குக் கூட பல ஆண்டுகள் அப்படித்தானிருந்தது. ஓய்வு நேரத்தில் சைவக் கூட்டங்களி லாவது போய்க் கேள்விகள் கேட்டால்தான் மனத்துக்குத் திருப்தி! ''கற்பூரம் செய்யக் கற்றுக் கொடுக்காத நம் கடவுள்களுக்கு அந்தக் கற்பூரத்தைக் கொளுத்துவதில் வெட்கமில்லையா?'' என்றாவது ஒரு கேள்வி கேட்டு, ஆஸ்திக சிகாமணிகள் பதில் கூறத் தெரியாமல் விழிப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவதில் ஒருவிதமான குதூகலம் அந்தக் காலத்தில்! சிறு பிள்ளை தானே?

இந்த மாதிரிப் பல தோழர்கள் கிராமாந்திரங்களில் கிளம்பி யிருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டே யிருக்கின்றன. ஒவ்வொன்றும் விசித்திரமாயிருக்கிறது! கறுப்புச்சட்டை யணிந்துகொண்டு, ''பெரியார் வாழ்க! சுயமரியாதை இயக்கம் வாழ்க!'' என்று ஒலித்துக்கொண்டு வாயில் பீடியைப் புகைத்தபடியே துரோபதையம்மன் சந்நிதிக்கு முன்பு தீக்குழியில் இறங்கி வெளிவருகிறார்களாம், திராவிட கழகத் தோழர்கள்! பக்தர்கள் திடுக்கிட்டுப்போய், முன்பு பேசிக்கொண்ட ஒப்பந்தப்படியே திராவிட கழகத்தில் உறுப்பினர்களாகி விடுகிறார்களாம்!

குளித்தலையிலிருந்து ஒரு புகைப்படம் வந்திருக்கிறது. அடாடா! விபரீதம்! விநோதம்! உடலில் அலகுகளைக் குத்திக்கொண்டு, காவடியின் உச்சியில் பெரியார் படத்துடன் விளங்குகிறார், 19 வயதுள்ள தோழர் ஒருவர்! உடலில் மட்டுமல்ல; காலிலும் கூடக் கருஞ்சட்டை! அவருக்குப் பக்கத்தில் கழகக் கொடி தாங்கி நிற்கிறார்கள் சிலர்! எதிரில் நான்கு சிறுவர் கருஞ்சட்டைகளுடன் கையில் சட்டியேந்தி உட்கார்ந்திருக்கின்றனர். என்ன சட்டி தெரியுமா? தீச்சட்டி!

மூட பக்தியை முறியடிக்க வேண்டுமென்ற பொறுப்புணர்ச்சி இவர்கள் முகத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது!

மூன்று நாள் பட்டினி! தலை முழுக்கு ஆசாரம்! அதிதீவிர பக்தி! கடவுள் சக்தி! கனவில் காட்சி! இத்யாதி குண்டு தளவாடங்களில் ஒன்றுகூட இல்லாமல், கிண்டல் பார்வையோடு காட்சியளிக்கிறார்கள், சின்னஞ்சிறு கழகத் தோழர்கள்!

கண்மூடித்தனத்தைக் கண்டிப்பதற்காக நாமும் அந்த ஆபாசங் களைச் செய்வானேன்? பழனிக்கு என் கூடவே மச்சக்காவடி தூக்கி வா, என்றுகூடக் கேட்பார்கள்! இதுதானா நம் வேலை? பக்தியின் பேரால் நடக்கும் பித்தலாட்டங்களை வெளிப்படுத்த வேண்டுமென்றால் அவர்களையே சோதனைக்குள்ளாக்குவது தான் நல்லது! உதாரணமாக, தீக்குழியில் இறங்கக்கூடிய அதிதீவிர பக்தர்களைக் கூப்பிட்டு அவர்களே தங்கள் உடலில் பெட்ரோலை ஊற்றித் தீ வைத்துக்கொள்ளுமாறு சொல்லிப் பாருங்கள்! ''ஹிஹ் ஹி! ஹீ!'' என்று பல்லிளிப்பார்கள்! உடலில் அலகு குத்திக்கொள்கிற பக்தர்களைக் கூப்பிட்டு, சப்பாத்திப் புதருக்குள் தூக்கி எறியட்டுமா, என்று கேட்டுப் பாருங்கள்! குஸ்திக்குக் கூப்பிடப்படும் புரோகிதப் பார்ப்பானைவிட அதிவேகமாக ஓட்ட மெடுப்பார்கள்!

சுயமரியாதைக்காரர்களுக்கு எவ்வளவோ வேலைகள் இருக் கின்றன. புரோகிதர்களை வைத்து நடத்துகின்ற திருமணங்களுக்கு முன்பு மறியல் செய்யலாம்! அக்கிரகாரங்களில் ஆதி திராவிடப் பொதுக் கூட்டம் நடத்தலாம்! கோவில் மடப்பள்ளிக்குள் புகுந்து பார்க்கலாம்! அர்ச்சகனைத் தூக்கிச் சுமக்கும் திராவிடத் தோழர்களிடம் கண் ஜாடை காட்டி அர்ச்சகனைக் கீழே இறக்கலாம்!

இந்த நாட்டில் சுயமரியாதைக்காரனுக்கு வேலைதானா இல்லை?

11. ஆச்சாரியார் துளசி!

(29.5.50)

''சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றினாலும் மாற்றும்; பிராமணன் தன் ஜாதி வெறியை மாற்றிக்கொள்ள மாட்டான்'', என்றார், காலஞ் சென்ற நீதிக்கட்சித் தலைவர்! வைரம் பாய்ந்த அனுபவத்தின் மீது தான் அவர் இப்படிக் கூறியிருக்கவேண்டும்!

எனக்கு எத்தனையோ பிராமண நண்பர்கள் இருக்கிறார்கள். உங்களிலும் பல பேருக்கு இருப்பார்கள். நாம் எவ்வளவு தான் நாய் மாதிரி நன்றியுடன் பழகினாலும் அவர்கள் என்னவோ, பூனை மாதிரித் தான் பழகுகிறார்கள்! பாவம், ஏதாவது பரம்பரை நோயாக இருக்குமோ என்னவோ, தெரியவில்லை! 'பென்சிலின்' மாதிரி, நம் நாட்டு பிராமணர்களின் இந்தத் தீராத நோயைத் தீர்ப்பதற்கு, வெளி நாட்டார்

ஏதாவதொரு இஞ்செக்ஷன் மருந்து கண்டுபிடிப்பதினால் திராவிட கழகத்தார் ஒரு லட்ச ரூபாய் உண்டியல் பிச்சை எடுத்தே கொடுத்துவிடக் கூடத் தயாராயிருக்கிறார்கள்!

பெரிய உத்தியோகத்திலிருக்கும் ஒரு நல்ல பிராமண நண்பர் உண்டு. சில மாதங்களுக்கு முன்பு ஒரு கமிட்டிக் கூட்டத்தில் சந்தித்தோம். கூட்டம் முடிந்த பிறகு வெளியே வந்தார்.

''என்ன மிஸ்டர், நம் நாட்டாரைப்பற்றி இவ்வளவு மோசமாகப் பேசினீர்களே! எந்த நாட்டிலேதான் மூட நம்பிக்கைகள் இல்லை? இராகு காலத்தைப் பற்றி இவ்வளவு கடுமையாகக் கூறினீர்களே!'' என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது! ஏனென்றால் இவர் ஒரு பரிபூர்ண பகுத்தறிவு வாதி! பூணூல் இல்லாதவர். ஜாதி - மதம் கடந்தவர்! நல்ல படிப்பாளி! அதோடு பரந்தநோக்கங் கொண்டவர்!

முதுகில் கத்தியால் குத்தப்பட்ட ஜூலியஸ் சீசர் ப்ரூட்டசைப் பார்த்துக் கேட்டது போல், ''நீங்கள் கூடவா நான் பேசியதைக் கண்டிப்பது?'' என்று பெருமூச்சு விட்டுக் கேட்டேன். அவரிடம் நான் வேறெதுவும் பேச முடியவில்லை. அவ்வளவு ஆசையும் மதிப்பும் அவரிடம் எனக்குண்டு. உடனே நீதிக்கட்சித் தலைவர் சொன்னது என் காதில் ஒலித்தது! மறக்கமுடியாத மூல மந்திரம், அது! சந்தேகமில்லை!

சர்.சி.பி. ராமசாமி அய்யர் (இவரே அய்யர் என்றால், என் பேனா கூட அய்யர்தான்!) ட்ரூமெனுக்குப் பதிலாக அமெரிக்கத் தலைவராகி விடுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள்? பதவியேற்ற மறு நிமிஷமே, முதல் பேச்சிலேயே சம்ஸ்கிருதத்தின் பெருமை பற்றிப் பேசுவார்! பகவத் கீதையின் தத்துவத்தை விளக்குவார்! ட்ரூமனோ, அட்லியோ பைபிளைப் பற்றியாவது ஏசுநாதரைப் பற்றியாவது பேசுவதுண்டா? இல்லவே இல்லை! அந்த வேலை மத குருமார்களுடையது என்பது அவர்கள் முடிவு!

ஆனால் நம் மந்திரிகளையும், கவர்னர்களையும், மாஜி கவர்னர் - ஜெனரலையும், குடியாட்சித் தலைவரையும், பாருங்கள்? அடாடா! சதா கடவுள் பஜனை! அல்லது புராண - இதிகாச காலட்சேபம்!

நம் ஆச்சாரியார் இருக்கிறாரே! அவரை ஸ்டாலினுடைய இடத்தில் (கனவில் கூட காணமுடியாது என்றாலும்) ஒரு மாதத்துக்கு ஆக்டிங்காக உட்கார வைத்துப் பாருங்கள்! உட்காரும் போதே, ''ஸ்ரீராமச்சந்திரா, நமோ, நாராயணா!'' என்று சொல்லிக்கொண்டு தான் உட்காருவார்! பக்கத்திலிருக்கிற ரஷ்ய மெய்காப்பாளர், ''என்ன சொன்னீர்களய்யா?'' என்று கேட்பார்! உடனே தொடங்கிவிடுவார், தம்

வேலையை! அதாவது இராமாயண பிரசாரத்தை! ரஷ்யாவில் வயிற்றிலிருக்கும் குழந்தை தவிர மற்றெல்லோர் காதிலும் ''ராமா! ராமா! கிருஷ்ணா! கிருஷ்ணா!'' என்று முழங்குவார்!

ஏன் இவர்கள் மட்டும் இப்படிச் செய்கிறார்கள் என்று கேட்கலாம்! ஒரு ராமசாமி முதலியாரோ, ஒரு ஷண்முகமோ, வெளிநாடுகளில் தமிழைப் பற்றியோ குறளைப் பற்றியோ பேசுகிறார்களா? இல்லவே இல்லை! இவர்கள் மொழிப்பற்று இப்படி! ஆனால் அந்தத் தலைவர்கள் மட்டும் தங்கள் மொழி, தங்களை உயர்த்திய அவதாரங்கள் - கடவுள்கள் - புராணங்கள் இவைகளை மறப்பதே யில்லையே? அது ஏன்?

அதுதான் அவர்கள் இனத்தின் சக்தி! அதாவது நம்மைப் பொறுத்தமட்டில் தீர்க்கமுடியாத நோய்!

தியாகி அண்ணாமலைப் பிள்ளைக்கு (அவருடைய ஏழ்மையைப் போக்குவதற்காக) ஒரு பண முடிப்புக் கொடுக்கப்பட்டது, வேலூரில்! அதற்கு ஆச்சாரியார் ஒரு ஆசிச் செய்தி அனுப்பியிருந்தாராம். வெறும் செய்தி மட்டுமல்ல! சர்.சி.பி.க்கோ மற்றொரு பூணூல் தலைவருக்கோ ஆசியனுப்பினால் வெறும் செய்தியனுப்புவார்! ஆனால் நம்மளவராகிய அண்ணாமலைப் பிள்ளைக்கு வெறும் செய்தியை அனுப்பலாமா? கொஞ்சம் துளசி இலையையும் அனுப்பி யிருந்தாராம்! பண முடிப்புடன் அதையும் சேர்த்துக் கொடுக்குமாறு எழுதியிருந்தாராம்!

''நிதியின் சக்தி எவ்வளவிருந்தாலும் துளசியின் பெருமை அதைவிட அதிகமல்லவா? ஆகையால் அதையே என் அன்புக்கு அடையாளமாக வைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்''

இது ஆச்சாரியார் கடிதத்தின் பகுதி!

நிதியை விடத் துளசியின் பெருமை அதிகமாம்!

''நீ கொடுக்கும் பணம், பழம், தேங்காய் இவைகளை விட, இதோ இந்த விபூதியின் பெருமை அதிகம்'' என்று கூறி, நம் தலையில் சாம்பலைக் கொட்டி, ''நீயும் உன் புத்தியும் சாம்பலாய்ப் போக!'' என்று கூறாமற் கூறுகிறாரே, அர்ச்சகர்!

அந்த ஆசாமிக்கும் ஆச்சாரியார் அவர்களுக்கும் மனப்பான்மை யில் கடுகளவு வேற்றுமையாவது உண்டா? நீங்களே சொல்லுங்கள்!

அர்ச்சகர் இனத்தாரின் கையில் ஆட்சியை ஒப்பித்தால் என்னவாகும்? நீங்களே யோசித்துப் பாருங்கள்! குரோதத்துக்காகக் கூறவில்லை! கண்ணெதிரே காண்பதை வைத்தே சொல்கிறேன்.

வெளி நாட்டார் படையெடுத்தால், ஆச்சாரியாரும் அவர் இனத்தாரும் துளசியைத் தூவிவிட்டு இராமாயண காலட்சேபம் பண்ணிக் கொண்டிருப்பார்களா, மாட்டார்களா? நீங்களே சொல்லுங்கள்!

12. பீபீ கையில் பேனா இருந்தால்!

(30.5.50)

ஈஜிப்ட் பார்லிமெண்டில் ஒரு புது மசோதா கொண்டுவரப் போகிறார்களாம், அந்த நாட்டு வைதீகக் குடுக்கைகள்! அந்த மசோதா வின்படி முஸ்லிம் பெண்கள், -

(1) குறைந்த கையுள்ள ரவிக்கையோ தாழ்ந்த கழுத்துள்ள ரவிக்கையோ அணியக்கூடாது.

(2) பாவாடைகள் கணுக்காலைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

(3) தங்கள் கணவன்மார்களுடன் கைகோத்துக்கொண்டு வெளியில் உலவக்கூடாது.

பார்த்தீர்களா, எகிப்து நாட்டு முஸ்லிம் வைதீகர்களின் வெறிக் குணத்தை? முஸ்லிம் அக்கிரகார வெறிபோலும்! தொப்பி போட்ட அய்யர்கள் இவர்கள்! பூணூலில்லாத புரோகிதர்கள்!

பேகம் ஷா நவாஸ், பேகம் அமிருதீன், திருமதி அஸாஃப் அலி - போன்ற முஸ்லிம் பெண்திலகங்கள் உதிக்கவேண்டிய ஒரு சமுதாயத் திற்கு முட்டுக்கட்டை போடப்பார்க்கின்றன, சில தட்டுக் கெட்டதுகள்!

கணவனை இழந்த காரிகையை ஈமத் தீயில் போட்டு விடவேண்டும்.

கைம்பெண்கள் தலைமயிரைச் சிரைத்து வெள்ளைத் துணியினால் முக்காடு போடவேண்டும்.

ஒருவன் மூன்று நான்கு பெண்களைக்கூட மணஞ்செய்து கொள்ளலாம்.

பெண் ருதுவானவுடன் வீட்டுக்குள்ளேயே கிடக்க வேண்டும்:

பெண் பிறந்தது முதல் சாகிறவரையில் ஏதாவதொரு ஆணுக்கு அடிமையாகவே இருக்கவேண்டும்.

பெண் முகமூடி போட்டிருக்க வேண்டும்; எந்த ஆணும் பார்க்கும்படியாக இருக்கக்கூடாது.

பெண் நீண்ட கூந்தலுடனிருப்பதே அழகு.

பெண் தாராளமாக ஆடியோடித் திரியாதபடி உயர்ந்த குதியுள்ள பூட்ஸ் அணியவேண்டும்; 12, 14, 16 முழமுள்ள புடவை அணிய வேண்டும்; உறுப்புக்கள் வழிய அணிகளை அணியவேண்டும்.

ஆண் விளையாடுகின்ற விளையாட்டுக்களையெல்லாம் பெண் விளையாடக் கூடாது.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவைகளே பெண்களின் பண்புகள்.

ஆண் எப்படியிருந்தாலும், பெண் கற்பு நிலை தவறாமலிருக்க வேண்டும்.

...இவைகளையெல்லாம் எழுதி வைத்தார்களே, மகானுபாவர்களுடைய கூட்டுத் தோழர்கள்தான் ஈஜிப்ட் பார்லிமெண்டில் புது மசோதா கொண்டு வரப்போகின்ற பிரகஸ்பதிகள்!

எகிப்து பார்லிமெண்ட் நிறைய பேகம்அமிருதீன்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். தங்கள் ஆண்கள் மீது பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்ற நினைப்பும் அவர்களுக்கு வருவதாக வைத்துக் கொள்வோம்!

அப்போது அவர்கள் மசோதா எப்படியிருக்கும்?

முஸ்லிம் ஆண்கள் -

(1) க்ராப் வைத்துக்கொள்ளக் கூடாது; தாடியுடன் தானிருக்க வேண்டும்.

(2) வெள்ளையரைப் போல் உடை உடுத்தக்கூடாது.

(3) ரயில் வண்டி, மோட்டார் கார், ஆகாய விமானம் முதலியவைகளில் ஏறக்கூடாது; ஒட்டகத்தில் ஏறித் தான் பிரயாணஞ் செய்ய வேண்டும்.

(4) காலில் சலங்கை கட்டிக்கொள்ள வேண்டும்; முகத்தில் மூடி போட்டுக்கூட வெளியே செல்லக்கூடாது.

(5) ஒரு பெண் நான்கு ஆண்களை மணஞ்செய்து கொள்ளலாம்; ஆனால் ஆண் மட்டும் மற்றொரு பெண்ணைக் கண்ணாலும் பார்க்கக் கூடாது.

(6) படிக்கவே கூடாது; மசூதி தொழுகைக்கும் வரக்கூடாது.

...இம்மாதிரி விதிகளும் இன்னும் பிற விதிகளும் சேர்ந்த மசோதாவைக் கொண்டு வருவார்கள்! பேகம்கள் - பீபீகள் கையில் பேனாவைக் கொடுத்துப் பார்த்தால் அல்லவோ தெரியும்? பேனா மட்டுமா? கமால் பாட்சா செய்ததைப்போல் துப்பாக்கியைக் கொடுத்துப் பாருங்கள். மசோதா கொண்டுவருகிற பேர்வழிகள் உடனே 'அண்டர் கிரவுண்ட்' போய்விட மாட்டார்களா? சுத்த தென்னை மட்டைகள்! உலகம் போகிற போக்குத் தெரியாமல் இன்னமும் பழைய ஆமைப் புத்தியிலேயே இருக்குதுகள்! மசோதாவாம் மசோதா! சுத்த சோதா! ஆண்பிள்ளை சிங்கக் குட்டியாயிருந்தால் சம உரிமை கொடுத்து விட்டு, வரிந்து கட்டி 'கோதா'வில் நின்று பார்க்கணும்! இது என்ன, சோதாத்

தனம்! பீபீ கையிலே துப்பாக்கியைக் கொடுத்து தானும் துப்பாக்கியை ஏந்தி எதிர் எதிராய் 'நிண்டு' பார்த்தாலல்லவோ தெரியும்?

13. ஒப்பாரியின் போது பிச்சையா?

(7.6.50)

செத்த வீட்டில் ஒப்பாரி (பாட்டு) சொல்லி அழுவதென்பது தமிழ் நாட்டுப் பெண்களின் தனிக் கலை! இதற்காகவே 'ஒப்பாரிக் கண்ணி' என்ற புத்தகங்கள் கூட விற்கின்றன. கணவன் - மாமனார் - மாமியார் - தந்தை - தாய் - பிள்ளை - அண்ணன் - தம்பி - எல்லோரும் உயிருடனி ருக்கும் போதே, அவர்கள் செத்துப் போனால் என்ன சொல்லி அழுவது என்பதை முன் கூட்டியே மனப்பாடம் செய்வார்கள்! நீண்ட ராகம்! அவிழ்ந்த கூந்தல்! சுற்றிலும் மூக்குநீர்! அமோகமான காட்சி! வட்டமாக உட்கார்ந்து கொண்டு ஒருவரை யொருவர் கட்டிக்கொண்டு அழுவது! நின்று கொண்டு புடவை முந்தாணியை வரிந்து கட்டிக்கொண்டு மார்பில் அடித்துக் கொண்டு தாளம் தவறாமல் (பாட்டுடன்) சுற்றி வருவது! இந்த விதமாகப் பலரகங்களுண்டு!

படிப்பும், பக்தியும் குறையக் குறைய இந்த லீலைகளை அதிக மாகக் காணலாம்!

படித்தும், பட்டம் பெற்றும், உள்ள பெண்களுக்கு இந்த ஒப்பாரி தெரியாது (கல்லூரிகளில் கூட இதுவரை இந்தப்பாடம் கற்பிக்கப்பட வில்லை!) தெரியாதது மட்டுமல்ல! ஒப்பாரி சொல்கிறதைக் கண்டாலே, ஓட்டமாக ஓடிவிடுவார்கள்! ஆண்கள் இந்தத் துறையில் சுத்த சுன்னம்! எவ்வளவு தான் மித மிஞ்சிய துயரமாயிருந்தாலுங் கூட எந்த ஆணும் ஒப்பாரி சொல்லி அழுவதில்லை! அதாவது கவிதா சக்தி இல்லை! வருத்தம் இருக்கும்போது பாட்டு எப்படி வரும் என்று சிலர் கேட்கலாம்! தமிழ் நாடகங்களையும், தமிழ் சினிமாக்களையும் பார்க்காத அதிகப் பிரசங்கிகள் தான் இந்த மாதிரிக் கேட்பார்கள்! அவைகளைப் பார்த்தால் வெறும் பாட்டுமட்டுமல்ல; தாளம் தவறாமலும், பக்க வாத்தியங் களுடனும் கூட பாட்டு வரும் என்பது விளங்கும்!

பீடிகை போதும்! விஷயத்தைச் சொல்கிறேன்.

நம் மாகாண மந்திரிகள் இப்போது ஒப்பாரி வைத்துக் கொண்டிருக் கின்றனர்.

பணமில்லே, அய்யாவே! பணமில்லே அம்மாவே!
என்ன செய்வோம் நாங்கோ? எங்கே போய்த் தொலைப்போம்?
அய்யய்யோ முடியலையே! அரைக்காசும் கிடைக்கலையே!
ஹொஹ் ஹோ! ஹொஹ் ஹோ!

(தெரிந்தவர்கள் ஒப்பாரி மெட்டில் பாடுக!)

என்று கனம் மந்திரிகள் ஊர் ஊராக (ஒப்பாரி நிபுணர்கள் சாவு வீடு தேடிச் செல்வது போல!)ச் சென்று ஒப்பாரி வைத்து வருகின்றனர்!

ஒப்பாரி வீட்டில் அதிர்வேட்டுப் போட்டாற் கூடக் கேட்காது! தாய்மார்கள் அவ்வளவு உரத்த குரலில் கண்ணீர்த் துளிகளை வடித்துக் கொண்டிருப்பார்கள்! அந்த நேரம் பார்த்து, ''அம்மா பிச்சை போடுங்கோ! பசி காதையடைக்கிறது! நீங்கள் மகராசியாயிருக்கணும்! உங்க வீட்டிலே லட்சுமி குடியிருக்கணும்! இந்த வீட்டுக்காரர் மகராசராயிருக்கணும்!''

என்று ஒரு பிச்சைக்காரன் கூச்சல் போட்டால் எப்படியிருக்கும்?

சென்னை சர்க்கார் செகரடேரியட் குமாஸ்தாக்கள் தங்கள் பஞ்சப்படியை உயர்த்த வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்களாம்! நிதி மந்திரியையும் நேரில் காணப் போகிறார்களாம்! பணம்! பணம்! என்று பஞ்சப்பாட்டு (ஒப்பாரி!)ப் பாடி வருகிறவர்களிடம் பஞ்சப்படி கேட்கிறார்கள்! செலவினங்களில் கத்தரிக்கோல் பிரயோகம் செய்து கொண்டிருக்கும் மந்திரிகளிடம் போய், ''அம்மா கொஞ்சம் கஞ்சி ஊற்றுங்கள்'' என்று கேட்கிறார்கள்!

ஓங்கிய தொண்டையில் ஒப்பாரி சொல்லி அழுகிறவர்கள் காதில் இந்தக் குரல் எப்படிக் கேட்கும்?

அய்யோ! பாவம்! செக்ரடேரியட் தோழர்கள்! பசிக் கொடுமை யினால் சமயந் தெரியாமல் கதறுகிறார்கள்!

14. சுத்த மண்டு சுப்பய்யர்!

(10.6.50)

பார்ப்பனரில் பைத்தியக்காரரேயில்லை என்பது என் நீண்ட நாள் முடிவு. ''பார்ப்பானுக்குப் பைத்தியம் பிடித்தால் தெருச் சாமான்களைத் தூக்கித் தன் வீட்டிற்குள் வீசுவான்,'' என்று பெரியார் கூட அடிக்கடிச் சொல்வார்.

காவடி தூக்குகிற நம்மைப் 'பக்தர்' என்பார்கள்; ஆனால் குடிகாரப் பார்ப்பான் கூட காவடி தூக்கி ஆடமாட்டான். தீமிதிக்கின்ற நம்மை 'அற்புத பக்தர், அடாடா!' என்பார்கள். பித்துப் பிடித்த பார்ப்பான் கூடத் தீக்குழியில் இறங்கமாட்டான்!

அதாவது ரொம்ப கெட்டிக்காரர்கள்! அவர்களைப் பார்த்துக் கற்றுக் கொள்ளவேண்டிய விஷயங்கள் ஆயிரத்துக்குமேல் இருக்கின்றன!

இவ்வளவு புகழுக்குரிய ஆரியர் இனத்தில் சில சமயம் ஏதோ ஒரு சில மண்டுகளும் தோன்றி விடுகின்றன!

மதுரையில் ஒரு விசித்திரம்! சுப்பய்யர் என்ற பூதேவர் ஒரு குழந்தையின் பவுன் சங்கிலியைத் திருடிவிட்டாராம். கையும்

களவுமாகப் பிடித்து மதுரை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போனார்களாம். செயின் மாயமாக மறைந்து விட்டதாம்! உடலைப் பரிசோதித்தார்களாம். எங்குமே அகப்படவில்லையாம். பிறகு அய்யர் பேச்சு ஏதோ ஒரு மாதிரி (வேதம் ஓதுகிற மாதிரியோ?) இருந்ததாம்! விடாக்கண்டர்களான போலீசார் அய்யர் வாயைத் திறக்கச் சொன்னார் களாம்! நாக்கின் அடியில் அந்த செயின் ஒளிந்து கொண்டிருந்ததாம்! இதைவிட விசித்திரம் என்னவென்றால் 7 - 8 மாதங்களுக்கு முன்பு இந்தத் திருட்டு நடைபெற்றதாம். இப்போதுதான் தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். நன் நடத்தை ஜாமீன் கொடுக்கும்படியான நல்ல தீர்ப்பு! அதிகாரிகள் சுறுசுறுப்புக்கு என் 'அப்ளாஸ்!'

சுப்பய்யர் நாக்கின் அடியில் செயின்! பிரம்மாவின் நாக்கில் சரஸ்வதி! அவருடைய குலத்திலுதித்த பிராமணர் (பிரம்மா - பிராமணர்) நாக்கில் சங்கிலி! நாக்கு வேலையில் நடு நாயகமாயிருப்பவர்கள் போலும்!

இந்த சுப்பய்யர் சுத்த மண்டு என்பதே என் தீர்ப்பு!

சுப்பய்யரே! இப்படிக் கூறுவதற்காகத் தயவு செய்து மன்னி யுங்கள்! யோசித்துப் பாருங்கள்! உங்கள் குலமென்ன! கோத்திர மென்ன! எதற்காக நீங்கள் திருடவேண்டும்? மற்ற ஜாதிக்காரர்தான் திருடி, உதைபட்டு, சிறைத்தண்டனை அடைகிறார்கள்! உங்களுக்கு சுயராஜ் யத்தில் அந்தமாதிரித் தண்டனை கிடைக்காதென்றாலுங்கூட நல்ல நடத்தை ஜாமீன் கூட எதற்காகத்தர வேண்டும்?

ஏதோ ஒரு கோவிலில் அர்ச்சகராக இருந்தால் போதுமே! தினம் ஒரு நகையாக, அல்லது நகையின் பகுதியாக, எடுத்துக் கொள்ளலாமே! மதுரையில் உம்மைப் பிடித்துக்கொடுத்த நாகம்மாள் மாதிரி எந்தச் சாமியோ, அம்மனோ பிடிக்குமா? உங்கள் மீது கை வைக்குமா? கண்ணைத் திறந்து தான் பார்க்குமா? கில்ட் நகையைப் போட்டுவிட்டு அசல் தங்க நகையை எடுத்து வந்தால் கூடப் பேசாமலிருக்குமே! வாயைத் திறக்காதே! எல்லாக் கடவுள்களும் அம்மன்களும் உங்களுக்கு வேண்டிய வைகள்தானே?

இப்படியெல்லாம் பணஞ் சேர்த்தவர்களின் பேரன்களும் கொள்ளுப் பேரன்களும்தானே இன்றைக்குக் கலெக்டர்களாகவும், ஜட்ஜ்களாகவும், டாக்டர்களாகவும் இருக்கிறார்கள்? உங்களுக்கு இதுகூடவா தெரியாது?

அர்ச்சகர் வேலை ஒருக்கால் பிடிக்கவில்லை யென்றாலும் ஒரு சாண் தர்ப்பைக்கட்டும் ஒரு கிழிந்த பஞ்சாங்கமும் எடுத்துக்கொண்டு, நாலுவீதி சுற்றினால் எத்தனையோ முட்டாள்கள் 'சாமி, சாமி,' என்று காலில் விழுந்து கும்பிட்டு காணிக்கை தருவார்களே!

ஏனய்யா, பிள்ளையின் செயினைப் போய்த்திருடினீர்? இனியாவது புத்தியாகப் பிழையும்! பூனைக்குப் பிறந்தும் எலியாகி விட்டீரே! ரொம்ப ரொம்ப வெட்கக்கேடு, உம் குலத்துக்கு!

15. அவர்கள் வைத்த தீ!

(15.6.50)

''அன்னை வைத்த தீ அடிவயிற்றிலே!''

அவர்கள் வைத்த தீ அடிப்படையிலே!

தீ வைப்பதில் கூட இடம் முக்கியமானது! நம் தலைமயிரிலேயே நாம் தீ வைத்துக் கொள்ளலாமா? எது எதில் எப்போது தீ வைக்க வேண்டும் என்பதை ஆலோசித்துச் செய்யவேண்டும். பச்சை வகுப்பு வாதம் எழுதுகிறது என்பதற்காக 'ஹிந்து' பத்திரிகையிலோ, அல்லது 'சு.மி.' பத்திரிகையிலோ பொதுக் கூட்டத்தில் தீ வைத்து நம் அதிருப்தியைக் காட்டிக்கொண்டாலென்ன? என்று சிலர் கேட்கிறார்கள். ஆஹா! செய்யலாம்! அன்னியத் துணி மீது நம் வெறுப்பைக் காட்டிக் கொள்வதற்காக அன்று கதர்த் துணிக்காரர்கள் தீயிடவில்லையா? அதுபோல!

''ஏதாவது ஒரு பொதுக்கூட்டத்தில் மனு தர்மத்தையாவது, பகவத் கீதையையாவது, பஞ்சாங்கத்தையாவது தர்ப்பைப் புல்லையாவது தீ வைத்துக் கொளுத்தப் போகிறேன்,'' என்று ஒரு சுயமரியாதைப் பேச்சாளர் தெரிவிக்கிறார். ஆஹா! தப்பு ஒன்றுமில்லை, பேஷாகச் செய்யலாம். ராமன் படத்தைக்கூடக் கொளுத்தலாம், துணிவிருந்தால்!

தீ வைப்பதுபற்றி முழு விவரமும் அறிய விரும்புவோர் இதில் நிபுணர்களான ஆகஸ்ட் தியாகிகள் அல்லது அவர்களின் தலைவர்களான மந்திரிகள், அல்லது சட்டத்தை இயற்றுகின்ற சட்டசபை (காங்கிரஸ்) உறுப்பினர்கள் - ஆகியோரைக் கேட்கலாம்!

''அவர்கள் வைத்த தீ அடிப்படையிலே'' என்று கூறினேனே! அதென்ன தெரியுமா?

நாமெல்லோரும் எந்த வகையிலும் ஒன்று சேர்ந்து விடாதபடி நம் ஒற்றுமையின் அடிப்படையிலேயே தீ வைத்துவிட்டார்கள், அவர்கள்! ''பார்ப்பன மாந்தர்காள்! பகர்வது கேண்மின்!... நால்வகைச் சாதி இந்நாட்டில் நீர் நாட்டினீர்'' (கபிலர்)

அதாவது அவர்கள் வைத்த தீயின் பெயர் ஜா-தீ! பெருந்தீ! சந்தேகமில்லை! எப்பேர்ப்பட்ட வில்லாதி வில்லனையும் வாட்டி வளை வெடுக்கிறது, இந்த ஜா-தீ!

தன் ஜாதியை விட்டு வேறு ஜாதியில் திருமணம் செய்துகொள்ள முயன்று பாருங்கள். வீராதி வீரர்கள் கூட மண்ணைக் கவ்வி விடுகிறார் கள்! மணிக்கணக்கில் பேசுகிறவர்கள் - பத்திக் கணக்கில் எழுதுகிறவர்கள் சிறையைப் பலமுறை படையெடுத்தவர்கள் - யாராயிருந்தாலுஞ் சரி, கலப்புமணம் என்றால் உடனே டன்கர்க்! ஒரே ஓட்டம்! குதிகால் பிடரியில் அடிபடும்படியான வீர ஓட்டம்!

அந்தோணிப் பிள்ளை - சக்கரை செட்டியார் - ஆரோக்கியசாமி முதலியார் - அற்புதசாமி உடையார் - டேவிட் நாடார்!

அடாடா! என்ன கூத்து! கொஞ்ச நாள் போனால் சர்ச்சில் முதலியார், அட்லி நாடார், ட்ரூமன் பிள்ளை என்றுகூட இவர்கள் சொந்தங் கொண்டாட ஆரம்பித்து விடுவார்கள்!

இந்த ஜா-தீ இந்தியக் கிருஸ்தவர் பங்களாவிலும் பிடித்துச் சாம்பராக்கிவிட்டது!

''தோய்காமாஸ் (வெள்ளாளர்) போன்ற ஒரு குறிப்பிட்ட வகுப்பினர்தான் புத்த குருக்களாக வர அனுமதிக்கப்படுகின்றனர். புத்தர்களிடையிலும் ஜாதி வேற்றுமை இருக்கத்தான் செய்கிறது'',

என்று யாழ்ப்பாணம் மேயரான சி.பொன்னம்பலம் கூறுகிறார்.

ஆமாம்! ஜாதியை ஒழிப்பதற்காகவே உண்டாக்கப்பட்ட கொள்கைக்குள்ளேயும் இந்தத் தீ!

பாக்கி சங்கதியெல்லாம் மெள்ள நடக்கட்டும்! முதலில் இந்த ஜா-தீயை அணையுங்கள் என்றால், யாராவது கேட்கிறார்களா? நம்மைப் பார்த்து உறுமுகிறார்கள்!

''இந்த சு.ம.வுக்கு இதைத் தவிர வேறெதுவுமே தெரியாது போலிருக்கே!'' என்று நையாண்டி செய்கிறார்கள்!

தீ அப்பா தீ! பெருந் தீ! பல கோடி மக்களைச் சுட்டெரித்திருக்கும் தீ அப்பா! அதை முதலில் அவிக்கவா! ஆபத்தான வேலை என்பதற்காக சாக்குப் போக்குச் சொல்லாதே! புறப்படு பார்க்கலாம்!

16. அதுதான் தப்பு!

(19.6.50)

நான் பிராமணர்கள் சார்பில் எழுதுவதே யில்லையென்று சிலர் தப்பாகக் கருதியிருக்கின்றனர். நான் எழுதுவதெல்லாம் அவர்களுக் காகவேதான்! அதாவது அவர்களை முன்னேற்றிப் புது வாழ்வு தருவதற் காகத்தான்.

''எங்களை எதிலும் மிரட்ட முடியாது; நாங்கள் எதற்கும் தயாரா யிருப்பவர்கள்'' என்ற மன உறுதியில் இன்றும் முதன்மையாயுள்ளவர்கள் பிராமணர்கள்தான். மற்றவர்கள் இதில் சுத்த சுன்னம் என்றுகூடக் கூறுவேன்!

ஒரு பிராமண சிப்பந்தியைக் கூப்பிட்டு, ''மிஸ்டர் ராஜ கோபாலய்யர்! அந்தப் பயல் திடீரென்று நின்னுட்டான். மீன் இல்லாட்டிப் போனால் எனக்கு சாப்பாடே ருசியாயிருப்பதில்லை; மார்க்கெட்டில் நல்ல மீனாகப் பார்த்து ஒன்று வாங்கி வந்தால் தேவலாம். யாரைப் போகச் சொல்வது?'' என்று கேட்டுப் பாருங்கள்.

''யாரைப் போகச் சொல்வதா? அதென்ன, இப்படிக் கேட்கிறீர் கள்? நான் போய்ட்டு வர்றேனே! இதிலென்ன தப்பு? தாங்கள் ஒன்றும் யோசனை பண்ணவேண்டாம். இதில் எவ்வித தோஷமும் இல்லை. ஆபத்து வேளையில் உதவ வேண்டியதுதானே?''

என்று தான் அந்த சிப்பந்தி கூறுவான்!

பெரிய மனுஷாளில் பலர் தங்களுடைய மனைவி - மக்களை விட்டுவிடச் சொன்னாலும் தயார்! ஆனால் தங்களிடமுள்ள பிராமண சிப்பந்திகளை மட்டும் விட்டுவிட இசையமாட்டார்கள். அதாவது அவ்வளவு உபயோகமாயிருப்பவர்கள், அவர்கள்! ஒருவரை நீக்கி விட்டால் அந்த இடத்துக்கு 5 - 6 பேர் நம்மவர்களை வைக்கவேண்டி யிருக்குமாம்! அவ்வளவு தொழில்களில் கைதேர்ந்தவர்களாயிருக் கிறார்கள்!

சிற்சில சமயங்களில் இத்தகைய பிராமணர்கள் கூடத் தவறி விடுவதுண்டு.

சூரத் அருகிலுள்ள ஓர் ஊரில் ஒரு மயிர் அலங்காரத் தோழர் வீட்டில் மதச் சடங்கு நடத்துவதற்காக பிராமணப் புரோகிதர் ஒருவர் வர மறுத்துவிட்டாராம். உடனே சவரத் தொழிலாளர்கள் புரோகிதர்களுக்கு சவரம் செய்வதில்லை என்று பகிஷ்காரம் செய்துவிட்டார்களாம். புல் ஏந்தும் கையில் வாள் ஏந்தப் போகிற பார்ப்பனர் இனத்தைச் சேர்ந்த புரோகிதர்கள் 'டன்கர்க்' செய்துவிட்டனர்! பகிஷ்காரத் தீர்மானம் நிறைவேற்றிய மறுநாளே புரோகிதர்கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனராம்.

சவரத் தொழிலாளர்களும் பகிஷ்காரத்தை நிறுத்தி விட்டனராம்!

இந்தச் சச்சரவில் யாருக்கு வெற்றி? யாருக்குத் தோல்வி?

சவரத் தொழிலாளர்களுக்குத்தான் படுதோல்வி என்பது என் முடிவு. புரோகிதர்களுக்குச் சவரம் செய்யாவிட்டால் அவர்களில் யாரும்

சவரத் தொழிலாளியாகமாட்டார்கள்; அதாவது எல்லோருக்கும் சிரைக்கக்கூடிய தொழிலை ஏற்றுக் கொள்ளவேமாட்டார்கள். அதற்காக வேண்டி தாடியும் மீசையும் வளர்த்துக்கொண்டு கரடிகள் போலவும், ரிஷிகள் போலவும், காட்சியளிக்கவும் முடியாது! ஆகையால் அவர்கள் பணிந்து வந்ததில் ஆச்சரியமெதுவுமில்லை. ஆனால் சவரத் தொழிலாளர் ஏன் புரோகிதர்களை வருந்தி யழைத்தார்களோ, தெரியவில்லை!

மூட்டைப் பூச்சிகள் பகிஷ்காரஞ் செய்தால் யாராவது அவைகளை வருந்தி யழைப்பதுண்டா? சனி தொலையட்டும் என்றல்லவோ இருக்கவேண்டும்?

புரோகிதன் வராவிட்டால் சவரத் தொழிலாளர் உடல் சுத்தமா யிருக்காதா, என்ன? எதற்காக இந்த வீண் வம்பு? ஓடிப்போன நல்ல பாம்புக்கு யாராவது வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்து வீட்டுக்கு அழைத்து வருவாருண்டா?

வடநாட்டுப் புரோகிதர்களுக்கும் ஒரு வார்த்தை. நீங்களும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டது பெருந்தப்பு. ஏன் நீங்களும் சவரஞ் செய்யக் கற்றுக்கொள்ளக்கூடாது? தென்னாட்டுப் பிராமணர்களைப் போல் வடநாட்டுப் பிராமணர்களுக்குச் சமயோசித புத்தி கிடையாது. இங்கே சதிர் ஆடத் தெரியாத பிராமணப் பெண்களே இன்று இருக்க முடியாதே! சாம்பார் வைக்கத் தெரியாவிட்டாலும் சதிர் ஆடத் தெரிந்தால் போதும் என்று முடிவு செய்துவிட்டார்களே!

சதிர் ஆடுவது தாசிகளின் தொழில் என்று அதை ஏளனமாகவா கருதியிருக்கிறார்கள்? எந்தத் தொழிலை யார் செய்தால்தான் என்ன? பணமும் புகழும்தானே முக்கியம்!

பார்ப்பனர் மோட்டார் வண்டி ஓட்டுவதுபோல இரட்டை மாட்டு வண்டியும் ஓட்டவேண்டும்.

ட்ராக்டரால் உழுவதுபோல கலப்பை பிடித்தும் உழவேண்டும்.

மெக்கானிக் வேலை செய்வதுபோல விறகு உடைக்கும் வேலை யும் செய்யவேண்டும்.

ஒரே சங்கதியில் பழைய தொழிலை ஏளனமாகவும் புதிய தொழிலை மட்டும் உயர்வாகவும் கருதக்கூடாது.

டாக்டர்களாக வந்து உடலை அறுக்கும்போது கசாப்புக் கடைக்காரர்களாயிருந்து ஏன் பணியாற்றக்கூடாது?

அவர்களுக்கு மட்டுமல்ல, இந்தப் புத்திமதி! நான் உட்பட எல்லோருக்குமே சொல்கிறேன்.

17. பெயர் மாற்றுதல்

(20.6.50)

யார் யாரோ என்னென்ன பெயரோ வைத்துக் கொள்கிறார்கள்! பெரும்பாலோர் தங்கள் இளமையில் தங்கள் வீட்டுப் பெரியவர்கள் வைத்த பெயர்களைச் சுமந்துதிரிகிறார்கள். ஒரு சிலர் இச் சுமையை இறக்கி விடுகிறார்கள். மற்றவர்கள் இறக்க முடியாது தவிக்கிறார்கள். எப்படியானாலுஞ் சரி, பெயர் வைப்பதற்கும் அந்தப் பெயரைத் தாங்குகிறவர்களுக்கும் பொருத்தமே இல்லை.

ஒரே ஒரு உதாரணம் போதும். ராமன் என்ற பெயருடையவரே ராமன் கதையைத் தீ வைத்துப் பொசுக்கு, என்கிறார்!

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பெயரில் ஆசை! காங்கிரசுக் காரருக்கு நேரு, காந்தி, போஸ் என்ற பெயர்களில் ஆசை! சு.ம.காரர் களுக்கு இங்கர்சால், கௌதமர், லெனின், காரல் மார்க்ஸ், வள்ளுவர், ரஷ்யா, ஸ்டாலின், இராவணன் என்ற பெயர்களில் ஆசை!

சொற்களில் கூடஒருவருக்குப் பிடிப்பது மற்றொருவருக்குப் பிடிப்பதில்லை. பார்ப்பான் வாயில் தண்ணீர் என்றே வராது. ஜலம் என்றுதான் சொல்வான். சோறு என்றே சொல்லமாட்டான்! சாதம் என்றுதான் கூறுவான். முழுக்கு என்றே கூறமாட்டான். 'ஸ்நானம்' என்றுதான் சொல்வான்.

காங்கிரஸ்காரர் வாயில், 'வணக்கம்' என்பது நுழைவதே யில்லை. அப்பள உலக்கை நுழைவதை விடக்கடினமாயிருக்கிறது! 'திரு' என்று கூறமாட்டார்கள்! 'தோழன்' என்று சொல்லமாட்டார்கள்! நாக்கு வெந்து போய்விடும்! ஸ்ரீ அல்லது ஸ்ரீமான் தான் நுழையும்! நமஸ்காரம் அல்லது நமஸ்தே தான் வரும்!

பள்ளிச் சிறுவர்களிற் பலர், ஆசிரியர் பெயர் கூப்பிடும்போது, ''உள்ளேன் அய்யா'' என்கிறார்கள்! உண்மையான தமிழ்ப்பிள்ளைகள் இப்படித்தான் சொல்கிறார்கள். உண்மையான தமிழர் ஆசிரியர்கள் மகிழ்ச்சியும் அடைகிறார்கள். ஆனால் ஒரு பார்ப்பன ஆசிரியர் முன்பு மாணவர்கள் இப்படிக் கூறிவிட்டால் அவர்கள் காதுக்குள் ஒரு படிக் கட்டெறும்புகளைக் கொட்டியது மாதிரியே இருக்கிறது! துடித்துப் போகிறார்கள்! 'ப்ரசண்ட் சார்' என்பதுதான் ஒழுங்காம்! அதையே தமிழில் சொன்னால் பையன்களை முட்டுகிறார்கள்!

ஒரு சில சுடுகாடு நோக்கிகள் தவிர, இன்றைக்கு எல்லாத் தமிழர் களும் தங்கள் திருமண அழைப்புக்களை தூயத் தமிழிலேயே எழுதுகிறார் கள். சு.ம.காரன் வருவதற்கு முன்பு? அடாடா!

25 ஆண்டுகளுக்கு முன்பு வந்த திருமண அழைப்புக்கள் இருந்தால் எடுத்துப் பாருங்கள்! அவ்வளவு தொல்லை எதற்கு? அக்கிரகாரத்துத் திருமண அழைப்பு ஒன்றை இன்றைக்குத்தான் எடுத்துப் பாருங்களேன்! (''ஆரியராவது? திராவிடராவது?'' என்று கேட்பவர், தலையில் இதை 'அர்ச்சனை' செய்கிறேன்!)

என்னைப் பொறுத்தமட்டில் பெயர் வைப்பதிலும், பெயர் மாற்றுவதிலும், கூடுமான வரையில் அதே உச்சரிப்பில் சொல்வதுதான் அழகு - நியாயம் என்று கூறுவேன்!

'ஆங்கிலம்' என்ற மொழி உலகிலேயே கிடையாது. அதன் பெயர் இங்கிலீஷ்! ஆம்! இங்கிலீஷ்தான்! தமிழ்ப் பேராசிரியர்களே எதிர்த்தாலும் அதன் பெயர் இங்கிலீஷ்தான்! ஆங்கிலமல்ல!

'டமில்' (Tamil) என்ற மொழியே கிடையாது! அதன் பெயர் தமிழ்! 'டமில்' என்று கூறுவதைக் கேட்கும்போது நமக்கெல்லாம் மகா எரிச்சலாயிருக்கிறதல்லவா?

எதையும் சுத்தத் தமிழாக்கி அதன் சுவையைக் கெடுக்கத் தேவையில்லை. 'ஹல்வா'வை சுத்தத் தமிழாக்கி 'வெல்லக் கோதுமைக் கூழ்' என்று கூறவேண்டிய அவசியமென்ன? மாஞ்செஸ்டர் என்ற ஊரை மாரியம்மன்புரம் என்று தமிழாக்கினால் எப்படியிருக்கும்?

நான் 'திருவாடி' (Tiruvadi)க்குப் போயிருந்தேன் என்று ஒரு இங்கிலீஷ்காரன் கூறினால்! ''சீ! சீ! திருவையாறு என்று அழகாகச் சொல்லடா! பொருள் பொதிந்த பெயரடா, அது!'' என்று கூற மாட்டோமா? 'கிராப்' என்பதைத் தமிழாக்குவதற்காக, முன்குடுமி என்று கற்பனை செய்வானேன்?

மேலும்விரிக்கிற் பெருகுமென அஞ்சி இத்துடன் விடுத்தனம். விளக்குமாறு விரும்பின் மறுவாய்ப்பில் முயல்வாம்!

திருத்துறைப்பூண்டி என்ற ஊர்ப்பெயரை வில்வாரண்யம் என்று மாற்றுவதற்கு மகாதேவ அய்யர் முயல்கிறாராம்!

திருப்பழனம் என்ற ஊரைத் திருப்பயணம் என்று திருத்திக் கூறி, அதற்கு நேரான சமஸ்கிருத மொழி பெயர்ப்பாக லட்சமியாத்திராபுரி என்றாக்கி, ஒரு ஸ்தல புராணமே எழுதியுள்ளாராம், வெங்கட்ராம அய்யர் என்பவர்!

இதிலென்ன, ஆச்சரியமய்யா!

தமிழர் என்ற பெயர்களை ராட்சதர்களாக்கி, அதன் பிறகு சூத்திரன்களாக ஆக்கியிருக்கிறார்களே! இந்த இரண்டுக்கும் நாமென்ன தூக்கா போட்டுக்கொண்டு விட்டோம்?

தீபாவளி கொண்டாடுகிற தமிழனை என்ன செய்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதானே? மானம் என்பது தான் தமிழனை விட்டுப் போய்ப் பல நூற்றாண்டுகளாகிவிட்டதே! நெற்றியிலே ஒவ்வொரு தமிழனும் அவனவன் பெயரை ஹிந்தியில் அழியாதபடி 'ஆயில்பெயிண்ட்'டினால் எழுதிக் கொள்ள வேண்டும் என்று நாளைக்கு நேரு சர்க்கார் ஒரு உத்தரவு போடட்டும்! கிட்டத்தட்ட எல்லாத் தமிழர்களும் உடனே மூன்று வர்ணத்தில் எழுதிக் கொள்வார்களே!

18. துடைப்பம் ஏற்றுமதி!

(13.7.50)

இந்தியச் சரக்குகளை வெளிநாட்டுக்கு ஏராளமாய் அனுப்பினால் நமக்கு டாலர் வருமானம் கிடைக்கும். வெளிநாட்டுச் சரக்குகளை வரவழைத்தால் நம் பணம் வெளிநாட்டுக்குப் போய்விடும். ஆதலால் தான் ஜவஹர் லால்ஜீ 1951க்குப் பிறகு வெளி நாட்டிலிருந்து ஒரு பிடி தானியங்கூட இறக்குமதி செய்யப்போவதில்லை என்று அடிக்கடி கூறி வருகிறார். வெளிநாட்டுத் தானியங்களை இறக்குமதி செய்து குறைந்த செலவில் வயிறு நிறைய உண்பதைவிட நிரந்தரமாக ரேஷன் அரிசியையே கால் வயிறாவது உண்டு பணத்தை மிச்சப்படுத்தலாம் என்பது இந்த அறிஞர் கொள்கை!

வெளி நாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்யுஞ் சரக்குகளில் கடலை எண்ணெய், தோல், சணல், தேயிலை, எண்ணெய் வித்துக்கள், பருத்தி முதலியவை குறிப்பிடத்தக்கவை! இவைகள் மட்டும் ஏற்றுமதி செய்தால் போதாதல்லவா? அதற்காக புதுப்புதுச் சரக்குகளை ஏற்றுமதி செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

ஸ்வீடன் நாட்டுத் தலை நகராகிய 'ஸ்டாக்ஹோமில்' சர்வதேசப் பொருட்காட்சி யொன்று நடைபெறப்போகிறதாம்! அதில் இந்தியக் கைத்தொழில் சரக்குகள் பல வைக்கப்படுமாம். அவைகளில் அப்பளம் - ஊறுகாய் முதலியவைகளும் வைக்கப்படுமாம். உலகில் பல நாடுகளிலும் நம் நாட்டு உற்பத்திப் பொருள்கள் இனி பொருட்காட்சிகளில் வைத்து விளம்பரம் செய்யப்படும் என்று புது டெல்லி செய்தியொன்று கூறுகிறது.

அவசியம் வேண்டியதுதான்! நமக்கு ஒரு சிறு குண்டூசிகூடச் செய்யத் தெரியாவிட்டாலும், வெளிநாட்டார் நம்முடைய சரக்குகளை எப்படியாவது வாங்குமாறு செய்தாக வேண்டுமே? என்ன செய்வது? நம் சரக்குகளை உலகெங்கும் நன்றாக விளம்பரஞ் செய்துவிட்டால், நமக்கு ஏராளமான டாலர்கள் கிடைக்கும்!

அட்லி அப்பளத்துக்கு ஆர்டர் கொடுப்பார்! ட்ரூமன் ஊறுகாய்க்கு ஆர்டர் தருவார்! ஸ்டாலின் நம் நாட்டுத் துடைப்பத்துக்கு ஏராளமான ஆர்டர் தருவார்!

ஸ்விட்ஸர்லாண்டுக்கு முறுக்கு பார்சல்களை ஏற்றுமதி செய்யலாம்! ஜப்பானுக்கு ஜாங்கிரியைக் கப்பல் கப்பலாக அனுப்பலாம்! ஆஸ்ட்ரேலியாவுக்கு அக்கார வடிசலும், இத்தாலிக்கு இடியப்பமும் அனுப்பலாம்! துருக்கிக்குத் தோசையனுப்பலாம்! இந்தோனேஷ்யாவுக்கு இட்லி அனுப்பலாம்!

நம்மிடம் உள்ள மாதிரிச் சரக்குகள் வேறெங்காவதுண்டா? விதவிதமாக வைத்திருக்கிறோமே! கிரீஸ் நாட்டு மக்களிடையே நம் காசிக் கயிற்றை விளம்பரப்படுத்தினால் ஆளுக்கொரு கயிறு வாங்கிக் கையில் கட்டிக்கொண்டு திரிவார்களல்லவா?

இறுதியாக இரண்டு முக்கியமான சரக்குகளை சர்க்கார் மறந்துவிடக் கூடாது!

1. தர்ப்பைப் புல்.

2. பூணூல்.

இந்த இரண்டையும் வெளிநட்டுக் கண்காட்சிகளில் கட்டாயம் வைக்கவேண்டும்! இரண்டின் பெருமையையும் நன்றாக விளக்கிக் கூறவேண்டும்!

தர்ப்பைப் புல்லான ஆசனத்திற்குப் பதிலாகவும், பசுமாட்டுக்குப் பதிலாகவும் பயன்பட்டு வருகிற விவரத்தை வெளிநாட்டாருக்குச் சொல்லிக் கொடுத்தால், அவர்கள் அணுக்குண்டுக்குப் பதிலாக உபயோகிப்பார்களல்லவா? 'அணுக்குண்டு சமர்ப்பியாமி', என்று கூறி ஒரு தர்ப்பையை வீசி எறிந்தால் ஊரே நாசமாகிவிடாதா?

அதுபோலவேதான் பூணூலும்! நீக்ரோக்களுங்கூடப் பூணூல் அணிந்து 'உயர்ஜாதி' ஆகலாமல்லவா? அப்பளமும் ஊறுகாயும் போகும் போது தர்ப்பையும் பூணூலும் ஏன் போகக் கூடாது? சந்தேகமிருந்தால் 'வாள் ஏந்தும்' வீரர் எம்.எஸ்.சுப்பிரமணிய அய்யரைக் கேட்டுப் பாருங்கள்!

19. வய்யாபுரியார் கூடவா?

(15.7.50)

அய்யர் கையினால் அரிசியைத் தலையில் போட்டால் அட்சதை!

அவர் கல்லைக் காட்டிக் கடவுள் என்றால் கடவுள்!

அவர் சாணியைப் பிடித்துவைத்துப் பிள்ளையார் என்றால், பிள்ளையார்!

அவர் எச்சிலையை நம் கையில் எறிந்தால் அது கடவுள் பிரசாதம்!

அவர் சாம்பல் தூளைத் தொட்டால் அது விபூதி!

அவர் செத்த மொழியில் உளறினால் அது மந்திரம்!

அவர் நம் வீட்டுத் தண்ணீரை நம் வீட்டுச் செம்பில் ஊற்றி நம் வீட்டு மாவிலையினால் நம் வீட்டில் தெளித்தால் அது புண்ய தீர்த்தம்!

அவர் வீட்டுப் பெண் அரை நிர்வாணமாகக் குதித்தாலும் அது பரதநாட்டியம்!

இம்மாதிரிப் பல கூறுவேன் என்பது உங்களுக்குத் தெரிந்த சங்கதி யாதலால் இத்துடன் நிறுத்திக்கொண்டு எடுத்துக்கொண்ட விஷயத் திற்குச் செல்கிறேன்.

செல்வதற்கு முன்பு இன்னும் ஒரே ஒரு சிமிட்டா பீடிகை!

என்னைப் போன்றவன் ஜரிகை அங்கவஸ்திரத்துடன் தடபுட லாகத் தோன்றினால், ''இது என்ன வெறும் ஜம்பம்! வீட்டிலே சோற்றுக்கு லாட்டரி! வெளியே ஜரிகை அங்கவஸ்திரத்தைப் பார்! சொந்தமாயிருக்காது! லாண்டரியில் வாடகைக்கு வாங்கியிருக்கும்!'' என்பார்கள் அறிவுமிகுந்த பொதுமக்கள்!

இப்படிச் சொல்கிறார்களே யென்று கிழிந்த சட்டையுடனும் வேட்டியுடனும் சென்றாலோ, அப்போதும் விடமாட்டார்கள்!

''இதோ பார், அன்னக்காவடி! இதை நம்பி நாலணாக்கூடக் கொடுக்கக்கூடாது. சுத்த தகரப் போணி! நல்ல துணி கட்டக்கூட 'வக்கு' இல்லை. அதுதான் 'கம்யூனிஸம் கம்யூனிஸம்' - என்று கத்திக்கிட்டு கிடக்குது,'' என்பார்கள்!

ஆனால் ஏதாவது ஒரு பணப்பானைக் கிழிந்த வேட்டி கட்டி யிருக்கட்டும்!

''இவரைப் பார்! எளியவாழ்க்கை! லட்சாதிபதியாக இருந்துங்கூட ஏதாவது டம்பமிருக்கிறதா, பார்! ஏழை பங்காளர் என்றால் இவரல்லவோ?'' என்பார்கள்.

இவரை நம்பி நாலணா அல்ல; நாற்பதினாயிரம் ரூபாய் கூடத் தருவார்கள். இவர் அப்படியே 'திலகர் நிதி' பண்ணினாலுஞ் சரி! மூச்சுப் பேச்சிருக்காது!

அப்படியிருக்கிறது, தமிழ் உலகம்! யாரையும் குற்றஞ்சொல்லிப் பயனில்லை.

இனியாவது விஷயத்துக்கு வருவோம்! சுயமரியாதைக்காரர்கள் கடந்த இருபது ஆண்டுகளாகப் புரோகித ஒழிப்பு பிரசாரம் செய்து வருகிறார்களல்லவா? பதினாயிரக் கணக்கான தன்மானத் திருமணங்கள் நடத்தியிருக்கிறார்களல்லவா? இதைப்பற்றி நாட்டில் எத்தனையோ கேலிப்பேச்சு! பணக்காரத் திராவிடத் தலைவர்களில் பலர் இன்றைக்கும் புரோகிதனை அழைத்துத் திருமணம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், மான வெட்கமில்லாமல்! ஏன் என்று கேட்டால், ''அவன் என்ன சொல்வது? நான் என்ன கேட்பது?'' என்று வீராப்புப் பேசுகிறார்கள்! மலம் கழித்துக்கொண்டே வெள்ளரிப் பிஞ்சு தின்கிறவர்கள், இவர்கள்! ''வேண்டாம்'' என்று சொன்னால் இன்னும் ஒரு படி மேலே சென்று விடுவார்கள்!

புரோகிதத்தைப் பற்றி திரு வய்யாபுரிப் பிள்ளையவர்கள் 'தினமணி கதிர்' (2.7.50) பத்திரிகையில் எழுதியிருப்பதைக் கீழே தருகிறேன் :

''பாணிக்கிரகணம், ஓமம், தீவலம் வருதல், சப்தபதி முதலியன சங்ககாலத்தில் நிகழ்ந்தன அல்ல. புரோகிதர்கள் மந்திரம் ஓதுதலும், மணவினையில் இல்லையென்றே கூறலாம். தாலி கட்டும் சடங்கும் காணப்படவில்லை. சுமார் 6 - 7ஆம் நூற்றாண்டுகளில் தான் இவைகளில் பலவற்றையும் தமிழ் மக்கள் கைக்கொண்டனர். இவற்றையெல்லாம் நோக்குமிடத்து ஆதியில் ஆரியரின் கலப்பு மிகுதியாக இல்லாத காலத்தே மணச் சடங்கு ஒரு சிலவே இருந்தமையும் பின்னர் அவர்களுடைய கூட்டுறவு தமிழ் நாட்டில் பெருகப் பெருக மணச் சடங்குகளும் பெருகிவிட்டமையும் நன்கு புலப்படும்.''

வெள்ளரிப் பிஞ்சு தின்னும் வீராதி வீரர்களே! வய்யாபுரி கூடச் சொல்லிவிட்டார்! இவர் சாதாரணப் பேர்வழியல்ல! ஒரு தனி ரகம்!

1. டி.கே.சி.

2. நாமக்கல்லார்.

3. அண்ணாமலை.

4. வேதரத்னம்.

இந்த ரகத்தைச் சேர்ந்தவர்! இவரே சொல்லும் போது கூட ஆரிய முறையில் திருமணம் செய்கின்ற மூளைகளைப் பற்றி நான் என்னதான் சொல்வது? கடுமையான சொல் வந்துவிடும் என்பதற்காக உங்களுக்கே விட்டு விடுகிறேன்!

வய்யாபுரி கை(வா) யினாற்கூட வந்து விட்டது! இன்னமுமா புரோகிதத் திருமணம்? மரமண்டைகளைக் கேட்கிறேன்; மற்றவர்களை யல்ல.

20. தொல்லையப்பா, தொல்லை!

(19.7.50)

சில வாரங்கட்கு முன்பு நான் ஒரு தன்மான முறைத் திருமணத்தில் சொற்பொழிவாற்றினேன். புரோகிதமும் மூட நம்பிக்கையும் ஒழிந்த திருமணத்தின் அவசியத்தையும் சிறப்பையும் பற்றிக் கூறிவிட்டு, எல்லோரும் கலப்பு மணத்தில் ஈடுபடவேண்டும் என்று பேசி முடித்தேன்.

எனக்குப் பிறகு பேசிய ஒரு தோழர் என்னை யொட்டியே கலப்பு மணத்தை ஆதரித்துப் பேசினார். அந்தச் சமயத்தில் கூட்டத்திலிருந்த ஒருவர் எழுந்து, ''உங்கள் சமூகத்தில் மட்டும் இதுவரையில் யாருமே கலப்பு மணஞ்செய்ய வில்லையே, ஏன்?'' என்று கேட்டார். பேசியவர் திடுக்கிட்டுப் போனார். ஒரு சில விநாடி ஒன்றும் பேசாதிருந்துவிட்டு, ''அப்படியா! இது வரையில் எனக்குத் தெரியாது. ஆனால் பலர் முயற்சி செய்ததாகத் தெரியும். காமராஜ் நாடார் கூட கலப்பு மணம் செய்யப் போவதாகப் பலர் பேசிக்கொண்டனர்'', என்று பதில் கூறி முடித்தார். அப்போதுதான் பேசிய தோழர் நாடார் வகுப்பைப் சேர்ந்தவர் என்பது எனக்குத் தெரிந்தது. 10-12 ஆண்டுகளாக நெருங்கிப் பழகிவருகின்ற நூற்றுக்கணக்கான தோழர்களின் 'ஜாதி' என்ன என்பது உண்மையாகவே இன்றுவரை எனக்குத் தெரியாது. ஒரு சிலர் ஜாதி மகாநாட்டில் கலந்துகொள்ளும்போதுதான், ''ஓஹோ! இந்தப் பேர்வழி இந்த ஜாதியா?'' என்று தெரிந்து கொள்வேன்.

இது நடந்து பல நாட்களுக்குப் பிறகு, அதாவது சென்ற ஞாயிற்றுக் கிழமையன்று மாயூரம் பொதுக் கூட்டத்தில் எனக்குப் பிறகு பேசிய தோழர் எம்.ஆர்.ராதா ஜாதி ஒழிப்பைப் பற்றிக் கூறிக்கொண்டே வந்து, ''நாடார் சமூகம் மட்டும் இன்னமும் கலப்பு மணத்தில் ஈடுபடாம லிருப்பது சரியல்ல,'' என்று திடீரென்று ஒரு போடு போட்டார். நான் பேச்சை ஊன்றிக் கவனித்தேன்.

''தாழ்த்தப்பட்டோரைக் காட்டிலும் சமுதாயத்தில் பின்னணியில் கிடந்த இந்த சமுதாயத்தை உயர் நிலைக்குக் கொண்டுவந்த பெருமை 100க்கு 100 என் தலைவர் பெரியாரைச் சேர்ந்தது. அதாவது சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தது. ஆனால் இச் சமூகத்திலுள்ள ஒரு சிலர் தவிர மற்றவர்கள் ஜாதி வெறியை விட்டதாகவோ, பெரியார் இயக்கத்திற்குப் பேராதரவு தருவதாகவோ கூறமுடியாததற்கு வெட்கப்படுகிறேன். படிப்பு, வியாபாரம், அறிவு ஆகிய சகல துறைகளிலும் முன்னணியி லுள்ள தலைசிறந்த சமூகம் பெரியாரின் அடிப்படைக் கொள்கையான ஜாதி ஒழிப்பு விஷயத்தில் மட்டும் ஒதுங்கி நின்று கொண்டு கலப்பு மணம் செய்யாமலிருப்பது பற்றி வருந்துகிறேன். இந்த விஷயத்தில்

பார்ப்பனர் கூட நாடார்களை விட அதிகமாக முன்னேறி யிருக்கிறார்கள். நான் சொல்வது தவறு என்று நிரூபிக்கக் கூடியவர் யாராயிருந்தாலும் இம்மேடைக்கு வரலாம்,'' என்றார்.

சுமார் பத்தாயிரத்துக்குமேல் கூடியிருந்தவர்கள் இதை அசை வற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதற்குப் பிறகு அடிக்கடி எனக்கு இதே யோசனை வந்துகொண் டிருக்கிறது. கலப்பு மணம் ஒன்று தவிர வேறு எதுவும் ஜாதியைக் கொல்லாது என்பதை எல்லாரும் ஒப்புக் கொள்கிறார்கள். காமராசர் குறைந்த பட்சம் 100 கூட்டங்களிலாவது இதுபற்றிக் கூறியிருப்பாரென்று நினைக்கிறேன். ஆனால் எந்தச் சமூகமும் அசைவதாகக் காணோம்! நாடார் சமூகம் மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ சில்லறைச் சமூகங்களுக்குக் கலப்பு மணம் என்றால் ஒரே நடுக்கம்! இதில் படித்தவன் வீரன் - புரட்சிக்காரன் - பேச்சுக்காரன் - எழுத்தாளி - முன்னேற்ற வீரன் ஆகஸ்ட் தியாகி - செப்டம்பர் ஸ்ரீமான் - அன்பே சிவம் என்னும் சைவன் ஆழ்வார்களைக் காட்டும் வைணவன் - அவன் - இவன் - உவன் - எல்லோரும் ஒரு கூடைப் பிடாரியாகத் தானிருக்கிறார்கள்!

ஒரு ராஜகோபாலாச்சாரியார் தம் பெண்ணைப் பார்த்துப் பெருமைப்படலாம்!

ஒரு கோபால்சாமி அய்யங்கார் தம் மகனைப் பார்த்துப் பூரிக்கலாம்!

ஒரு வெங்கட்ராம் சாஸ்திரி தம் மகனைப் பார்த்து வீரநடை நடக்கலாம்!

ஆனால் -

ஒரு ஆர்.கே.எஸ்.-??

ஒரு ஏ.ஆர்.-??

ஒரு பி.டி.ஆர்.-??

ஒரு பாண்டியன்.-??

நம் திராவிட சமூகம் எப்படித்தான் உருப்படப் போகிறதோ! எனக்கு என்னமோ நம்பிக்கையில்லை! ஒரு சர்வாதிகாரி வந்து உத்தரவு மேல் உத்தரவு போட்டால் தான் முடியும்!

நம் நாட்டுக்குத் தேவை என்ன? ஜனநாயகமல்ல! அது ஜல்லிகட்டு விழா! வேண்டியது, ஒரு கமால் பாட்சா! ஒரு லெனின்! அதாவது, ''மாறு அல்லது மாண்டுபோ! இதோ! துப்பாக்கிமுனை!'' என்ற உத்தரவுதான் தேவை!

21. அம்மன் அழுகிறாளே!

(25.7.50)

"ஏ! படுபாவிகளா! நீங்கள் நன்றாயிருப்பீர்களா? உங்களுக்குக் கண் அவியாதா! நீங்கள் நாசமாய்ப் போக! என் தலையிலேயே கைவைத்து விட்டீர்களே! என் வீடு என்ன போஸ்டாஃபீசா, இப்படித் தீ வைக்க? நான் யார் வம்புக்காவது வருகிறேனா? என்னைத் தனி அறையில் தாழிட்டு, ஒரு தடிப்பயல் முழு நிர்வாணமாக்கிவிட்டு, உடல் முழுவதையும் தேங்காய் நாரினால் தேய்த்து நாள்தோறும் குளிப்பாட்டு கிறானே! எட்டு வயதுப் பெண்கூட இதைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டாளே! நான் எத்தனை வருஷமாகப் பேச்சு மூச்சில்லாமல் இந்த மானக்கேட்டை சகித்துக் கொண்டிருக்கிறேன்? என் வாயில் ஊற்ற வேண்டியதை யெல்லாம் தலையில் ஊற்றுகிறான்களே, அடிமுட்டாள் பயல்கள்! அதையும் சகித்துக் கொண்டுதானே இருக்கிறேன்? இத்தனை சாதுவான எனக்குக் கூடவா கேடு செய்யத் துணிந்துவிட்டீர்கள்? என்ன கல்நெஞ்சமடா, உங்களுக்கு?

இப்படிக்கு,
பூங்கோவில் தாயாரம்மன்,
C/o உலகளந்த பெருமாள், திருக்கோவிலூர் டவுன்.

இந்தக் கடிதம் ஒன்று எனக்குக் கிடைத்தது (கனவில் என்க!)

இது என்ன அக்கிரமம் என்று கருதி, பெண் என்றால் 'பேயும்' இரங்கும் என்பதை நினைத்துக்கொண்டு, சிறிது இரக்கப்பட்டேன்! விஷயத்தை விசாரித்தேன்!

வெள்ளிக் கிண்ணங்கள் - ரூ. 350

வெள்ளிப் படிகம் - ரூ. 300

வெள்ளிச் சடார் - ரூ. 250

வெள்ளிக் கவசம் - ரூ. 500

தங்கக் குண்டுகள் 6 - ரூ. 150

முதலியன, முதலியன! ஆக மொத்தம் 2,400 ரூபாய் மதிப்புள்ள நகைகள்! தொலையட்டும் என்றாலும், 3 பெரிய தாலி ரூ. 120, சங்கிலியுடன் ஒரு தாலி ரூ. 150! இவைகளும் போய்விட்டனவாம்!

19-ந் தேதி இரவு அம்மன் சந்நிதிக் கதவுகளைப் பிளந்தும், மூலஸ்தான கதவுக்குத் தீ வைத்தும், அம்மனை நெருங்கித் திருடியிருக் கிறார்கள், கொஞ்சமும் கூச்சமோ அச்சமோ இல்லாதவர்கள்!

இம்மாதிரிப் பல ஊர்களில் கோவில் திருட்டுகள் நடந்திருக் கின்றன. திருட்டுத் தொழிலை உத்யோகமாக (வாழ்க்கைப் பிழைப்பாக)

வைத்திருப்பவர் யாரும்திருடியிருக்க முடியாது! ஏனெனில் 'கடவுளிடம்' வேண்டிக்கொண்டு (விகிதாச்சாரம் பேரம் பேசிக்கொண்டு) தான் இவர்கள் திருடவே புறப்படுகிறார்கள்! 'சாமி'யைத் தொட்டாலே கண்ணைக் குத்திவிடும் என்று நம்புகிறவர்களே, இவர்கள்!

இது சாமியல்ல! கல்தான்! செம்புதான்! கட்டைதான்! நாம்தான் நாள்தோறும் கையாண்டு வருகிறோமே! - என்ற துணிச்சல் உடையவர்களைச் சேர்ந்தவர்கள்தான் இம்மாதிரிக் காரியங்களுக்குத் துணிய முடியும்!

யாராயிருந்தாலுஞ் சரி! வேண்டாம்! அம்மன், பாவம்! அழுகிறாள்! திருப்பிக் கொடுத்துவிடுங்கள்! தேவையானபோது கேட்டால் தருவாள்! நாமே போட்ட நகைதானே? நமக்கு ஆஸ்பத்திரி வேண்டும் என்று கேட்டால் கொடுக்கவா மாட்டாள்? நெஞ்சில் ஈரமேயில்லாத மாதுகூட தன் வீட்டில் நோய் என்றால் தன் நகையைக் கழற்றித் தருகிறாளே! உலகளந்த பெருமாள் வீட்டு அம்மாவா தரமாட்டாள்? வேண்டாம்! திருடிப்போன தெய்வ பக்தர்களே! நகைகளைக் கொடுத்துவிடுங்கள்! போலீசாரிடம் 'ரிப்போர்ட்' செய்திருக்கிறாளாம், என் தாயார்! திருட்டுக் கண்டுபிடிப்பதில் அவர்கள் திறமைதான் உங்களுக்குத் தெரியுமே! வேண்டாம்! கொடுத்துவிடுங்கள்!

அம்மனுக்குக் கோபம் வருவதற்கு முன்பாகவே திருப்பிக் கொடுத்துவிடுங்கள்! ஆஸ்திகத் திருடர்களே! உங்களுக்குத்தான் சொல்கிறேன்! திருப்பிக் கொடுத்துவிடுங்கள்! பொதுச் சொத்தைத் தனி உடைமையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்!

22. வனபோஜனத்துக்கு வாடீ!

(28.7.50)

வாஞ்சி : அடீ! வனஜா! எங்கேடி போயிட்டே! நல்ல நாளும் பெரிய நாளுமா நாலு வார்த்தை பேசி கொஞ்சலாமுண்ணா, இவள் எங்கேயோ போயிடறாள்! சதா ஊர் வம்புதானா? அடீ! வனஜா!

வனஜா : (குளியலறைக்குள் இருந்தபடியே!) ஏன் இப்படிச் கூச்சல் போடறேள்? இப்பத்தான் ஸ்நானம் செய்ய வந்தேன்! அதற்குள் இந்தக் கூக்குரல் போடறேளே! கொஞ்சம் இருங்க வந்துட்டேன்!

வாஞ்சி : (தனக்குள்ளாக) அடாடா! பேஷான தீர்ப்பு! சட்ட நிபுணர்கள் இரண்டு பேரும் மடக்கி மடக்கிப் பேசியான பிறகு இந்தத் தீர்ப்புத்தானே கிடைக்கும்? எதிர்பார்த்ததுதானே? இனி என்ன செய்வான்கள், இந்த சூத்திரப் பயல்கள், பார்க்கலாமே! மறுபடியும் பழைய காலத்தைப் போல் மாடு மேய்க்கணும்! அல்லது சட்டிபானை செய்யணும்! அல்லது மேளம் வாசிக்கணும்! அல்லது உழணும்! பத்தாவது

வரையிலே படிச்சுபிட்டுக்கூட இனி இந்தவேலைதான் செய்யணும்! காலே ஜாம், காலேஜ்! இவன்கள் கெட்ட கேட்டுக்கு காலேஜ்! 1950 ஜூலை 27ந் தேதி! புண்யதினம்! வகுப்பு வாதம் கொல்லப்பட்ட விசேஷ தினம்! பிராமணாளுக்குக் கொண்டாட்ட தினம்! பேஷ்! பேஷ்! (வனஜா வருகிறாள், குலைந்த உடையுடன்!)

வனஜா : என்ன இப்படி ஒரே குஷியாயிருக்கேளே, இன்னிக்கு? ஏதாவது ப்ரமோஷன் உத்தரவோ?

வாஞ்சி : போடி போ! ப்ரமோஷனாம்! எனக்கு அல்லடீ ப்ரமோஷன்! நம் குலத்துக்கே ப்ரமோஷனடீ! துணியை சரியாக உடுத்தீண்டுவா! யாராவது திடீருன்னு வந்துடப்போறா! வரும்போது என் கோட் பாக்கெட்டிலிருந்து 10 ரூபாய் பணம் எடுத்திண்டு வா!

வனஜா : (ஒழுங்காகக் கட்டிய உடையுடன் வருகிறாள்) இந்தாருங்கோ, பத்து ரூபாய்! எதற்காக?

வாஞ்சி : நாளைக்கு வன போஜனத்துக்குப் போகலாம் வனஜா! குடும்பத்தோடு போகலாம்! முன்ஷியின் வன மகோத்சவத்துக்குப் பிறகு நம் வன போஜனம்! வக்கீல் விஸ்வநாதய்யர் ஆத்திலே! டாக்டர் சந்திரசேகரய்யர் ஆத்திலே! எஞ்சினியர் ஏகாம்பரய்யர் ஆத்திலே! வாத்தியார் வைத்தியநாதய்யர் ஆத்திலே! - இவாளெல்லாம் கூட வன போஜனத்துக்கு வருவாளாம்! எல்லாம் பேசி முடிச்சாயிடுத்து! நான் சாமான் வாங்கீண்டு வர்றேன். நம்ஆத்திலேயுள்ள ஆறு பேருக்கும் ஷோக்கான சித்திரான்னங்கள் செய்யணும்! சர்க்கரைப் பொங்கல் கட்டாயமாய் சேயணும்! தெரிஞ்சதோ?

வனஜா : வனபோஜனமா? எதற்காக? ஏன் இப்படி ஒரே குதியாய்க் குதிக்கிறேள்? என்ன வந்துடுத்து? அது சரி! அரிசி எங்கேயிருக்கு, சித்திரான்னத்துக்கு? வீட்டில் கால்படி அரிசிகூட இல்லையே!

வாஞ்சி : அரிசியா? அதைப்பற்றி னோக்கென்ன? நானல்லவோ கொண்டு வர்றேன்? சப் இன்ஸ்பெக்டர் கிட்டு இருக்கானோன்னோ? அவன்அரை மூட்டை அரிசி தருவன். சினிமா ஸ்டார் சீமா ஆத்திலே 8 படி தருவா! போதாதா?

வனஜா : ஆமாம்! என்ன விசேஷம், இன்னிக்கு?

வாஞ்சி : விசேஷமா? புண்ய தினம்டீ! காலேஜிலே இடம் கிடைக்காமே நம்மளவாளெல்லாம் தவிச்சாளே! இனிமேல் அந்தப் பயம் ஒழிஞ்சுபோயிடுத்து! கேஸ் போட்டிருந்தாளே, அது நமக்கே ஜெயமா யுடுத்து! இன்னிக்கு தீர்ப்புக்கூறி விட்டா! அப்படிச் செய்வது சட்ட விரோதமாம்! இனிமேல் எந்தக் காலேஜிலாவது அந்தப் பயல்களிலே ஒருவனாவது நுழைய முடியுமா? ஒரு கை பார்க்கத்தானே போறோம்!

வனஜா : பூ! இவ்வளவு தானே! உத்யோகத்திலே ஏதோ கம்யூனல் ஜீ.ஒ. என்கிறாளே! அது ஒழிஞ்சால் தானே தேவலாம்? 'ஆனந்த விகடன்' லே கூட அடிக்கடி எழுதுறாளே?

வாஞ்சி : வனஜா, கொஞ்சம் பொறுத்துக்கோ! அடுத்த மாசத்திலே அந்த சங்கதியும் தெரிஞ்சுபோயிடும்! காலேஜிலேயே இடமில்லாமல் செய்துட்டா, உத்யோகத்துக்கு எங்கே போறது? ஆணி வேரையே பிடிங்கிட்டா செடி எங்கேடீ வளரப்போறது? அதைவிட இது தாண்டீ முக்கியம்! அந்தப் பயல்களைப் படிக்கவிட்டது தானே ஆபத்தாப் போயிடுத்து?

வனஜா : இனிமேல் அவா காலேஜிலே அவாளையே சேர்த்துண்டு நம்ம பையன்களுக்கு இடமில்லாமல் செய்திடுவாளே?

வாஞ்சி : அவ்வளவு புத்தி அவன்களுக்குக் கிடையாதடீ! பாரேன்! புதுசா காஞ்சீபுரத்திலே அவன்கள் ஒரு காலேஜ் திறந்தான்களே! யாரை பிரின்ஸ்பாலா போட்டிருக்கா தெரியுமோன்னோ? நம்மளவாளைத்தான்! அந்தப் பயல்களுக்குக் கடுகளவு புத்தி கூடக் கிடையாதுடீ! அப்படி யிருந்தால் நம்மாலே வெளியில் தலைகாட்ட முடியுமோ?

வனஜா : இனிமேல் சூத்திரனுக் கெல்லாம் ஆத்திரம் வந்து, தெலுங்கு - தமிழ் - மலையாளம் எகிற வித்தியாசத்தை யெல்லாம் மறந்து ஒண்ணா யிட்டால் நம்ம கதி என்னாவது?

வாஞ்சி : போடீ! பைத்தியக்காரி! அவன்களாவது ஒண்ணாகிற தாவது? அவன்களைத்தான் தனித் தனி ஜாதியாய் - சில்லறை சில்லறை யாய் - உதிரி உதிரியாய் - ஆக்கி வைத்திருக்கிறாளே, நம் மூதாதைகள்? போதாக்குறைக்கு பாஷைச் சண்டை வேறே இருக்கு! ஒரே ஒரு பிராமணன் உயிரோடிருந்தாலும் போதும்! அவாளை ஒன்றுசேர விடவே மாட்டான்! அதிலே கொஞ்சங்கூட சந்தேகம் வேண்டாம்! சரி! நான் போகட்டுமா? வரும்போது அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் படம் ஒன்று வாங்கி வர்றேன்! அதோ அந்த காந்தி படத்தை எடுத்து எறிஞ்சுட்டு அந்த இடத்திலே மாட்டணும்! தெரிஞ்சுதோ? யாரேனும் அரிசி கொண்டு வந்தா வாங்கி வை! வனஜா! எனக்கிருக்கிற சந்தோஷத்திலே ஜன்னல் மட்டும் சாத்தியிருந்தால் கட்டாயம் உனக்கொரு முத்தம் கொடுக்காம லிருக்கவே மாட்டேன்!

வனஜா : போதும் போதும்! இரண்டு பிள்ளைக்குத் தகப்பனான பிறகு கூட முத்தமும், தாழ்வாரமும் வேண்டியிருக்கு! உங்களைச் சொல்லக் குற்றமில்லே! வாரத்திலே மூணு சினிமா பார்க்கிறேளே! இந்தப் பலனாவது இருக்க வேண்டாமா?

23. சிவாஜிக்கு எத்தனை மார்க்?

(3.8.50)

'தகுதி'யும் 'திறமை'யும் பார்த்துத்தான் கல்லூரிகளில் மாணவர் களைச் சேர்க்கவேண்டும் என்கிறார்கள், அக்கிரகார வாசிகள்! அவர்கள் விருப்பப்படியே சட்டத்தை நுழைத்தார்கள், ஆறு பேரில் நான்கு பேர் ஆரியர்களாயிருந்த சட்டம் வகுத்தோர். முன் ஏற்பாட்டின்படியே வழக்குத் தொடர்ந்து தீர்ப்பையும் பெற்றுவிட்டனர், பூணூல் மார்பினர்!

ஆகவே 'தகுதியும் திறமையும்,' இனிமேல் அவரவர் 'மார்க்' (Marks) படித்தான் அளக்கப்படும் என்பது நிச்சயம்!

ஒரு மனிதன் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகிறான் என்று வைத்துக்கொள்வோம். அதைக் காணும் மற்றொருவன் தண்ணீரில் குதித்து அவனைக் காப்பாற்ற முயல்கிறான் என்று வைத்துக் கொள்வோம். தண்ணீரில் தத்தளிக்கின்றவன் உடனே கேட்கவேண்டும்!

''நீச்சுப்போட்டியில் நீ எத்தனை மார்க் வாங்கியிருக்கிறாய்? 100க்கு 70 வாங்கியிருந்தால் என்னைக் காப்பாற்று! 100-க்கு 20 - 30 வாங்கியிருந்தால் என்னைத் தொடாதே!'' என்று கூறிவிடவேண்டும்!

மந்திரியார் ஒரு புதிய பாலத்தைப் பார்வையிடப் போவார். பாலத்தைப் பார்த்தவுடனே எஞ்சினியரைப் பார்த்துக் கேட்பார், ''என்ன சார்! ஒரு வண்டி கூடத் தாராளமாகப் போக முடியாதபடி இந்தப் பாலத்தைக் குறுகலாகக் கட்டியிருக்கிறீர்களே! இதற்குத்தானா ஏழு லட்சம் செலவழித்திருக்கிறீர்கள்?''

''கனம் மந்திரியவர்களே! தாங்கள் எஞ்சினியரிங் கல்லூரியில் படித்ததுண்டா? பீ. ஈ. (B.E.) பாஸ் பண்ணியிருக்கிறீர்களா? அப்படி யானால் எத்தனை மார்க் வாங்கினீர்கள்?'' என்று எஞ்சினியர் மந்திரியைக் கேட்பார். உடனே மந்திரி நேராக எஞ்சினியரிங் காலேஜை நோக்கிப் புறப்பட்டுவிடுவார்!

''இதென்னடா தம்பீ, பீ.ஏ. பாஸ் பண்ணிவிட்டு பத்து வரிக் கடிதத்தில் 10 - 12 தப்புப் போட்டு எழுதியிருக்கிறாயே! இதென்ன தமிழ் தானா? நீயே படித்துப் பார்! கடைசி வாக்கியம் முடிவு பெறாமல் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறதே! அதைப் பார்த்தால் பாவமாயிருக்கிறதே!'' என்பார் தந்தை, தனையனை நோக்கி.

''அப்பா! அப்படிச் சொல்லாதீர்கள்! தமிழில் நான் 79 பர்செண்ட் வாங்கியிருக்கிறேன்! கிருஷ்ணமாச்சாரி நோட்ஸ் முழுதும் என் மண்டைக்குள் இப்போதுகூட இருக்கிறது! அது சரி! உங்களுக்குத் தமிழில் எத்தனை மார்க்?'' என்று கேட்பான்!

''மை டார்லிங், சரோஜா! இதென்ன இப்படி சமைத்திருக்கிறாய்? சோறு பயிண்டர் சட்டியிலுள்ள பசை மாதிரி! ரசம் வாய் கொப்பளிக்கும் உப்புத் தண்ணீர் மாதிரி! அவியலைப் பார்த்தால் ஆச்சாரியார் மூக்குக் கண்ணாடி நிறத்திலிருக்கிறது! அப்பளம் ப்ளாட்டிங் பேப்பர் மாதிரி! ஒன்றைக்கூட வாயில் வைக்க முடியவில்லையே!'' - என்று கேட்பான், கணவன்.

''நாதா! என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? டொமஸ்டிக் சயன்ஸில் (வீட்டு சாஸ்திரம்) நான் பிரசிடென்சி ஃபஸ்ட் (first) ஆச்சே! சமையல் ப்ராக்டிகலில் 100-க்கு 100 மார்க் வாங்கியிருக்கிறேனே!'' என்று அருமை மனைவி பதில் கூறுவாள்!

சென்னையில் ஓடுகின்ற சர்க்கார் பஸ்ஸிலும், கம்பெனிக்குச் சொந்தமான ட்ராம் வண்டியிலும் ஏறுவதுண்டே, அது ஒரு பெரிய சர்க்கஸ்! இப்போதே சர்க்கஸ் என்றால் இனிமேல் குஸ்திப் பந்தயமாய்த் தானிருக்கும். பெண்களும் குழந்தைகளும் ஏறுவார்கள்; மற்றவர்கள் அவர்களுக்கு ஆளுக்கொரு குத்துவிட்டு, தங்கள் 'தகுதி'யையும் 'திறமை'யையும் காட்டி வெற்றி பெறுவார்கள்!

இது மட்டுமா? தர்ப்பையினால் திரிக்கப்பட்ட கயிற்றை இடுப்பில் கட்டிக்கொண்டு அது அறுகின்ற வரையில் 'பிராமணார்த்த போஜனம்' செய்து பழக்கப்பட்டவர்கள் இனிமேல் தங்கள் 'தகுதி'யை யும் 'திறமை'யையும் காட்டி ஆளுக்கு ஒரு நாளைக்கு 24 அவுன்ஸ் அரிசி கேட்பார்கள்!

கொடுக்கத்தானே வேண்டும்?

இனி, எதற்கும் 'மார்க்'தான் முக்கியம்! மணம் செய்துகொள்ள வேண்டுமென்றாலும் 'மார்க்'தான் முக்கியம்! மந்திரியாயிருந்தாலும் 'மார்க்'தான் முக்கியம்!

ஆகவே நோட்ஸ் படியுங்கள்! உருப்போடுங்கள்! வாந்தியெடுங் கள்! 'மார்க்' வாங்குங்கள்! ஏராளமாக வாங்குங்கள்!

வாங்கினால்தான் நீங்கள் சிவாஜி ஆகலாம்! நெப்போலியன் ஆகலாம்! பர்னாட்ஷா ஆகலாம்! ஈன்ஸ்டின் ஆகலாம்! ஸ்டாலின் ஆகலாம்!

மார்க் குறைந்தால் கிளார்க் வேலைதான்! மார்க் மிகுந்தால் மந்திரி வேலையுண்டு!

எனவே 'மார்க்' வாழ்க! அதிலிருந்து இன்று தோன்றியிருக்கும் புதிய 'மார்கிசம்' வாழ்க!

24. விளம்பர விநோதம்!

(7.8.50)

யாரும் ஒரே மாதிரி விளம்பரஞ் செய்து கொண்டிருக்கக் கூடாது. அடிக்கடி விளம்பர முறையை மாற்றிக் கொண்டே யிருக்க வேண்டும். (சுயவிளம்பரத்துக்கும் இந்தத் தத்துவம் முக்கியம்) பத்திரிகை விளம்பரத்தில் கூடப் பார்த்திருக்கலாமே! திடீரென்று ஒரு விளம்பரம் தலைகீழாக வரும்! அதை நிச்சயம் எல்லோரும் படித்துப் பார்ப்பார்கள்! (மனிதன் தலைகீழாக நின்றால் வேடிக்கை பார்க்கிறார்களே, அதுபோல!) விளம்பரத்துக்காக வென்று ஒரு இடத்தை ஒதுக்கிவைத்து, அதை முதலில் சில நாட்களுக்குக் காலியாகவே விட்டுவைப்பார்கள். சிலசமயம் வெறும் கேள்விக் குறிகள் மட்டும் போட்டு வைப்பார்கள்! அதே இடத்தை வாசகர்கள் கூர்ந்து கவனித்துவந்து, பிறகு அதில்வரும் அசல் விளம்பரத்தைப் படிப்பார்கள்!

இது விநோத விளம்பர வகையைச் சார்ந்தது!

ஆச்சாரியார் 1938ல் முதலமைச்சராயிருந்தபோது, படம் எடுக்கிற வரைக் கூப்பிட்டு வீட்டில் வைத்துக் கொண்டு வேட்டி துவைத்தார்! அடுத்தநாள் 'மெயில்' பத்திரிகையில் ஆச்சாரியார் வேட்டி துவைக்கும் காட்சி வந்தது! பல காங்கிரஸ் பக்தர்கள் அதைக் கத்தரித்து வைத்துக் கொண்டார்கள்! சலவைத் தொழிலாளி கூட தினம் நூற்றுக்கணக்கான வேட்டிகளைத் துவைத்துக் கொண்டுதானிருக்கிறார். அவர் படம் பத்திரிகையிலா வருகிறது? நேரு பூணூல் சகிதமாக தன் தகப்பனார் சாம்பலை ஆற்றில் கரைத்தார்! உடனே பத்திரிகையில் படம் வந்தது! நாட்டில் எத்தனையோ சவுண்டிகள் பூணூலுடன் பிணச் சாம்பலைக் கரைத்துக் கொண்டு தானிருக்கின்றன! ஆனால் அவைகள் படமெல்லாம் எப்படி வரும்?

மனுஷன் காலில் மனுஷன் விழுவது அநாகரீகந்தான்! எந்த நாட்டிலும் இல்லாததுதான்! என்றாலும் சங்கராச்சாரி - பண்டார சந்நிதிகள் - கால்களில் தினம் எத்தனையோ பரமபக்தர்கள் விழுந்து கொண்டுதானிருக்கிறார்கள்! அவர்களை யார் படம் பிடிக்கப் போகிறார்கள்? ஒருவருமில்லை.

ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்பு டெல்லியில் ஆச்சாரியார் திருவடிகளில் தூத்துக்குடி துரைசாமி நாடார் என்பவர் விழுந்து, ஆச்சாரியாரின் திருச் செருப்புகளைத் தமது திருக்கண்களில் ஒத்திக் கொள்கிற மாதிரி 'ஹிந்துஸ்தான்' மலரில் படம் வந்தது!

சென்னை கவர்னர் பவநகர் மகாராஜா சிறிது தூரம் ஏரைப் பிடித்து உழுது உணவு உற்பத்தியைத் துவக்கி வைத்தாராம்! பவநகர் மகா ராணி

விதையைத் தெளித்தாராம்! நேற்றைய பத்திரிகையில் செய்தி வந்திருக் கிறது. விரைவில் படம் வெளிவரும் என்று எதிர்பார்க்கிறேன்!

எத்தனையோ வயல்களில் எத்தனையோ குப்பன்கள் ஏர் உழுகிறார் கள்! எத்தனையோ சுப்பிகள் விதை தெளிக்கிறார்கள்! அவர்கள் படத்தை எந்த நாட்டிலாவது (ரஷ்யா தவிர) பத்திரிகைகளில் வெளியிடுகிறார் களா?

பவநகர் தம்பதிகள் வருங்கால வாழ்க்கையை எதிர்பார்த்து இப்போதே முன் கூட்டிப் பழகிக் கொள்வார்களேயானால் பாராட்டக் கூடியதுதான்! வெறும் விளம்பரத்துக்காக என்றால், இதெல்லாம் இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான்!

சாதாரணமாக ஒரு தொழிலைச் செய்யாத பேர்வழி அதைச் செய்வதுதான் விளம்பர விநோதம்!

ராஜா முத்தைய்யா செட்டியார் சைக்கிளில் போனால், அது ஒரு வேடிக்கை!

மந்திரி பக்தவத்சலனார் மரத்தில் ஏறி மாங்காய் பறித்தால் அது ஒரு விநோதம்!

பட்டேல் பந்தாடினால் அது ஒரு அதிசயம்!

விஜயலட்சுமி பண்டிட் பரத நாட்டியமாடினால் அது ஆச்சரியம்!

ராமசாமி முதலியார் ராட்டினத்தில் சுற்றினால் (கை ராட்டினம் அல்ல; ஆனால் அதுவும் பொருந்தும்!) அது ஒரு விநோதம்!

இவ்வளவு ஏன்? யாராவது ஒரு அய்யர் பூணூல் மார்புடன் தெருவில் விறகு பிளந்து கொண்டிருந்தால் அதைப் பார்ப்பதற்காக எவ்வளவு கூட்டம் கூடும் தெரியுமா?

சங்கராச்சாரியார் கான்ஸ்டபிள் வேலைக்குப் போய் விட்டார் என்றால் எவ்வளவுபேர் அவரைப் படம் எடுப்பார்கள்?

மந்திரிகளும், தலைவர்களும், பணக்காரர்களும் எத்தனையோ தடவை கட்டடத்துக்குக் கல்நாட்டுகிறார்கள். கையில் கொல்லர் கரண்டியைக் காண்கிறோம். அவர்களே நிரந்தரமாக அதே வேலை செய்வதென்றால் அவர்கள் படம் பத்திரிகையில் வராதே! இது ஏன்?

ஏர் உழுதல், வண்டி ஓட்டுதல், வேட்டி துவைத்தல், செடி நடுதல், கல் நாட்டுதல் - இவைகளெல்லாம் வருவது போல் மற்றத் தொழில் களும் ஏன் படமாக வரக்கூடாது?

கல்வி மந்திரி சுகாதார மந்திரிக்கு க்ஷவரம் செய்கிறார்!

நிதி மந்திரி ரிக்ஷா இழுக்கிறார்!

உணவு மந்திரி தவுல் வாசிக்கிறார்!

அட்வைசர் மந்திரி ஒத்து ஊதுகிறார்!

காமராஜர் கூடை பின்னுகிறார்!

அமிர்தகவுரி அரிசிமா அரைக்கிறார்!

சந்தானமய்யங்கார் சமையல் செய்கிறார்!

இவைகளைப்போல் செய்தி வரவேண்டும்!

25. கல்மாடும் கல்நெஞ்சும்!

(18.8.50)

மனிதன் மாட்டைத் தொடலாம்! அடிக்கலாம்! கொல்லலாம்! தின்னலாம்! கேட்பாரில்லை! ஆனால் கல்மாட்டைத் தொட்டால் மட்டும் குற்றம்!

''என்னைத் தீண்டாதே! நான் எலெக்ட்ரிசிட்டி! உன் மீது 'ஷாக்' அடிக்கும்!'' என்கிற ஜாதியார் இன்னமுந்தான் இருக்கிறார்கள்! ஆனால் இவர்களுக்குத் தனி ரயில் வண்டியோ, பஸ்ஸோ, ட்ராமோ, கிடையாது. பீஷ்வாக்கள் ஆட்சியாயிருந்தால், 'பிராமணர்களின் தனி வண்டி,' என்று ஒரு வண்டியே இருக்கும்!

தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டதாக புது அரசியல் சட்டம் தம்பட்டமடிக்கிறது. அது ஒரு குற்றம் என்று கூடக் கூறுகிறது. ஜாதி ஒழிந்துவிட்டதாகக் கூறி, வகுப்புவாரி உரிமையைக் கூடக் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்கள். இந்த மாகாண சர்க்காரோ, கோவில்களையெல்லாம் பொது மக்களுக்குத் திறந்துவிட்டதாகக் கூறி, சட்டமும் செய்து, படமும் பிடித்து, பத்திரிகையிலும் போட்டு விட்டார்கள்!

''கோவில் மூலஸ்தானத்துக்குள் நுழைந்து பார்! கோவில் மடப்பள்ளிக்குள் நுழைந்து பார்! சட்டம் குறுக்கே நிற்காது!'', என்று நான் ஊர் ஊராகச் சொல்லிக் கொண்டுதான் வருகிறேன். கோவில் நுழைவு உரிமையின் லட்சணத்தைச் சோதனை செய்ய வேண்டுமென்பது என் ஆசை. யாரோ ஒரு நண்பர் வேறொரு மாதிரி சோதனை செய்திருக்கிறார். அவர் என்னைப் போன்ற சாதாரணமானவரல்ல! ஒரு விஸ்வகர்ம பிராமணர்! ஆமாம்! சாட்சாத்!

1. தேவாங்க பிராமணர்

2. சவுராஷ்டிர பிராமணர்

என்று இன்னும் எத்தனையோ பேர் தங்களை பிராமணர்களாக்கிக் கொண்டிருக்கிறார்களல்லவா?

விஷயம் இதுதான். ஆடி மாதம் 23-ந் தேதியன்று நெ.பெரியசாமி பத்தர் என்பவர் கும்பகோணத்திலுள்ள கும்பேஸ்வர கோயிலுக்குள் சென்றாராம். அங்கிருந்த நந்தியை (கல் மாட்டை)த் தொட்டாராம்! எப்படித் தொடலாம்? அக்கிரகாரத்துப் பிறவிகள் உடனே அவர்மேல் விழுந்து பிடுங்கினவாம்! அடியும் கூட உண்டாம்! சம்ரோட்சணை செய்வதற்காக என்று ஒரு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாம்!

கம்யூனல் ஜீ.ஓ. கிளர்ச்சிக்கு ஆதரவாக யாரேனும் இம்மாதிரிக் கற்பனை செய்து எழுதியிருக்கிறார்களோ என்று சிலர் சந்தேகிக்கலாம்!

கீழக் கடலங்குடித் தெருவிலுள்ள அவரே கடிதம் எழுதியிருக்கிறார், பிள்ளையார் சுழியில் துவக்கி! ஒருக்கால் அந்தக் கடிதமும் எப்படியிருக்குமோ என்று நினைக்கலாமே!

இதோ, இன்னொரு ருசு! ரசீது நம்பர் 2984. தேதி 7-8-50.

''பெரிய நந்தியைத் தொட்டதினால் சம்ரோஷணை செய்வதற்காக மேற்படியார் மூலம் வரவு''

என்றும் காரணம் கூறப்பட்டிருக்கிறது. அக்கவுண்டெண்ட் இனிஷ்யலும், எக்ஸக்யூட்டிவ் ஆஃபீசர் (ஆர்.கோவிந்தராசு) கையெழுத்தும் இருக்கின்றன.

இன்னும் என்னய்யா வேண்டும்?

''சற்றே விலகியிரும் பிள்ளாய்'', என்று நந்தன் அன்று கூறினானாம்! நந்தி விலகி நின்றதாம்! இன்று அதே நந்திக்காக ஒருவர், அதுவும் சாட்சாத் விஸ்வகர்ம பிராமணர் ஒரு ரூபாய் அபராதம் செலுத்துகிறார்!

நமக்கும் ஒரு அல்லாடியோ, ஒரு வி.வி.எஸ்.ஸோ கிடைத்தால் இது பற்றி ஒரு வழக்குத் தொடர்ந்து பார்க்கலாம்! நாம் தான் நாதியற்ற இனமாச்சே! துரோகிகளும், சமயசஞ்சீவிகளும், சுய விளம்பரக்காரர்களும், டம்பாச்சாரிகளும் மலிந்த இனமாச்சே!

அபராதம் மட்டுமா? அக்கிரகாரத்தின் மலத்தை வாரித் தலையில் தூக்கி வைத்துக் கொள்ளச் சொன்னாலும் (இப்போதும் நம் இனந்தானே மலம் எடுக்கிறது? அவர்கள் எங்கே எடுக்கிறார்கள்?) நாம் மனப்பூர்வமாகச் செய்ய வேண்டியதுதானே?

நானா யிருந்தால், ''அபராதம் கொடுக்க முடியாது; உன்னால் ஆனதைப் பார்த்துக் கொள்'' என்று சொல்லியிருப்பேன்!

மானமுள்ள திராவிடன் கோவிலுக்குள் செல்ல மாட்டான். அப்படிச் சென்றால் எதையும் தொட வேண்டும். எங்கேயும் செல்ல வேண்டும். இந்த வம்புக்காகத் தான் அந்த வம்பர் குகைக்குள் நான் நுழைவதேயில்லை! என் தோழர்களும் நுழைவதில்லை!

26. சோதிடப் புலிகள்

(22.8.50)

''நான் சோதிடப் புலி,'' என்றார், ஒருவர்!

''எத்தனை ஆடுகளை விழுங்கியிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார், மற்றொருவர்.

சோதிடத்தை நம்புகின்ற ஆட்டுப் புத்திக்காரர்கள் அதிகமாயிருப்ப தனால்தான் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் சோதிடத்துக்குத் தனிப்பக்கம் ஒதுக்கி வைத்திருக்கின்றன.

நடந்ததைச் சொல்வது சோதிடமல்ல! அதனால் பயனுமில்லை. நடக்கப் போவதை முன்கூட்டிக் கூறுவது தான் சோதிடம்! ''நம் தலை விதிப்படித்தானே நடக்கும்'' என்கிறவனுக்கும், ''கடவுள் வகுத்ததை யார் தான் மாற்ற முடியும்?'' என்கிறவனுக்கும் தன் வருங்காலத்தைப் பற்றிக் கவலையே இருக்க முடியாது.

வருங்காலத்தை முன் கூட்டிக் கூறக் கூடிய சோதிடத்திற்கு (அப்படி ஒன்று இருந்தால்) யாரும் மரியாதை செலுத்துவார்கள்!

அபிசீனியா மீது இத்தாலி பாய்ந்த போது தமிழ் நாட்டில் சோதிட நிபுணர்களுக்கு ஒரு பரீட்சை வைத்தது, 'ஆனந்த விகடன்' பத்திரிகை. எல்லா நிபுணர்களும், ''அபிசீனியாதான் வெற்றி பெறும்'' என்று கூறினார்கள்! நேர்மாறான முடிவுக்குப் பிறகு முகத்தில் கரியைப் பூசிக் கொண்டார்கள்!

காந்தியார் இன்ன மாதிரித்தான் முடிவ்டைவார் என்பதைப் பற்றி, நேரத்தையும் நாளையும் குறிக்காவிட்டாலும், மாதத்தைக் கூடக் குறிப்பிட வில்லையே, உலகத்திலுள்ள எந்த சோதிடனும்? அது விஷயத்தில் கிரகங்கள் சோதிடர்களோடு பேசவில்லை! அங்காரகன், சனி, சுக்கிரன் - ஆகிய ஆட்களெல்லாம் 'அண்டர் கிரவுண்ட்' போய் விட்டனர்!

எந்த சோதிடமும் வரப்போகிற சங்கதியைச் சொல்வதேயில்லை! சொல்ல முடியாதபடியால்!

அமெரிக்க அணுக்குண்டு விழப்போகிறது என்று அன்று ஜப்பான் காரர்களுக்கு சோதிடர்கள் கூறியிருந்தால், எத்தனை ஆயிரம் பேர் பிழைத்திருப்பார்கள்? அது மட்டுமா?

இதோ! அஸ்ஸாமில் பெரிய நிலநடுக்கம். ஏராளமான உயிர்கள் சேதம். கால்நடைகள், பயிர்கள், வீடுகள் எல்லாம் அழிந்து விட்டன. பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றனவாம்.

இந்தச் சங்கதியை ஜாடையாகவாவது அஸ்ஸாம் சோதிடரில் எவனாவது (அவனும் நில நடுக்கத்திற்கு இரையாகி யிருந்தாலும் இருக்கலாம்!) சொல்லியிருக்கலாகாதா?

வங்காளத்தில் பட்டினிச்சாவு ஏற்பட்டபோது கூட இந்தச் சோதிடம் எங்கேயோ மறைந்துவிட்டது!

சோதிடம் சோம்பேறிக்குத்தான்! பேராசைக்காரனுக்குத் தான்!

அறிவுக்கும் சோதிடத்துக்கும் அணுவளவு சம்பந்தமுமில்லை.

''நீர் எவ்வளவு தான் லஞ்சம் கொடுத்தாலும் தேர்தலில் ஜெயிக்கப் போவதில்லை'' என்று முன் கூட்டியே யாரோ ஒரு பூந்தி ஜோஸ்யன் சொல்லி விட்டால் ஒவ்வொரு அரசியல் தியாகிக்கும் எவ்வளவு ரூபாய் மிச்சமாகும்?

''உமக்கு எத்தனை வைத்தியர் சிகிச்சை செய்தாலும், நீர் இந்தப் புற்று நோய்க்கு இரையாகி, அழுகிச் சாக வேண்டியதுதான்'' என்று எந்த ஒரு ஜோசியனாவது 'பகவான் ரமண ரிஷிக்கு'ச் சொன்னானா?

''நீர் எத்தனை கோடி டாலர் வாங்கிவந்தாலும் உன் கட்சி உருப்படியாகாது! இந்த நாடு கம்யூனிஸ்ட் வசந்தான் போகப் போகிறது!'' என்று சியாங்கே ஷேக்கிடம் எவனாவது ஒரு சோதிடன் கூறியிருந்தால், அமெரிக்காவுக்கு எவ்வளவு டாலர்கள் மிச்சமாயிருக்கும்?

சோதிடத்தை மிக அழுத்தமாக நம்புகிறவன்கூட எத்தனையோ சமயங்களில் நம்ப மறுக்கிறான்.

சோதிடம் என்பது சொக்கட்டான் மாதிரி! ஒரு பொழுதுபோக்கு! தமாஷ்! அவ்வளவு தான்!

27. கதர்த் துணியால் மூடு!

(23.8.50)

''கள்ள மார்க்கெட் வியாபாரத்தையும், பதுக்கலையும் ஒழிப்பதற்காக கெடுபிடியான நடவடிக்கை எடுக்கப் போகிறார்களாமே?'' என்று வியாபாரி யொருவர் என்னைக் கேட்டார்.

''அதைப் பற்றி உங்களுக்கென்ன கவலை? நீங்கள் தான் அதில் சேர்ந்தவர்களல்லவே!'' என்றேன்.

''நான் கள்ளமார்க்கெட் வியாபாரிகள் கூட்டுறவு சொஸைடியில் ஒரு மெம்பராயில்லை யென்றாலும், சுத்த சுயம்பிரகாசமானவன் என்று எப்படிச் சொல்ல முடியும்? அப்படி ஒருவர் இருப்பதாகச் சொன்னால் ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷன் இருப்பதாகச் சொல்வது போலத் தான்,'' என்றார்.

இத்துடன் நிறுத்தவில்லை, இவர். கள்ள மார்க்கெட்டில் விற்பதற்காகவே தாம் சுமார் பத்தாயிர ரூபாய் சரக்குகள் வாங்கி வைத்திருப்பதையும் குறிப்பிட்டார். நியாய விலைக்கு விற்றால் 1,000 ரூபாய்கூட லாபங் கிடைக்காதென்றும், கள்ள மார்க்கெட்டில் விற்றால் ஒரே ஆண்டில் சுமார் நாற்பதாயிர ரூபாய் அதிகமாகக் கிடைக்குமென்றும் கூறினார். என் யோசனையைக் கேட்பதற்காகவே வந்திருப்பதாகவும் சொன்னார்.

என் நண்பரான அவருக்கு சொன்ன யோசனையை மற்ற வியாபாரிகளும் பின்பற்றலாம் என்பதற்காக இங்கே குறிப்பிடுகிறேன் :-

எந்தச் சட்டம் வந்தாலுஞ் சரி. அதிலிருந்து தப்புவதற்கு ஒரே வழிதானுண்டு. பூணூல் அணிந்து கொண்டு எந்த அக்ரமம் செய்தாலும் பிராமணன் - உயர்ந்த ஜாதி - என்ற பாதுகாப்பு இருப்பதுபோல, கள்ள மார்க்கெட் வியாபாரஞ் செய்ய வேண்டியவர்கள் எல்லோரும் தவறாமல் கதர்த் துணியை அணியுங்கள்! கள்ளிறக்கும் மொந்தையைக்கூட கதர்த் துணியால் மூடி வைத்தால் எந்த அதிகாரியும் அதன் கிட்டே நெருங்க மாட்டான். கதர் அருகில் 'காங்கிரஸ் ஷாக்' அடிக்குமே!

உதாரணம் கூறுகிறேன், கேளுங்கள். எனக்குத் தெரிந்த ஒரு காங்கிரஸ்காரர் ஆச்சாரியாருக்கு நெருங்கிய நண்பர். முருகன் கோயில் விபூதியை பார்சலாகக் கட்டி விமானத்தில் சி.ஆர்.க்கு அனுப்பியவர்! புது வீடு கட்டி மந்திரியைக் கூப்பிட்டுத் திறக்கச் செய்தவர்.

இவர் ஏதோ ஒரு பொது ஸ்தாபனத்திலிருந்து சுமார் 50,000 ரூபாய் கையாடல் செய்துவிட்டார். 'செய்து விட்டார்' என்று நான் சொல்ல மாட்டேன்! படுபாவி ஆடிட்டர்கள் 'கதை கட்டி' விட்டிருக்கலாம்!

எப்படியோ, இவர் மீது வாரண்ட் பிறப்பிக்கிற மாதிரி நிலைமை முற்றி விட்டது.

இவர் குற்றவாளியோ, நிரபராதியோ, எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்றுமட்டும் எனக்குத் தெரியும். அதிகார வர்க்கம் இவரிடம் நெருங்குவதற்கு நடுங்கிக் கொண்டிருக்கிறது! ஏன் தெரியுமா? கதர்த் துணி கட்டியிருக்கிறார்! தொட்டால் 'காங்கிரஸ் ஷாக்' அடிக்கிறது!

இப்போது அதிகாரிகளிலேயே சிலர் இந்த வேஷம் போட ஆரம்பித்திருக்கிறார்கள்! ஆகையால் எந்தப் பாவத்தையும் புண்ய தீர்த்தத்தில் முழுக்குப் போட்டுக் கரைக்கலாம் என்று புராண - இதிகாசங்கள் கூறுவது போல, இன்று கதர்த் துணியினால் மூடி மறைத்து விடலாம்! அது ஒன்றுதான் சுளுவான வழி!

28. ஹிந்தி வக்கீல்!

(24.8.50)

ஹிந்தியில் பேசக்கூடிய - விவாதிக்கக்கூடிய - வக்கீல் என்று பொருளல்ல.ஹிந்திக்காக வாதாடக்கூடிய வக்கீல் என்றுதான் பொருள்.

தமிழின் உயர்வைப் பற்றி வங்காளிகள் கூட்டத்தில் தெலுங்கில் பேசினால் எப்படியிருக்கும்?

எந்த மொழியை வளர்க்க வேண்டுமோ அந்த மொழியில் பேசுவதுதான் நல்லது. உதாரணமாக சமஸ்கிருதத்தை வளர்க்க வேண்டும் என்கிறவர்கள் வீட்டிலும் வெளியிலும் சமஸ்கிருதத்தில் பேசுவதுதான் பொருத்தம். ஹிந்திக்காக வாதாடுகின்ற வக்கீல்கள்கூட ஹிந்தியில் பேசுவதுதான் ஒழுங்கு.

ஹிந்தி வக்கீல்கள் பலருண்டு. சர்தார் வேதரத்னம் பிள்ளையிலிருந்து மந்திரி மாதவமேனன் வரையில், எத்தனையோ ஹிந்தி வக்கீல்கள் இருக்கின்றனர். அவர்கள் தங்கள் வீட்டுப் பெரியவர்களோ, தாங்களோ ஹிந்தி கற்க வேண்டுமென்பதில் அக்கறை காட்டுவதில்லை. பள்ளிப் பிள்ளைகளிடம் ஹிந்தி உயர்வு பிரசாரஞ் செய்வதில்தான் இவர்களுக்கு மிகவும் ருசி.

பெரம்பலூர் மாணவன் ஒருவன் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறான். மூன்றாவது படிவத்தில் (III Form) படிக்கிறானாம். மற்றெல்லாப் பாடங்களிலும் நல்ல 'மார்க் வாங்குகிறானாம். ஆனால் ஹிந்தியில் மட்டும் 'கோழி முட்டை' கிடைக்கிறதாம்! ஒரு எழுத்துக் கூடத் தெரியவில்லையாம்! ஆசிரியரோ பெரிய பெரிய வாக்கியங்களைக் கேட்கிறாராம். பதில் கூறத் தெரியாததால் அடிக்கிறாராம், கிள்ளுகிறாராம். வகுப்பை விட்டு வெளியே தள்ளுகிறாராம்.

''நான் என்ன செய்வது? ஹிந்தி விருப்ப பாடமா? கட்டாய பாடமா? எனக்கு ஏதாவதொரு வழி சொல்லுங்களேன்! அடி தாங்க முடியவில்லையே! மனுஷன் குரங்காக விழுந்து பிடுங்குகிறாரே!''

என்று எழுதியிருக்கிறான், சிறுவன்.

என்னப்பா தம்பி சொல்லட்டும், நான்? உன் நிலை பரிதாபகரமாகத் தானிருக்கிறது! உங்கள் படிப்பைப் பாழாக்குவதென்றே முடிவு கட்டியிருக்கிறார்கள், சர்க்கார். கட்டாயமில்லை என்று சொல்லிக் கொண்டே பள்ளிதோறும் ஆசிரியர்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் வாங்குகிற சம்பளத்துக்கு ஏதாவது செய்து தொலைக்கணுமே! அதற்காக, பாவம்! உங்கள் பிராணனை எடுக்கிறார்கள்!

கல்வி மந்திரி மாதவமேனன் சென்னையில் பேசியிருப்பதைப் படித்தாயா?

''இங்கிலீஷ் விஷயத்தில் முன் தடவை செய்த தவறை மீண்டும் செய்துவிட வேண்டாம். பார்ப்பனப் பிள்ளைகள் எப்படியும் தேசிய மொழியான ஹிந்தியைப் படித்துவிடுவார்கள். இப்போது துவேஷ மனப்பான்மை கொண்டு இன்னமும் ஹிந்தி படிக்க பிராமணரல்லாதார் முன் வரவில்லையானால் பிராமணரல்லாதார் முன்னேறவே முடியாது''

என்று பேசியிருக்கிறார்! அதாவது இங்கிலீஷில் நாமெல்லோரும் ஏமாந்து போய்விட்டோமாம்! பார்ப்பனர் முந்திக் கொண்டு விட்டார் களாம்!

ஆதலால் இப்போதே, நாமும் ஹிந்தி படிக்க வேண்டும் என்கிறார்.

இங்கிலீஷ் விஷயத்தைக் கவனிப்போம். அது உலகப் பொது மொழி. விஞ்ஞான நூல்கள் பொங்கி வழிகின்ற மொழி. அதைப் படித்திருந்தால் எந்த நாட்டுக்குப் போனாலும் பிழைத்துக் கொள்ளலாம், ஹிந்தி அப்பேர்ப்பட்ட மொழியா?

அது போகட்டும். இங்கிலீஷ்காரன் ஆண்டதனால் தானே, இங்கிலீஷ் படிக்க வேண்டியிருந்தது? அவன்தான் போய்விட்டானே! அது தான் இங்கிலீஷை ஒழித்துவிடப் போகிறோம் என்கிறார்களே, காங்கிரஸ்காரர்கள்?

ஹிந்தி சங்கதியும் அப்படித்தானே? ஹிந்தி ஆட்சி உள்ளவரையில் தானே ஹிந்திக்கு மதிப்பிருக்கும்? இங்கிலீஷ் ஆட்சியே இருநூறு ஆண்டுகள் தானே இருக்க முடிந்தது? ஹிந்தி ஆட்சி இருபது ஆண்டுகூட இருக்க முடியாதே? தமிழன் எப்போதும் தனி ஆட்சிதானே நடத்திக் கெண்டிருந்தான்? ஹிந்தி ஆதிக்க ஆட்சியிலிருந்து பிடுங்கிக் கொண்டு வந்துவிட்டால், அதன்பிறகு இந்த உதவாக்கரை ஹிந்தி எதற்காக?

''பிராமணர்கள் அன்று இங்கிலீஷ் படித்ததுபோல் இப்போது ஹிந்தி படிக்கிறார்கள்'' என்கிறார் மந்திரி. இதில் ஆச்சரியமென்ன? ஹிட்லர் வெற்றிமேல் வெற்றியடைந்து கொண்டிருக்கும்போது ஜர்மன் படித்துக் கொண்டிருந்தார்களே! அவர்கள் மலையாளத்திலிருந்தால் மலையாளம் படிப்பார்கள்! ஆந்திராவிலிருந்தால் தெலுங்கு படிப்பார்கள்! வங்காளத்திலிருந்தால் வங்காளம் படிப்பார்கள்! தமிழ் நாட்டிலிருந்தால் தமிழ் படிப்பார்கள்! தாய் மொழி இல்லாதவர்கள் எதையும் படித்து முன்னேற வேண்டியது தானே?

இந்த நாடு மட்டும் தனி நாடாகட்டும்! அல்லது அதற்கான கிளர்ச்சி வெற்றி பெறுவது போலிருக்கட்டும்! பூணூலை அறுத்தெறிந்துவிட்டு, திருக்குறளுங்கையுமாகத் திரிவார்களே!

ஆகவே, மாணவத் தம்பீ! அடிகளையும் உதைகளையும் பொறுத்துக் கொள்! முடிந்தவரையில் படி! ஆனால் தனி நாடு பெறுவதற்கு ஓய்வு நேரத்தில் ஒவ்வொரு விநாடியும் வேலை செய்!

வேலை என்றால் பேசுவதும் எழுதுவதுமல்ல! எத்தனையோ ஆக்க வேலைகளுண்டு! தெரிகிறதா?

ஆனால் ஒன்று. கஷ்டப்பட்டுப் படித்தால் உனக்கு ஹிந்தி வராமற் போகாது. அதற்காக வேண்டுமானால் போட்டி போட்டுப் படித்து அதிக 'மார்க்' வாங்கிக் காட்டலாம்!

ஹிந்தி ஏகாதிபத்தியம் ஒழிய வேண்டும். நம் நாடு நமக்காக வேண்டும். இதில் மட்டும் கண்ணுங்கருத்துமாயிரு! மறந்துவிடாதே! உன் கூட்டாளி மாணவர்களை ஒன்று திரட்டு! நாட்டுப் பிரிவினையை உன் மூலமந்திரமாக வைத்துக்கொள்!

29. கம்யூனிஸ்ட் ஜீ.ஓ.!

(26.8.50)

ஆகஸ்ட் 6-ந் தேதி முத்தய்யா (முதலியார்) தலைமையில் பெரியார் ராயபுரத்தில் பேசினார். இது பற்றியச் செய்தியை, 'இன்றைய நிகழ்ச்சிகள்' என்ற தலைப்பின்கீழ் குறிப்பிட்டிருந்த 'ஹிந்து' பத்திரிகையானது ''கம்யூனிஸ்ட் ஜீ.ஓ. பற்றிப் பேசுவார்கள்'' என்று குறிப்பிட்டிருந்தது!

திராவிட கழகத் தோழர் ஒருவர் திருச்சியில் ஆகஸ்ட் 14-ந் தேதி கடையடைக்க வேண்டுமென்ற துண்டு விளம்பரத்தை ஒவ்வொரு கடைக்கும் கொடுத்துக் கொண்டு வந்தாராம்! படிக்கத் தெரியாத ஒரு வியாபாரி, ''இது என்ன?'' என்று கேட்டாராம்! ''கம்யூனல் ஜீ.ஓ. ஆதரிப்பு நோட்டீஸ்'' என்றாராம், கழகத் தோழர்.

''நம் கட்சி ஏன் சார், கம்யூனிஸ்ட்டோடு சேர வேண்டும்? பயமாயிருக்கிறது, சார்!'' என்றாராம், வியாபாரி!

'ஹிந்து' பத்திரிகையே கம்யூனிஸ்ட் கிலி பிடித்துத் தவறாக அச்சிடும்போது, விஷயந்தெரியாத யாரோ ஒரு சிறு வியாபாரி இப்படிக் கேட்டதில் ஆச்சரியமில்லை!

ஆனால் ஒன்று. கம்யூனல் ஜீ.ஓ. உண்மையில் கம்யூனிஸ்ட் ஜீ.ஓ.தான்! மேடு பள்ளத்தை நிரவுகின்ற உத்தரவு! மிட்டா-மிராசு மேடுகளை வெட்டி, உழவன் பள்ளத்தில் போட்டு சமப்படுத்தினால்தான் பயிர் விளையும். இல்லாவிடில் மேட்டில் தண்ணீரே நிற்காது. பள்ளத்தில் குளமாக நிற்கும். இரண்டு இடங்களிலும் பயிர் விளையாது.

கல்வித் துறையிலும் மிட்டா-மிராசு மேடுகள் இருக்கின்றன. பள்ளங்களும் ஏராளமாக இருக்கின்றன! பல நூற்றாண்டுகளாக இருக்கின்றன. மேட்டை வெட்டினால் மேடு, ''அய்யய்யோ!!'' என்று அலறுகிறது! ''தகுதியினால் மேடாகி யிருக்கிறேன்'' என்கிறது! அறிவுள்ள மனிதன் ஒப்புக்கொள்வானா? இயற்கையில் மேடாக

இருக்கும் மலையையே உடைக்கிறான். குடைந்து செல்கிறான். அப்படியிருக்க செயற்கை மேட்டையா மனிதன் விட்டுவிடுவான்?

கம்யூனல் ஜீ.ஓ. பிற்போக்கு ஏற்பாடல்ல. சமநிலையை உண்டாக்குவதற்கு முந்தி வேண்டிய கம்யூனிஸ்ட் ஜீ.ஓ. தான்.

இன்று நியாயக்கூலி கேட்டுக் கிளர்ச்சி செய்கிறவர்கள் தான், நாளைக்கு லாபத்தில் பங்கு கேட்கப் போகிறார்கள்! மறுநாள், ''எனக்குத் தான் சொந்தம்''! என்று கூறப் போகிறார்கள்! ஆகவே இப்போது நியாயக்கூலி கேட்பது மடிப் பிச்சையல்ல! உரிமைக் கிளர்ச்சி! படிப்பிலும், பதவியிலும், விகிதாசார உரிமை கேட்பது மடிப்பிச்சையல்ல! உரிமைக் கிளர்ச்சி!

நியாயக்கூலி கேட்பவன் மீது முதலாளி உலகம் துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறது! விகிதாசார உரிமை கேட்பவன் மீது பிறவி முதலாளி உலகம் சட்டக் குண்டை வீசி ஒழிக்கப் பார்க்கிறது!

பச்சையாகச் சொல்கிறேன்! மறைப்பானேன்? இரண்டுமே கம்யூனிஸ்ட் கிளர்ச்சி தான்!

இதை ஒடுக்க யாராலும் முடியாது! கபிலர் காலத்திலிருந்தே இந்த 'கம்யூனஸ்' கிளர்ச்சி நடந்து வருகிறது! கபிலர் அகவலை இருட்டடித்ததால் சித்தர்கள் தோன்றினார்கள். அவர்கள் கவிகளையும் இருட்டடித்ததால் நீதிக் கட்சி தோன்றிற்று. அந்தக் கட்சியையும் இருட்டடித்ததால், சுயமரியாதை இயக்கம் பிறந்தது!

30. ''ஜேய் சீதாராம்!''

(3.10.50)

''ஏய்! மூதேவிகளா! இதென்ன ஒரே காட்டுக் கூச்சல்! பகல் முழுதும் வேலை செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினால், ஒரே பஜனை மடம் மாதிரி 'ஜேய் சீதாராம்! ஜேய் சீதாராம்!' என்று கத்துகிறீர்களே?''

''டேய் கிட்டு! இதென்னடா, பாடம் படிக்கிறதை விட்டுட்டு இப்படிக் கத்தீண்டிருக்கே? உன் நெற்றியையும் நாமத்தையும் பாரு!''

''அடீ! சரசு! இதென்னடி இப்படி ஒரே கூச்சல்? குடும்பத்தோடு புறப்பட்டு எங்கேயாவது பிச்சையெடுக்கப் போறேளா? வாயை மூடு சனியனே!''

அடுப்பங்கரைக்குள் செல்கிறார், அண்ணாச்சாமி அய்யங்கார். அங்கேயும் தம் தர்மபத்தினி துவையலை அரைத்துக் கொண்டே ''ஜேய் சீதாராம்! ஜேய் சீதாராம்!'' என்று உரக்கக் கத்திக் கொண்டேயிருந்தாள்!

''அடீ! அம்புஜம்! இதென்னடி இது? நீயும் குழந்தைகளைப் போலவே கத்தீண்டிருக்கே! இருந்தாப்பிலேயிருந்து என்ன வந்துடுத்து உங்களுக்கு? ஏன் இப்படி ஒரே கலாட்டா பண்றேள்?''

அண்ணாச்சாமி அய்யங்கார் முயற்சி பலிப்பதாயில்லை. வரவரக் கூச்சல் அதிகமாகிக் கொண்டேயிருந்தது.

இந்தச் சமயத்தில் பக்கத்து வீட்டு பங்கஜம், ''ஜேய் சீதாராம்!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள்! அண்ணாசாமி அய்யங்காருக்குக் கோபம் தாங்கவில்லை. தலைவலியே வந்துவிட்டது.

''உங்க ஆத்திலும் இதே இழவுதானா?'' என்று கேட்டார், பரமபக்தரான அய்யங்கார், வேதனை பொறுக்கமாட்டாமல்!

''ஜேய் சீதாராம்!'' என்று பதில் கூறினாள், பங்கஜம்.

''ஓஹோ! னோக்கும் இதே சீக்குத்தானா?''

என்றார் அய்யங்கார்! அய்யங்காருக்குத் தலை சுற்றிற்று. என்ன செய்வதென்றே விளங்கவில்லை. கக்கூசுக்குச் சென்றார். கதவு சாத்தியிருந்தது. கதவைத் தட்டி ''உள்ளே யார்?'' என்று கேட்டார்.

''ஜேய் சீதாராம்!'' என்று பதில் வந்தது. அதே குரல் அதே மந்திரத்தை உரக்கச் சொல்லிக் கொண்டிருந்ததும் அவர் காதில் கேட்டது.

''ஏண்டா மூதேவி, நீ தானா உள்ளே? 10-மணிக்குப் பரீட்சை! 7-மணிக்கு கக்கூசுக்குள்ளே உட்கார்ந்திண்டு 'ஜேய்! சீதாராம்!' என்று கத்தீண்டிருக்கையே! நீ ஒரு தம்பிடிக்கு உருப்படுவியாடா?'' என்றார்.

''ஜேய், சீதாராம்!'' என்றே மீண்டும் பதில் வந்தது.

விஷயமே விளங்கவில்லை, அய்யங்கார் சுவாமிகளுக்கு. காதுகளைப் பொத்திக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தார்.

எதிர்வீட்டு ஏகாம்பர அய்யர் வந்தார். அய்யங்கார் வீட்டில் ஒரே கூச்சலாயிருப்பதையும் அய்யங்கார் தலைவேதனையுடன் அமர்ந்திருப்பதையும் கண்டார். நகைத்தார். கை ஜாடை காட்டி அவரைத் தெருப் பக்கம் அழைத்தார்.

''பேப்பரில் படிக்கிறமாதிரி உங்க ஆத்திலேதான் நடக்கிறது, சார்! எங்காத்திலே எதையும் சட்டை பண்றதேயில்லை'' என்றார்.

''அப்படியா? பேப்பர்லே என்ன வந்திருக்கு?''

''ஓஹோ! அதுதான் நீர் இப்படி விஸ்வாமித்திர ஸ்வரூபம் எடுத்திருக்கிறீரோ? பேப்பர்லே வந்திருக்கே நன்னா! நீர் படிக்கலையோ? ரிஷிகேஷ் சிவானந்த சரஸ்வதி வந்திருக்கிறாரோன்னோ? அவர் மயிலாப்பூரிலே ஸ்திரீகளுக்கு சில போதனைகளைக் கூறியிருக்கிறார்.

ஸ்திரீகள் தினசரி வேலைகளைக் கவனித்துக் கொண்டே 'ஜேய் சீதாராம்' போன்ற நாம சங்கதங்களை ஸ்மரணை செய்து கொண்டேயிருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அப்படிச் செய்தால் குழந்தை களும் அவர்களைப் பார்த்துப் பழகுவார்களாம். உங்க ஆத்துக்காரியும் பேப்பரிலே படிச்சிருப்பாள். மயிலாப்பூர் கூட்டத்துக்குப் போய்ட்டு வந்தவாளெல்லாம் இரண்டு நாளா இப்படித்தான் ஸ்மரணை செய்து கொண்டிருக்காளாம்! இதனால் ஊர் வம்பு ஒழிஞ்சு போயிடும் என்று நம் ராமஸ்வாமி அய்யங்கார் கூட சந்தோஷப் பட்டிண்டிருக்கிறார்! நீர் மட்டும் ஏன் வேதனைப்படுகிறீர்?''

''அப்படியா சங்கதி? சிவானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் போதனையா? அடுப்பங்கரையை விட்டு வரட்டும் அவள்! ஏதாவது என்னிடம் கேட்கட்டும்! நானும் 'ஜேய் சீதாராம்' என்றே பதில் சொல்றேன்.''

அரிசிப் பஞ்சம் ஏன்? - என்று கேட்டால் ஜேய் ஹிந்த்!
அக்கிரம நடத்தை ஏன் என்று கேட்டால் ஜேய் சீதாராம்!
இதென்னடா கூத்து, ஏ! சீதையைத் தவிக்க விட்ட சீதா ராமா?

31. ஒழிக! வாழ்க!

(6.10.50)

அதாவது ஒழிக என்பது வாழ்க என்று பொருள்.
ஒழிய வேண்டியது ஒழிந்தால் தான் வாழ வேண்டியது வாழும்!
நோய் ஒழிந்தால் தானே மனிதன் வாழ முடியும்?
தீமை ஒழிந்தால் தானே நன்மை வாழ முடியும்?

2-ந் தேதியன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் மந்திரி மாதவமேனன் பேசுகையில், ''உச்சிக் குடுமி ஒழிக! என்று சிலர் கூச்சலிடுகின்றனர்; எதையும் ஒழிக, என்று கூறுவதற்குப் பதிலாக, வாழ்க என்று கூறுவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்'' - என்று கூறினாராம்!

''உச்சிக்குடுமி ஒழிந்தால் அந்த இடத்தில் மீண்டும் மயிர் முளைத்து விடுமே!'' என்றாராம்! அருமையான விவாதம்! அடுத்த அட்வகேட் ஜெனரல் பதவியை மாதவமேனனுக்கு (மந்திரி பதவி போன பிறகு) தர வேண்டுமென்று சிபார்சு செய்கிறேன். நீதிபதிகளின் சிந்தனைக்குத் தொல்லை தரமாட்டார் என்பதற்காக!

'சினையாகு பெயர்' என்று தமிழ் இலக்கணத்தில் ஒன்றுண்டு. அதுதான் 'உச்சிக்குடுமி ஒழிக!' என்பது. அதாவது அசல் உச்சிக்குடுமி யல்ல, ஒழிய வேண்டியது! அதை உடையவருக்குள்ளே அட்டை போல ஒட்டிக் கொண்டிருக்கும் வைதீகம் ஒழிக, என்று தான் பொருள்!

இ மலையாள வக்கீன்மார் மாதவனாரு இ இலக்கணத்தை அறியாம் பாடில்லா! எந்தா செய்யி? வலிய கஷ்டமாணு!

'தலைக்கு ஒன்று கொடு!' என்றால், தலையிலே போலீஸ் தடியினால் அடி என்றா பொருள்? கதர்ச்சட்டை ஆட்சியில்தான் அப்படிப் பொருள்! ஆனால் தமிழ் இலக்கணப்படி, 'ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொன்று கொடு!' என்று தான் பொருள். இதுவும் சினையாகு பெயருக்கு ஓர் உதாரணம்!

உச்சிக்குடுமியின் மேல் மாதவனாருக்கு அவ்வளவு காதல் இருந்தால், இவரும் அதைவைத்துக் கொள்வதில் எனக்கு ஆட்சேபனை யில்லை!

அறியாமை ஒழிக! அறிவு வாழ்க! என்று கூறினால் கூட கல்வி மந்திரி சண்டைக்கு வந்துவிடுவார் என்று நினைக்கிறேன்! போகட்டும்! லட்சத்திற்கு ஒன்றுகூட இல்லாத இந்த உச்சிக் குடுமிக்காவது வக்காலத்து வாங்கிக் கொண்டு வாதாடியது பற்றி உச்சிக் குடுமியின் சார்பில் (என் கிராப்பின் எதிர்ப்பையும் பொருட் படுத்தாமல்) வக்கீல் மந்திரியாருக்கு நன்றி செலுத்துகிறேன்!

இந்தச் சமயத்தில் நம் கழகத் தோழர்களுக்கும் ஒரு வார்த்தை! ஒழிக! வாழ்க! -ஒலிகள் கட்டுப்பாடாகவும், ஒரே மாதிரியாகவும் மிகமிகக் கம்பீரமாகவும் (சிலர் அழுவதுபோலச் சொல்கிறார்கள்!) இருக்க வேண்டும்! முக்கியமாக கீழ்க்கண்டவைகளை சிபார்சு செய்கிறேன்!

ஒழிக!

பார்ப்பனீயம் ஒழிக! ஜாதிகள் ஒழிக!

மதங்கள் ஒழிக! புரோகிதம் ஒழிக!

மூடநம்பிக்கை ஒழிக! வடநாட்டுச் சுரண்டல் ஒழிக!

பெண் அடிமை ஒழிக! அறியாமை ஒழிக!

முதலாளித்துவம் ஒழிக! ஏகபோக உரிமை ஒழிக!

வடநாட்டு ஆதிக்கம் ஒழிக! அடக்குமுறை ஒழிக!

வாழ்க!

சமதர்மம் வாழ்க! சமத்துவம் வாழ்க!

திராவிடம் வாழ்க! பேச்சுரிமை வாழ்க!

இன உணர்ச்சி வாழ்க! ஒற்றுமை வாழ்க!

பெண் உரிமை ஓங்குக! பகுத்தறிவு ஓங்குக!

இவைகளை இடைவிடாது ஊர்வலங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் முழங்கினால் நம் கொள்கைகள் பொது மக்களுக்கு நன்கு விளங்கும்.

இவைகளுக்கிடையே ''திராவிட நாடு திராவிடர்க்கே!'' என்பதையும் இடைவிடாது பலமுறை ஒலிக்க வேண்டும்.

32. சகல கலாவல்லியே!

(19.10.50)

சினிமா ஸ்டார் பெயரல்ல, இது சகல கலைகளிலும் வல்லவளாகிய சரஸ்வதியின் பெயர்!

சரஸ்வதி என்றால் யார்? அவள் வயதென்ன? எங்கேயிருக் கிறாள்? என்ன வேலை செய்து கொண்டிருக்கிறாள்?

வைதீகர்களைக் கேட்டால் இக்கேள்விகளுக்கு பட்டுக் கத்தரிக்கிற மாதிரி பதில் கூறுவார்கள்!

இன்றைக்கு ஆயுத பூஜையாம்! நாளைக்கு சரஸ்வதி பூஜையாம்!

கீழ்ப்பாக்கம் போலீஸ் ஸ்டேஷனைப் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன்! பிறகு விசாரித்தபோது, அநேகமாக எல்லா போலீஸ் ஸ்டேஷன்களிலும், போஸ்டாஃபீஸ்களிலும் தோரணங்கள் கட்டியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். வெளியூர்களிலும் இப்படித்தான் இருக்கும்.

மதமற்ற சர்க்காரல்லவா? ஆயுத பூஜையில்லாமல் எப்படியிருப்பது? மாகாண சர்க்காருக்கு போலீஸ் ஸ்டேஷன்! மத்திய சர்க்காருக்கு போஸ்டாஃபீஸ்! ரயில்வே இலாகாவிலும் ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை உண்டு!

கிருஸ்தவர் - முஸ்லிம் - பௌத்தர் - ஜைனர் - மதமில்லாதவர் - ஆகிய இத்தனை பிரிவுகள் இருக்கும்போது சர்க்கார் நிலையங்களில் ஒரு ஹிந்துப் பண்டிகையைக் கொண்டாடுவது நீதியா? முறையா? தர்மமா? ஒழுங்கா? நேர்மையா? அறிவுடைமையா? - என்றெல்லாம் ஆத்திரப்பட்டுக் கேட்கக்கூடாது!

மத்திய சர்க்காரின் போஸ்டல் ஸ்டாம்புகளிலும் கார்டுகளிலும் பார்த்தால் கடவுள்கள்!

இந்த மாகாண சர்க்காரின் முத்திரையோ கோபுரம்!

இவைகளைச் சகிக்கிறபோது போலீஸ் ஸ்டேஷன்களிலும் போஸ்டாஃபீஸ்களிலும் தோரணங்கட்டி ஆயுத பூஜை கொண்டாடுவதையும் பல்லைக் கடித்துக்கொண்டாவது சகித்துத்தான் தீர வேண்டும்.

இது அசல் அக்கிரகார ராஜ்யம்! அதாவத ராமராஜ்யம்! அதனால், என்க!

இனிமேல் இந்த போதை (மதுவிலக்கைப் போலவே மதவிலக்கும் சுத்தப்பொய்!) ஏறிக்கொண்டேதான் போகும். சர்க்கார் ஆஃபீஸ்களிலெல்லாம் பஞ்சாங்கம் கட்டாயமிருக்கும்! அதில் பரீட்சையும் வைக்கப்படலாம்! பஞ்சாங்கப் பரீட்சையில் 100-க்கு 70 மார்க் வாங்கியவர்கள் தவிர மற்றவர்களுக்கு உத்யோகம் கிடையாது என்ற தகுதி ஏற்பட்டாலும் ஏற்படலாம்! இதனால் திறமைசாலிகள் முன்னேற்றமடைந்தாலும் அடையலாம்!

''ஓய்! சப்இன்ஸ்பெக்டர்! பத்து கான்ஸ்டபிள்களுடன் துப்பாக்கி சகிதம் புறப்பட்டு கடைத்தெருப் பக்கம் உடனே போகவேண்டும்! அங்கே கலவரமாம்! தெரியுமா? க்விக்!''

''சர்க்கிள்சார்! இன்றைக்கு ஆயுத பூஜையாச்சே! துப்பாக்கி களைக் கழுவித் துடைத்து பூஜையில் வைத்திருக்கிறோமே! எடுத்தால் பாபமாச்சே!''

''அப்படியா! மறந்து போய்விட்டேன்! அப்படியானால் கான்ஸ்டபிள்களை மட்டுமாவது உடனே போகச் சொல்!''

''சார்! ஒரு விண்ணப்பம்! இப்போது கொழுத்த இராகுகாலம்! ஆறு மணிக்கு மேல் அவசியம் அழைத்துக்கொண்டு போகிறேன்! அது வரையில் கலகம் வராது! கலகக்காரர்களுக்கும் இராகுகாலத்தில் கலகஞ்செய்ய வராது, ஸார்!''

''அப்படியா! நீயே அதி புத்திசாலி! சர்க்காருக்கேற்ற சப் இன்ஸ்பெக்டர்! சமயோசிதமாக யோசனை கூறியதற்காக உன்னைப் பற்றி மேலதிகாரிக்கு சிபார்சு செய்யலாமென்றிருக்கிறேன்,''

இந்த மாதிரி உரையாடல்கள் இனி சர்வசாதாரணமாக நடக்கலாம்!

ஆயுத பூஜை கொண்டாடுகிற ஆட்சி அசல் பஞ்சாங்க ஆட்சிதான்! அய்யமேயில்லை! இனிமேல் தர்ப்பைப்புல் கூட போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து விடும்! போஸ்டாஃபீசுக்கும் வந்து விடும்!

ஒரு துண்டு கடுதாசியில் சமாசாரத்தை எழுதி, விலாசத்தையும் குறிப்பிட்டு, ஸ்டாம்பே ஒட்டாமல், அதற்குப் பதிலாக, நுனியில் ஒரு தர்ப்பைப் புல்லைக்கட்டி தபால் பெட்டிக்குள் போட்டுவிட்டால் போதும்! அடுத்த நிமிஷமே அக்கடிதம் குறிப்பிட்ட இடத்துக்குப் போய்விடும்!

அரிசியும், காய்கறியும் தர்ப்பையின் சக்தியினால் அந்தர லோகத்துக்கே போகிறபோது, அற்பக் கடுதாசி தானா வெளியூருக்குப் போகாது?

மதமற்ற ஆட்சியாம்! அடாடா! அருமையான மதமற்ற ஆட்சி! புராணப் புளுகை யெல்லாம் ஒரு புளுகென்றே சொல்லக்கூடாது! காங்கிரஸ் புளுகின் கால் தூசிகூடப் பொறாது, உலகிலுள்ள எந்தப் புளுகும்!

சத்யமேவ ஜெயதி! ஜேய் ஹிந்த்!

33. விபசாரப் பாதுகாப்பு!

(21.11.50)

விபசாரத்தை ஒழிப்பது தவறு; எப்படியாவது அதைப் பாதுகாக்க வேண்டும்; அந்தத் தொழில் நசித்துப் போனால் நம் நாட்டுக்குப் பேராபத்து ஏற்படும் -

என்றார், ஒரு கதர்ச்சட்டைக்காரர்!

நான் திடுக்கிட்டேன்! ''சத்யமூர்த்திதான் இந்த மாதிரிப் பேசியிருக்கிறார்! நீரென்ன, அவர் சீடரோ?''

என்று கேட்டேன்.

''விபசாரம், உடலுக்கும் உள்ளத்துக்கும் தீமை பயப்பதுதான். ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதை ஒழிப்பதால் ஏற்படக்கூடிய சிக்கலும் நஷ்டமும் எவ்வளவு தெரியுமா?'' என்றார்.

''அப்படியா? அதென்ன அய்யா?'' - என்று கேட்டேன்.

''சொல்கிறேன், கேளும் :-

1. விபசாரிகளும் இந்திய யூனியன் மக்களே யாவர்.

2. இந்தியப் பிரஜை யாவரும், எங்கேயும், எந்த வியாபாரத்தையும், செய்ய அரசியல் சட்டம் இடமளிக்கிறது.

3. விபசாரிகள் ஏராளமான மூலதனத்தை வைத்து தங்கள் வியாபாரத்தை நடத்தி வருகின்றனர்.

4. விபசாரிகளிடம் இந்திய யூனியன் மக்கள் ஏராளமாக வேலையிலிருக்கின்றனர். அவர்கள் கதி என்னாவது?

5. விபசாரிகளை வெறுத்தால் வெறுப்புணர்ச்சி மேலும் மேலும் பரவிக்கொண்டே போகும்; பிறகு சூதாட்டத்தை வெறுக்கச் சொல்லும்; தொத்துநோய்களை வெறுக்கச் சொல்லும். எல்லை யில்லாமற் போய்க்கொண்டேயிருக்கும்.

6. விபசாரிகள் வழியாக நம் தேசீய சர்க்காருக்கு எத்தனையோ மாதிரி வருமானங்கள் கிடைக்கின்றன.

7. விபசாரிகளால் எத்தனையோ மருந்துகள் புதிது புதிதாக உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

8. விபசாரம் ஒழிந்தால் பல டாக்டர்கள்....''

''அய்யா! போதும் போதும்! நீர் மகா புத்திசாலி! விபசார ஒழிப்புக்கு எதிர்ப்பு மறியல் கூடச் செய்தாலும் செய்வீர்! 'எல்லோரும் உள்ளே வாருங்கள்!' என்று வாயிலில் நின்று அழைத்தாலும் அழைப்பீர்! விபசாரத்தை ஒரு பெரிய சுதேசித் தொழிலாகக் கருதுகிறீரே தவிர, அதனால் பாதிக்கப்படுகிறவர்களைப் பற்றிச் சிந்திக்க மறுக்கிறீரே! விபசாரிகளுக்குக் கங்காணி வேலை செய்தாவது ஏன் இந்த ஈனப் பிழைப்புப் பிழைக்கிறீர்?'' என்று கேட்டேன்.

வடநாட்டுச் சுரண்டல் ஒழிப்பு முயற்சியிலும் சிலர் மேற்கண்ட காரணங்களையே கூறி வருகின்றனர்! அவர்களை நினைத்துக் கொண்டு வடநாட்டுச் சுரண்டல் ஒழிப்பு என்று வைத்துக்கொண்டு மேலேயுள்ளவைகளை மீண்டும் ஒரு தடவை படித்துப் பாருங்கள்! பிறகு தீர்ப்புக் கூறுங்கள்!

34. பொல்லாத நாள்!

(8.12.50)

அவன் பொல்லாதவன்! அவள் பொல்லாதவள்! - என்பது போல, ஒரு நாளையும் பொல்லாத நாள் என்று கூறலாம்!

எல்லோரும் கூறத் தேவையில்லை. விஷயம் தெரிந்த விஞ்ஞான மூளைகள் மட்டும் கூறலாம்!

கடுமையான வெயில் நாள்! பொறுக்க முடியாத குளிர்நாள்! வெளியில் வரமுடியாத மழைநாள்!

இவைகளில் எதுவுமேயில்லாமல் ஒரு நாளை முன் கூட்டியே நல்ல நாள் அல்லது கெட்ட நாள் என்று கூறக்கூடிய சக்தி உலகில் நம்மைத் தவிர வேறு யாருக்குமே கிடையாது!

ஒருநாள் நல்ல நாள் என்று 4-5 மாதத்துக்கு முந்தியே (பஞ்சாங்கத்தைப் பார்த்து) சொல்லும் சக்தி எங்களுக்குத் தானுண்டு! அந்த நல்ல நாளில் பெருவெள்ளம் வந்தாலுஞ்சரி; பூகம்பமே வந்தாலுஞ்சரி! நல்ல நாள் நல்ல நாள் தான்!

அதுபோல் ஒரு நாளைக் கெட்ட நாள் என்று கூறி விட்டால் அந்த நாள் அணுக்குண்டு ஒழிக்கப்பட்ட நாளாயிருந்தாலும் அது கெட்ட நாள் தான்!

நல்ல நாள்! கெட்ட நாள்!

யாருக்கு நல்ல நாள்! யாருக்குக் கெட்ட நாள்?

திருடனுக்கு நல்ல நாளாயிருப்பது திருடக்கொடுத்தவனுக்குக் கெட்ட நாள்.

முதலாளிக்கு நல்ல நாளாயிருந்தால் தொழிலாளிக்குக் கெட்ட நாள்!

புலிக்கு நல்ல நாளாயிருப்பது, ஆட்டுக்குக் கெட்ட நாள் தானே?

காங்கிரஸ்காரருக்கு நல்ல நாளாயிருந்தால் பொதுமக்களுக்கு அது கெட்ட நாள் தானே?

சரி! தினசரி ஏடுகளும் வாராந்திர ஏடுகளும் இப்போது இந்தப் பிரச்னையில் முனைந்து நிற்கின்றன அல்லவா?

ஒரு தினசரி ஏட்டில் இன்று வெள்ளிக்கிழமையின் பலனைப் பற்றிக் கொட்டை எழுத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு மேற்கே வார சூலையாம். அதாவது மேற்குப் பக்கமாகப் போகின்ற காரியம் வெற்றியடையாது! வீட்டிற்குள்ளே கூட மேற்குப்புறமாகச் செல்லக் கூடாது! அதுதான் இன்றைய தினம் சென்னையில் எல்லோரும் கிழக்கு நோக்கியே மைல் கணக்காகச் சென்று கொண்டிருந்ததைக் கண்டேன்! என்ன ஆனாலுஞ் சரி! அப்படித்தான் செய்ய வேண்டும்!

இன்றைக்கு இன்னொரு முக்கிய விஷயங்கூட!

''இன்று விமான யாத்திரை கண்டிப்பாக விலக்கவும்'' -

என்கிறது, இந்தச் சோதிடக் குறிப்பு!

அவசியம் கவனிக்கத் தக்கதுதான்! இதை மீறி யாராவது விமானத்தில் புறப்பட்டால் நிச்சயம் 'க்ளோஸ்!'

நான் (சோதிடத்தை ஆதாரமாக வைத்து) இப்படிக் கூறுவதில் சந்தேகமிருந்தால் நாளைப் பத்திரிகைகளைப் படித்துப் பாருங்கள்! உலகமெங்கும் ஒரே விமான விபத்தாகத்தானிருக்கும்!

சரி! இவ்வளவு ஆபத்தான ஒரு நாளை இப்படி நம்மிடையே புகுத்தித் தொல்லை தருவது யார்?

நிச்சயம் கடவுளாயிருக்க முடியாது! அவர் தயாபரர்! அன்பே உருவானவர்! அவருடைய சிருஷ்டிகளாகிய நம் மீது இவ்வளவு கெட்ட எண்ணமிருக்க முடியாது!

அப்படியானால் யாரோ 'சகித்தான்' என்கிறார்களே! அந்த ஆசாமியாயிருக்குமோ?

சரி! அவன் எங்கேயிருப்பான்? நான் கண்டதேயில்லையே! கண்ட குப்பைகளையெல்லாம் கற்பனை செய்து விட்டு, அவன் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கிறானே! அவனைத் தேடிப் பிடியுங் கள்! கடவுளிடத்தில் கொண்டு போய்விட்டு, ''இவனை ஏனய்யா உண்டாக்கினீர்?'' - என்று ஒரு வார்த்தை கேட்டுப் பார்க்கலாம்!

அக்கிரகாரத்துப் பக்கத்தில் தேடிப் பாருங்கள்! அங்கே தான் ஒளிந்து கொண்டிருப்பான் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள்!

35. பூணூல் கொசு! முண்டாசு மூட்டைப் பூச்சி!

(12.12.50)

ஞாயிற்றுக்கிழமை இரவு சென்னை பூக்கடை போலீஸ் ஸ்டேஷன் 'லாக்கப்' (lock-up) பில் இருந்தோம்! நாங்கள் 8 பேர்! சூதாட்டக் கைதி ஒருவர்! ஆக 9 பேர்!

போலீஸ் சேவகர் இரும்புக் கதவைப் பூட்டியதும் உள்ளே கடப்பைக்கல் தரை மீது ஜில்லென்று - அதாவது ஜம்மென்று - அமர்ந்தோம்!

ஹால் வெளிச்சம் இரும்புக் கம்பிக் கதவு வழியாக ஊடுருவி வந்தது.

என் காதருகே சிறு மொச்சைக் கொட்டையளவில் ஒரு கொசு வந்தது! அதைத் தொடர்ந்து அதன் நண்பர்கள் (பிராமண போஜனத் துக்கு முண்டிக்கொண்டு வருவது போல்) கூட்டங் கூட்டமாக வந்தனர்.

''இதென்ன? போலீஸ் என்ற பயமேயில்லாமல் இவ்வளவு பெருவாரியாகப் படையெடுக்கிறீர்களே?,'' என்று ஸ்ரீமான்கள் கொசுக்களைக் கேட்டேன்.

''உங்களை விடமாட்டோம்! நாங்கள் யார் தெரியுமா? பிராமணர்கள்! இங்கே இந்த உருவத்தோடு வந்திருக்கிறோம்! உங்கள் ரத்தத்தை ருசி பார்க்கவே வந்திருக்கிறோம்!''

என்றார்கள், ஸ்ரீமான்கள் கொசுக்கள்!

ஒரு கொசுவாரைப் பிடித்து (அவரை எப்படிப் பிடிப்பது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே) அவர் உடலைக் கவனித்தேன்! உண்மையாகவே பூணூல் (வெள்ளைக் கோடு) இருந்தது!

''உள்ளே வந்துகூட எங்களை இப்படித் தொல்லைப்படுத்த லாமா?,'' என்று என் கையிலிருந்தவரின் துக்க விசாரணைக்காக வந்த சுற்றத்தாரைக் கேட்டேன்.

''நீங்கள் செத்தாலே உங்கள் பெயரைக்கூறி, உம் சந்ததிகள் இரத்தத்தைக் குடிக்க கூடியவர்களாச்சே! இந்தப் போலீஸ் லாக்கப்புக் காகவா பயந்துவிடுவோம்? பூ!'' என்றார்கள், என் தோழர்களின் இரத்தத்தை இதற்குள்ளாகவே இஷ்டம்போல் உறிஞ்சி உப்பிய உயர் திரு. கொசுவார்கள்!

இந்தச் சமயத்தில் என் பாதத்தில் 'சுருக்' கென்று குத்தியது போலிருந்தது. வெளிச்சத்தில் கவனித்தேன்!

அடடா! என்ன அருமையான காட்சி, போங்கள்! என்னைச் சுற்றிலும் நூற்றுக் கணக்கில் ஸ்ரீஜத் மூட்டைப் பூச்சிகள்!

''எங்களையா விரட்டப் பாாக்கிறீர்கள்? எங்கள் கடைக்குமுன் ஏன் மறியல் செய்தீர்கள்? இதோ, மூட்டைப் பூச்சி உருவத்தில் உள்ளே நுழைந்து விட்டோம்! பார்! குத்தூசியே! உன்னைச் சுற்றிலுமுள்ள சுவர் முழுவதும் பார் உன்னால் ஒழிக்க முடியுமா?'',

என்று அதட்டிக் கேட்டார், என் காலைக் கடித்துக் கொண் டிருந்த ஸ்ரீஜத் ஆரிய பவான் ப்ரொப்ரைட்டர்!

சுவரைப் பார்த்தேன். சுவர் ஓரத்தைப் பார்த்தேன்! அய்யோ! ஒரே சவுக்கார் பேட்டைதான்! மூன்று அடுக்கு, நான்கடுக்கு மாளிகைகள்!

இதற்குள் மணி 10 ஆகி விட்டது. என் தோழர்கள் அனைவரும், (சூதாடிக் குற்றவாளித் தோழர் உட்பட) கண் அயர்ந்து விட்டனர்! முண்டாசு கட்டிய ஸ்ரீஜத் மூட்டைப் பூச்சிகளும் தங்கள் வேலையைத் தொடங்கி விட்டனர்! ஏழைத் தொழிலாளியின் சொத்துக்கள் மார்வாடியின் வட்டிக்கடைக்குள் நுழைவதுபோல என் தோழர்களின் இரத்தம் ஸ்ரீஜத் மூட்டைப் பூச்சிகளின் உடலுக்குள் வெகு நாசூக்காக நுழைந்து கொண்டிருந்தது.

படை படையாக! அடாடா! எப்படி வர்ணிப்பது, போங்கள்! நேரில் அனுபவித்தால்தான் முடியும்! நேருவின் பொதுக் கூட்டத்துக்கு வடநாட்டார் போவது போல என் தோழர்கள் உடல்களை நோக்கிப் பட்டாளம் பட்டாளமாக, குடும்பம் குடும்பமாக, பிள்ளை குட்டி களுடன் புறப்பட்டார்கள், ஸ்ரீஜத்கள்!

இரவு மணி 11! மணி 12! மணி 1 ! மணி 2! ஒரே படையெடுப்பு! இருவரும் சேர்ந்து எங்கள் மீது ஒருமுகத் தாக்குதல்! இரத்த வேட்டை! என் கண்கள் சுழன்றன! தலைவலி தொடங்கியது! இதற்குள் இரண்டு இனத்தாரும் சேர்ந்து அரை அவுன்ஸ் இரத்தமாவது எடுத்திருப்பார்கள் (இரத்த நன்கொடை - Blood Bank - ஏற்பாடாக இருக்கலாமோ?) உறக்க மயக்கத்தால் முடங்கிபடுத்து அயர்ந்துவிட்டேன், அழுக்கு நிறைந்த கடப்பைக் கல் தரையில்.

காலை 5 மணிக்குத்தான் எழுந்தேன்! நண்பர்களும் எழுந்தனர்! பொழுது விடிந்ததும் இரத்தப் பிரியர்களும் மறைந்தனர்! பகல் பூட்டிக்குத் தான் உண்மை உருவத்திலேயே வரலாமே! அதற்காகத்தான்!

அக்கிரகாரமும் சவுக்கார் பேட்டையும் போலீஸ் இலாகாவில் எவ்வளவு தனிச் செல்வாக்குப் பெற்றிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டுமானால், உண்மையாகவும் உவமையாகவும் சொல்கிறேன்! பூக்கடை போலீஸ் ஸ்டேஷன் லாக்கப்பில் ஒரே ஒரு இரவு இருந்து பார்த்தால் போதும்!

நான் நன்றாகப் பார்த்து விட்டேன்! மற்றவர்களும் விரைவில் பார்த்துவிடுங்கள்! நல்ல சான்ஸ்! இச்சமயம் தவறினால் இனிக் கிடைக்காது!

36. சிவா - விஷ்ணு போலீஸ்!

(18.12.50)

தியாகராயநகர் பாண்டி பஜார் என்ற கடைத்தெருவில் இவ்வாரத்தில் ஒரு புதிய போலீஸ் ஸ்டேஷனை டெப்டி கமிஷனர் சுகுமாரன் திறந்து வைத்தார்.

இதில் அதிசயமென்ன என்று நீங்கள் கேட்கலாம்.

கவனித்துப் படியுங்கள்! அதிசயமிருக்கிறது.

தியாகராயநகர் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஏரியா யிருந்தது. சென்னை நகர சபையார் அதை வீடு கட்டும் மனைகளாக ஆக்கி விற்றார்கள். அதைச் சுற்றிலுமிருந்த பிற மனைகளும் விற்கப்பட்டன. இந்தப் பகுதிக்கு சர்.பி.தியாகராய செட்டியார் (நீதிக் கட்சித் தலைவர்) பெயரை வைத்தனர். மற்றொரு தலைவர் பெயரால் 'பனகல் பார்க்' என்று ஒரு 'பார்க்'கும் ஏற்பட்டது. தெருக்களிலும் 100-க்கு 90க்கு மேல் நீதிக் கட்சித் தலைவர்களின் பெயர்களையே கொண்டிருக்கின்றன!

இங்கே ஒருபெரிய முற்றுப்புள்ளி (பெண் சினிமா ஸ்டார்கள் நெற்றிப் பொட்டு அளவில்) வையுங்கள்! இவ்வளவுதான் நமக்குப் பெருமை! பிறகு, இங்கே அக்கிரகார வாசிகள் வீடுகளை ஏராளமாகக் கட்டிக் கொண்டனர். நம்மவர்களில் ஒரு சிலர் முதலில் சொந்தத்தில் வீடு கட்டிப் பிறகு அவர்களுக்கே விற்றனர்.

இதன் விளைவு என்ன தெரியுமா? தியாகராய நகர் என்ற பெயர் இந்த வேதமோதிகளின் வாயில் நுழையவில்லை! இந்தப் புது ஊருக்கு மேற்கே மாம்பலம் என்ற குக்கிராமம் இருக்கிறது. அதன் பெயரால் தான்

பூணூல் திருமேனிகள் இன்றும் அழைக்கின்றனர். தப்பித்தவறிக் கூட தியாகராய நகர் என்ற பெயர் இந்தப் புண்ய சீலர்களின் வாயில் வராது! நம் பன்னாடைகள் கூட மாம்பலம் என்றே சொல்லித் தொலைக்கின்றன!

இவ்வாறு, கறையான் புற்றெடுக்க நல்ல பாம்பு குடியேறிற்று!

உடனே, சிவா - விஷ்ணு கோவில் என்ற பெயரால் ஒரு கோவில் எழுந்தது! அது தானே முக்கியமான ஆயுதம்!

பிர்ம்மாவின் முகத்திலிருந்து பிறந்த உத்தம ஜாதியான ஒழுக்க சீலர்கள் இருக்குமிடத்தில் கோவில் எதற்காக என்று கேட்கலாம்! பூதேவர்கள் நிறைந்த இடத்திற்கு கோவில் தேவையில்லைதான்! என்னைப் போன்ற 'பாவிகள்' உள்ள இடத்தில் தானே கோவில் தேவை?'செந்தண்மை பூண்டொழுகும் அறவோராகிய அந்தணர்' குழாங்கள் அரும்பிக் கிடக்கும் இமிட்டேஷன் தேவலோகத்துக்குக் கூடவா கோவில் தேவை?

பணப்பிச்சை யெடுத்துக் கோவில் கட்டிவிட்டனர். அதுவும் அசாதாரணமான கோவில்! அதாவது சிவா - விஷ்ணு கோவில்! அரியும் சிவனும் ஒன்று என்று கண்டவர்களல்லவா? அதனால், என்க!

சரி, இந்த இரண்டு பெரிய புள்ளிகள் - ட்ரூமன் (சிவன்), ஸ்டாலின் (விஷ்ணு) போன்ற நிபுணர்கள் - நிர்வாகத்தில் என்ன குறை ஏற்பட்டு விட்டதோ, தெரியவில்லை!

இப்போது புதிய போலீஸ் ஸ்டேஷன் எதற்காக? அங்கிருப்ப வர்கள் கிரிமினல் ட்ரைப்ஸை (குற்றவாளி 'பரம்பரையைச்) சேர்ந்தவர்களல்லவே! வெளியேயிருந்துகூட அங்கு யாரும் நுழைய முடியாதே! வலதுகையில் அக்னியை (அல்லது அதிகாரப் பேனாவை)க் கொண்ட பூசுரரிடம் எந்தத் திருடன் நெருங்க முடியும்?

புதுபோலீஸ் ஸ்டேஷன் ஏற்பட வேண்டிய அவசியமே யில்லை. குடிமக்களோ நல்லவர்கள்! 'மேல்ஜாதி'க்கரர்கள்! பசுவுக்குச் சமானமானவர்கள்! அவர்களையும் மீறி யாராவது அயோக்கியர் புகுந்தாலும் சிவனும் விஷ்ணுவும் எதற்காக இருக்கிறார்கள்? ஒரு சப் இன்ஸ்பெக்டர் செய்கின்ற வேலையை சிவன் - விஷ்ணு இருவருமா செய்யமாட்டார்கள்?

அவர்கள் மீது திறமையில்லாத் தீர்மானம் நிறைவேற்றி, தியாகராயர் நகர் வாசிகள் (ஒழுக்கத்தின்) மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றி - அவமானப்படுத்தும் அறிகுறியாக புதிய போலீஸ் ஸ்டேஷன் திறக்கப்பட்டதை தெய்வலோகம் சார்பாக நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

37. வைரமும் சங்கீதமும்

(25.12.50)

வைரத்தையும் வேறு பல வெள்ளைக் கற்களையும் கலந்து வைத்தால் எது வைரம் என்று பொறுக்கி எடுப்பதற்கு உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? யாருக்குத் தெரிந்தாலுஞ் சரி! எனக்குத் தெரியவே தெரியாது! கடந்த 20 ஆண்டுகளாக ஒரு வைரப் பரிசோதனை நிபுணரிடம் சதா பழகிக் கொண்டிருந்துங்கூட எனக்கு இந்த அறிவு சுட்டுப் போட்டாலும் வராது போலிருக்கிறது!

சங்கீத விஷயமும் கிட்டத்தட்ட இதே மாதிரித்தானிருக்கிறது. இதைப் படிப்பவர்களில் சிலராவது சங்கீத நிபுணர்கள் - ரசிகர்கள் - இருக்கலாம்; அவர்கள் என்னைக் கேலி செய்தாலுஞ் சரி! என் 'காதுக் கோளாறு' பற்றி நையாண்டி செய்தாலுஞ் சரி! நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன்! இன்றைய சங்கீதத்தை வைரம் போலவும், சர்க்கஸ் போலவும் தான் கருதியிருக்கிறேன்.

காதுக்கு இனிமையாக, கருத்துக்குச் சுவையாக, எனக்குத் தெரிந்த மொழியில், வீரம், சோகம், இன்பம், இரக்கம் போன்ற மனித உணர்வுகளைக் கிளப்பக் கூடியதாகப் பாடுவதைத்தான் நான் சங்கீதம் - உண்மையான இசை - என்று ஒப்புக் கொள்வேன்.

'வைரத்தின் அருமை உனக்கென்னடா தெரியும்?' என்று கேட்டால், 'ஆமாம், தெரியாது' என்றுதானே கூறவேண்டும்? எனக்கு மட்டுமா? மக்களில் லட்சத்துக்கு 10 பேருக்குக் கூடத் தெரியாதே! தெரிந்தாலும் அவர்களுக்குப் பயனிருக்காதே!

சர்க்கஸ் என்று குறிப்பிட்டேனல்லவா? பார்ப்பதற்குத் திகைக்கக்கூடியதுதான்! 'கரணம் தப்பினால் மரணம்,' என்ப தில்லையா? சரி! அதன் பயன்? எல்லோருக்கும் உடற்பயிற்சி அவசியந்தான்! ஆனால் சர்க்கஸ் அளவுக்கா உடற்பயிற்சி அவசியம்?

இதற்காக சர்க்கஸ் ஒழிந்துவிட வேண்டும் என்று சொல்வதாகப் பொருளில்லை.

தென்னாட்டு இசையை ஒரு சர்க்கஸாக ஆக்கிய பெருமை அநேகமாக அக்கிரகாரத்துக்குத்தான். இசைத்துறையில் அக்கிர காரத்தைத் தோற்கடிக்கக் கூடியவர்கள் நூற்றுக்கணக்கில் நம்மவர் களிருக்கிறார்கள் என்றாலும், அதன் 'சுவையை' அனுபவிப்பவர்கள் அக்கிரகார ரசிகர்கள்தான்!

சங்கீதக் கச்சேரிகளில் இதை நன்றாகக் கவனிக்கலாம்!

நல்ல - இனிமையான - தமிழ்ப் பாட்டு (ஆரியஸ்தான் வாசிகள் 'துக்கடா' என்று கூறுவார்கள்!) பாடினால் மட்டுமே நம்மவர்கள்

ரசிப்பார்கள்! தியாகராஜர் கீர்த்தனங்களோடு குஸ்தி போட்டுத் துடையைத் தட்டி, கையைத் தூக்கி, தலையை ஆட்டி, முறைத்துப் பார்த்து, சங்கீத சர்க்கஸ் செய்தால் மட்டுமே அக்கிரகார வாசிகள் ரசிப்பார்கள்!

சங்கீத ரசிகர்களிலும் ஆரிய - திராவிட வேற்றுமையைப் பார்த்தீர்களா?

''சித்தரஞ்சினி, திலீபகம், நாதசிந்தாமணி, மஞ்சரி, தேவா மிர்த்வர்ஷிணி போன்ற ராகங்களை ஆராய்ந்தால் இவைகளில் தனியான பாவமேதும் தென்படாவிடில் அவைகளையெல்லாம் கரஹரப்ரியாவில் சேர்த்துவிடலாம்.''

அடபாவமே! இதுகூடவா உங்களுக்குப் புரியவில்லை? எனக்கு வைரத்தைவிட நன்றாக விளங்கிவிட்டது! உங்களுக்கு அணுசக்தியைவிடத் தெளிவாக விளங்கியிருக்குமென்று நினைக்கிறேன்! சங்கீத விழா நிகழ்ச்சிக் குறிப்புகளில் இதுவுமொன்று!

''பாமரர்களைத் திருப்திப்படுத்துவதற்காக வித்வான்கள் பாடினால் சங்கீதத்தின் தரம் குறைந்துவிடும் என்று கூறுவது சுத்த அபத்தமாகும். ஜனநாயக காலத்தில் இப்படிச் சொல்வது பாமரர் களின் மனதைப் புண்படுத்துவதாகும்.''

இவ்வாறு நான் கூறினால், ''இவன் ஒரு சங்கீத தற்குறி'' என்பீர்கள்! இப்படிக் கூறியவர் சாட்சாத் ஆர்.கே.ஷண்முகம் அவர்கள்! அதாவது தமிழிசையை வளர்ப்பதற்காக, பல லட்ச ரூபாய் திரட்டி, (சைவத்தை வளர்ப்பதற்காகப் பல கோடி ரூபாய் வைத்திருக்கிற மடாதிபதிகளைப் போல!) தியாகராஜ கீர்த்தனைகளைக் கலந்து சரமாரியாகப் பொழிந்து கொண்டிருக்கும் - நடராஜ முத்திரை - தமிழ் இசைச் சங்கத்தின் அமைப்புத் தலைவர்களில் ஒருவரே இப்படிக் கூறிவிட்டார்!

பாமரர்கள் சார்பில் பேசவும் வாதாடவும் யாருமில்லையே என்று ஏங்கியிருக்கும் இந்நாளில், பாமரர்களின் இசையுணர்ச்சிக் காகப் (பசியுணர்ச்சி எப்படியோ நாசமாய்ப் போகட்டும்!) பரிந்து பேச ஒருவர் கிடைத்தது பாமரர்களின் திடீர் 'அதிர்ஷ்டம்' என்றே சொல்வேன்!

எனவே, எல்லாத் துறைகளிலும் இருப்பதுபோல, இந்தத் துறையில் கூட பாமரர் - பண மூட்டைகள் என்ற பாகுபாடு இருப்பதை அகில உலகப் புகழ் பெற்ற பொருளாதார நிபுணரான நம் ஆர்.கே.எஸ். எடுத்துக் காட்டியது பற்றி பாமரர் சார்பில் நான் நன்றி செலுத்திக் கொள்கிறேன்!

38. மூன்றாண்டு முன்னேற்றம் பார்!

(29.12.50)

''ஓய்! குத்தூசியாரே! உம்மைப் போலப் பிற்போக்குப் பேர்வழி கிடையாது, ஓய், உம் கொள்கையிலே ஒரு அங்குல வளர்ச்சி கூடக் காணோமே! உம் நண்பர் சங்கதியைப் பாரும்! மூன்றே ஆண்டில் முறுக்கு மீசையைப் போல வளர்ந்திருக்கிறார்! இதோ! இவைகளைப் படித்துப் பாரும்!'' -

என்று கூறி சில மாதப் பத்திரிகைகளை எடுத்து என் முன்பு வீசி விட்டுக் கனைத்தார், எனக்குத் தெரிந்த பள்ளியாசிரியர் ஒருவர். அவைகளில் இரண்டொன்றை எடுத்துப் புரட்டினேன். சில பக்கங்களில் கோடுகிழித்திருந்தார்! படித்தேன்! பத்திரிகையின் பெயரை மீண்டும் ஒரு முறை பார்த்தேன்! அவர் முகத்தையும் பார்த்தேன்! பிறகு சில வரிகள் படித்தேன். பத்திரிகையின் பெயரை மீண்டும் ஒரு முறை படித்தேன்! திகைத்துப் போய் விட்டேன்!

உங்களுக்கு மயக்கம் வராமலிருக்குமென்றால், இதோ, சிலவற்றைத் தருகிறேன் படித்துப் பாருங்கள் : -

> *''தமிழகத்தின் நிலப்பரப்பு பெருகிவிடுவதனால் மட்டும் அதிலுள்ள மக்கள் வளத்துடன் வாழ்ந்துவிட முடியாது. தமிழகத்தின் வளத்தைப் பிற இனத்தார் சுரண்டிச் செல்லும் பகற்கொள்ளை போன்ற பாதகச் செயல்கள் தடுக்கப்பட வேண்டும். தமிழகத்தின் அரசியல் பிற இனத்தவரின் தலையீடின்றி நடைபெற வேண்டும்.''*

இது 'சாம்பிள்' நம்பர் - 1.

> *''பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பு முனை, வட இந்திய பாசிஸ எதிர்ப்புமுனை, ஆகிய இரண்டிலும் வெற்றிகண்டாலொழிய தமிழகத்துக்குப் பூரண விடுதலை இல்லை. தமிழ் இனத்துக்குப் புது வாழ்வு இல்லை.''*

இது 'சாம்பிள்' நம்பர் - 2.

> *''பிற இனத்தவரின் சுரண்டலுக்குத் தமிழ்நாடு இரையாகக் கூடாது என்பதே தமிழரசுக் கழகத்தின் தலையாய கொள்கை.''*

இது 'சாம்பிள்' நம்பர் - 3.

> *''டாட்டா, பிர்லா, டால்மியாக்கள் இனி மேல் தென்நாட்டைச் சுரண்டப் புதியதொரு திட்டம் இடப்போவது திண்ணம்.''*

இது 'சாம்பிள்' நம்பர் - 4.

''ஏகாதிபத்தியச் சுரண்டலால் இந்தியா வறுமையடைந்து விட்டது என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை, வட இந்தியப் பணமூட்டைகளின் சுரண்டலால் தென் இந்தியாவின் பொருளாதார வளம் குன்றிவிட்டது என்பது.''

இது 'சாம்பிள்' நம்பர் – 5.

இவ்வளவுதானா? இன்னமும் உண்டா? என்று கேட்காதீர்கள்! இன்னும் கூடை கூடையாக உண்டு! இப்படியெல்லாம் எதில் வந்திருக்கிறது, தெரியுமா? வடநாட்டுச் சுரண்டல் ஒழிப்பு முயற்சியை எதிர்ப்பதற்காக வடநாட்டாரைச் 'சுரண்டிக்' கொண்டிருக்கிறார்களே ஒரு சிலர்! அவர்களில் முக்கியமான ஒருவரின் பழைய ஏடுகளில்தான்! 1947-ல் இப்படி!

அய்யோ பாவம்! மூன்றே ஆண்டில் கிருஷ்ணாம்பேட்டைக் கிளி எப்படிக் கழுகாக மாறிப் பறந்து விட்டது, பார்த்தீர்களா?

39. போலீஸ்காரர் குறை!

(4.1.51)

'சுதந்தரம்' வந்துவிட்டபடியால் போலீஸ்காரர் குறைய வில்லை! அதிகப்பட்டிருக்கிறார்கள். 'குறை' என்ற சொல் அவர்களுக்கிருக்கின்ற வசதிக் குறைவைப் பற்றியதாகும்!

போலீஸ்காரர்களுக்கு ஆயிரக்கணக்கான குறைகள் இருக் கின்றன! ஆனாலும், அவைகளைப் பற்றி எழுதுவதென்றால் எனக்கு ரொம்பப் பயம்! அவர்கள் என்னைப் பிடித்துக் கொள்வார்கள் என்றல்ல. அவர்களை அரசாங்கத்தார் பிடித்துக் கொள்வர்களே என்று தான்!

இதெல்லாம் 'குத்தூசி'க்குச் சொன்னது யார்? அதைக் கண்டு பிடித்தாக வேண்டும்! நீங்கள் சொல்லாமல் இவ்வளவு விவரங்கள் 'குத்தூசி'க்கு எப்படித் தெரிய முடியும்? என்று போலீஸ்காரரை மிரட்டுவார்கள், மந்திரிகள் முதல் பெரிய அதிகாரிகள் வரையில்!

முன்னரே ஒரு தடவை இதை அநுபவித்துப் பார்த்திருக்கிறேன்! இருந்தாலும் இருக்கட்டு மென்றுதான் இதை எழுதுகிறேன். அவர்கள் குறையை யார்தான் எழுதுவது? அவர்கள் செய்கின்ற அக்கிரமத்தை எழுத அநேகம் பேர் இருக்கலாம். ஆனால் குறைகளைப் பற்றி இரண்டொருவராவது எழுத வேண்டாமா?

போலீஸ்காரர் சம்பளம் உண்டே! ரொம்ப ரொம்பத் தாராளம்! கார்ப்பரேஷன் குப்பைக்காரருக்கும் போலீஸ்காரருக்கும் ஒரே சம்பளம்! சம்பளம் வாங்க மறுத்துக்கூடப் பார்த்தார்கள், சென்ற ஆண்டில், சென்னையில்! பாவம்! அவர்களால் எப்படிக் கிளர்ச்சி செய்யமுடியும்?

கிளர்ச்சிகளை அடக்கியே பழக்கப்பட்டவர்களுக்குக் கிளர்ச்சி செய்ய முடியுமா? கலவரஞ் செய்தே பழகியவர்களுக்கு ஆட்சி நடத்த முடிகிறதா, பாருங்கள்! அதுபோல!

புரோகிதப் பார்ப்பான் மகன் டாக்டராகிவிடுகிறான்! எஞ்சினியராகிவிடுகிறான்! எதுவும் ஆகிவிடுகிறான். ஆனால் ஒரு போலீஸ்காரர் மகன் இப்பேர்ப்பட்ட உயர் பதவிகளை யடைவதில்லையே! ஏன்? புரோகிதனுக்குள்ள வசதி போலீஸ்காரருக்குக் கிடையாது.

காங்கிரஸ் ஆட்சி வந்த பிறகு போலீஸ்காரரின் எண்ணிக்கை அதிகமானது மட்டுமல்ல; வேலையும் அதிகமாகிவிட்டது.

மனுஷர் வாய்களை முகர்ந்து பார்த்து யார் குடித்திருக்கிறார்கள் என்று கண்டுபிடிப்பது முதல், மந்திரிகள் பேசுவதற்குக் கூட்டஞ் சேர்த்துக் கொடுப்பது வரையில், போலீஸ்காரருக்கு ஆயிரக்கணக் கான வேலைகளிருக்கின்றன. ஆனால் வசதிகளோ வரவரக் குறைந்துகொண்டே போகின்றன.

ஒரே ஒரு உதாரணம் தருகிறேன்.

வெள்ளையர் காலத்தில் போலீஸ்காரர் தங்கள் உடுப்புக்களைக் கழற்றி வைப்பதற்கென்று ஆளுக்கொரு பெட்டி கொடுத்திருந்தார்கள். ராமராஜ்யம் வந்த பிறகு அந்தப் பெட்டியை ஆஃபீசுக்காக எடுத்துக் கொண்டு விட்டார்களாம்! பணக் கஷ்டம் வந்தால் யாரைப் போய்த் தாக்குகிறது, பாருங்கள்!

போலீஸ்காரர் எந்தக் கட்சியையும் - ஆட்சியையும் - சேர்ந்தவர் களல்லர். எந்த ஆட்சி அதிகாரத்திலிருக்கிறதோ அது சொல்கிறபடி நடப்பவர்கள்! அன்று காங்கிரஸ்காரரை அடித்தார்கள். இன்று காங்கிரஸ்காரர் காட்டுகின்றவர்களை அடிக்கிறார்கள்! நாளைக்கு யாரை அடிக்க வேண்டி வருகிறதோ, அதன்படியே நடப்பார்கள்; அதாவது அடிப்பார்கள்!

போலீஸ்காரர் மீது பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தியவர்களே அதிகாரத்துக்கு வந்திருப்பதனால் நெருப்பு நிபுணர்கள் மீது போலீசாருக்குச்சிறிது பயமிருக்கலாம்! வெறுப்பு இருக்குமோ என்னவோ, எனக்குத் தெரியாது.

இதேபோல் போலீஸ்காரர் காங்கிரஸ்காரரை அன்று தாக்கியதற்காக இப்போது ஒருக்கால் பழிதீர்த்துக் கொள்கிறார்களோ, என்னவோ, எனக்குத் தெரியாது!

எது எப்படியானாலுஞ் சரி போலீஸ்காரரும் மனிதர்கள்தானே? அவர்கள் குடியிருப்பதற்கு வசதியான வீடு வேண்டாமா? செலவுக்குப் போதுமான பணம் வேண்டாமா? மற்ற வசதிகள் வேண்டாமா?

சர்க்கார் போலீஸ்காரர்மீது கோபப்படக்கூடாது. என்மீதும் கோபப்படக்கூடாது. நிலைமையை உணர்ந்து இரக்கப்பட வேண்டும். வேண்டியதை உடனே செய்ய வேண்டும்.

40. பணம் வரும் வழி!

(9.1.51)

நாய் விற்ற காசு குலைக்குமா? - என்பார்கள்!

சாணி விற்ற காசு நாறுமா? - என்று கேட்கிறேன்!

பணம் வரும் வழி எப்படியிருந்தாலும் சரி, பரவாயில்லை - என்பது பணப் படுக்கையில் படுத்திருக்கிறவர்களின் முடிவு! சந்தேகமிருந்தால் அக்கம் பக்கத்திலுள்ள அக்கிரமக்காரர்களைக் கேட்டுப்பாருங்கள்! யாரும் அகப்படாவிட்டால் அக்கிரகாரத்தில் கேட்டுப்பாருங்கள்!

தனிப்பட்டவர்கள் மட்டுமல்ல. சர்க்கார் கூட அப்படித்தான் கருதுகிறார்கள்.

குதிரைப்பந்தய சூதாட்டத்தைத் தடைசெய்து விட்டதாக ஒரு சட்டத்தை நிறைவேற்றினார்கள், இந்த மாகாண சர்க்கார். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்தத் தடை நடைமுறைக்கு வருவதாயிருந்தது. நேற்று மந்திரிமார்கள் கூடிப்பேசி, இப்போது வேண்டாம்; அடுத்த ஆண்டிலிருந்து குதிரைப் பந்தயத்தை நிறுத்திக் கொள்ளலாம் என்று முடிவு செய்து விட்டார்களாம்!

அதுதான் நல்லயோசனை! காந்தி சீடர்களே! குதிரைப் பந்தயக் காசு உங்கள் சம்பளத்துக்கும், உங்கள் கண்ஜாடையறிந்து கைதூக்கு கின்ற 'கைகாட்டி'களின் சம்பளத்துக்குமாவது ஆகுமல்லவா? சூதாட்டப் பணமாச்சே! ஏழைகள் ஏமாந்த காசாச்சே! பாபமல்லவா? குடியினால் வருகின்ற வருமானத்தைக் கூட 'கறைபடிந்த காசு' என்றுதானே வெறுத்தோம்? - என்று கவலைப்படாதீர்கள், கனம் மந்திரிமார்களே!

உங்களுக்கிருக்கின்ற பணக் கஷ்டம் எனக்கு நன்றாகத் தெரியும். என்னைவிட நன்றாகப் பள்ளி ஆசிரியர்களுக்கும், ப்யூன்களுக்கும், கான்ஸ்டபிள்களுக்கும், சர்க்கார் குமாஸ்தாக்களுக்கும் தெரியும்! கள்ளமார்க்கெட் அரிசிக்கும், விறகுக்கும் வீட்டு வாடகைக்கும் கொடுத்தான பிறகு சம்பளம் வாங்கிய அடுத்த வாரத்திலேயே கையில் 10 ரூபாய் கூட மிச்சமிருப்பதில்லை! பாக்கிச் செலவுகள் கடனில்தான் என்பது, எந்தக் கதர்ச் சட்டைக்குத் தெரியப்போகிறது? இவர்கள் எப்படியோ தொலையட்டும்!

சென்னை மந்திரிகளுக்கு ஆதாரம் தேடி வைத்திருக்கிறேன்.

அர்த்த சாஸ்திரத்தில் (நிபுணர் கவுடில்யர் எழுதியது) விரிவாகக் கூறியிருக்கிறது, சர்க்கார் பணம்திரட்டுகின்ற வழிகளைப் பற்றி! அடாடா! எத்தனை வழிகள் தெரியுமா? புதுப்புதுக்கடவுள்களை உண்டாக்கிக் கூடப் பணவசூல் செய்யச் சொல்லியிருக்கிறார்! ஆஸ்திக சிகாமணிகள் அவசியம் படிக்கவேண்டிய நூல்! கடவுள்கள் எல்லாம் மனிதனுக்கு (கற்பனைக்கு)ப் பிறந்தவை என்பதை அதன் மூலம் நன்றாகக் காணலாம்!

இன்னொரு ஆதாரம் தரட்டுமா?

காசியிருக்கிறதே காசி! அதாவது புண்யக்ஷேத்திரம்! அந்த ஊர் நகரசபையார் விபசாரிகளுக்குத் தலைக்கு 50 ரூபாய் வீதம் வரி விதிப்பதென்று முடிவு செய்திருக்கிறார்களாம்! (அத்தனை பேரும் சினிமா ஸ்டார்களாக மாறிவிட்டால் என்ன செய்வார்களென்று நான்கேட்கிறேன்!) எப்பேர்ப்பட்ட முடிவு பார்த்தீர்களா? மந்திரி மார்களே! இந்தப் பாழும் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் மட்டும் விபசாரத் தடைச் சட்டம் நிறைவேற்றியிருக்காவிட்டால் உங்களுக்கும் எவ்வளவு லட்சக்கணக்கில் வருமானம் கிடைக்கும்? கொழுத்த வருமானம் தொலைந்துபோய்விட்டதே! அட, பாவிகளா? எங்கள் காங்கிரஸ் மந்திரிகளுக்கு இவ்வளவு மகத்தான நஷ்டத்தை உண்டாக்கிவைத்து விட்டுப்போய் விட்டீர்களே!

போகட்டும்! ஒரு யோசனை கூறுகிறேன்! விபசாரத் தடைச் சட்டத்தை நீக்கி விட்டாலென்ன? பிரஜா உரிமையின் கீழ் ஒருவன் தசரதனைப்போல 60,000 மனைவிகள் வரையில் வைத்திருக்கலாம் என்றும், (பலதார மணத்தடை சட்டத்தை எதிர்த்து ஒருவர் பம்பாயில் வழக்குத் தொடர்ந்து வெற்றியும் பெற்றுவிட்டார்) ஒருவர் விபசாரம் செய்கின்ற உரிமையை அரசியல் சட்டம் 13வது பிரிவு ஆதரிக்கிறது என்றும், யாராவது ஒரு கில்லாடி அய்யரைக் கொண்டு ஹைகோர்ட் டில் வாதாடச் செய்தால், நிச்சயம் வெற்றி கிடைக்கும்!

அதன்பிறகு, (1) குதிரைப்பந்தயம் (2) விபசார லைசென்ஸ் ஆகிய இரண்டு துறைவருமானங்களைக் கொண்டு கனம் மந்திரி மார்கள் தங்கள் சம்பளத்தை மூவாயிர ரூபாயாக உயர்த்திக் கொள்ளலாம்! இந்தப் பஞ்ச காலத்தில் இப்போது கிடைக்கும்அற்ப சம்பளம் (1500) ரூபாய் எப்படிக் கட்டுபடியாகும்?

கனம் மந்திரிகளே! என்னுடைய பொருளாதார ஆலோசனை எப்படி? இன்னும் எவ்வளவோ இருக்கிறது! நீங்கள்தான் என் யோசனையை ஏற்று நடக்க மறுக்கிறீர்களே!

குதிரைப் பந்தயம் நீடூழி வாழ்க!

விபசாரத் தடைச் சட்டம் ஒழிக!!

ஜேய் ஹிந்த்!!!

41. மந்திரிக்கும் தந்திரம் வேண்டும்!

(11.1.51)

மந்திரி வேலையென்றால் அவ்வளவு சுளுவானதல்ல. பழைய காலத்து மந்திரிகள் அவ்வளவு புத்திசாலிகள் அல்லவென்பதே என் எண்ணம்! இப்படிப் பச்சையாக எழுதுவதற்காக நீங்கள் வருத்தப் பட்டாலும் சரி! உண்மையை நான் மறைத்து வைக்கத் தயாராயில்லை! பழைய மந்திரிகளெல்லோரும் இன்றைய மந்திரிகளைவிட மூன்று மடங்கு அதிகமான சம்பளம் வாங்கினார்களே! யாராவது காலணா மீத்திருப்பார்களா? 5 - 6 பேர் கடனாளிகளாகக்கூட ஆனார்கள்! எனக்கல்லவோ தெரியும், சிலர் யார் யாரிடம் கடன் வாங்கியிருந்தார்கள், என்பது?

அப்படியாவது பணத்தை வாரி இறைத்து அவர்களை அவ்வளவு நாணயமாக இருக்கும்படி யார் சொன்னது? நான் கேட்கிறேன்!

சம்பளத்தை அப்படியே மிச்சம் பிடிக்கத் தெரிந்த மந்திரிதான் கெட்டிக்காரர்! (கிம்பளம் வாங்கத் தெரிந்தவர்களைப் பற்றி நான் எதுவும் கூறமுடியாது! அவர்கள் மனிதர்களேயல்ல! அதாவது, தேவர்கள்!)

உதாரணமாக, தம் சொந்த வேலையாக ஏதோ ஒரு ஊருக்குப் போகவேண்டுமானால் என்ன செய்யவேண்டும் தெரியுமா? அந்த ஊரில், அல்லது அதற்குப் பக்கத்துக் கிராமத்தில் ஏதாவதொரு விழாவுக்கு ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

10 - 12 ஆண்டுகளுக்குப்பிறகு கட்டவேண்டிய ஏதாவதொரு கட்டடத்துக்கு அஸ்திவாரக் கல் நாட்டலாம்!

அல்லது 2 - 3 ஆண்டுகளுக்கு முன்பு கட்டி முடிந்து போன ஒரு கட்டடத்தைத் திறந்து வைக்கலாம்!

அல்லது வ.உ.சி. படம், நேரு படம், படேல் படம் - என்று ஏதாவதொரு படத்தை எங்கேயாவது ஒரு இடத்தில் திறந்து வைக்கலாம்!

அல்லது ஏதாவதொரு வாய்க்கால் பாலத்தைத் திறந்து வைக்கலாம்!

அல்லது ஒரு புது மண்மேட்டுக்கு மைல் கல் நாட்டலாம்! (அல்லது பழைய மைல்கல்லில் புதிதாக எழுதி அதைத் திறந்து வைக்கலாம்!)

அல்லது ஒரு பெண் பள்ளிக்கூடத்தின் கோலாட்டக் கொண்டாட்டத்துக்குத் தலைமை வகிக்கலாம்!

அல்லது கிராமத்துப் பள்ளங்களில் மண்ணை வாரிக் கொட்டி மூடுவதைத் துவக்கி வைக்கலாம். (அதாவது, திறப்பு விழாவைப் போல் இது மூடு விழா!)

அல்லது சப்பாத்திகளை வெட்டுகின்ற விழாவுக்குத் தலைமை வகிக்கலாம்! (அதாவது வெட்டு விழா!)

அல்லது, அரச மரத்தடிப் பிள்ளையாருக்குக் கதர் மாலை போடும் விழா என்ற ஒன்றைப் புதிதாகத் துவக்கலாம்! (சென்னையில் ஒரு மந்திரி திருப்பதிக் குடையைத் திறந்துவைத்தார்! குடையை அவரால் திறக்க முடியாது! ஆதலால் குடைத் திறப்பு விழாவைத் திறந்து வைத்தார்!)

இவைகளைப் போல் எத்தனையோ உண்டாக்கிக் கொள்ள லாம், மந்திரிகள் மனம்வைத்தால்!

இதில் என்ன லாபமென்றால், சர்க்கார் செலவிலேயே நாடு முழுவதையும் சுற்றிவிடலாம்! சொந்த வேலைகளையும் அப்படியே கவனித்துக் கொள்ளலாம்!

ஸ்தலஸ்தாபன மந்திரி காசிக்குப் போக ஆசைப்படுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்! உடனே என்ன செய்ய வேண்டும், தெரியுமா? காசி முனிசிபாலிடியார் எப்படி விபசார விடுதிகளை, விஸ்வநாதர் சாட்சியாக, வெற்றிகரமாக நடத்தி வரி வசூல் செய்து வருகிறார்கள் என்பதை நேரில் கண்டு கலந்து (விபசாரிகளையல்ல! வரி விஷயத்தை!) வருவதற்காக - என்று கூறிவிட்டுப் புறப்பட வேண்டியதுதானே!

எல்லா இலாகா மந்திரிகளும் இது போலச் செய்யலாம்!

இதில் ஏதாவது சந்தேகமோ, கூச்சமோ இருந்தால் கனம் ராஜாஜி அவர்களைப் போன்ற பெரிய டில்லி மந்திரிகளைப் பார்த்தால் தெரிகிறது!

கீழ்ப்பாக்கம் திருமணத்திற்காக டெல்லியிலிருந்து ஒருமுறை வந்தாரல்லவா?

திருவண்ணாமலை பாதாள லிங்கக் குகையை (மூடியிருந் ததை)த் திறந்து வைப்பதற்காக ஒருமுறை வந்தாரல்லவா?

திருப்பதியில் நந்தவனத்தைத் திறப்பதற்காக ஒருமுறை வந்தாரல்லவா?

இதோ, இம்மாதம் 22-ந் தேதி மீண்டும் வரப்போகிறார்! எதற்காகத் தெரியுமா?

திருவையாற்றில் நடைபெறப்போகும் தியாகராஜ ஆராதனை மகோத்சவத்தில் கலந்து கொள்வதற்காக!

42. உன் ''டிகிரி'' என்ன?

(15.1.51)

அதாவது, காய்ச்சல் 'டிகிரி' யல்ல! படித்தப் பட்டம் பெற்ற 'டிகிரி'! எம்.ஏ.! - பீ.ஏ.! - எம்.ஓ.எல். - பி.காம்! போன்ற பல்கலைக் கழகப் பட்டங்களைப் பற்றியது இது.

இசைக்காக வென்றே சென்னையில் ஒரு கல்லூரி இருக்கிறது! இதற்குப் பெயர், கர்னாடிக் சென்ட்ரல் சங்கீதக் கல்லூரி! இதில் படித்துத் தேர்ந்து பட்டம் பெற்றவர்களுக்கு இனிமேல் தனி மதிப்பு இருக்குமாம்! (இந்தக் கல்லூரி, பெரம்பூரிலோ - வண்ணாரப் பேட்டையிலே - ராயபுரத்திலோ - சூளையிலோ- இருப்பதாகக் கருதி விடாதீர்கள்! இருக்க வேண்டிய இடத்தில் தான் இருக்கிறது! அதாவது மயிலாப்பூருக்கு அருகிலுள்ள அடையாற்றில்! இதை ஒரு யூனிவர்சிட்டியாக ஆக்கலாமா என்று ஆலோசனை நடக்கிறதாம்! இதற்கு மத்திய சர்க்கார் ஆண்டு ஒன்றுக்கு 40000 ரூபாய் நன்கொடை தருவார்களாம்! சென்னை, மைசூர், திருவாங்கூர், ஹைதராபாத் - முதலிய இராஜ்யங்களும் நன்கொடை தரப்போகின்றனவாம்.

சங்கீதத்தில் 'டிப்ளமா' போன்ற சிறு பட்டங்கள் வாங்கி யிருப்பவர்களுக்கு இந்தக் கல்லூரியில் (இனிமேல் பல்கலைக் கழகம் ஆகப் போகிறது!) உயர்ந்த படிப்பு (அதாவது பாட்டு)க் கற்றுக் கொடுப்பார்களாம்! இந்தக் கல்லூரி கிளம்புவதை எதிர்பார்க்காமலே இசை நிபுணர்களாக வந்திருக்கின்ற 10-பேருக்கு 'டிகிரி' வழங்குவார் களாம்!

சங்கீதம் என்றால், அவனவன் தனி ருசி, திறமையைப் பொறுத்து, ஏதோ, பொழுது போக்குக்காகக் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு கலை - என்றல்லவா இது வரையில் நினைத் திருந்தீர்கள்? இனி அப்படியல்ல! அதிலும் 'மார்க்' வாங்கிப் பட்டம் பெற்றால் தான் முடியும்?

''அய்யா? நீங்கள் யார்? பெயரென்ன? தியாக ராஜ பாகவதரா? சங்கீதக் காலேஜில் படித்தீர்களா? 'மார்க்' என்ன? 'டிகிரி' வாங்கினீர் களா?'' என்று கேட்க வேண்டும். அவர் உதட்டைப் பிதுக்குவார்! உடனே நாம் காதைப் பொத்திக் கொண்டு அவரை வெளியேற்றி விட வேண்டும்!

சங்கீதத்தில் மாத்திரமலல! இனி, எல்லாத் தொழில்களுக்குமே காலேஜ்கள் வந்து விடுமென்று நினைக்கிறேன்!

வீட்டில் சமையல் செய்யவேண்டியவர்கள் கூட சமையல் காலேஜில் படித்து, மார்க் வாங்கி, பட்டமும் பெற்றால்தான் நம் அடுப்பங்கரைக்குள்ளே நுழைய முடியும்! சொந்த மனைவியானாலும் சரி! சம்பளம் பெறுகின்ற சமையல் காரனாயிருப்பினுஞ் சரி!

''தம்பி! எனக்குக் கொஞ்சம் 'கிராப்' வெட்டிவிடுகிறாயா?'' என்று இனி கண்ட பேர்வழிகளைப் பார்த்துக் கேட்கக் கூடாது!

''தம்பீ! நீ க்ஷவரக் காலேஜில் படித்தாயா? மார்க் என்ன? வெறும் B.H.C.தானா? அல்லது M.H.C. (Master of Hair Cutting) பட்டம் பெற்றவனா?'' - என்று கேட்ட பிறகுதான் நம் தலையை அவரிடம் நீட்ட வேண்டும்!

தச்சுவேலை காலேஜ்! கும்மி - கோலாட்ட காலேஜ்! சலவைத் தொழில் காலேஜ்! ப்யூன்கள் காலேஜ்! போர்ட்டர் யூனிவர்சிட்டி!

முதலியவைகள் இனித் தொடர்ந்து கிளம்பலாம்! யூனியன் சர்க்கார் இவைகளுக்கும் கிராண்ட் கொடுக்கலாம்!

இவைகள் மட்டுமா? யாரோ தலைவர்கள் பேசுகிறார்கள் என்றால் இனி யாரும் கேட்கமாட்டார்கள்!

இவர் பேச்சுக் காலேஜில் 'டிகிரி' வாங்கியிருக்கிறாரா? - என்று தெரிந்து கொண்டுதான் அவர் பேச்சைக் கேட்பதைப் பற்றி முடிவு செய்வார்கள்!

ஒரு சங்கீத வித்வான் பாடுவது சகிக்கமுடியாத காது வலியா யிருக்கிறதென்று வைத்துக் கொள்வோம்!

''ஏனய்யா! நீர் இப்படி நாட்டு நாய்மாதிரிக் குரைக்கிறீர்?'' -

என்று கேட்டுவிட முடியாது!

''உஷார்! சங்கீத ரசிகர்களே! நான் டைகர் வரதாச்சாரியின் முதல் மாணவன்! கர்னாடிக் சென்ட்ரல் காலேஜில் உயர்ந்த 'டிகிரி' வாங்கி முதல்தரமாகத் தேர்ச்சி பெற்றவன்! என் குரல் பல இடங்களில் செக்குச் சுற்றுவது போலிருக்கலாம்! ஆனால் அத்தனையும் உயர்தர சங்கீதமாக்கும்! இதோ! என் 'டிகிரி!', என்று கூறி, ரசிகர்கள் முகத்தில் 'டிகிரியை' வீசி எறிவார்! உடனே ரசிகர்கள், பணம் போனாலும் போகட்டும்! காதாவது மிஞ்சட்டும், என்று கருதி ஓட்டம் பிடிப்பார்கள்!

ஆதலால் சங்கீத காலேஜ் மட்டுமல்ல! கக்கூஸ் எடுக்கும் காலேஜ் கூட ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை!

43. கொண்டு வா, வருண ஜெபக்காரனை!

(17.1.51)

ஒரு இயந்திரத்தைப் பழுது பார்த்தவுடனே அந்த இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லையென்றால் நமக்கு எவ்வளவு கோபம் வருகிறது?

''ஓய்! வேலைக்காரரே! உம் மூஞ்சிக்கு போர்டு வேறே வேண்டியிருக்கோ? இதோ பாரும்! கார் (அல்லது கடிகாரம்) ஓடவில்லை! என்ன ரிப்பேர் காணும் செய்தீர்?''

என்று அதட்டிக் கேட்கிறோம்!

இதே மாதிரி சலவைத் தொழிலாளியைக் கேட்கலாம்!

இன்னும் சில தொழிலாளிகளையும் கேட்கலாம்.

ஆனால் ஒரு சிலரைக் கேட்கவே முடியாது!

''ஓய்! உபாத்தியாயரே! என் பையன் 10 மாதம் சுமந்து (அதாவது புத்தகத்தை!) உம்மிடம் கற்றுக் கொண்டதன் லட்சணம் இதுதானா? பரீட்சையில் தவறி விட்டானே! ஓய்! சம்பளம் செரிக்குமாங் காணும்?''

என்று கேட்க முடியாது!

இடிந்து போன பாலத்துக்காக எஞ்சினியரைக் கேட்க முடியாது!

செத்துப்போன நோயாளிக்காக அவனைப் பழுது பார்த்த டாக்டரைக் கேட்க முடியாது!

தோற்றுப்போன வழக்குக்காக, வாதாடிய வக்கீலைக் கேட்க முடியாது!

இளமையில் விதவையாகிவிட்ட பெண்ணுக்காக, சோதிடனையோ, புரோகிதனையோ கேட்க முடியாது!

துயரத்தில் சிக்கிய குடும்பத்துக்காக அதன் சார்பில் லட்சார்ச்சனை செய்த அர்ச்சகனைக் கேட்க முடியாது!

இந்த மாகாணத்துக்கு மழை வேண்டுமென்று படாத பாடு பட்டார்கள், சிலர்! கோவில்களில் அர்ச்சனைகள் நடந்தன, அறநிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் (அதாவது சர்க்கார்) உத்தரவுப்படி!

வருண ஜெபம் செய்தார்கள், பிராமணோத்தமர்கள், தங்கள் தங்கள் வயிறுகளின் உத்தரவுப்படி!

எல்லோரைம் ஏமாற்றிவிட்டது, இந்த மழை!

ஆனாலும் இந்த விஞ்ஞானிகள் உண்டே! அவர்கள் சும்மா யிருப்பதில்லை! வாயில் வந்தபடி உளறிக் கொட்டுகிறார்கள்!

ஆஸ்ட்ரேலிய விஞ்ஞானிகள் தூதுக்கோஷ்டியைச் சேர்ந்த புரொஃபஸர் போவன் பேசுகையில், ''உலர்ந்த அய்ஸ் துண்டுகளை மேகங்களின்மேல் தூவினால் செயற்கை முறையில் மழை பெய்யச் செய்ய முடியுமென்றும், தாமே பரீட்சை நடத்தியாகவும்'' கூறினார்.

இச்செய்தி வருண ஜெப இனத்தின் பத்திரிகையான 'சுதேச மித்திரன்' ஏட்டிலேயே வந்திருக்கிறது! ஜனவரி 8-ந்தேதி பெங்க ளூரில்

நடந்த இந்திய விஞ்ஞானிகள் மாநாட்டில் இப்படிப் பேசியிருக்கிறார்! இந்த விஞ்ஞானிகள் இருக்கிறார்களே! சுத்த நாஸ்திகர்கள்! மழை பெய்யக் கூடாது, பஞ்சம் வந்து மக்கள் சாகட்டும் என்று கருணையங் கடலாகிய கடவுளே முடிவு செய்திருக்கும்போது, அய்ஸ் துண்டுகளை வீசுவதாம்! செயற்கை மழையை வரவழைப்ப தாம்! இதெல்லாம் நியாயமா? - என்று சவுரிமலை அய்யப்பன் ஆணையாகக் கேட்கிறேன்!

சரி! முன்பு வருணஜபம் செய்தார்களே! அந்த ஆசாமிகள் எங்கே? மழை வராததற்கு அவர்கள் என்ன சமாதானம் சொல்கிறார் கள்? ஏமாற்றிப் பொருள் பெற்றதற்காக ஏன் அவர்களைத் தட்டிக் கேட்கக் கூடாது?

''நான் சொன்னபடி நடக்காவிட்டால் என்னைத் தூக்குப் போட்டு விடலாம்''

என்று எழுதித் தந்தாலொழிய எந்த சோதிடனோ, அர்ச்சகனோ, புரோகிதனோ, மந்திரவாதியோ, ஆண்டகையோ, அவதாரமோ, - இனி வாய்திறக்க அநுமதிக்கக் கூடாது!

அந்த மாதிரியான ஒரு ஆட்சி அவசரமாகத் தேவை! இல்லா விட்டால், 100க்கு 99 பேர் பித்தலாட்டப் பிழைப்பிலேயே இறங்கி விடுவார்கள்! அதாவது, பத்திரிகைகளில் விளம்பரம் வருகிறதே, அந்த மாதிரிப் பிழைப்புக்கள்!

ஆகையால், எங்கே அந்த வர்ண ஜெபக்காரன்? கொண்டுவா, அவன் காதைப் பிடித்து இழுத்து!

''ஏண்டா, வஞ்சகனே! ஏமாற்றினாய்?'' -

என்று கேள்!

''ஏண்டா! மடையா? ஏமாந்தாய்?'' -

என்று அவனும் திருப்பிக் கேட்பான்! அதையும் வாங்கிக் கொள்!

ஆஸ்திகரையும் ஆரிய விசுவாசிகளையும் நோக்கி நான் கூறவில்லை! பொதுவாகவே கூறுகிறேன்!

மந்திரிகள் தங்களை நோக்கிக் கூறுவதாக எடுத்தக் கொண்டு என்மீது கோபப்படக் கூடாது!

44. புராணப் புளுகும் பத்திரிகைப் புளுகும்!

(29.1.51)

புராண இதிகாசம் அத்தனையும் புளுகு மூட்டைகள் என்று சு.ம.காரன் சொன்னால், புராணக் காதலர்கள் சண்டைக்கு வருகிறார் கள்.

அவர்களும் எல்லாவற்றையும் 100-க்கு 100 நம்புவதில்லை. ஒரு சிலருக்கு ஒரு சில சங்கதிகள் மட்டுந்தான் புளுகாகத் தோன்றுவ தில்லை.

''அப்படியானால், உமா தேவியார் சம்பந்தமூர்த்திக்கு திருமுலைப்பால் கொடுத்தது கூடவா புளுகு?'' - என்பார் ஒருவர்!

''துரெளபதையின் துகில் ஆயிரக்கணக்கான கெஜங்கள் நீண்டு கொண்டே போனது கூடவா புளுகு?'' - என்பார் இன்னொருவர்!

''பரமசிவனும் பார்வதியும் ரிஷப வாகனரூடரராய் வந்தது கூடவா புளுகு? எத்தனையோ தடவை வந்திருப்பதாகக் கூறியிருக்கும் போது ஒரு தடவையாவது உண்மையாக வந்திருக்கக் கூடாதா?'' - என்று பரிதாபமாகக் கேட்பார், மற்றொருவர்.

''ராமனுடைய அஸ்திரம் பல அரக்கர்களின் தலைகளைக் கொய்துவிட்டு, கடலில் போய் முழுகிவிட்டு மீண்டும் ராமனின் அம்புப் பைக்குள் வந்து புகுந்து கொண்டது கூடவா புளுகு?'' என்பார் ஒருவர்.

''மற்றதெல்லாம் புளுகாயிருந்தாலும் பாற்கடலில் பாம்புப் படுக்கையில் மகாவிஷ்ணு படுத்திருப்பது கூடவா புளுகு'' - என்று கேட்பார் ஒருவர்.

புராணப் புளுகுகளை உண்மையென்றே நம்பியிருந்தவர்களில் நானும் ஒருவன். பீ.ஏ. வகுப்பு வரையில் பழுத்த சைவனாக இருந்தேன். தேவார கோஷ்டியில் பலமுறை பாடியிருக்கிறேன். என்னைப் போலவே உங்களிலும் பல்லாயிரக் கணக்கானவர்கள் பரம பக்தனாயிருந்து, புராண இதிகாசங்களை ஒரு காலத்தில் நம்பியிருந்தவர்கள் தானே?

புராணங்கள் புளுகு மூட்டைகள்தான் என்பதை உணர்ந்து கொள்ள எனக்கு முக்கிய உதவியாயிருந்தது செய்தித்-தாள்கள்தான்!

கண்ணெதிரிலேயே நாம் பார்க்கின்ற செய்திகள் ஒவ்வொரு பத்திரிகையிலும் ஒவ்வொரு மாதிரி வரும்! நேற்று வந்த செய்திகள் நேர்மாறான மறுப்பு, அல்லது திருத்தம், நாளை வரும்!

இன்ன மாகாணத்தில் இன்ன ஊரில் நான்கு கால் சேவல் வயிற்றிலிருந்து இரண்டு தலை எருமைக் கன்று வெளிப்பட்டது! என்று ஒரு செய்தி வரும்! விசாரித்துப் பார்த்தால் அந்த மாதிரி ஊரே அந்த மாகாணத்திலிருக்காது!

இன்ன மந்திரி பேசுகையில் பத்தாயிரம் மக்கள் கூடியிருந்தனர் என்று வரும். ஆனால் உண்மையில் மந்திரி நூறு பேர் கொள்ளக் கூடிய ஒரு சிறு அறைக்குள் பேசியிருப்பார்!

இன்ன ரிஷி இவ்வளவு மகத்தான அதிசயங்களைச் செய்கிறார் என்று பத்திரிகைகள் பிரசாரஞ் செய்யும்! உண்மையில் அந்த ஆள் ஒரு

சுத்த மடையனாக இருந்து, ஊர்க் கொள்ளையடித்து உல்லாச வாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பான்!

இன்ன ஊர் சாமிக்கு இன்ன சக்தியிருக்கிறது என்று பத்திரிகை கள் எழுதும். ஆனால் அந்த சாமியின் நகைகள் தினம் ஒன்றாகத் திருட்டுப் போய்க்கொண்டே யிருக்கும்!

இவைமட்டுமா? செய்தி ஒன்றாயிருக்கும். அதன் தலைப்பு வேறொன்றாயிருக்கும்! (பத்திரிகைக்காரர்களின் மூதாதையர்கள்தான் புராணங்களையும் எழுதியிருக்க வேண்டும் என்பதை நான் இமிடேஷன் அய்யப்பன் சாட்சியாகக் கூறமுடியும்!)

செத்துப் போனவர்களைப் பிழைக்க வைப்பதும் பிழைத் திருப்பவனைச் சாகடிப்பதும்கூட பத்திரிக்கைகளால் முடியும்!

ஸ்டாலின் செத்துப் போய்விட்டதாக இதுவரையில் 3-4 தடவை 2-3 ஆண்டுகளாகச் செய்தி வரவில்லையா? சுபாஷ் போஸ் உயிருட னிருப்பதாக நேற்றுக்கூடப் பேசியிருக்கிறார்களே!

ஒரே இடத்தில் பல நிருபர்களை நிறுத்தி வைத்து, ஒரே நிகழ்ச்சியைப் பற்றி எழுதச் சொல்லிப் பாருங்கள்! ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிப் புராணமாகவேயிருக்கும். அவர்கள் கண்களில் கோளாறு என்பதல்ல! அதுதான் உண்மையான பத்திரிகைத் தொழில்!

''என்னய்யா ரிப்போர்ட்டர்! யாரைப் பார்த்துக் காப்பியடித்தீர்? 4-5 பத்திரிகைகளிலும் ஒரே மாதிரியாகவா செய்தி வருவது?'' என்று ஆசிரியர் கேட்பாரல்லவா?

அதற்காக ஏதாவதொன்றைக் கூட்டியும் குறைத்தும் எழுதியே தீர வேண்டும்! பத்திரிகைக்காரருக்கு வேண்டாதவர்களாயிருந்தால் செய்தியை ஒருமாதிரி எழுத வேண்டும். அப்பேர்ப்பட்டவர் மீது ஏதாவது ஒரு ரோஜாப் பூ எறியப்பட்டால் ரிப்போர்ட்டர் எப்படி எழுத வேண்டும் தெரியுமா?

''ரோஜாப்பூ நிறத்தைப் போன்ற கற்கள் பூமாரி பெய்வது போல வீசியெறியப்பட்டதால் ஸ்ரீமான் ராமசாமி நாய்க்கருக்குப் பலமான காயமேற்பட்டது'' என்று எழுத வேண்டும்!

பத்திரிகைச் செய்திகளைப் பற்றி இப்படிச் சொன்னால் பத்திரிகை படிக்கிறவர்கள் எதைத் தான் உண்மையென்று நம்புவது? என்று கேட்கலாம்.

என்ன செய்வது? சகித்துக் கொள்ள வேண்டிய சில தொத்து நோய்களில் இதுவுமொன்று!

45. இரத்த நன்கொடை!

(31.1.51)

மகாவிஷ்ணுவின் அவதாரங்கள் ஆட்சிபுரிந்த காலத்திலும் பரமசிவன் அருள்பெற்றவர்கள் வாழ்ந்திருந்த காலத்திலும் நடைபெறாத சங்கதி!

அந்தக் காலத்தில் பிராமண போஜனம் ஒன்றுதான் தர்மங்களி லெல்லாம் தலைசிறந்த தர்மம் என்பார்கள்! இந்தக் காலத்தில் அப்படிச் சொல்கிறவனை அடிக்காமலிருந்தாலே அதிசயமாகும்! இன்று இரத்த நன்கொடை தருவதுதான் தலைசிறந்த தர்மமாகும்!

இரத்தக் குறைவினால் ஆஸ்பத்திரிகளில் சாகின்றவர்கள் பலருண்டு. இவர்களுக்குப் பிறருடைய இரத்தத்தை ஊசி மூலம் உள்ளே செலுத்திப் பிழைக்க வைக்கிறார்கள். இதற்காகப் பல ஆஸ்பத்திரிகளில் இரத்த நன்கொடை கேட்டு வாங்கி Blood Bank *(இரத்த சேமிப்பு) என்ற பெயரால் இரத்தத்தைச் சேகரித்து வைத்து, ஆபத்து வேளையில் பயன்படுத்துகிறார்கள்!*

உடலில் நோயில்லாதவர்களும் வலுவுள்ளவர்களும் இரத்த நன்கொடை கொடுப்பது ஒரு சிறந்த தியாகமாகும்! (ஆட்சியாளர் 6 - 7 அவுன்ஸ் அரிசி தந்து நம் இரத்தத்தைச் சிறுகச் சிறுக எடுத்துக் கொள்வதை இரத்த நன்கொடையில் சேர்க்கக் கூடாது!) கடந்த போர் நடந்து கொண்டிருந்தபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் இரத்த நன்கொடை தந்து பல உயிர்களைக் காப்பாற்றுவதற்குத் துணையாயிருந்தனர்.

சென்னையில் பேசிய ஆசாரியா கிருபளானி பின்வருமாறு கூறியிருக்கிறார் :

> ***''பிரிட்டிஷார் கொடுக்கவேண்டிய ஸ்டர்லிங் கடனை நாம் பெறவில்லை. அவர்கள் கொடுக்கவேண்டிய கடன் இந்திய மக்களின் ரத்தமேயாகும். யுத்தத்தில் தம் உயிரை அற்பமாக மதித்துப் போராடிய இந்தியரின் இரத்தந்தான் இவர்கள் நமக்குக் கொடுக்கவேண்டிய கடன்.''***

சரியான பேச்சு! சந்தேகமில்லை. இன்று சுமார் 1000 கோடி ரூபாய்க்குமேல் பிரிட்டன் நமக்குக் கடன் தரவேண்டும்.

தக்ளியில் நூல் நூற்று இங்கிலாந்துக்கு விற்றுச் சேகரித்த பணமா இது? அல்ல!

போஸ்டாஃபீசுக்குத் தீவைத்து, அந்தச் சாம்பலை ஏற்றுமதி செய்து சம்பாதித்த பணமா இது? அல்ல.

கடந்த உலகப்போரில் இந்தியப் போர் வீரர்கள் இரத்தஞ் சிந்திச் சேமித்துவைத்த பணம்! அதாவது, ''கதர்க்குல்லாய்கள் குல்லாய்க்குள்ளே யிருக்கின்ற சரக்கைப் பயன்படுத்தாமல்,''

1. பட்டாளத்தில் சேராதே!

2. யுத்தத்திற்குப் பணம் தராதே!

என்று கூச்சல் போட்டார்களே! அந்தச் சமயத்தில் அவர்கள் கூச்சலைப் பொருட்படுத்தாமல், லட்சக் கணக்கில் பட்டாளத்தில் சேர்ந்தார்கள்! கோடிக் கணக்கில் பணம் கொடுத்து உதவினார்கள்! நம் உற்பத்திப் பொருள்கள் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. பிரிட்டன் நமக்குக் கடனாளியாயிற்று!

இப்பேர்ப்பட்ட வீரர்களைச் சோற்றுப் பட்டாளம் (Rice soldiers) என்றார்கள், கதர்க் குல்லாய்கள்.

அந்த வீரர்கள் தேடி வைத்த வெற்றி மீதுதான் இன்று 'சுயராஜ்யக் குடிசையை எழுப்பியிருக்கிறார்கள்! அந்த வீரர்கள் அன்று தேடிவைத்த யுத்த லாபப் பணந்தான் இன்று இவர்களுக்கு வேண்டுமாம்! தூதுவர்கள் போன்ற டம்பாச்சாரி செலவுக்காக!

'ஸ்டர்லிங் நிதி' இந்தியரின் இரத்த நிதிதான்! ஆனால் எந்த இந்தியரின் நிதி? போலீஸ்காரர் மீது பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தினார்களே! அவர்களுடைய இரத்த நிதியா?

பல ஊர்களில் மாஜிப் போர் வீரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த நிலமான்யங்களைப் பறித்து, ஆகஸ்ட் தியாகிகளுக்குத் தந்திருக்கிறார்களாம்! வத்தலகுண்டு என்ற ஊரில், பரம ஏழையான மாஜிப் போர் வீரனிடமிருந்த நிலமான்யத்தைப் பிடுங்கி, லட்சாதிபதியான ஒரு ஆகஸ்ட் தியாகிக்குக் கொடுத்திருப்பதாக என்னிடம் கூறினார்கள்! பல ஊர்களில் இப்படியே நடந்திருக்கிறது!

இது இரத்த நன்கொடையல்ல! இரத்தம் உறிஞ்சும் தேச சேவை! எவனுடைய இரத்தத்தையோ எவனோ உறிஞ்சுகிறான். உயிரை வெறுத்துப் போர் முனைக்குச் சென்றவனின் இரத்தத்தை, சிறையில் ரொட்டியும் வெண்ணெயும் தின்ற சுகவாசி உறிஞ்சிக் கொண்டிருக்கிறான், சுயராஜ்யம், என்ற பெயரால்! (பார்ப்பான் பரலோகம் என்ற பெயரால் உறிஞ்சுவது போல!)

வாசகர்களே! நீங்கள் இரத்த நன்கொடை கொடுங்கள்! உங்கள் உடம்பில் இரத்தம் இருந்தால்! ஆனால் இரத்தத்தை உறிஞ்ச விடாதீர்கள்! இரத்தம் இருந்தால் கூட!

ஸ்டர்லிங் சேமிப்பு நிதிக்கும் தண்டவாளம் பிடுங்கிகளுக்கும் என்ன சம்பந்தம்? சிந்தித்துப் பாருங்கள்!

46. சமர்த்தோன்னோ!

(3.2.51)

''ஏண்டி! சரஸு! நீ சமர்த்தோன்னோ! அத்திம்பேர் முகத்திலே துப்பு பார்க்கலாம்!''

அக்கிரகார வாசிகள் குழந்தை வளர்ப்பதே ஒரு தனி ரகம்! எதற்கெடுத்தாலும், 'சமர்த்தோன்னோ!' என்று சொல்லியே தயார் செய்வார்கள்! அதாவது இந்த உலகத்தில் முன்னேற வேண்டுமானால் படிப்போ - பணமோ முக்கியமல்ல; சமர்த்துத்தான் (அவர்கள் அகராதிப்படி தந்திரம் கலந்த கெட்டிக்காரத்தனம்) முக்கியம் என்பது அவர்கள் முடிவு! அந்த முறையிலேயே வளர்க்கப்பட்டவர்கள், 'சமர்த்தாகவே' இருப்பதில் ஆச்சரியமென்ன?

அக்கிரகாரவாசிகள் தங்கள் குழந்தைகளைத் தெருவில் கொண்டுவந்து மலம் கழிக்க விடுகிறார்களே! அதுவும் இந்த 'சமர்த்தில்' சேர்ந்ததுதான். அதாவது, வீட்டிலிருப்பவர்களுக்குத் தொல்லை யில்லாமல் முனிசிபாலிடிக்குத் தொல்லையா யிருக்கட்டுமே, என்ற 'பொது' நலந்தான்!

அக்கிரகாரவாசிகளின் 'சமர்த்துக்கு' இவ்வாரத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் என்றும் மறக்கவே மாட்டேன்.

புடோவ்கின் என்ற ரஷ்யத் திரைப்பட டைரெக்டரும் சர்கஸாவ் என்ற ரஷ்ய நடிகர் நிபுணரும் சென்னைக்கு வந்திருந்தார்கள். அவர்களை சினிமாத்துறை நிபுணர்கள் (எஸ்.எஸ்.வாசன் நீங்கலாக) வரவேற்றார்கள்! வரவேற்பு நடந்த இடம் 'உயர்தரப் பெண்கள் (சாதாரணப் பெண்களல்ல! நினைவிருக்கட்டும்!) பாடசாலை,' திருவல்லிக்கேணி! இரு ரஷ்ய நிபுணர்களும் உள்ளே நுழைந்தவுடனே, ஆரியச் சேரிப் பெண்திலகங்கள் பூப்பந்தல் அமைத்துக் காட்டி ஜிப்சி நடனம் ஆடி, உயரத்திலிருந்து பூமாரி பொழிந்து (ஆலத்தி மட்டும் எடுக்கவில்லை!) வரவேற்ற காட்சியுண்டே! அதை நேரிற் கண்டவர்களுக்குத்தான் அதன் நுணுக்கம் தெரியும். இந்த அபூர்வக் காட்சியை 'க்ளோஸ் அப்' எடுக்கும் பேறு என்னைப் போன்ற ஒரு சிலருக்குத்தான் கிடைத்தது! என்றும் மறக்க முடியாத காட்சி!

பிறகு தேனீர் விருந்து நடைபெற்றது! விருந்தினர் அருகிலும் எதிரிலும் அநேகமாக அக்கிரகார வாசிகளே! ஏனையோர் வடநாட்டார்! தொழிலாளர் இயக்கத் தலைவர்கள், புரட்சிக்கொள்கைக்காக அல்லும் பகலும் பாடுபடுகிறவர்கள், ஊரார் தூற்றுதலையே மாலையாகக் கொண்டு உழைப்ப'வர்கள், ஆகியோர் இருந்த இடத்தைப் பட்டப் பகலிலேயே விளக்குப் போட்டுத்தான் பார்க்கவேண்டியிருந்தது!

ரஷ்ய நிபுணர்களின் கொள்கையும் இலட்சியமும் என்ன என்பது யாருக்குத் தெரியாவிட்டாலும் அக்கிரகாரத்துக்கு நன்றாகத் தெரியும்!

சட்டைக்குள்ளே பூணூல்! ஆனால் புடோவ்கின் கழுத்தில் மாலை யிடுகிறார் அவர்! நெஞ்சுக்குள்ளே ஜாதி நஞ்சு! மலர் மாலை தூவுகிறாள், அந்த அணங்கு!

சேரிப்பக்கம் - பட்டினிப்பட்டாளத்தின் பக்கம் - செல்வதற்கு வாய்ப்புத்தரவில்லை, ரஷ்ய நிபுணர்களுக்கு!

திடீரென்று ஸ்டாலின் தமிழ் நாட்டுக்கு வருவதாக வைத்துக் கொள்வோம். அவர் நிச்சயம் மயிலாப்பூரில் தான் தங்குவார்! ஜீவானந்த மும், தங்கமணியும், குமாரமங்கலமும், கந்தசாமியும் ஸ்டாலினைத் தரிசிக்கக்கூட முடியாது!

சமர்த்தோன்னோ, அக்கிரகாரத்தார்? அதனால்!

ஒருக்கால் திராவிட நாடு கிடைத்து, பெரியார் திராவிட சமதர்மக் குடியாட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அவர் கழுத்தில் விழுகின்ற முதல் மாலை அக்கிரகாரத்துடையதாகத்தானிருக்கும். அந்த விழாப் பந்தலுக்குள் நுழைவதற்கே நமக்கு அக்கிரகாரந்தான் நுழைவுச் சீட்டு அனுப்பவேண்டும்! இது நிச்சயம்!

புடோவ்கின் உலக சினிமா டைரெக்டர்களில் முதன்மையான நிபுணர். சர்கஸாவ் உலக நடிகர்களில் முதல் தரமானவர். இவர்கள் கொள்கைகளையே தமிழ்நாட்டில் பரப்பி வருகின்ற ஒரு தலைவரை அக்கிரகாரம் மென்று தின்று விடுவேன் என்கிறது. அதே கொள்கையைப் பல எதிர்ப்புகளுக்கிடையே நாடக மேடை மூலம் பரப்பி வருகின்ற எம்.ஆர்.ராதா நாடகத்துக்கு இங்கே தடை! அவரை அக்கிரகாரம் வெறுக்கிறது! அவர் நாடகத்துக்குச் சென்று பேசிய நீதிபதி சோமசுந்தரம் மீது எரிந்து விழுகிறார்கள், அதிகாரபீடம் ஏறியுள்ளவர்கள்!

ஆனால் இதே நாஸ்திக நாட்டின் நிபுணர்களுக்கு மதத்தை யொழித்த நாட்டின் கலைஞர்களுக்கு, தனி உடைமையைத் தகர்த்த நாட்டின் அறிஞர்களுக்கு - அக்கிரகாரத்தின் மகத்தான வரவேற்பு! பிரதம நீதிபதியின் தலைமை! மந்திரிகளின் வாழ்த்து!

பாருங்கள், வேடிக்கையை! கவனியுங்கள், 'இரட்டை நாக்குப் படைத்தவர்களின்' லீலா விநோதங்களை!

அடுத்த வரவேற்பு சித்ரா டாக்கீஸ் கொட்டகையில் நடைபெற்றது. இதில் நான் கவனித்த விஷயங்கள் இரண்டுதான்!

1) தந்தத்தினால் செய்யப்பட்ட கிருஷ்ணன் படத்தை புடோவ் கினுக்குப் பரிசாகத் தந்து, 'கிருஷ்ணன் அன்பின் அறிகுறி' என்று கூறியது; (பகவத் கீதை படித்த ஞாபகமாயிருக்கலாம்; அதில் கூறப்பட்டிருப்பது அன்பு தானே!)

2) ''அடுத்த தடவை நான் சென்னை வரும்போது தமிழில் பேச வேண்டும் என்பது என் ஆசை,'' என்ற புடோவ்கின் கூறியது! (தேசீய மொழியாகிய ஹிந்தியில் என்றோ, கடவுள் மொழியாகிய சமஸ்கிருதத்தில் என்றோ கூறாதது ஏன்?)

அன்புக்கு அணிகலமானவரும் கற்பனைப் பேர்வழியல்லாதவருமான புத்தரின் உருவம் ரஷ்ய நிபுணர்களுக்குத் தரப்பட்டிருந்தால் புத்திசாலித்தனமாயிருந்திருக்கும்! ஆனால் அக்கிரகாரம் தன் ஆரியமதப் பிரசாரத்தை விடுமா?

சமர்த்தோன்னோ, அவா?

47. குல்லாய்க்குள் சரக்கு!

(6.2.51)

''கதர்க் குல்லாய் அணிந்தால் போதாது; அதற்குள்ளே சரக்கு இருக்க வேண்டும்; அதாவது அணிபவர்களுக்கு மூளை இருக்க வேண்டும்.''

என்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பண்டிட் நேரு கூறிவிட்டார்!

கதர்க் குல்லாய்கள் அடியோடு ஒழியவேண்டும் என்ற எண்ணத்தின் மீது தான் அவர் இப்படிக் கூறியிருக்கவேண்டும்! ஏன் தெரியுமா? இனி கதர்க் குல்லாய் தரித்தவர்களைப் பார்க்கும்போதெல்லாம் அதற்கடியில் ஒன்றுமில்லை என்ற நினைவுதான் எல்லோருக்கும் வரும்!

''இருந்தாலும் நம் தலைவர் நம்மை இப்படிக் காட்டிக் கொடுத்திருக்கக்கூடாது! நம் தலைகளில் மூளையே இல்லை என்பதைக் குறிப்பதற்காகத்தானே நேரு இம்மாதிரிக் கூறியிருக்கிறார்? இவரே கூறிவிட்டால், இனி நம் எதிர்க்கட்சிக்காரர்கள் சும்மாவா இருப்பார்கள்?''

என்று ஏழவுன்ஸ் தோழர்கள் மிகவும் வேதனையோடு பேசிக் கொள்வதாகத் தெரிகிறது!

யாரை நினைத்துக் கொண்டு நேரு இப்படிக் கூறியிருப்பார்? பலர் பலவிதமாகக் கூறுகின்றனர். என்னைப் பொறுத்தமட்டில் மரமந்திரி முன்ஷியை நினைத்துக் கொண்டுதான் இவ்வாறு கூறியிருக்க வேண்டும் என்று கருதுகின்றேன். ஏனென்றால் இன்றைக்கு காங்கிரஸ் கட்சியைப் பிடித்திருக்கும் பீடைகளிளெல்லாம் பெரிய பீடை, உணவு (முன்ஷி)ப் பீடைதான்! 16 அவுன்ஸ் அரிசி கிடைக்கிறவரையில் அரிசி தின்கிறஎவரும் காங்கிரஸ் பெட்டியில் வோட்டுப் போடுவதேயில்லையென்று சத்தியஞ் செய்து கொண்டிருப்பதாகவே தெரிகிறது!

உணவுப் பிரச்சினையை ஒழுங்காகக் கவனிக்கவேண்டிய இவர், வனமகோத்சவம் என்ற பெயரால் பல கோடி ரூபாயைப் பாழாக்கியதை நினைத்து நினைத்து மனம் வெதும்பியிருப்பார், நேரு! ''1951 முதல் வெளிநாட்டு உணவுத் தான்யம் இறக்குமதியாகாது,'' என்று கூறி வந்த நேருவின் முகத்தில் கரி பூசியவர் முன்ஷிதானே?

ஆறு வாரத்தில் 3 கோடி செடிகள் நட்டார்களாம். இவைகளில் 5ல் 4 பங்கு, அதாவது 100க்கு 80 தண்ணீரில்லாமல் பட்டுப் போய்விட்டனவாம்!

சென்னையில் பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியில் கனம் ஏழவுன்ஸ் மந்திரி முன்ஷி கூறியதே இது.

மீதியுள்ள செடிகளும் அடுத்த மழைக்குள் பட்டுப் போய்விடும் என்பதை எதிர்பார்க்கலாம்! ஆகவே பல லட்சத்தைப் பாழாக்கி வன மகோத்சவம் நடத்தித் தீர்த்துவிட்டார்!

ஏற்கெனவே 30 - 40 ஆண்டுகளாயுள்ள மரங்களெல்லாம் நாள்தோறும் ஆயிரக்கணக்கில் விறகுக்காக வெட்டிச் சாய்க்கப்பட்டு வருகின்றன! இதை நிறுத்துவதற்குத் திட்டமில்லாதபோது, இனிமேல் செடி நட்டு, மரமாகி, அந்த மரத்தின் மீது மேகம் வந்து தங்கி மழை பெய்வது என்றால், எப்படி? அது மட்மா? செடிநடுவதாகவும் மரம் நடுவதாகவும் கூறிவிட்டு துளசிச் செடியையே நட்டார்களே, பிரகஸ்பதிகள்! அதாவது, அதன் மீது மேகம் தங்குவதற்காக!

''குல்லாயல்ல முக்கியம்! அதற்கடியில் சரக்கு இருக்க வேண்டும்,'' என்று சொன்னது யாரை என்பது இப்போது தெரிகிறதா?

சாதாரண காங்கிரஸ் தொண்டரையோ, மேடைப் பிரசங்கியையோ நினைத்து நேரு இப்படிக் கூறியிருக்க மாட்டார்! ஏனெனில் இவர்களால் லாபமுமில்லை; நஷ்டமுமில்லை! ஏதோ அற்ப வருமானம் கிடைக்கிறது; அதற்காக காலட்சேபமும் நடக்கிறது!

பட்டினியாகக் கிடக்கின்ற மக்களை நோக்கி, ''பருத்திக் கொட்டை சாப்பிடுங்கள்; கடலைப் புண்ணாக்கு சாப்பிடுங்கள்!'', என்கிறார், முன்ஷி! இதைக் கேட்ட அரைப்பட்டினி மாடுகளெல்லாம், முன்ஷியின் கதர்க் குல்லாய்க்கு அடியில் என்ன இருக்கிறதோ, என்று நேருவைப்போலவே கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றன!

கனம்முன்ஷி உணவுப் பஞ்சத்தை ஒழிப்பதற்குள்ள கடைசி வழியையும் சென்னையில் கூறிவிட்டார்! அதாவது, **''கடவுளை நம்புங்கள்! அவர் உங்களைக் காப்பாற்றுவார்!''** என்பதே!

இதையும் நேரு பத்திரிகைகளில் படித்திருப்பாரல்லவா?

ஆதலால்தான், ''குல்லாய் முக்கியமல்ல; அதற்கடியில் மூளை யிருக்கவேண்டும்,'' என்று கூறினார், நேரு!

இப்போது நீங்கள் கூறுங்கள், யாரை நினைத்து நேரு இப்படிக் கூறியிருப்பார் என்பதை.

48. அய்யப்பன் நாடகம்!

(5.3.51)

அய்யப்பன் மோட்டார் லாரியில் ஊர் சுற்றிவிட்டு, பக்தர்கள் வீடுகளுக்கே சென்று காட்சி தந்துவிட்டுப் போனாரே! அந்த நாடகத்தைப் பற்றியல்ல, நான் எழுதப்போவது! அதிலொன்றும் அதிசயமில்லை! பண்டார சந்நிதிகள் பல்லக்கை விட்டிறங்கி மோட்டாரிலும், ரயிலிலும், ஆகாய விமானத்திலும் பிரயாணஞ் செய்கிறபோது (சங்கராச்சாரியார் மட்டும் இன்னமும் துணியவில்லை) அப்பாவி அய்யப்பன் (ட்யூபிளிகேட்) லாரியில் சுற்றியது தானா அதிசயம்? அவசியமேற் பட்டால் சைக்கிளில் ஏறிக் கூட சந்து பொந்தெல்லாம் வருவார்! விமானத்தில் ஏறிக் கூட உலக சுற்றுப் பிரயாணஞ் செய்வார்!

நான் எழுதுவது தஞ்சையில் நடந்த அய்யப்பன் நாடகத்தைப் பற்றி! அந்த நாடகத்தில் யாரோ ஒருவர் அய்யப்பன் அருளால் தமக்கு வயிற்றுவலி நீங்கியதை எடுத்துக் கூறினாராம்!

அய்யப்பன் என்ன மருந்து கொடுத்தாராம், தெரியுமா? வெறும் விபூதிப் பிரசாதம்! அதாவது சாம்பல் தூள்! நம்பிக்கை மட்டுமிருந்து தின்றால் விபூதியின் மகிமை இதுமட்டுமா? எது வேண்டுமானாலும் செய்யக் கூடியது! வயிற்று வலி மட்டுமல்ல! வயிற்றுப் பசியைக் கூட ஒரு நொடிப்பொழுதில் நிரந்தரமாக நிறுத்திவிடும்! உண்மையான அய்யப்பன் பக்தர்கள் பக்தியை இன்னும் சிறிது 'ஸ்ட்ராங்காக' ஆக்கிக் கொண்டு வயிற்றுப் பசியையும் தவிர்த்துக் கொள்வார்களென்று எதிர்பார்க்கிறேன்! அப்படிச் செய்கிறவர்களுக்கு முன்ஷி மெடல் என்ற ஒரு பரிசு கூட அளிக்கலாம்!

கடவுள்கள் இந்தமாதிரி டாக்டர் அவதாரம் எடுப்பது தமிழ் நாட்டுக்குப் புதிதல்ல!

அப்பருக்கு சூலை நோயைப் போக்கியிருக்கிறார், என் அம்மை யப்பன்!

செட்டிப் பெண்ணுக்குப் பிள்ளைப் பேறு பார்த்திருக்கிறார், தாயுமானவர்!

இன்னும் திருப்பதி, வைத்தீஸ்வரன் கோவில், கலியப் பெருமாள் கோவில், சமயபுரம், பழனி ஆகிய ஊர்களில் வீற்றிருக்கின்ற நம் கடவுள்

டாக்டர்கள் பல நோய்களைப் போக்கி வருவதாகக் கேள்வி! இந்தப் பேருபகாரத்துக்காக, தலை மயிர் - முகமயிர் தட்சணை கொடுத்து வருகிறார்கள், பக்தர்கள்!

டாக்டர்கள் போதாமலும், ஆஸ்பத்திரிகள் போதாமலும், இரண்டுக்கும் பணம் போதாமலும் தொல்லைப்படுகின்ற இந்நாளில், கடவுள்களாவது இப்படி சில்லறை நோய்களைக் குணப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்வது பற்றி நான் இன்றைய சர்க்கார் சார்பில் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்! (பக்தர்கள் கடவுள்களை 'வாழ்க!' என்றும், 'போற்றி' என்றும் கூறுகின்றபடியால், நான் பாராட்டுவதில் குற்றமில்லையல்லவா?)

ஆனால் ஒரே ஒரு குறை! எல்லாக் கடவுள்களுமே இந்தச் சேவை புரியவேண்டும்! வேலைத் தொல்லை மிகுதியாயிருந்தால், இவர்கள் தனித்தனி நோயாகப் பிரித்துக் கொள்ளலாம்!

ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் குஷ்டரோகத்தைக் கவனித்துக்கொள்ள லாம்!

மதுரை மீனாட்சியம்மன் பிள்ளைப்பேறு சம்பந்தமான பெரிய ஆப்பரேஷன்களை மட்டும் கவனித்துக் கொள்ளலாம்!

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி வெட்டை நோயை (வெனீரியல் டிசீஸ்)க் கவனித்துக் கொள்ளலாம்!

காஞ்சிபுரம் வரதராஜர்க்ஷயரோகத்தைக் கவனித்துக்கொள்ளலாம்!

திருவாரூர் தியாகராஜர் கண் ஆப்பரேஷன் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம்!

சிதம்பரம் நடராஜர் எலும்பு முறிவதைச் சீர்படுத்தும் தொழிலை ஏற்றுக்கொள்ளலாம்!

குடந்தை கும்பேஸ்வரர் குழந்தைகள் நோயைக் குணப்படுத்த லாம்!

இப்படியாக, கடவுளர்கள் நோய் தீர்க்கும் திருத்தொண்டில் ஈடுபட்டால் சர்க்காருக்கும் ஏராளமான பணம் மிச்சமாகும்! பெற்றோர் களும் டாக்டர் பயிற்சிக்காக, ஆயிரக்கணக்கில் செலவழித்து, 5 - 6 ஆண்டு தங்கள் பிள்ளைகளையும் பெண்களையும் படிக்க வைக்க வேண்டிய தில்லை!

மருந்து வியாபாரிகளும் கள்ள மார்க்கெட்டில் விற்று ஏழைகள் பணத்தைச் சுரண்டிக் கொண்டிருக்க முடியாது! எவ்வளவோ தொல்லை கள் ஒழியும்!

இவை மட்டுமா?

''கோவில்களை யெல்லாம் ஆஸ்பத்திரிகளாக்க வேண்டும், என்று சொல்கின்ற சுயமரியாதைக்காரனுக்கும் வாயடைத்துப் போகும்!

டாக்டர்களே! இருங்கள்! இருங்கள்! இப்போது தான் டாக்டர் அய்யப்பன் புறப்பட்டிருக்கிறார்! இனி மற்றக் கடவுள்களும் டாக்டர்களாகப் போகிறார்கள்! டாக்டர்களே! உங்கள் வாயில் மண்தான்! நீங்கள் இனிமேல் அர்ச்சகர் (பார்ப்பனர் மட்டும்) ஆகவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை!

வயிற்று வலி போக்கும் அய்யப்பா!

வயிற்றுப் பசி நீக்குவாய்! அய்யப்பா!

49. தமிழா! திராவிடா!

(20.3.51)

தமிழர் : ஓய்! திராவிடத்தாரே! மலையாளி மதிக்காத, ஆந்திரன் அறியாத, கன்னடியன் கருதாத திராவிடத்தைக் கேட்கிறீரே! வெட்க மில்லையா?

திராவிடர் : ஓய்! தமிழகத்தாரே! சற்று நிதானமாகப் பேசும்! தமிழகம் தேவை என்று கேட்கிறவர்களைவிட ஆயிரம்பேராவது அதிகமாக திராவிடம்தேவை என்று கூறுகிறார்கள், தெரியுமா? தமிழகத்திலிருக்கின்ற தெலுங்கு பேசுகிறவர்களைத் தமிழர் என்று நீர் சொல்லும்போது, திராவிடர்கள் எல்லோரும்ஒரே இனம் என்று நான் சொல்லக்கூடாதா? யோசித்துப்பாருமே!

தமிழர் : ஒரே நாட்டு மக்களை ஆரியர் - திராவிடர் என்றும், வடநாட்டார் - தென்னாட்டார் என்றும் பிரிப்பது தேசத் துரோகமல்லவா?

திராவிடர் : நல்ல போடு போட்டீர்! மல்லாந்து படுத்துக் கொண்டே எச்சிலைத் துப்பிவிட்டீரே! ஒரே பகுதியில் பிறந்தவர்களைத் தமிழர் என்றும் - தெலுங்கர் என்றும் பிரிப்பது மட்டும் தேசத் துரோக மல்லவோ?

தமிழர் : மொழியால்தான் ஒரு கூட்டம் ஒன்றுபட முடியுமே தவிர, மற்ற எதனாலும் ஒன்றுபட முடியாது! உமக்கு சரித்திர ஞானமே கிடையாதோ?

திராவிடர் : எனக்கா, அன்பரே! அருமையான கேள்வி கேட்டீர்! ஒரே மொழியைக்கொண்ட பஞ்சாப் இரண்டாக்கப்பட்டதும், ஒரே மொழியைக் கொண்ட வங்காளம் துண்டாக்கப்பட்டதும், உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையோ? பார்வையில் கோளாறு கிடையாதே?

தமிழர் : ஆரியராவது, திராவிடராவது? இரண்டும் கற்பனையே! இரத்தக் கலப்பு ஏற்பட்டுப் பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டனவே!

திராவிடர் : நாங்கள் இரத்தப் பரிசோதனையிலா ஈடுபட்டிருக்கிறோம்? கலந்து விட்டபடியால்தான், போலி உயர்வுகூட ஒழியவேண்டுமென்கிறோம். ஆரியம் என்பது இரத்தமல்ல. திமிர்! அசல்திமிர்! நீர் முஸ்லீமாகலாம்! கிருஸ்தவராகலாம்! புத்தனாகலாம்! இங்கிலீஷ் குடிமகனாகலாம்! ஆனால் என்ன செய்தால் பிராமணனாக முடியுமய்யா? சொல்லுமே! சோணாசலமே!

தமிழர் : நீர் எவ்வளவு கரடியாகக் கத்தினாலும் தனித் தமிழராட்சி தான் கிடைக்குமே தவிர, தனித் திராவிட அரசு பகற் கனவாகத்தான் முடியப்போகிறது!

திராவிடர் : பாகிஸ்தானைப் பற்றிக் கூட இதே பல்லவியைத்தான் படித்தீர்கள்! ஆனால் நீங்களே ஆப்பரேஷன் வேலை செய்தீர்களே! நான்தான் பார்த்தேனே! அது போகட்டும்! தனித் தமிழர் ஆட்சி ஏற்பட்டுவிட்டால் அதுதான் திராவிடர் ஆட்சிக்கு முதற்படி! குறுக்கு வழி! எங்கே, அதைத்தான் வாங்குமே, பார்க்கலாம்! டில்லிக்கு அடிமையான ஆட்சிதானே உம்முடைய ஆட்சி? அதனால்தானே உங்களைத் தூண்டிவிட்டு எங்களை எதிர்க்கச் சொல்கிறார்கள்? ''இந்திய யூனியனுக்குக் கட்டுப்படாத ஆட்சியே எங்கள் தமிழாட்சி'' என்று வேண்டுமானால் சொல்லிப் பாருமே, விளையாட்டுக்காவது! உம் வீரத்தைத்தான் ஹிந்தி சங்கதியிலேயே பார்த்துவிட்டேனே!

தமிழர் : நான் யார் தெரியுமா? பழைய வீரனாக்கும்! இதோ! என் மார்பைப் பாரும்! அத்தனையும் துப்பாக்கிக் குண்டு பாய்ந்த வடுக்கள்!

திராவிடர் : சிரங்கு வடு என்றா நான் சொன்னேன்? இதற்காக நீர் பழம் பெருமை பேச வேண்டியதில்லையே! இன்று உம் கடைச் சரக்கு என்ன என்றுதானே கேட்கிறேன்! வடநாட்டுச் சரக்கை வாங்கித்தானே வைத்திருக்கிறீர்? அந்தத் திசையை நோக்கித்தானே தண்டனிட்டுக் கொண்டிருக்கிறீர்?

தமிழர் : நீர் என்ன சொன்னாலும், உம்செய்கை எனக்குப் பிடிக்கவேயில்லை!

திராவிடர் : அதற்கென்ன செய்வது? அது பொறாமையால் ஏற்பட்ட நோய்! விரைவில் குணமானால் நல்லது!

50. அவர்களும் பெண்கள்தான்!

(24.4.51)

லண்டனில் சில பெண்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு தங்களுக்குத் தரப்படுகின்ற குறைந்த ரேஷன் இறைச்சித் துண்டுடன் பார்லிமெண்டுக்குச் சென்று கூச்சலிட்டார்கள்! ஆண் அரசியல் தலைவர்களின் அரசியல் போதை தெளிவதற்காக! அவர்கள்தாம் பெண்கள்!

இங்கேயும் இருக்கிறார்களே, நமது பெண்கள்!

ஒரு செட் - சதா சோப், முகபவுடர், சகிதமாகக் காட்சியளிக்கிறது!

ஒரு செட் - சதா கோவில், குளம், கதா காலட்சேபம், க்ஷேத்திர யாத்திரை!

ஒரு செட், திடீர் திடீரென்று பேய்பிடித்து ஆடுதல், ஒப்பாரி சொல்லி ஏ.ஆர்.பி. சங்கு மாதிரி பயங்கரக் கூச்சலிடுதல்!

ஒரு செட், ஆனந்தவிகடன் - கல்கி - நாவல் முதலிய உயர்தர அறிவு நூல்களைப் படித்து முன்னேறுதல்!

ஒரு செட், அடுத்த சினிமாப்படம் என்னவென்று கவனித்துக் கொண்டேயிருந்து, ஒவ்வொரு சினிமாவையும் 7 - 8 தடவை பார்த்து படக்கலை வளர்ச்சிக்கு உதவிசெய்து, உடற்கலையைக் குறைத்து கொள்ளுதல்!

ஒரு செட், யார் எக்கேடு கெட்டால் என்னவென்று கருதி, கட்டிலை விட்டால் கார், காரை விட்டால் கட்டில் - என்று நிம்மதியான மதுரை மீனாட்சியம்மன் வாழ்வு நடத்துதல்!

ஒரு செட், சங்கீதம், சினிமா, நாடகம், பரதநாட்டியம் முதலிய அரும் பெருங்கலைகளை வளர்ப்பதாகக் கூறி, சர்க்காரின் தடைச் சட்டங்களை மறைமுகமாக மீறிக் கொண்டிருத்தல்!

இந்த விதமாகப் பலவிதமான மாதர் 'செட்'கள் - இருக்கின்றன, நம் தென் நாட்டில்!

சமையல் வேலை;

பிள்ளை பெறுதல்;

அலங்கார ஆடையணிதல்;

அணிகளைப் பூணுதல்!

தென்னாட்டுப் பெண்களில் 100-க்கு 99¾ மேற்படி ஆக்க வேலைகளில் ஈடுபட்டுக் கிடக்கின்றனர்!

வீரப் பெண்களைப் பார்க்கவேண்டுமானால் மேல்நாட்டுப் பத்திரிகைகளை வாங்கிப் படம் பார்த்தால்தான்!

அல்லது பழைய புராணம், சரித்திரம், கதை - இவைகளை எடுத்து வைத்துக்கொண்டு அழுதால்தான்!

இன்ன பெண் இன்ன கிளர்ச்சியில் முன்னணியில் நிற்கிறாள்!

அடாடா! இந்த மாதிரிச் செய்தியைப் படிக்கவே ஆசையா யிருக்கிறது!

மிகச் சொத்தையான வேலை, மேடைப்பேச்சு என்பது! காரியவாதியான ஸ்டாலின் 2 - 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை பேசுகிறார்! நம் நாட்டுப் பெருந் தலைவர்களைப் பாருங்கள்! மூச்சு விடாத பேச்சு! தொலையட்டும்! இந்தச் சொத்தையான வேலைக்கே தென்னாட்டில் பெண்கள் அகப்படவில்லையே? சலித்து எடுத்தால் ஒரு டஜன் தேறுமா? சந்தேகந்தான்!

ஆனால் கோவில் திருவிழாவையும் சினிமாக் கொட்டகையையும் பாருங்கள்! ஆயிரக்கணக்கில்! நூற்றுக்கணக்கில்! அத்தனையும் அனிபெசண்ட்கள்! ஜோன் ஆஃப் ஆர்க்குகள்! விக்டோரியாக்கள்! ஜான்சி ராணிகள்! மாடம் க்யூரிகள்! மங்கம்மாள்கள்!

நம் சமூகத்திலுள்ள இவ்வளவு கஷ்டத்திலும் நம்நாட்டுப் பெண்கள் என்ன செய்கிறார்கள்? கப்! சிப்!

''வீரர்களாகிய ஆண் சிங்கக் குட்டிகள்; நீங்கள் என்ன செய்து கிழித்துவிட்டீர்கள், எங்களைக் கிண்டல் செய்வதற்கு?''

என்று பெண்கள் திருப்பிக் கேட்கலாம்!

மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். உங்களைப்பற்றி மேலே எழுதியதை மறந்து விடுங்கள்!

வாருங்கள்! ஆண் சிங்கங்கள், பெண் புலிகள் - எல்லோரும் சினிமாவுக்குப் போகலாம்!

51. எல்லை கடந்தால், எதுவும்...

(27.4.51)

உலகத்தார் எதிலும் நடுநிலைமையைத்தான் விரும்புகிறார்கள்!

எழுதப் படிக்கக்கூடத் தெரியாமலிருந்தால் ''தற்குறி - கைநாட்டு - கீரல் பேர்வழி'' என்கிறார்கள்! பல பட்டங்கள் பெற்று, மேலும் படித்துக்கொண்டே யிருப்பவனைப் பார்த்து, ''இது ஒரு புஸ்தகப்பூச்சி!'' என்கிறார்கள்!

துரும்பாக மெலிந்திருப்பவனை நோக்கி, இவன் ''ஒரு முருங்கைக்காய்'' என்கிறார்கள்! அதிகமாக உப்பியிருப்பவனைப் பார்த்து, இது ''டபுள் டிக்கட்; மிச்சலின் டயர்; சுரைக்காய் பலூன்,'' என்கிறார்கள்!

கந்தல் துணியணிந்து பரட்டைத் தலையுடன் இருப்பவளை நோக்கி, ''பிசாசு என்பது பொய்; இதுதான் அது'', என்கிறார்கள். இவளுக்கு நேர்மாறாக இருக்கின்ற ஒரு பெண்ணை நோக்கி, ''இதோ சினிமா ஸ்டார்! அருமையான மேக் அப்'', என்கிறார்கள்!

பெண்ணாசையே இல்லாதவனை நோக்கி, ''பேடி!'' என்று கிண்டல் செய்கிறார்கள்! நேர்மாறான எல்லையிலிருப்பவனைக் கண்டால் ''இதோ, கிருஷ்ணபரமாத்மா! பொலி காளை!'' என்று திட்டுகிறார்கள்!

பரம ஏழையைப் பார்த்து, ''இதோ அன்னக்காவடி!'' என்கிறார் கள். அதிகச் செல்வம் படைத்தவனை நோக்கி, ''இதோ பண மூட்டை! ஊர்க் கொள்ளை! பாட்டாளி இரத்தங் குடித்த மூட்டைப் பூச்சி!'' என்கிறார்கள்!

யாருடனும் பேசாமல் மவுனமாயிருப்பவனை நோக்கி, ''இது சோளக் கொல்லைப் பொம்மை! பேசா மடந்தை! சுத்த மடச் சாம்பிராணி!'' என்கிறார்கள்! சதாபேசுகிறவனைப் பார்த்தாலோ, ''இவன் நச்சுவாயன்! பெரிய டமாரம்! லொடலொட்டை!'', என்கிறார்கள்!

சாதுவாயிருந்தால், ''இவன் மண்டு! பெரிய அப்பாவி! ஏமாந்த சோணகிரி!'', என்கிறார்கள்! அளவுக்கு மீறிய கெட்டிக்காரனா யிருந்தா லோ, ''இவன் மகாவஞ்சகன்; சிரித்துக்கொண்டே கழுத்தை யறுத்து விடுவான்! அடுத்துக் கெடுப்பதில் அசகாய சூரன்!,'' என்கிறார்கள்!

''போதும், உன் உதாரணங்கள் இவைகளெல்லாம் எதற்காகப் பீடிகை?'' ...என்று நீங்கள் கேட்பதுபோல் தோன்றுகிறபடியால் உதாரணங்களை இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

எதிலும் நடுநிலைமையைத்தான் (வயா மீடியா - Via Media என்று இங்கிலீஷில் சொல்வதுண்டு) மக்கள் விரும்புகிறார்கள். ஆதலால்தான் அரசியலில்கூட பலர் அங்கு தலையும் இங்கு வாலுமாக (அரசியல் நடுநிலைமை!)க் காட்டி வருகிறார்கள்!

பேசும் சினிமா வந்தபிறகு தமிழ் நாட்டில் நாடகக் கலையே அழிந்துபோய்விடுமோ என்று சந்தேகித்தேன். வருந்தினேன். அப்படி அழிந்து போகக்கூடாதே என்பதற்காக இரணியன் வேஷம் கூடப் போட்டு இரண்டு தடவை நடித்துப் பார்த்தேன்! (அன்றிருந்த வெள்ளையர் சர்க்காருக்கு இரணியன் நாடகத்தைத் தடை செய்யும் பிரஜா உரிமை உணர்ச்சி இல்லை என்பது ஈண்டுக்குறிப்பிடற் பாலது!)

இன்று தமிழ்நாட்டில் நாடகக்கலை நல்ல வளர்ச்சியடைந் திருக்கிறது! மகிழ்ச்சிதரக் கூடியதுதான்! பாராட்ட வேண்டியதுதான்! இதன் கடல்அளவு சேவையில் கடுகளவு எனக்குமுண்டு, மாஜி நடிகன் என்பதனால்! எவ்வளவு சினிமாப் படங்கள் வந்தாலும் இனித் தமிழ் நாடகம் சாகாது என்பது உறுதி!

ஆனால் இதிலும் எல்லை மீறுகின்ற கட்டம் வந்துவிட்டது. உயர்தரமான பேச்சாளர் பகலில் பேசினால் ஆயிரம் பேர் வருகிறார்கள்! அவரே இரவில் பவுடர் தடவிக்கொண்டு, நாடகமேடையில் நடித்தால்

பத்தாயிரம் பேர் வருகிறார்கள். நாடகப் பாத்திரத்தைவிடப் பல மடங்கு அருமையான கருத்துக்களை வாரிக்கொட்டுகிறார், இவரே பகலில்! ஆனால் தமிழ்நாட்டு ரசிகர்கள் வருவதில்லை. சிறப்பாகப் பெண்கள் தலைகாட்டுவதேயில்லை. ரசிகர்களல்லவா? வெறும் பேச்சைக் கேட்பதற்கு எப்படி வருவார்கள்?

தமிழ் நாடே நாடகமேடையாகிவிட்டது! 'நாடகமே உலகம்' என்பதும் நினைவிருக்கட்டும்! ஏன்? பலருக்கு வாழ்க்கையே அப்படித்தானிருக்கிறது!

ஸ்டாலினும், மாசேதுங்கும், ட்ரூமனும் தமிழ்நாட்டில், ஒரு மேடையில் பேசுகிறார்கள் என்றால் அவ்வளவு கூட்டம் வராது. இவர்கள் மூவரும் நாடகத்தில் நடிக்கிறார்கள் என்றால் மகாமகக் கூட்டம் அப்படியே திரண்டுவரும்!

அந்தக் காலத்தில் ஒரு பெசண்டோ, ஒரு சரோஜினியோ பேசுகிறார்கள் என்றால், கடல்போல வருவார்கள், பேச்சைக் கேட்க! ஆனால் இன்று அவர்கள் மட்டும் இருந்தால், பவுடர் பூசிக்கொண்டு நாடக மேடை மீது வந்தால்தான் தமிழ்மக்கள் மதிப்பார்கள்!

இவ்வளவு கலா உணர்ச்சி வளர்ந்திருப்பதுபற்றி எந்த நாட்டாரும் தமிழ் நாட்டைக்கண்டு பொறாமைப்பட வேண்டியதுதான்!

''அய்யய்யோ! பசி தாங்க முடியவில்லையே! மயக்கமாயிருக்கிறதே ஏதாவது கொஞ்சம்போடேன்!'' - என்று கணவன் துடிப்பானேயானால், அவன் மனைவி என்ன கூறுவாள், தெரியுமோ?

''நல்லா நடிக்கிறீங்களே! அய்யே! அரிதாரம் பூசாமலே இப்படி நடிக்கிறீங்களே!''

என்றுதான் கூறுவாள்! உயிரே போய்விட்டால் கூட, தன் கணவன் பிணம்போல் நடிக்கிறான் என்று கூறிவிட்டு, நாடகம் பார்க்கப் போய்விடுவாள்!

நடிப்புக் கலா உணர்ச்சி இமயமலை உச்சிக்குப்போய்விட்டது, நம் செந்தமிழ் நாட்டில்! நடு நிலைமைக்கு வந்துவிடுமோ என்ற அச்சம்வேண்டாம்! முத்தமிழ் வளர்ச்சியில் ஒரு தமிழ் முற்றிப்போய் விட்டது! இனிமேல் பழுக்கவேண்டியதுதான் பாக்கி!

52. ஊரார் பொல்லாப்பு!

(28.4.51)

''ஏனப்பா, இப்படி ஊரார் பொல்லாப்பைத் தேடிக்கொள்கிறாய்? எல்லோருக்கும் நல்லவன் என்று பெயர் எடுக்கக் கூடாதா? உன் தலையெழுத்து ஏனப்பா இப்படிக் கோணலாயிருக்கிறது?,''

என்று என் மீது பரிவும் பாசமும் கொண்ட ஒரு பெரியவர் என்னை நோக்கிக் கேட்டார்.

''நான் செய்கின்ற தப்பென்ன? சொல்லுங்கள், திருத்திக் கொள்கிறேன்'', என்று கூறினேன்.

''யார் மீதும் குற்றஞ் சொல்லாதே! எவரையும் கண்டிக்காதே! உலகம் பலவிதமாய்த்தானிருக்கும்! ஊர் ஓட ஒக்க ஓடு! ஊரார் போற்று கிறவர்களை நீயும் போற்று! கெட்டவன் என்ற பெயர் எடுக்காதே!''

''உண்மையைச் சொன்னால் அது கூடவா தப்பு?''

''ஆமாம்! அதுகூடத் தப்புத்தான். அல்ல; அல்ல! அதுதான் பெரிய தப்பு. சீதையின் கற்பில் இராமனே சந்தேகப்பட்டிருக்கலாம். ஆனாலும் சீதை கற்புக்கரசி என்று ஊரார் சொன்னால், அதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். துரௌபதையைப் போலத் தன் தாயோ, மனைவியோ, மகளோ இருக்கவேண்டுமென்று எந்த பக்தனும் விரும்பமாட்டான். இருந்தாலும் அவளையும் கற்புக்கரசி என்று ஊரார் சொன்னால் நீயும் அப்படியே சொல்லிவிட்டுப் போயேன்! உனக்கென்ன நஷ்டம்?''

''அப்படியா? எனக்கு நஷ்டந்தான். அதாவது, என் வீரத்துக்கு நஷ்டம்! அறிவுக்கு நஷ்டம்! கோழைகளும் அறிவை அடகு வைத்தவர் களும் வேண்டுமானால் எல்லோருக்கும் நல்லவர்களாக நடக்கட்டும்! என்னால் முடியாது. எனக்கு அவசியமில்லை. சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் மட்டும்!''

என்று பதில் கூறினேன்!

''இது உருப்படாது! இதுக்கு நல்ல சுழி கிடையாது. எல்லோரும் இந்தக் காலத்தில் பண மரத்தை உலுக்கிக் கொண்டிருக்கும்போது, இது என்னென்னமோ உளறிக் கொண்டிருக்கு!'' - என்று தம் பக்கத்திலிருந்த வரைப் பார்த்து உதட்டைப் பிதுக்கிக் கூறிவிட்டுப் போய்விட்டார், பெரியவர்!

இந்தியன் பாங்கியில் 12 டைரக்டர்கள் இருக்கின்றனர். இவர்களில் இரண்டு பேர்தாம் பார்ப்பனர். எட்டுப் பேர் செட்டியார். இந்த பாங்கியின் செக்ரட்டரி கோபால அய்யர். டெபுடி செக்ரடரி பார்த்தசாரதி அய்யங்கார்! இந்த பாங்கிக்கு இருக்கின்ற நூற்றுக்கணக்கான கிளை களிலும் தலைமை நிலையத்திலும் 100க்கு 99¾ பேர் அக்கிரகார வாசிகள்!

இந்த பாங்கியின் சூத்திரதாரிகள்தான் பச்சையப்பன் கல்லூரி களுக்கும் சூத்திரதாரிகள். அங்கும் பார்ப்பன பிரின்ஸ்பால்கள்!

கம்யூனல் ஜீ.ஓ. வாவது கத்தரிக்காயாவது!

இதையெல்லாம் கூறினால்தான் பெரியவர் எடுத்துக்காட்டிய 'ஊர்ப்பொல்லாப்பு' வருகிறது!

பெரியவர் சொல்வதிலும் கொஞ்சங் கொஞ்சம் நியாயமிருக்கத் தான் செய்கிறது. உலகில் எப்படியாவது காலந்தள்ள விரும்புகிறவன் எல்லோருக்கும் நல்லவனாகத்தான் இருக்கவேண்டும். உலகத்தில் உண்மையைக் கூறி கயமையைக் கண்டிக்கிறவன் உடையார்பாளையம் வேலாயுதம் அல்லது தாலமுத்து - நடராசன் கதிக்குத்தான் ஆளாக வேண்டும்!

பணம் நிறைய வைத்திருக்கிறவன் எவ்வளவு அயோக்கியத் தனமாக நடந்தாலும் உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. மிதமிஞ்சிய விளம்பரம் பெற்றவன் எவ்வளவு இனத்துரோகம், நாட்டுத்துரோகம் செய்தாலும் பரவாயில்லையாம்!

ஆனால் என்னைப் போன்றவன் ஒரு சிறு தவறு செய்து விட்டாலோ?...

தவறு கிடக்கட்டும்! நல்ல காரியமே செய்யட்டுமே! பணமூட்டை கள் இந்த ஏழையின் தலையிலே விழுந்து நசுக்கிவிடும்!

ஆனால், எதற்கும் துணிந்து நின்றால்-? ஆம்! அந்தப் பண்புதான் நம் இளைஞர்களுக்குத் தேவை! மானத்தை விற்ற விலங்கு (சுக) வாழ்வு அல்ல! வீரத்தைப் பெற்ற மனித வாழ்வு! அதுதான் தேவை! அதிகமாகத் தேவை! அவசரமாகத் தேவை!

53. தங்கம்மாள் கதறல்!

(4.5.51)

ஏதாவது புது சினிமாப்படத்தின் பெயரோ, என்று நினைத்து விடுவார்கள், சினிமாக் கலையின் ரசிகர்கள்! அப்படியல்ல.

தங்கம்மாள் என்ற இளம் பெண் கதறியதைக் கேட்டேன்! அதன் சாரத்தை இங்கே தருகிறேன் :

''நான் ஒரு திராவிடப் பெண். என் பெயரைப் பார்த்தாலே தெரிய வில்லையா?

ஆனாலும் இதுவரையில் என்னைத் தென் இந்திய மக்கள் அலட்சியப்படுத்தி விட்டனர். வெள்ளைக்காரன் தான் என்னை வெளியேற்றி உயிர் கொடுத்தான்! உலகத்திலேயே எனக்கு உயர்தரமான மதிப்புண்டு. என் இனத்தைச் சேர்ந்தவர்கள் - அதாவது தென் இந்தியப் பெண்கள் - சிறப்பாக தமிழ் நாட்டில் - என்னை எவ்வளவு விரும்பு கிறார்கள் தெரியுமா? நான் நூறு பவுண்ட் கனமிருந்தாலும் என்னைச் சுமக்க மறுக்க மாட்டார்கள்!

கோலாரில் பிறந்த நான் சென்னை ராஜ்யப் பகுதியிலும் பரவி யிருக்கிறேன். சித்தூர் ஜில்லாவிலும், சேலம் ஜில்லாவிலும் கோலாரி

லிருந்து 15½ மைல் தொலைவுக்குப் பரவியிருக்கிறேன். ஆனால் இந்த இடங்களிலெல்லாம் 'அண்டர் கிரவுண்டில்' (முன்பு சில கம்யூனிஸ்ட் தோழர்கள் இருந்தது போல்) இருக்கிறேன். இந்த அண்டர்கிரவுண்ட் வாழ்க்கை எனக்குச் சிறிது கூடப் பிடிக்கவேயில்லை. கோலாரில் மட்டும் வெளியே வந்து உலவுவது; மற்ற இடங்களில் பூமிக்கடியில் புதைபட்டுக் கிடப்பது என்றால், இது என்ன வாழ்வு?

நான் மட்டுமல்ல, என் தம்பி இரும்புச் செல்வன்; என தங்கை கரிச் செல்வி போன்றவர்கள் தென் ஆர்க்காடு வட்டாரத்தில் அண்டர் கிரவுண்டில் கிடந்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை வெளியேற்றி விடுதலை செய்து சுகம்அனுபவிக்கின்ற புத்தி என் திராவிட மக்களுக்கு வரவில்லையே! என்ன செய்வது?

இவர்கள் வடக்கே நோக்கி நோக்கிக் கன்னத்தில் போட்டுக் கொண்டிருக்கிறார்களே! இவர்களுக்கு என்று தான் இந்த அடிமைப் புத்தி ஒழிந்து சுதந்தர உணர்ச்சி தோன்றுமோ, தெரியவில்லையே!

நாங்களும், தோரியம் தேவி, மைகா மைந்தன் போன்ற எங்கள் உடன் பிறந்தார்களும் இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் 'அண்டர் கிரவுண்ட்' வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பது? அண்டர் கிரவுண்டி லிருக்கும் அரசியல்வாதிகளும் வெளியேற வேண்டும். நாங்களும் வெளியேற வேண்டும். மக்களால் நாங்கள் சுகப்பட வேண்டும். எங்களால் மக்கள் சுகப்பட வேண்டும்.

டில்லி - டில்லி - டில்லி என்று சதா டில்லி பஜனையே செய்து கொண்டிருக்கின்ற என் நாட்டு அடிமைகளைப் பார்ப்பதற்கே எனக்கு வெட்கமாயிருக்கிறது! டில்லியை நம்பினால் இவர்கள் உருப்படவே மாட்டார்கள். டில்லிக்கு சேலத்தைப் பற்றியும் தென் ஆர்க்காட்டைப் பற்றியும், சிற்றூரைப் பற்றியும், மலபாரைப்பற்றியும் கவலையோ ஆசையோ இருக்குமா? அதுவும் இன்று கிளம்பி யிருக்கும் நாட்டுப் பிரிவினைச் சூறாவளிக் கிடையே!

இங்குள்ள அரசியல் - பொருளாதார மரமண்டைகளுக்கு இந்த அற்பச் சங்கதிகூட ஏன்தான் விளங்கவில்லையோ?'' -

இந்த மாதிரிச் சொல்லி வருந்தினாள், சிறுமி தங்கம்மாள்!

திராவிடர்களே! என்ன செய்யப் போகிறீர்கள்? ''யார் அழுதால் எனக்கென்ன? என் வயிறு நிறைந்தால் போதும்,'' - என்று உண்டு உறங்கிக் கிடக்கப் போகிறீர்களா? அல்லது அண்டர் கிரவுண்டில் கிடந்து அவதிப்படுகின்ற நம் செல்வர்களை மீட்டு சுகவாழ்வு வாழப் போகிறீர் களா?

(தங்கம், நிலக்கரி, இரும்பு, தோரியம், மைக்கா - போன்ற பல்வகையான சுரங்கப் பொருள்கள் தென்னாட்டில் கிடைக்கின்றன

வாம். ஆனால் இவைகள் பூமிக்கடியில் புதைபட்டுக் கிடக்கின்றன. இவைகளை வெளியேற்றும் எண்ணம் டில்லி சர்க்காருக்குக் கிடையாது - வராது. மாகாண சர்க்காருக்கோ அதிகாரமில்லை!)

54. தீருக்காயுசு பவஹ :

(7.5.51)

கல்யாணத்தின் போதும் கருமாதியின் போதும் பிர்ம்மாவுக்குச் சொந்தக்காரர்களான பிராமணர்கள் நம் வீட்டுப் பச்சரிசியையும் நம் வீட்டு மஞ்சளையும் சேர்த்துக் கலந்து கொண்டு அதையள்ளி நம் தலையிலே போட்டு ''தீர்க்காயுசு பவஹ'' என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம். (இன்னமும் இவ்வாறு தலையைக் காட்டும் திராவிடப் பெரும் பிரகிருதிகள் இருந்தால் எழுதுங்கள்! அதுகளின் பெயர்களை ஊரார் அறிந்து நகைக்கச் செய்வோம்!)

அதாவது மஞ்சளும் அரிசியும் அவன் கைப்பட்ட மாத்திரத்தில் அட்சதை என்ற பெயர் சூடிக்கொள்கின்றன!

அழுக்குத் தண்ணீர் அவன் கையினாலும், வாயினாலும் 'தீர்த்தம்' ஆவதுபோல!

மாட்டு மூத்திரமும் சாணியும் அவன் கையினாலும் வாயினாலும், 'பஞ்சகவ்யம்' ஆவது போல!

நம் பெண்கள் ஆடியபோது தேவடியாள்கள் என்ற பெயர் இருந்து, பிறகு அக்கிரகாரப் பெண்கள் ஆடத் தொடங்கிய பிறகு இப்போது 'பரத நாட்டியக்' கலை ஆகிவிட்ட மாதிரி!

அவனும் எத்தனையோ நூற்றாண்டுகளாக நம் மூதாதையர் தலைகளில் 'அட்சதை' போட்டுக் கொண்டு தானிருந்தான்! ஆனால் நம்மவர்களில் யாரும் (லட்சப் பிராமண போஜனம் பலவற்றை நடத்திய தஞ்சாவூர் மன்னர்கள் உட்பட) அவன் சொன்னபடி 'தீர்க்காயுசுடன்' இருக்கவேயில்லை. நாம்தான் போகட்டும்! அவனுக்காவது அவன் மந்திரமோ, அட்சதையோ பயனளித்ததா என்றால், வெளியே சொன்னால் வெட்கம்!

''உங்கள் தலையில் வெள்ளைத் துணி முக்காடு போட்டிருக்கிறீர்களே, இந்தச் சிறுவயதில்! ஏனம்மா? அய்யோ, பாவம்! தலை மயிரைக் கூட மொட்டையடித்திருக்கிறீர்களே! ஏனம்மா? திருப்பதிக்காவது பழனிக்காவது வேண்டுதலையோ?'' என்று கேட்டார், விஷயந் தெரியாத ஒருவர், ஒரு அக்கிரகாரப் பெண்ணை நோக்கி!

''ஒரு வேண்டுதலையும் இல்லை! என் ஆத்துக்காரர் விவாகமான அடுத்த வருஷத்திலேயே வைகுந்தப் பதவி யடைந்துவிட்டார்,''

என்று சொன்னாள், கண்ணீர் ததும்பிய கண்களுடன். அய்யோ பாவம்! அவருக்குக் கிடைத்த 'பதவி' வைகுண்டமாயிருந்தாலும் வேறு எதுவாயிருந்தாலும் அந்தம்மாள் விதவைதானே!

இந்தம்மாள் தலையிலும் இதே அட்சதை (மஞ்சளரிசி) விழுந்து தானே இருக்கும்? இந்தம்மாளின் கணவன் தலையிலும் விழுந் திருக்குமே! இந்த மாதிரிப் பெண்கள் அக்கிரகாரத்தில் வீட்டுக்கு இரண்டுக்குக் குறையாமலிருப்பதைக் கண்ட பிறகுங்கூட பார்ப்பானைத் தன் வீட்டுக்குக் கூப்பிட்டுத் திருமணமும், மற்றச் சடங்குகளும் நடத்துகிறானே, அந்த மரமண்டைத் தமிழனை மனிதன் என்றா நினைக்கிறீர்கள்? அவன் எவ்வளவு பெரிய லட்சாதிபதி யானாலுஞ்சரி! உலகஞ்சுற்றியவன் ஆனாலுஞ்சரி! யானைக்குப் பிறந்த 'பெரியமனுஷன்' ஆனாலுஞ்சரி! நான் அவனை ஒரு அழுகல் மூளை என்று தான் மதிக்கிறேன்! அவன் அறிவை என் ஆஃபீஸ் பையனின் கால்தூசிக்குச் சமமாகவேதான் கருதுகிறேன்!

ரஷ்யாவில் வாசிலி சர்கீவீட்ச் என்பவருக்கு 145 வயதாகிறதாம். திடமாகவே இருக்கிறாராம். சோவியத் மக்களில் 100 (நூறு) வயதுக்கு மேற்பட்டவர்கள் முப்பதாயிரம் (30,000) பேர் இருக்கிறார்களாம்!

இவர்கள் தலைகளில் 'அட்சதை' போட்டு, 'தீர்க்காயுசுபவஹ' என்று சொன்னவர்கள் யார்? இவர்களுக்கு ஆயுசு ஹோமம் வளர்த்த அந்தணப் பெரியார்கள் யார்? இவர்கள் தங்கள் பிதிர்க்களுக்கு எந்தப் புரோகிதன் (திருடன்) மூலம் உணவுப் பார்சல் அனுப்பினார்கள்? ஸ்டாலினுக்குக் கடிதம் எழுதித் தெரிந்து வையுங்கள்! எழுதும் போது, நம் பஞ்சாங்க மந்திரி ஆச்சாரியார் வருஷப் பிறப்பில் பஞ்சாங்கம் படித்து புது வருஷப் பலனை எடுத்து மற்ற மதி மந்திரிகளிடம் கூறியதையும் எழுதி வையுங்கள்! இந்த நாட்டு மந்திரிகளின் புத்தி தீட்சண்யத்தைப் பற்றி அவரும் அறிந்து கொள்வது நல்லதல்லவா?

55. பர்னார்ட்ஷா உயில்!

(9.5.51)

3,67,233 ஸ்டர்லிங்! சுமார் 40 லட்ச ரூபாய்! பர்னார்ட்ஷா - உலகப் புகழ் பெற்ற நாடகாசிரியர் - விட்டுப் போயிருக்கின்ற செல்வம்! பணஞ் சேகரிப்பதில் ரொம்ப நிர்த்தாட்சண்யமாயிருப்பாராம், இந்தத் தாவர உணவுப் பேர்வழி!

சிக்கன வாழ்வு நத்திச் சேகரித்த இந்தத் தொகையை எப்படிச் செலவழிப்பது என்பது பற்றி இவர் ஒரு உயில் (Will) எழுதி வைத்திருக் கிறாராம். அதில் என்ன எழுதியிருக்கிறார், தெரியுமா? இப்போதுள்ள 26 இங்கிலீஷ் எழுத்துக்களுக்குப் பதிலாக 40 எழுத்துக்களாக்க வேண்டும்

என்றும், அதற்காக இந்தச் சொத்தில் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை யென்றும் எழுதியிருக்கிறாராம்!

சுத்தப் பைத்தியக்காரர்! எழுத்துத் திருத்தமாம்! அதற்காக லட்சக் கணக்கான ரூபாயாம்!

தென்னாட்டுப் பணக்காரர்களைப் பாருங்கள்! சினிமா ஸ்டூடியோ! இல்லாவிட்டால் காந்தி ஸ்தூபி! தமிழ் எழுத்தைத் திருத்த வேண்டு மென்றால் ஏளனச் சிரிப்பு!

''இவனென்ன எம்.ஏ. பட்டம் பெற்றவனா? தமிழ் வித்வானா? தமிழ் எழுத்தை இவன் திருத்துவதாவது? நாம் ஒப்புக்கொள்வதாவது? அப்படியாவது ஒரு சீனுவாசய்யங்கார் சொன்னாலும் சரி! ஒரு திராவிடக் கிழவன் சொல்வது, நாம் அதைக் கேட்பதா?''

இந்த மாதிரிக் கேட்கிறார்கள், இங்கே!

அய்யங்கார் ஒப்புக்கொண்டால் கூட அதிகப்பிரசங்கிகள் ஒப்புக் கொள்வதாயில்லை!

பிற மொழிகளிலுள்ள புதுஓசைகளைக் குறிப்பதற்காக இங்கிலீஷில் மேலும் சில புதுஎழுத்துக்கள் சேர்க்கப்பட வேண்டுமென்று பர்னார்ட்ஷா பல ஆண்டுகளாகக் கூறி வந்தார்! ஆனால் இந்தத் தாடிக் காரர் பேச்சை அந்த நாட்டு அதிகப்பிரசங்கிகள் அலட்சியப்படுத்தியே வருகிறார்கள்.

பழமைக்குப் பிசின் போட்டு ஒட்டிக்கொள்வதில் ஹிந்துக் களைவிட இங்கிலீஷ்காரர் அதிகப் பிடிவாதக்காரர்கள்! சிற்சில குருட்டு நம்பிக்கைகளில் இந்த நாட்டு வைதீகக் குடுக்கைகளைத் தோற்கடித்து விடுவார்கள்.

எழுத்தில் கைவைத்தால் பூகம்பமே வந்துவிடும் என்று கருது கிறவர்கள்!

இங்கிலீஷ் எழுத்துக்களில் ழ - ள - ண முதலிய ஓசைகளை உச்சரிக்க முடியாது. தமிழ் என்பதை Tamil (டமில்) என்று இங்கிலீஷில் எழுதுவது, ஜப்பான் என்பதை சப்பான் என்று தமிழில் எழுதுவதைவிடக் கேவலம்! Thamiழ் என்று எழுதினால் என்ன மோசம் வந்துவிடுமோ தெரியவில்லை. காபி என்றெழுதாதபடி காஃபி என்றோ, காஃபி என்றோ எழுதினால் தமிழ்மொழி செத்தாபோகும்? பஜ்ஜி - ஜிப்பா இவைகளை பச்சி-சிப்பா என்று எழுதி உச்சரித்தால் ஆபாசமாக இல்லையா?

''பழையன கழிதலும்புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே''

என்ற சூத்திரத்தைப் படித்தவர்கள்கூட துள்ளிக் குதிக்கிறார்கள், கொதிக்கும் எண்ணெய்ச் சட்டியில் விழுந்த எள் உருண்டையைப் போல!

பின்பக்கம் வளர்ந்த தலைமயிரைக் கத்தரித்து மொட்டையாக்கி, அதை முன் பக்கம் வைத்து, வகிடு எடுத்து வருகின்றவர்கள் கூட தமிழ் எழுத்தைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்கிறார்களே! மயிரை விட அலட்சியமாகக் கருதுகிறார்கள், தங்கள் மொழியின் எழுத்துக்களை!

தமிழ் எழுத்துக்களைக் கூட்டியும் குறைத்தும், கிராப் செய்து அழகு படுத்தவேண்டும். உலகமே கிராப் மயமாகி விட்டது! மகாவிஷ்ணுவும் இந்த அக்கிரமத்தை 'சம்ஹாரம்' செய்வதற்காக மற்றொரு அவதாரம் எடுக்காமலிருந்து விட்டார்!

பர்னார்ட்ஷா ஒரு புரட்சி எழுத்தாளர். முரட்டுத்தனமான எதார்த்த வாதி. ஆதலால் என்றும் வெகு ஜன விரோதியாகவே இருந்தார்.

எழுத்துத் திருத்தத்துக்கு வேண்டிய பணம் போக மிச்சப் பணத்தைச் சில தர்ம காரியங்களுக்காக ஒதுக்கி வைத்திருக்கிறாராம்!

இந்தத் தர்ம காரியங்களில் பிராமண போஜனம் உண்டா? என்று கேட்கிறார், ஸ்ரீலஸ்ரீ உஞ்சி விருத்தி உச்சிக்குடுமி சாஸ்திரியார்!

56. கண்டனன்... கண்களால்!

(18.5.51)

''தெண்திரை அலை கடல் இலங்கைத் தென்நகரில்'' சீதையை அநுமான் தன் கண்களால் கண்டதாக இராமனிடம் கூறுகின்ற பாடல் சிலருக்காவது நினைவிருக்கலாம்!

இந்த உவமையை இதற்குமேல் நீட்ட வேண்டாம்! திராவிட நாட்டையடைவதற்காக நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்ற திராவிடர்களை என் கண்களால் கண்டேன்!

இதற்கு முன்பு வேறு சில ஊர்களில் கண்டிருக்கிறேன்; ஆனால் இந்த வாரம் பம்பாயில் கண்டேன்!

72 மணி நேரம் ரயில் பிரயாணம்! போக, வர! முதன்முதல் ரயில் பிரயாணம் செய்கிறவனுக்குக் கூட வெறுப்பு ஏற்பட்டு விடும்! ஆனால் அறிந்துகொள்ளக் கூடிய சங்கதிகள் பல உண்டு!

வண்டிக்கு வெளியிலே எச்சில் துப்புகின்ற மனிதன் குண்டக்கல் ஸ்டேஷன் தாண்டியதும் வண்டிக்குள்ளேயே எச்சில் துப்புகிற மனிதனைக் கண்டால்? தும்பைப் பூப்போலத் துணி கட்டுகிற மனிதர் கக்கூஸ் 'வாசனை' கொண்ட துணி கட்டுகிற பாரதமாதா புத்திரரைக் கண்டால்?

''லட்சக்கணக்கான தென்னாட்டார் வடநாட்டிலும் சென்று சுரண்டுகிறதாக'' இரண்டொரு மேடைப் பேச்சாளர்கள் கூறுகிறார்களே

அந்தச் சுரண்டலை ''கண்களால் கண்டேன்!'' ஆம்! உடைந்த சட்டிகளைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள்! அவைகளில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற சோற்றுப் பருக்கைக்காக!

பேனாக் கூலிகள் பெருத்துக் கிடக்கின்ற மதுங்கா பகுதியையும், உடல் உழைப்புக் கூலிகள் மலிந்து கிடக்கின்ற தாராவி பகுதியையும் பார்த்துவிட்டுத் திரும்பியவன் சவுகார் பேட்டையிலுள்ள ஒரே ஒரு தெருவை மட்டும் பார்த்தாலே போதும்! யார் சட்டியைச் சுரண்டுகிறார்கள், யார் சக்தியைச் சுரண்டுகிறார்கள் என்பதைக் காண்பதற்கு மீசைகள் இருந்தால் போதாது! கண்கள் இருக்கவேண்டும்! அதில் நல்ல பார்வை இருக்கவேண்டும்!

சுமார் ஒரு லட்சம் தென்னாட்டார் இருக்கிறார்களாம் பம்பாய் நகரத்தில்! இவர்களின் சராசரி தின வருமானம் பத்து ரூபாய் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்வோம்! இத்தனை பேரும் சேர்ந்து 'சுரண்டுகிற' பணம் ஒரு நாளைக்குப் பத்து லட்ச ரூபாய்தான்! இந்தத் தொகை இங்கே 7 - 8 வடநாட்டு வியாபாரிகளால் மட்டும் தினசரி சம்பாதிக்கப்படுகிறது என்பது 'கல்கி'க்கும் தெரியும்! அதன் பாடல் பெற்றவர்களுக்கும் தெரியும்!

''வடநாட்டிலுள்ள தமிழர்களெல்லோரும் அங்கிருந்து விரட்டப் பட்டுவிட்டால்?'' - என்று கேட்டதே, கீழ்ப்பாக்கம் பூணூல்.

நானும் சிலரைக் கேட்டுப் பார்த்தேன்!

''எவ்வளவு இதுவரையில் சுரண்டியிருக்கிறீர்கள்? ஒழிந்தானா வடநாட்டான்? ஆமா, இதென்ன, இந்த இடம் நம்நாட்டுச் சேரியைவிட மோசமாயிருக்கிறதே?'' -

என்று கேட்டுப் பார்த்தேன்!

''சுரண்டலாவது, சுண்டைக்காயாவது! வயிற்றுப் பிழைப்புக்காகத் நான் 100 மைல் தாண்டி வந்திருக்கிறோம்'', என்கிறார்கள், தென் ஜில்லா வாசிகள்!

அது மட்டுமா?

''கோயங்கா மவுண்ட் ரோடு கட்டடங்களையெல்லாம் ஒவ்வொன்றாக வாங்கி வருகிறாரே! நீங்கள் இங்கே எத்தனை கட்டடம் வாங்கியிருக்கிறீர்கள்?''

என்று கேட்டேன்!

''காங்கிரஸ்காரர் தலையில் அடித்துச் சொல்கிறோம்! காலணாக் காசு கூட மிச்சம் கிடையாது! 'கல்கி'ப் பூணூல் ஆணையாகச் சொல்கிறோம்! கால் ரூபாய்கூட மிஞ்சுவதில்லை!''

என்றார்கள்!

''எங்கள் தாய் நாட்டுக்கே திரும்பி வந்துவிட முடியுமா? முடியாதா? சொல்லித் தொலையுங்கள்,''

என்றார்கள், ஆத்திரமாக!

''நன்றாக முடியும்! நிச்சயமாக முடியும்! ஆனால் காங்கிரஸ் மலைப்பாம்பு குறுக்கே படுத்திருக்கிறதே என்ன செய்யச் சொல்கிறீர்கள்?'' -

என்று கேட்டேன்!

''நல்ல பாம்பு துரோகிக் குட்டிகள் புற்றுக்களில் பதுங்கிக்கொண்டு சீறுகின்றனவே!''

என்று கேட்டேன்!

கண்டேன், கண்களால்! யாரை? சீதையை! ஆனால் அவள் வடநாட்டு இராவணனுடன் சல்லாபஞ் செய்து கொண்டு இருந்ததைக் காணவில்லை! மணந்த காதலனைக் கடடித்தழுவக் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்!

57. எதுவேண்டும்? சொல்மனமே!

(22.6.51)

மரம் வேண்டுமா? குடை வேண்டுமா?

மற்றும் எதுவேண்டும்? சொல் மனமே!

(மேற்கண்ட வரிகளை அவைகளுக்குரிய மெட்டில் இசையுடன் பாடிக்கொள்க!)

இம்மாதம் 30-ந் தேதியன்று சென்னைக் கோட்டையில் ஒரு கூட்டம்! (பொதுக் கூட்டமல்ல! அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்.)

அடுத்துவரும் பொதுத்தேர்தலில் கட்சிகளின் சின்னங்களை நிர்ணயிப்பதற்காகவும், அது பற்றிய இதர விஷயங்களை ஆராயவும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்று நடைபெறுமாம். கனம் கோபால் ரெட்டியவர்கள் இதற்குத் தலைமை வகிப்பாராம்!

தேர்தலுக்கு நிற்காத திராவிட கழகத்தின் பொதுச் செயலாளருக்குங்கூட அழைப்பு வந்திருக்கிறது!

''உம் கட்சிக்கு எந்தச் சின்னம் வேண்டுமோ, அதைக் கூறுக'' என்று அழைத்திருக்கிறார்கள், தேர்தல் அதிகாரிகள்!

மரம், கை, பூ, தீப்பந்தம், தானியக் கதிர், வண்டி, படகு, ஏர், பறவை, விளக்கு, குடை, தராசு, மண்வெட்டி, ஹுக்கா, குடம், யானை, ஒட்டகம், குதிரை.

இந்த 18 சின்னங்களில் ஒவ்வொரு கட்சியும் தனக்குத் தேவை யானதை எடுத்துக் கொள்ளலாமாம்! அதாவது தேர்தலுக்காக!

முன்பு வர்ணப் பெட்டி வைத்திருந்தார்களல்லவா? அதில் சில சிக்கல்கள் இருந்தனவாம்! சில வர்ணங்கள் பல மக்களுக்குச் சரியாகத் தெரிவதில்லையாம்! இந்தத் தேர்தலில் அதிகமான அபேட்சகர்கள் நிற்பார்களாதலால், அத்தனை வர்ணங்களும், வர்ணக் கோடுகளும் கிடைப்பது கஷ்டமாம்! அதற்காகத் தான் இந்தப் புதுமுறை! அதாவது மக்களுக்குப் படிப்பில்லாதபடியால் ஒவ்வொரு வோட்டரின் பெட்டி யிலும் அந்தந்தச் சின்னம் படமாக ஒட்டப்பட்டிருக்கும். அதன்படி வோட்டர்கள் தங்களுக்கு விருப்பமான பெட்டியில் வோட்டுப் போடலாம்.

உதாரணமாக, காங்கிரஸ் கட்சி 'வண்டி' என்ற சின்னத்தை எடுத்துக் கொள்கிற தென்று வைத்துக் கொள்வோம்! அந்தக் கட்சியானது, ''வண்டிக்கு வோட் போடுங்கள்'' என்றுதான் பிரசாரஞ் செய்யும். அதன்படியே வோட்டர்கள் உள்ளே சென்று வண்டியில் வோட்டுச் சீட்டைப் போடுவது பொருந்துமா அல்லது மண்ணைப் போடுவது பொருந்துமா என்பதை முடிவு செய்து பொருத்தமான ஒன்றைப் போட்டு விட்டு வரலாம்!

''மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போடுங்கள்'' என்று முன்பு கேட்டார்கள்! மஞ்சள் வெளுத்துப் போய்விட்டபடியால், இப்போது கலர் முறையையே மாற்றி விட்டார்கள்!

''மரத்துக்கு வோட்டுப் போடு!''

''தீவட்டிக்கு (தீப்பந்தம்) வோட்டுப் போடு!''

என்று தான் இனிக் கேட்பார்கள்!

மேற்படி சின்னங்களில் இன்றியமையாத 'அரிவாள்' இல்லாத காரணம் எனக்குத் தெரியவில்லை. ''அரிவாள் - சம்மட்டி'' நினைவு வந்துவிடும் என்ற காரணமோ, என்னவோ?

''காங்கிரஸ் பெயரால் கழுதை நின்றாலும் வோட்டுப் போடுங்கள்'', என்று அந்தக் காலத்தில் அடிக்கடி கூறி வந்த ஒரு விலங்கை இச்சமயம் காங்கிரஸ் ஆட்சியினர் கைவிட்டவிட்டது நன்றி கெட்ட செயலாகும்!

ஆனால் 'மரம்' ஒரு சின்னமாக இருப்பது அதன் மந்திரியான முன்ஷிக்கு மகிழ்ச்சி தரும்! சர்க்கார் தந்திருக்கின்ற வரிசையில் முதலில்

மரமும் அடுத்தபடியாக கையும் இருப்பதனால் காங்கிரஸ் உறுப்பினர் கை காட்டி மரங்களாக இருப்பதை சர்க்கார் அதிகாரிகள் ஜாடையாகக் காட்டிப் பழிதீர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றே கருத வேண்டியிருக்கிறது! இந்தப் பட்டியலிலுள்ள,

1. விளக்கு 2. ஹுக்கா

ஆகிய இரண்டும் வெளிநாட்டுச் சரக்குகள்!

''லாண்டர்ன்'' என்று இங்கிலீஷில் இருப்பதனால் குத்துவிளக்காகவோ, அகல் விளக்காகவோ இருக்காது! 'ஹுக்கா' வட இந்தியாவுக்குச் சொந்தமானது! 'சுருட்டு' ஒரு சின்னமாக இருந்திருந்தால் சுருட்டுத் தொழிலாளர்களின் வோட்டுகளில் இரண்டொன்றைப் பறித்துப் பார்க்க வழி ஏற்படும்!

எந்தச் சின்னத்தை எந்தக் கட்சி எடுத்துக் கொண்டாலுஞ் சரி! சின்னத்துக்காக யாரும் வோட் தரப்போவதில்லை!

உதாரணமாக, காங்கிரஸ் கட்சி 'யானை' என்ற சின்னத்தை எடுத்துக் கொண்டுதான் பார்க்கட்டுமே! அதற்காகவா வோட் வரப் போகிறது? வோட்டர்கள் அத்தனை பேரும் பல கட்டெறும்புகளாக ஆகி அதன் காதுக்குள் புகுந்து கொள்வார்கள்!

என்ன நடக்கும்? ''அநாதை ரட்சகா! ஆபத் பாந்தவா! கோட்சே சம்ஹார ப்ரீதி குணசீலா! என்னால் சகிக்க முடிய வில்லையடா! தலை சுற்றுகிறதப்பா! அடியேனை ஆட்கொள்வாயடா?'' -

என்று அலறுவதைத் தவிர யானையினால் என்ன முடியும்? காதுக்குள்ளே புகுந்த கட்டெறும்புகள் யானை மீது பழி தீர்த்துக் கொள்ளாமலா வெளியே வரும்?

58. கும்பகோணம் காவிரியில் தீ! தீ!!

(6.7.51)

கும்பகோணம் காவிரியாற்றுக்குள்ளே மணலிலும் தண்ணீரிலும் சேர்ந்து பெருந் தீ பிடித்துக் கொண்டு விட்டதாக நேருவுக்குத் தந்தி கொடுத்து விட்டார்களாம்!

ஆரிய ரட்சகா! அக்கிரகாரப் பாதுகாவலா! அபயக் குரல் கேட்டு ஆவன செய்வாயா?

கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் இண்டர்மெடியட் வகுப்பில் 260 ரிஷி சந்ததிகளில் 90 பேருக்குத்தான் இடம் கிடைத்திருக்கிறதாம். 240 அசுரர்களில் 225 பேருக்கு இடம் கிடைத்திருக்கிறதாம். 100க்கு 50க்கு மேல் 'மார்க்' வாங்கிய 130 கோட்சே குஞ்சுகளுக்கு இடம்

மறுக்கப்பட்டிருக்கிறதாம்! 'அட்மிஷன்' சம்பந்தமான 'ரிகார்டுகளை' வரவழைத்துப் பார்த்து நீதி வழங்க வேண்டுமாம்! அவசரத் தந்தி சென்றிருக்கிறது, டில்லி நோக்கி!

நேரு என்ன செய்யப் போகிறாரோ? தெரியாது!

ஆனா மகாவிஷ்ணு மட்டும் இன்று உயிருடனிருப்பாரேயானால் ஓடோடியும் வந்திருப்பார்! இதற்காகவே ஒரு அவதாரமும் எடுத்திருப்பார்!

''ஹா! அப்படியா? மீண்டும் இந்த அசுரர்கள் தொல்லையா? 'மார்க்' யாகத்தைக் கலைக்கிறார்களா! அரும்பாடுபட்டுப் பெற்ற 'மார்க்'கையா அலட்சியபடுத்துகிறார்கள், இந்த சூத்திரர்கள்? இவர்கள் தவம் செய்வதே தவறு என்று முன்னரே எச்சரித்து, ராமாவதாரத்தில் ஒரு சூத்திரப்பயலை இதற்காகவே கோட்சே வேலை செய்து புது டில்லி ராஜகாட்டில் எரிக்கச் செய்தேனே! இன்னமுமா இவன்களுக்குப் புத்தி வரவில்லை? 260 பேர்களில் 90 பேரைத்தானா எடுத்தார்கள்? 100க்கு 35 பேர் தானா? சுத்த அக்கிரமம்! இதோ என் பழைய சங்கு - சக்கரத்துடனும், புதிய துப்பாக்கி - ரிவால்வருடனும், புறப்பட்டு விட்டேன்! கருட வாகனத்தில் புறப்பட்டு, சூப்பர் கோட்டை விமானத்தில் மாறி, சென்னை விமான நிலையத்திலிருந்து ரோல்ஸ்ராய்ஸ் காரில் ஏறி கும்பகோணம் ஆற்றங்கரைக்கு வருகிறேன்!'' -

என்று கூறி இந்நேரம் வந்திருப்பார், உயிருடன் இருந்திருந்தால்! அவரை அழைத்துப் பயனில்லை என்பதை உணர்ந்துதான் வைகுண்டத்துக்கு அனுப்ப வேண்டிய அவசரத் தந்தியை புதுடில்லிக்கு அனுப்பியிருக்கிறார்கள்!

''100-க்கு 3-பேராயுள்ள நமக்கு 100-க்கு 35 ஆவது கிடைத்ததே! நம் ஜாதி மூலஸ்தானங்களில் (விவேகானந்தா காலேஜ் - நேஷனல் காலேஜ் - போன்றவை) அவன்களுக்கு 100-க்கு ஒன்று கூட நாம் கொடுப்பதில்லை! அவன்கள் எந்த 'எமனுக்குத்' தந்தி கொடுக்கிறான்கள்? அவன்கள் காலேஜ்களிலும் நம்மவாளையே பிரின்ஸ்பால்களாக வைத்திருக்கின்றான்களே! இதற்காக எந்த இராவணனுக்குத் தந்தி கொடுக்கிறான்கள்? ஏதோ, நம்ப காங்கிரஸ் இருக்கிறதனாலேயாச்சும் 100-க்கு 35 ஆவது கிடைச்சிருக்கு! இனி, அவன்களே ஆட்சிக்கு வந்துவிட்டால் 100-க்கு 2 3/4க்கு மேல் மருந்துக்குக் கூட கிடைக்காதே!! நமக்கெதற்குப் பேராசை? - ''

என்றல்லவா நினைத்துத் திருப்திப்பட வேண்டும், புத்திசாலிகளாய் இருந்தால்! அதை விட்டுவிட்டுத் தந்தியாம் தந்தி!

அக்கிரகாரத்தவர்களில் சிலர் அதிக மார்க் வாங்கியது பற்றி மகிழ்ச்சிதான்! அதற்காக என்ன செய்யச் சொல்கிறார்கள்? தேவைக்கு

மேல் அதிக மார்க் வாங்கியவர்களுக்குத் தான் காலேஜில் இடம் கிடைக்கும் என்று எந்தச் சட்டத்திலுமில்லையே!

சைக்கிள் ஓட்டத் தெரிந்தவர்களெல்லாம் ப்யூன் வேலைக்கு வரலாம் என்று ஒரு ஆஃபீசில் விளம்பரம் செய்கிறார்கள். அதன்படியே விண்ணப்பதாரர்கள் சைகிள் ஓட்டியும் காட்டுகிறார்கள்! அவரவர் வயது, நாணயம், உடல் வலிமை, சுறுசுறுப்பு முதலியவைகளைச் சோதித்துப் பொறுக்கிக் கொண்டிருக்கிறார்; ஆஃபீசர்!

இந்தச் சமயத்தில் குள்ளமான, மெலிந்த, நோயாளி போன்ற, அய்யங்கார் பையன் ஒருவன் ஓடி வருகிறான்!

''சார்! சார்! நான் எம்.ஏ. பாஸ் செய்திருக்கிறேன் சார்! முதல் கிளாசில் சார்! சைக்கிளிலே பல வித்தைகள் கூடச் செய்வேன் சார்! கம்பி மீது கூட சைக்கிள் விடத்தெரியும், சார்!'',

என்கிறான்!

இதற்காக அவனுக்கு முதலில் ப்யூன் வேலை கொடுக்க வேண்டுமா? கொடுக்காவிட்டால் நேருவுக்குத் தந்தியடிப்பான்! ஆச்சாரியாருக்கு டெலிஃபோன் செய்வான்! ஆஃபீஸ் ப்யூன் வேலைக்கு எம்.ஏ. படிப்புத் தேவையில்லை! சைக்கிளையும் தரை மீது தான் ஓட்ட வேண்டுமே தவிர, கம்பி மீது ஓட்ட வேண்டியதில்லை! தெருவிலுள்ள கம்பி மீது ஓட்டவும் அனுமதிக்க மாட்டார்கள்.

இவன் திறமையைக் காட்ட வேண்டுமானால், ஏதோ ஒரு சர்க்கஸ் கம்பெனியில் சேர்ந்து கொள்ளலாம்! பலர் கை தட்டுவார்கள்! ''கும்பகோணமய்யங்கார், எம்.ஏ.கம்பி மீது சைக்கிள் விடுவார்!'' -

என்று விளம்பரமுஞ் செய்வார்கள்!

ஆனர்ஸ் படித்து விட்டு சிலர் பாட்டுக் கச்சேரி நடத்தும் போது எம்.ஏ. படித்து விட்டு சர்க்கஸ் கம்பெனியில் சைக்கிள் வித்தை காட்டுவதில் தவறெதுவுமில்லையே!

ஆகவே, அதிக மார்க் வாங்குகிற அக்கிரகார நிபுணர்கள் (விவேகானந்தா கல்லூரியில் இடமில்லாவிட்டால்) மார்க் சர்க்கஸ் கம்பெனியில் சேர்ந்து கொள்ளலாம்! கல்லூரிகள் யாவும் பிரம்மாவின் காலில் பிறந்தவர்களுக்குத்தான்! அதாவது சரஸ்வதி கடாட்சம் பெறாதவர்களுக்கு! அதாவது அசுரர்களுக்கு!

தேவர்களுக்குப் படிப்பு எதற்கு? காலேஜ் எதற்கு?

ப்ரம்மத்தில் லயப்பட்டவர்களுக்கு உத்யோகந்தான் எதற்கு? காயத்ரி கூறி கடவுளைக் காண்பவர்களுக்கு காஃபி கிளப் எதற்கு? மோட்டார் கம்பெனி எதற்கு? பத்திரிகை எதற்கு? மந்திரி வேலை எதற்கு?

இவைகளையெல்லாம் கேட்டால், பொல்லாதவன்!

''கொண்டா 10,000 ரூபய், காங்கிரஸ் கருமாதி நிதிக்கு!'' என்று கேட்கிறார்கள்.

என்ன தான் செய்யச் சொல்கிறீர்கள்?

59. இராமனையும் கொளுத்தலாமா?

(30.10.51)

கொளுத்துகிற வேலை அவ்வளவு நல்லதல்ல. அந்நிய நாட்டுத் துணிக்கோ, எதிர்க்கட்சி மாநாட்டுப் பந்தலுக்கோ போலீஸ் ஸ்டேஷனுக்கோ - எதற்குக் கொள்ளி வைப்பதானாலும், அதற்கென்று ஒரு தனிக்கட்சி இந்த நாட்டிலிருக்கிறது!

கொள்ளிவைப்பவனுக்குத் தான் சொத்துரிமையுண்டு - என்பது 'ஹிந்து' மதக்காரர்களிடையே உள்ள ஒரு பழக்கம். அதையொட்டியே என்னவோ, கொள்ளி வைத்தவர்களுக்கு 5 ஏக்கர் நன்செய் அல்லது 10 ஏக்கர் புன்செய் சொத்துக் கிடைத்திருக்கிறது!

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சங்கதியைப் பற்றிக் கூறாமலிருக்க முடியவில்லை. கொள்ளி வைத்தவர்களிலேயே பலருக்கு நிலம் கிடைக்காமல் இடையிலிருப்பவர்கள் தட்டிப் பறித்துக் கொண்டு விட்டதனால் உண்மையாகவே கொள்ளி வைத்தவர்கள் ஆத்திரமடைந்திருக்கின்றனர். அதாவது 'போலி ஆகஸ்ட் தியாகிகள்' பலர் தியாக மான்யம் பெற்றிருக்கின்றனர். இது மட்டுமா? லட்சாதிபதியான மந்திரிகளுக்குத் தியாகமான்யம் கிடைத்திருக்கிறது; ஏழைத் தியாகிகளில் பலருக்குக் கட்டை விரலைக் காட்டிவிட்டார்கள்! ஆதலால், ''வரட்டும் தேர்தலுக்கு! பழிக்குப் பழி வாங்குகிறேன்'' என்று ஆகஸ்ட் தியாகிகளிலேயே பலர் வரிந்து கட்டி நிற்கிறார்களாம்! இது இப்படியே நிற்க!

கொளுத்துகிற விஷயத்தை எடுத்துக் கொள்வோம்.

டில்லியில் நேரு முன்னிலையில் நடந்த ராமலீலா விழாவில் இராவணன், இரண்யன், இந்திரஜித் போன்ற உருவங்களுக்குக் கொள்ளிவைத்து மகிழ்ந்தார்களாம், வடநாட்டார்.

''அதைப் போலவே நாமும் ஏன் இராமன் - கிருஷ்ணன் போன்ற கொலைகார கோட்சேக்களின் உருவங்களுக்குக் கொள்ளி வைத்துக் கொண்டாடக் கூடாது?''

என்று மதுரை திராவிட கழகச் செயலாளர் எனக்கு எழுதிக் கேட்டிருக்கிறார்.

வடநாட்டார் அந்த நாட்டு மன்னனாகிய இராமனின் எதிரியை (உருவத்தை)க் கொளுத்தும்போது தென்னாட்டாராகிய நாம் இந்த நாட்டு

மன்னனான இராவணனின் எதிரியான இராமனைக் கொளுத்துவதில் தப்பில்லை என்று தான் தோன்றுகிறது. ஆனால் அப்படிச் செய்யுமுன்பு பொதுக் கூட்டத்திற்கு அதன் அவசியத்தை விளக்கிக் கூற வேண்டும். பிறகு கூட்டத்தாரின் பிரியத்தையும் கேட்டுக் கொள்ள வேண்டும்.

பெரியாரை வகுப்பு துவேஷ குற்றத்திற்காக திருச்சியில் சிறைப்படுத்தியவுடனே 'ஹிந்து' 'சுதேசமித்திரன்', - போன்ற ஆரியப் பத்திரிகைகளைப் பொது மேடையில் கொளுத்தினார்களே, தெரியுமா? சென்னையில், கும்பகோணத்தில், பட்டுக்கோட்டையில்! இன்னும் பல ஊர்களில்? அப்போது கூட்டத்தாரின் விருப்பதைக் கேட்டுக் கொண்டு, அவர்கள் ஒருமனதாக, ''கொளுத்தலாம்'' என்று கூறிக் கைதூக்கிய பிறகுதான் கொளுத்தினார்கள்! ஆட்சியாளரின் அதிகாரிகள் பார்த்துக் கொண்டுதானே இருந்தார்கள்? கொளுத்தியவர்களை என்ன செய்ய முடிந்தது? இது மட்டுமா? பட்டப் பகலில், அதுவும் மாலை நேரத்தில், மவுண்ட் ரோடில் 'ஆனந்த விகடன்' நிலையத்துக்கு முன்பு அந்தப் பத்திரிகை நடுத் தெருவில் போட்டுக் கொளுத்தப்பட்டதே! என்ன செய்து விட்டார்கள்?

தென்னாட்டில் இராமனுக்கு மரியாதை கிடையாது. இங்கு இராவணன் உருவம் கொளுத்தப் பட்டால் என்னவாகும் என்பதைப் பற்றி நம்மைவிட நன்றாக அக்கிரகாரத்துக்குத் தெரியும்.

இங்கு ராமாயண காலட்சேபம் நடக்கின்ற இடம், ஆரியர் சேரிகளில். அல்லது அவர்களது அடிமைகளின் வீடுகளில்தான்! இராமாயணப் பிரசாரஞ் செய்கிறவர்களும் ஆரியர் அல்லது அவரது கால்வருடிகள் தானே? மானமுள்ள தமிழன், மறைமலையடிகளின் ஆராய்ச்சி நூல்களைப் படித்துணர்ந்த தமிழன், பூர்ணலிங்கம் பிள்ளையின் 'இராவணப் பெரியார்' என்ற நூலைப் படித்த தமிழன், வரலாறு உயர்ந்த தமிழன், மூளைக்கு வேலை கொடுக்கின்ற தமிழன், ஆரியத்துக்கு அடிமைப்படாத தமிழன் - எவனாவது இராமனைப் போற்றுகிறானா?

'அயோக்கிய இராமன்' என்ற பெயரால் யாராவது அயோத்தி ராமனைப் பற்றி ஓர் ஆராய்ச்சி நூல் எழுதினால், இன்று ஆயிரக் கணக்கில் விற்கும்! அவ்வளவு தூரத்துக்கு இராமன் சங்கதி தமிழகத்தில் நாறிப் போயிருக்கிறது!

60. போய்விடுவேன்! உஷார்!

(10.11.51)

''இந்தா, கமலு! நீ இந்தமாதிரி அடிக்கடி தொல்லை கொடுத்துக் கொண்டேயிருந்தால் நான் சந்நியாசியாகப் போய்விடுவேன்! உஷார்!''

என்று கணவன் தன் மனைவியை மிரட்டுகிறான்!

''என்னமோ விளையாட்டுக்குக் கேட்டா, உங்களுக்கு இந்த மாதிரிக் கோபம் வருதே! போங்கண்ணா! நீங்க எப்போதும் இப்படித் தான்!'', என்று கமலு ஊடலைத் தளர்த்திக் காட்டுகிறாள்!

''சரி! சரி என் மணிபர்சிலே ஒரு எட்டணாப் போடு; பஸ் சார்ஜுக்குப் பணமில்லை,'' என்கிறான் கணவன்.

சந்நியாசி ஆவதென்றால் அவ்வளவு சுளுவானது! அதனால்தான் சோம்பேறிகளெல்லாம் சந்நியாசிகளாகி விடுகிறார்கள்! அதிலிருந்து கொஞ்சம் முற்றினால் ரிஷிகளாகவும் ஆகிவிடுகின்றனர்!

டாக்டர் அம்பேத்காருக்கு இந்த 'ஹிந்து' மதத்தின் மீதும், பார்ப்பனர் மீதும்,இருக்கின்ற கோபம் கொஞ்ச நஞ்சமல்ல! ஏனென்றால் ஹிந்து மத வண்டவாளங்களை நன்றாகப் படித்தறிந்தவரல்லவா?

''ஷெட்யூல் வகுப்பார் அத்தனை பேரும் முஸ்லிம்களாகி விடுவோம்'' என்கிறார், ஒரு தடவை!

''நாங்கள் புத்த மதத்தைத் தழுவுவது தவிர வேறு வழியில்லை'', என்கிறார் இன்னொரு தடவை!

இவர் என்னதான் மிரட்டினாலும் 'ஹிந்து' மத பக்தர்கள் (வெறியர்கள்) கல்லுப் பிள்ளையார் மாதிரியே இருக்கின்றனர்! இந்தக் கல்லுப் பிள்ளையார்களுக்கு உயிர் இருந்திருந்தால் இந்த நாட்டில் முஸ்லிம்களோ, கிறிஸ்தவர்களோ ஒருவரைக் கூடக் காண முடியாதே! அத்தனை பேரும் ஆரியச் சூடு தாங்கமாட்டாமல் நிழலை நோக்கி ஓடியவர்கள்தானே?

அம்பேத்காருக்கு இப்போது ஒரு புது மாதிரிக் கோபம் பிறந்திருக்கிறது!

நவம்பர் 7-ந் தேதியன்று பாட்னாவில் பி.டி.அய்.க்குக் கொடுத்த பேட்டியில் பின் வருமாறு கூறியிருக்கிறார் :

''என்னுடைய கட்சி எந்தக் காரணத்தைக் கொண்டும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் மட்டும் சேரவே சேராது. ஏனென்றால், எனக்கு கம்யூனிசத்தில் நம்பிக்கை கிடையாது.''

அடுத்த நாள் (8-ந் தேதி) லட்சுமணபுரியில் பேசியிருக்கிறதைப் படித்துப் பாருங்கள் :-

''பிற்பட்ட வகுப்பார் தாங்கள் முன்னேற வேண்டுமென்ற இலட்சியத்தில் ஏமாற்றப்படுவார்களேயானால், ஷெட்யூல் வகுப்பார் கம்யூனிஸ்ட் கொள்கையைத் தான் ஆதரிக்க வேண்டியிருக்கும்; பிறகு இந்த நாட்டின் கதி அதோகதிதான்.''

சுமார் 20-25 லட்ச ரூபாய்க்குச் சொத்து வைத்திருந்த ஜமீன்தார் ஒருவர் என்னிடம் சென்ற வாரம் பேசிக் கொண்டிருந்தார். பல அரசியல் விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டு, திடீரென்று ஒரு வெடி குண்டு போட்டார்!

''ஏனய்யா! என்னையும் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்த்துக் கொள்ளச் சொல்லேன்! நானும் இந்தக் காங்கிரசை ஒழிப்பதற்காக எலெக்ஷனில் நிற்கிறேன்'', என்றார்.

''நீங்களா? கம்யூனிஸ்ட் கட்சியிலா? எதற்காக?'' என்று கேட்டேன்.

''ஆமய்யா! ஆமாம்! என் சொத்துக்களைத் தான் சர்க்காரும் என் பசங்களும் எடுத்துக் கொண்டு என்னை ஓட்டாண்டியாக விட்டு விட்டார்களே! இனி நான் கம்யூனிஸ்ட் கட்சிதானே?'', என்றார்.

''ஓஹோ! அப்படியா? அது சரி! கறுப்புச் சட்டைக் கட்சியில் கூட நீங்கள் சேரலாம். அதுவும் அதே சங்கதி தான்,'' என்று சொன்னேன்!

விரக்தி வந்தவுடனே சந்நியாசி யாவதாகச் சொல்வது போல இப்போது பலர் கம்யூனிஸத்தைப் பற்றிச் சொல்கிறார்கள்! கம்யூனிஸ்ட் ஆவதென்றால் ஏதோ, கதர்ச் சட்டையை மாட்டிக் கொண்டு, காங்கிரஸ்காரர் என்பதுபோல அவ்வளவு சுளுவான காரியம் என்று பலர் தவறாகக் கருதுகிறார்கள்!

தியாகம் என்ற தீச்சட்டியில் போட்டு, பல தடவை தோல் கறுப்பாகிறவரையில், வறுக்கப்பட்டவன் தான் உண்மையான கம்யூனிஸ்ட்!

ஆகையால் தான் டாக்டர் அம்பேத்கார் ''எனக்கு கம்யூனிசத்தில் நம்பிக்கையில்லை'', என்று சொல்கிறார் போலும்! சுகவாசி அம்பேத்காருக்கு எப்படி நம்பிக்கையிருக்கும்?

உலக விநோதங்களில் இதுவுமொன்று! ஷெட்யூல் வகுப்பார் அத்தனை பேரும் உழைப்பாளிகள். ஒருவர் கூட சோம்பேறி கிடையாது. உழைப்பவர்களுக்கு உடைமையில் உரிமை வேண்டும் என்பதே கம்யூனிசத்தின் அடிப்படை. ஆனாலும் ஷெட்யூல் வகுப்புத் தலைவர், ''தமக்கு கம்யூனிசத்தில் நம்பிக்கையில்லை,'' என்கிறார்!

வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மறியல் நடந்து கொண்டிருந்த போது இந்த நாட்டிலேயே ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருந்த தல்லவா? அச்சமயம் 'தமிழ் நாடு வர்த்தகர் சம்மேளனம்' என்ன தீர்மானம் செய்தது தெரியுமா?

''இந்தக் கிளர்ச்சியினால் தென்னாட்டு வியாபாரமே பாதிக்கப் பட்டு விடுமாதலால் கிளர்ச்சிக்காரர்களைக் கண்டிக்கிறோம்'' - என்று

எப்படியிருக்கிறது, சங்கதி, பார்த்தீர்களா?

அம்பேத்கார் சங்கதியைப் போலவே இருக்கிறதல்லவா?

''பெண்களுக்குத் திருமண ரத்து உரிமை வேண்டும்'' என்று 1929-ம் ஆண்டில் நடந்த செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் தீர்மானித்தோம்.

அடுத்த மாதத்தில் சென்னையில் நடந்த அகில இந்திய மாதர் சங்க மாநாட்டில் என்ன செய்தார்கள் தெரியுமா? செங்கற்பட்டுத் தீர்மானத்தைக் கண்டித்து மாதர்கள் தீர்மானம் நிறைவேற்றினார்கள்!

குழந்தையைக் கடிக்க வந்த பாம்பைக் கடித்துக் கொன்றுவிட்டு ஓடி வந்த வளர்ப்புக் கீரியை அடித்துக் கொன்றாளே, குழந்தையின் தாயார்!

அதே கதைதான்! இத்தனையும் பொறுத்துக் கொண்டுதான் பொதுத்தொண்டு செய்ய வேண்டியிருக்கிறது! இல்லாவிட்டால் சொகுசாக ஏதாவதொரு உத்யோகமோ, வியாபாரமோ பார்த்துக் கொண்டு ஓய்ந்த நேரத்தில் பொதுத்தொண்டு செய்யலாமே! இதனால் 'பெரிய மனுஷன்' என்ற பெயர் கூடக் கிடைக்குமே!

61. 30½ - 40 ரூபாய்!

(22.11.51)

இது என்ன புள்ளி என்று கேட்கிறீர்களா?

இதுதான் காருண்யமுள்ள காங்கிரஸ் சர்க்கார் நமது போலீஸ் கான்ஸ்டபிள்களுக்குக் கொடுக்கின்ற தாராள சம்பளம்!

கான்ஸ்டபிள் மகன் காலேஜ் பிரின்ஸ்பாலாகவோ, எஞ்சினியராகவோ வந்திருப்பதாகக் கேள்விப்பட்டிருப்பீர்களா? எப்படி வர முடியும்?

ஆனால் புரோகிதன் மகன்? எல்லா உத்யோகங்களிலுமிருக்கிறான்!

''அய்யா! குத்தூசியாரே! எங்கள் வயிற்றெரிச்சலைக் கேட்கவே நாதியில்லையே! ஒரு ரயில்வே தோட்டிக்கு 50 ரூபாய் ஆரம்பச் சம்பளம் தருகிறார்கள்! எங்களுக்கு 30 ரூபாய்தானே? இது எப்படிப் போதும்?'' -

என்று கேட்டார், என்னைப் பார்க்க வந்த கான்ஸ்டபிள் ஒருவர். (நோய்வாய்ப் பட்டிருந்தபோது என்னைப் பார்க்க வந்த பல முக்கியஸ்தர்களில் ஏழை கான்ஸ்டபிள்களை மட்டும் நான் மறக்கமாட்டேன்!)

''போதாதுதான்! எனக்குத் தெரியாதா? என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? 3 வருஷமாக நான் இதைப் பற்றிப் பேசாத பொதுக்

கூட்டமே இல்லை! எங்களை யார் சட்டை பண்ணுகிறார்கள்?'' என்று பதில் கூறினேன்.

1. போலீஸ் சேவகர்கள்

2. பள்ளி ஆசிரியர்கள்

3. பத்திரிகை எழுத்தாளர்கள்

இம்மூன்று இனமும் ஒரு மாதிரியான 'விடியா மூஞ்சிகள்'! அதாவது ஓடத்தைப் போல மற்றவர்களைக் கரையேற்றும்; தான் மட்டும் கரையேறாது. தண்ணீரில் (அதாவது கவலைக் கண்ணீரில்) கிடந்து தவிக்கும்!

போலீஸ் சேவகர் எப்பேர்ப்பட்ட மந்திரியின் காரையும் நிறுத்தி விடுவார்! எவ்வளவு பெரிய் பணக்காரனையும் கைது செய்துவிடுவார்!

பள்ளி ஆசிரியர், ''அந்த கலெக்டர் என் 'ஸ்டூடண்ட்' இந்த மந்திரி என்னிடம் நாலாம் கிளாசில் படித்தான்; அத்துடன் படிப்பதையே நிறுத்திக் கொண்டான்!'' என்று பெரிய பெரிய ஆசாமிகளைப் பற்றி யெல்லாம், அவன் - இவன் என்று பெருமையாகப் பேசிக் கொள்வார்!

பத்திரிகை எழுத்தாளனோ மகாத் தலைக் கிறுக்குப் பிடித்தவன் (என்னை விலக்கியல்ல!)

''நான் எழுதித்தான் அந்த ஊருக்கு ரோடு போட்டார்கள்; நான் எழுதாவிட்டால் அவர்களுக்கு அதிகச் சம்பளம் கிடைத்திருக்காது; என் கண்டனத்தினால்தான் 'பஸ்ஸின் டாப்' மீது ஆட்களை ஏற்றி உட்கார வைப்பது நின்றது; இந்த ஆறவுன்ஸ் அரிசியாவது கிடைப்பது என்னால் தான்; நெசவாளிக்கு அதிக நூல் கிடைப்பதே நான் மந்திரிகளைப் போட்ட போட்டினால்தான்!''

என்றெல்லாம், இந்த உலகில் நடக்கின்ற அத்தனையும் தன்னாலே தான் நடப்பதாகச் சரடுவிடுவார்கள்!

ஆனால் இவர்களுடைய சொந்த சங்கதிகளைக் கேட்டுப் பாருங்கள். அனேகமாக அத்தனை பேரும் கடனாளிகள்தான்! இன்றைக்கு வேலையை விட்டுப் போனால் நாளைக்கு அடுப்புக்குள்ளே பூனைக் குட்டி புகுந்து படுத்துக் கொள்ளும்!

''நல்ல காலம் வருது! நல்ல காலம் வருது!'' - என்று சொல்கின்ற குடுகுடுப்பைக்காரன் தனக்கு எப்போது நல்ல காலம் வருது என்பதைக் கூற முடியாமல் நிரந்தரப் பிச்சையெடுப்பது மாதிரி!

இந்த மூன்று திருக்கூட்டத்தாரும் மற்றவர்களுக்காக உழைக்க வேண்டியதுதான்! அதில் பெருமைப்பட்டுக் கொண்டேயிருந்துவிட்டு மடிய வேண்டியதுதான்! செத்த பிறகு இவர்கள் உடலை எரிப்பதற்குக் கட்டை வாங்குவதற்குக் கூட வீட்டில் பணமிருக்காது!

நாட்டிலே ஏதாவதொரு தலைகீழ் மாறுதல் (சிலர் இதைப் 'புரட்சி' என்று சொல்லிப் பயமுறுத்துகிறார்கள்!) வராதா? - என்று ஏங்கிக் கிடப்பவர்களில் மேற்படி மூன்று திருக்கூட்டத்தாரையும் முன்னணியில் நிறுத்தலாம்! ஆனால் இச்சமயம் புதருக்குள் பதுங்கியிருக்கும் புலிபோலக் கிடக்கிறார்கள்! பாவம்!

நான் சொல்கிறேன்! விரைவில் நாட்டுக்கே நல்ல காலம் வருது! நல்ல காலம் வருது!! அக்கிரமம் செய்கிறவனெல்லாம் அய்யோன்னு போகப் போறான்கள்!

62. சினிமா மந்திரி!

(26.11.51)

''ரஷ்யாவில் சினிமாவுக்கே ஒரு தனி மந்திரி இருக்கிறாராமே! இதையறியாது நீர் ஏன் சினிமாவைக் கண்டித்து எழுதுகிறீர்?'' -

என்று ஒருவர் என்னைக் கேட்டிருக்கிறார்.

ரஷ்யாவில் எது எதற்கு மந்திரியிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். நானும் ஏதோ சில நூல்களாவது படித்திருக்கிறேன்; படித்துக் கொண்டிருக்கிறேன்.

கெஜம் 60 ரூபாய் - 70 ரூபாய் என்று கூடத் துணி வாங்கிச் சிலர் கட்டுகிறார்கள். இதைப் பார்த்த ஒரு தொழிலாளி, தானும் தன் மாதச் சம்பளத்தில் ஒரு கெஜம் துணி வாங்கி வந்து தன் மனைவியிடம் தந்து, ''இதோ? பார்! என் கண்ணாட்டி! உனக்காக இந்தத் துணி! கெஜம் 68 ரூபாய்! சம்பளத்தை அப்படியே கொடுத்து வாங்கி வந்தேன்!'' - என்று கூறினால் அவன் மனைவி என்ன சொல்வாள்? '' என் அருமை நாதா! உங்கள் அன்பே அன்பு!'' என்று கூறி முத்தமா கொடுப்பாள்?

''ஏனய்யா! உனக்கென்ன மூளைக் கோளாறா, என்ன? வீட்டுக் கூரை ஒழுகுதுண்ணு தலை தலையா அடிச்சுக்குறேன்! திருட்டரிசி வாங்கப் பணமில்லாமலே குழந்தைகள் ஒரு வாரமா சோளக் கஞ்சி குடிச்சுப்பிட்டு வயிற்று வலியாக் கிடக்குதுண்ணு சொல்றேன்! நீ என்னடான்னா, எழுபது ரூபாயிலே ஜாக்கெட் துணி வாங்கிகிட்டு வந்துட்டியே! என்னையென்ன சினிமா ஸ்டார்ன்னா நினைச்சுகிட்டே?''

என்று தானே கேட்பாள், அறிவு சூன்யமான மனைவியுங்கூட?

ரஷ்யாவில் எப்போது சினிமா மந்திரி ஏற்பட்டார்? புரட்சியின் போதா? தயவு செய்து சிந்தனைக்கு வேலை கொடுக்க வேண்டும். நாட்டை மீட்க வேண்டிய சமயத்திலா ரஷ்யாவிலே சினிமாக் கதை எழுதிக் கொண்டிருந்தனர்? இல்லை! இல்லை! எல்லோரும் ஒரே

சக்தியாகத் திரண்டெழுந்தனர். சார் ஆட்சியை வீழ்த்துவதற்காக இரத்தஞ் சிந்தினர். வீட்டுக்கு வீடு படை முகாம்! எல்லோரும் கிளர்ச்சி செய்தனர்!

நாட்டில் நல்லாட்சி ஏற்பட்டது. சர்வாதிகார ஆட்சி ஒழிந்தது. மக்கள் கைக்கு அதிகாரம் கிடைத்தது. உணவு, உடை, வீடு - யாவும் தேவைக்கு மேல் கிடைக்கக் கூடிய திட்டங்களை வகுத்தனர். அதன் பிறகுதான் கலையுணர்ச்சி! அதுவுங்கூட எதையோ எழுதிப் பணந் திரட்டுவதற்காக அல்ல. சர்க்கார் சார்பில், சர்க்கார் கொள்கையைப் பிரசாரஞ் செய்வதற்காக! பட முதலாளிகளுக்குப் பயந்து கொண்டு, தன் கருத்துக்களுக்கு 144 விதித்து, ஆமை போல் உள்ளே இழுத்துக் கொண்டு கதை எழுதுவது, அல்லது நடிப்பது - யாருக்குப் பயன் தரும்? நாட்டுக்கா?

சினிமாவே ஒழிய வேண்டும் என்பதல்ல, என் கருத்து. கள் - சாராயக் குடியைவிடப் பெருங்கேடாக இன்று முளைத்திருக்கின்ற சினிமாக்கள் ஏழைகள் பணத்தைச் சுரண்டத்தான் பயன்படுகின்றன!

மாட்டுக்கு முன்னே வண்டியை நிறுத்தி அதன் கொம்பில் வண்டியைக் கட்டலாமா? எதற்கு முன்னே எது வர வேண்டும் என்ற ஒழுங்குமுறை கூடவா கிடையாது? நாட்டில் யாவரும் ஒருமுகமான கிளர்ச்சிகள் செய்து, சுய ஆட்சி பெற்ற பிறகு, சுரண்டல் ஒழிந்த பிறகு, உணவும், உடையும், இருக்கையும் கிடைத்த பிறகு, கல்வி பரவிய பிறகு - ஒரு சினிமா மந்திரியல்ல; ஆசைப்படுகின்ற அத்தனை பேரும் சினிமா மந்திரிகளாகத்தான் வரட்டுமே! மக்கள் அம்மாதிரி விரும்பினால்! அதைவிட்டு ஆறவுன்ஸ் அரிசி தரப்படுகின்ற நாட்டிலிருந்து கொண்டு, ''அடுத்த ஆண்டு முதல் எல்லோருக்கும் இலவச ரொட்டி கொடுப்ப தென்ற'' திட்டம் வைத்திருக்கின்ற ஒரு நாட்டைக் காட்டி, ''அதோ! அங்கே சினிமா மந்திரி யிருக்கிறாரே! நானும் இங்கே ஒரு சினிமா மந்திரியாக ஆனாலென்ன?'' -

என்று கேட்பது என் சிற்றறிவுக்குச் சரியாகப் படவில்லை!

''ஏனப்பா குடிக்கிறாய்?'' என்று கேட்டால் ''என்னைக் கண்டு உனக்குப் பொறாமையா? வேணுமானால் நீயுந்தான் குடித்துப் பாரேன்! ஒரு அவுன்ஸ் குடித்தால் மயக்கம் வந்துவிடுமே உனக்கு? நீ ஒரு கையாலாகாதவன்! அதற்கு நானென்ன செய்வது?'' -

என்று கேட்கலாமா? குடிக்கப் பழகுவது என்பது பிரமாதமல்ல; குடியர்களுடன் ஒரு வாரத்துக்கு நெருங்கிப் பழகினால் தானாக வந்து விடும்! குடி மட்டுமா? எதுவுமே வரும்! குடியர்களெல்லாம் பிறவிக் குடியர்களா, என்ன?

இந்த மாதிரிப் போட்டி என் போன்றவரிடம் போட்டுப் பயனில்லை. 'கூடாது' என்பதுதான் எண்ணமே ஒழிய, 'முடியாது' என்பது அகராதியிலேயே இல்லை!

63. கல்கத்தா வழிகாட்டுகிறது?

(27.11.51)

பொதுக்கூட்டத்தில் கலகம் நடப்பதில் இரண்டு வகைகளுண்டு!

1. கூட்டத்திற்குச் சம்பந்தமில்லாதவர்கள் பிறர் கூட்டத்தில் புகுந்து கலகஞ்செய்வது.

2. பொதுமக்களுக்குப் பிடிக்காத சங்கதியைப் பேசினால், கூட்டத்தின் தலைவருக்குப் பதிலாக, பொதுமக்களே பொறுப்பேற்றுக் கொண்டு கூட்டத்தை ஆரம்பித்திலேயே கலைத்து விடுவது.

கிருஸ்தவர்களோ முஸ்லிம்களோ தங்கள் மத சம்பந்தமான கூட்டம் கூட்டியிருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்தக் கூட்டத்திற்கு அம்மதங்களைச் சேராதவர்கள் சென்று கேள்விகேட்பதோ, கலகஞ் செய்வதோ முதல் ரகத்தைச் சேர்ந்தது.

பொதுமக்களுக்குப் பிடிக்காத சங்கதியை அதாவது அந்தக் கூட்டத்திற்கு விருப்பமில்லாத சங்கதியை, ஒரு பேச்சாளர் எடுத்துக் கூறினால் கூட்டத்தார் எப்படிக் கேட்டுக்கொண்டிருப்பார்கள்? உதாரண மாக, ஹிந்து மகாசபை மாநாட்டிற்குச் சென்று மேடை மீதேறி ''ஹிந்து மதம் ஒழிய வேண்டும்'', என்று ஒருவர் பேசினால், அக்கூட்டத்தார் கேட்டுக்கொண்டா இருப்பார்கள்? இது இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தது.

சென்ற ஞாயிற்றுக் கிழமையன்று கல்கத்தாவில் ஒரு காங்கிரஸ் தேர்தல் கூட்டம் நடந்ததாம்.

மேற்கு வங்காள காங்கிரஸ் பிரசிடெண்ட் அதுல்வா கோஷ் என்பவர் பேசினாராம். அவர் பேசியது மகா ஜனங்களுக்குப் பிடிக்க வில்லையாம்! கூட்டத்தார் கூச்சலிட்டார்களாம்! கூட்டங் கூட்டியவர்கள் கம்பி நீட்டி விட்டார்களாம்!

மக்களுக்குப் பிடிக்காததை அப்படி என்ன பேசி விட்டார் என்று கேட்கலாம்!

கடந்த நான்கு ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சி செய்த நன்மை களைப் பற்றிப் பேசினாராம்!

''காங்கிரஸ் ஒழிக! காங்கிரஸ் சர்க்கார் ஒழிக!'' -

என்று பொதுமக்கள் அனைவரும் ஒரே குரலில் பதில் கூறினார் களாம்.

வங்காளிகள் தமிழர்களைப் போன்றவர்களல்லர்; எதையும் கட்டுப்பாடாக, வீரமாகச் செய்வார்கள் என்பது தான் உங்களுக்குத் தெரியுமே!

காங்கிரஸ் தலைவர் பேச்சு முயற்சிக்குப் பிறகு, மற்றொரு பேச்சாளர், உணவுப் பிரச்னையை காங்கிரஸ் சர்க்கார் திறமையாகச் சமாளித்து வருவது பற்றிப் பேசினாராம்! உடனே மக்கள் பொங்கி யெழுந்து, ''காங்கிரஸ் ஒழிக!'' என்று கடலிரைச்சல்போல முழக்க மிட்டார்களாம்!

உடனே கூட்டம் கலைந்து விட்டதாம்.

''இப்படிச் செய்வது ஒழுங்காகுமா? பேச்சு சுதந்திரம் கூடவா கிடையாது?'' - என்று சிலர் கேட்கலாம்.

ஒழுங்கல்லதான்! ஆனால் பேச்சு சுதந்தரத்துக்கு இடம், நேரம் கிடையாதா?

ஒருவன் அற்பாயுளில் மாண்டுபோய் விட்டபிறகு, அவனை எரிக்கின்ற சுடுகாட்டில் அவனைச் சேர்நதவர்கள் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருக்கின்ற சமயத்தில், அவன் எதிரியொருவன் அங்கு சென்று, செத்துப் போனவனைப் பற்றித் தாக்கிப் பேசுவதற்கு 'பேச்சுரிமை' கேட்டால், என்னவாகும்? செத்துப் போனவனுக்குப் பக்கத்திலேயே இந்தப் பேச்சாளனுக்கு உடனே இடம் ஒதுக்கப்பட்டு விடுமல்லவா?

நாட்டு மக்கள் வறுமையாலும் பட்டினியாலும், துணிப் பஞ்சத் தாலும், காங்கிரஸ் பஞ்சத்தாலும் செக்கில் கொட்டப்பட்ட எள்ளைப் போல நசுக்கிப் பிழியப்பட்டு வருகின்ற இந்த நேரத்தில், இவ்வளவை யும் உண்டாக்கிய காங்கிரஸ்காரருக்கு இழவு வீட்டில் பேச்சுரிமை என்ன வேண்டியிருக்கிறது?

எலெக்ஷனுக்காக ஏதோ பேசித் தொலைக்க வேண்டுமே! இல்லாவிட்டால் எதிரிகள் பரிகசிப்பார்களே - என்று கருதினால், அதற்கும் ஒரு வழியிருக்கிறதே!

'மகாத்மா காந்தியின் மாபெரும் தியாகம்' - என்பது பற்றியோ, 'கட்டபொம்மனின் இணையற்ற வீரம்' - என்பது பற்றியோ, பேசிவிட்டு நழுவி விடக் கூடாதா?

'காங்கிரஸ் ஆட்சியின் 4 வருஷ சாதனை' - 'உணவுப் பிரச்னை' - ஆகிய விஷயங்களைப் பற்றிப் பேசி, ஆத்திரத் தீயில் ஆகஸ்ட் பெட்ரோலை ஊற்றுவானேன்?

தமிழ்நாட்டு காங்கிரஸ்காரராவது புத்திசாலித் தனமாக நடந்து கொள்வார்களென்று எதிர்பார்க்கிறேன்! தேர்தல் நெருங்க நெருங்க பொதுமக்களின் ஆத்திரமும் பொங்கிக் கொண்டேயிருக்கும்!

1. சிலப்பதிகாரச் சிறப்பு

2. வ.உ.சி.யின் தேசசேவை

3. தமிழ் மூவேந்தர் ஆட்சி -

என்பவைகளைப் போன்ற விஷயங்களை காங்கிரஸ்காரர் எடுத்துக் கொண்டு பேசிவிட்டு ஓடுவதுதான் உடம்புக்கு நல்லது! இது என் 'மெடிகல் அட்வைஸ்!'

தமிழ் மக்கள் கல்கத்தாவைப் பின்பற்றிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு - போலீசாருடையதல்ல! அவர்களுக்கு ஆகஸ்ட் 42-ல் தீவைத்துக் கொளுத்திய கதர்ச் சட்டைக்காரர் பொறுப்பாகும்!

வந்து - ஏமாத் - றோம்! - சே! ஹிந்த்!!

64. காந்தி ஸ்தூபி எங்கே?

(28.12.51)

''3 லட்ச ரூபாய் செலவில் சென்னை கடற்கரையில் காந்தியார் நினைவுத் தூண் எழுப்பப் போவதாக 2 - 3 ஆண்டுகளாக விளம்பரப் படுத்தினார்களே! அது என்னவாயிற்று?''

என்று ஒருவர் கேட்டிருக்கிறார்.

என்னைக் கேட்டால் என்ன தெரியும்? ரா.கி.யை அல்லது முன்னாள் மேயர் செரியனை அல்லவோ கேட்க வேண்டும்!

அந்த முயற்சியே சுத்த அபத்தம்! வடிகட்டிய அயோக்கியத்தனம்! - என்று நான்தான் ஆதிமுதல் ஆயிரந்தடவை பேசியும் எழுதியும் வந்திருக்கிறேனே!

காந்தியார் சாம்பல் மீது அந்தத் தூணை எழுப்ப முடியாது, சாம்பலைக் கடலில் கரைத்து விட்டார்களாதலால்! தமிழனின் எலும்பின் மீதுதான் இனி எழும்ப வேண்டும்! ஏன் தெரியுமா? காந்தி சீடர்களின் கல் நெஞ்சை உலகத்தாருக்குக் காட்டுவதற்காகத் தமிழன் காத்துக் கொண்டே யிருக்கிறான்! ஆஸ்பத்திரி வெளி 'வராண்டா'க்களில் நோயாளிகளைப் படுக்க வைத்திருக்கின்ற படத்தையும், காந்திஸ்தூபி அடிப்படைப் படத்தையும் பக்கம் பக்கமாக வெளியிட்டு உலகஞ் சிரிக்கச் செய்யப் போகிறான், தன்மானமுள்ள தமிழன்! ஆகஸ்ட் வீரர்கள் பொறுத்திருந்து பார்க்கட்டும்.

''யாரோ ஒருவன் எதிர்ப்பதனால் இதை நாங்கள் விட்டு விடுவோமா?'' -

என்று வீராப்புடன் கேட்டாராம், ஒரு காங்கிரஸ் பக்தர்!

எதிர்ப்பவன் ஒருவனா? அல்லது ஒரு கோடிப் பேரா? - என்பது இப்போதா தெரியும்? ஸ்தூபி முயற்சி துவங்கியவுடனல்லவோ தெரியும்?

நான் சொல்கிறேன்! காங்கிரஸ் அண்ணா! வீம்புக்கு வேப்பங்காய் தின்னாதே! சொல்வதைக் கேள்! சோற்றுப் பஞ்சத்தையும் பணப்பஞ்சத்தையும் உண்டாக்கி வைத்துவிட்டு வீணாக அதிக வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே! காந்தியார் பெயரால் ஒரு நல்ல ஆஸ்பத்திரி கட்டு! பணம் போதாவிட்டால், ஆஸ்பத்திரி வாசலில் ஒரு பெரிய உண்டியல் (திருப்பதி உண்டியல் மாதிரி!) செய்துவை! அதில் எவ்வளவு பணம் வந்து விழுகிறது என்று பார்! கட்சி - மதம் - ஜாதி - நிறம் - இனம் - மொழி ஆகிய எந்த வேற்றுமையையும் கருதாமல் எல்லோரும் அந்த உண்டியலில் பணம் போடுவார்கள்! நோட்டு நோட்டாகக் கொட்டுவார்கள்! பணம் படைத்தவர்கள் பவுன் நகைகளைக் கூடப் போடுவார்கள்! ஆனால் உண்டியல் சாவி மட்டும் காங்கிரஸ்காரர் வசத்திலிருக்கக் கூடாது! யாராவது ஒரு கிருஸ்துவப் பாதிரி வசம் இருந்தால் போதும்! காங்கிரஸ்காரர் மீது நம்பிக்கையில்லாத காரணமல்ல! நாயன்மார் மாதிரி, எந்தப் பணத்தை என்ன செய்வது என்ற கட்டுத்திட்டமில்லாமல் சற்றுத் தாராளமாக நடந்து விடுவார்களே, என்ற சந்தேகந்தான்! தேசபக்தர் களல்லவா? பக்தியில் ஈடுபட்டவர்கள் எதையும் செய்யலாமே! அதனால் என்க!

'காந்தி ஸ்தூபி' நிதி திரட்டியவர்கள் முட்டாள்களல்ல; அதிபுத்தி சாலிகள்! ஆதலால் கழுதைகூட ஒண்டி நிற்க முடியாத ஒரு தூணுக்கா மூன்று லட்சம் செலவழிப்பார்கள்? கழுதைகூட அவர்களைச் சபிக்குமே!

ஆகையால் இனிமேல் தூண் எழும்பாது! பிரம்மாண்டமான ஒரு ஆஸ்பத்திரிதான் எழும்பும்!

அதுவும் காந்தியார் கண் ஆஸ்பத்திரி - என்ற பெயரைக் கேட்டால் ஏழை மக்கள் மனம் அய்ஸ்க்ரீம் சாப்பிட்டது-மாதிரிக் குளிருமே! 'ஸ்தூபி' என்று கேட்டால் எப்படியிருக்கும்? பச்சை மிளகாயைக் கசக்கிக் கண்ணில் போட்டதுபோல இருக்கும்!

65. சிங்காரவேலரின் சிறு தவறு!

(11.2.52)

இன்று சிங்காரவேலர் நினைவுநாள். சரியாக ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் மறைந்தார், தமிழ் நாட்டின் முதலாவது கம்யூனிஸ்ட்!

தமிழர்களில் அன்று ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கு (நான் உள்பட) கம்யூனிச அரிச்சுவடியைச் சொல்லிக் கொடுத்தவர் இவர்தான்!

தமிழ்நாட்டு கம்யூனிஸ்ட்கள் இவரை மறந்து விட்டார்களே என்று நான் அடிக்கடி வருந்துவதுண்டு. பழைய நிகழ்ச்சியொன்று இப்போது என் நினைவுக்கு வருகிறது.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மெமோரியல் மண்டபத்தில் 'சோவியத் யூனியன் நண்பர்கள் சங்கம்' (Friends of the Soviet Union) என்ற ஒரு கூட்டத்தார் சோவியத் கலைக்காட்சி யொன்றை நடத்தினார்கள். அந்த 'சோவியத் நண்பர்கள் குழுவில்' 'ஹிந்து' ஆசிரியர் போன்றவர்களுமிருந்தார்கள்!!

அந்தக் காட்சியை நீண்ட நேரம் பார்த்துப் பல புள்ளி விவரங் களையும் குறித்துக் கொண்டோம். உள்ளே நுழைந்தவுடன் பாரதியாரின் பெரிய படமிருந்தது. எங்கு திரும்பினாலும் பாரதியாரின் வாக்கியங்களே தென்பட்டன! பாரதி கலைக் காட்சி என்றே அதைக் கூற வேண்டும்! காட்சி முழுவதையும் பார்த்துவிட்டு வெளியே வந்தோம், நானும் என் மனைவியாரும்! காட்சியைப் பற்றி கருத்தை எழுதுவதற்காக வெளி வாயிலில் ஒரு 'நோட் புக்' வைக்கப்பட்டிருந்தது.

''சோவியத் கொள்கைக்கு நேர் மாறான கருத்துக்களைக் கொண்ட பாரதியாருக்கே இங்கு முழு முக்கியத்துவம் தரப்பட்டிருக் கிறது. ஆனால் தென்னாட்டின் பொது உடைமை குருவான ம.சிங்கார வேலரின் படமோ அவரது பொன் மொழியோ ஒரு இடத்திலும் காணோம்! இங்கும் அக்கிரகாரத்துக்குத்தான் ஆதிக்கமா?'' -

என்று அந்த நோட்டில் எழுதி, திரு.குஞ்சிதம் அம்மையாரும் நானும் கையெழுத்திட்டு வந்தோம்.

அன்று எங்களைப் போன்று நினைத்தவர்கள் பல்லாயிரம் பேர் இருந்திருக்கலாம்!

போகட்டும்! இப்போதாவது சிங்கார வேலர் என்ற ஒரு ஆசாமி வாழ்ந்தார் என்ற நினைவு நமக்கு வந்ததே! அதுவே போதும்!

சிங்காரவேலரைப் பற்றி நினைக்கும்போது இரண்டொரு சங்கதிகள் என் நினைவுக்கு வருகின்றன.

பேச்சில் அவர் ஒரு முரடர்! ஆனால் இயற்கையில் மிக மிக நல்லவர்.

யாராவது அவரைக் கும்பிட்டுக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தால், ''இது என்ன கூழைக் கும்பிடு? பூர்ஷ்வா மெண்டாலிட்டி!'' என்று திடீரென்று பாய்வார்!

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சமயம் தோழர் ஜீவானந்தமும் மற்றொரு தோழரும் அவரைக் காணச் சென்றிருந்தார்கள். அப்போது அவர் கடற்கரைக் குப்பத்தில் லேடி வெலிங்டன் பள்ளிக்கு அருகில் வசித்துக் கொண்டிருந்தார்! ஜீவானந்தத்தின் நண்பர் ஒரு புஸ்தகம் வைத்துக் கொண்டிருந்தார்! புஸ்தகம் என்றால் சிங்காரவேலருக்கு ரொம்பப் பைத்தியம்! இடைவிடாது படிப்பார்! ஏராளமாகப் படிப்பார்!

அவரது நூல் நிலையத்தில் சுமார் இருபதாயிரம் நூல்களுக்கு மேல் இருந்தன. இவைகளில் ஆயிரமாவது கம்யூனிசம் பற்றிய நூல்கள்!

''அது என்ன புஸ்தகம்?'' என்று கேட்டதும் அந்த நண்பர், ''பகவத்கீதை'' என்று பதில் சொன்னார். ''நெருப்பிலே போடு! பகவத் கீதையாம்! ஏனப்பா, ஜீவானந்தம், யார் இந்த ஆசாமி? இவனை ஏன் இங்கே அழைத்து வந்தாய்?'' -

என்று உடனே கேட்டு விட்டார்!

அக்காலத்தில் சிங்காரவேலரிடம் நெருங்கிப் பழகியவர்களில் நானும் ஒருவன்! அடிக்கடி அவர் வீட்டுக்குச் செல்வோம். அவரும் எங்கள் வீட்டுக்கு வருவார்.

கண்டவுடனே முதலில் கேட்கும் கேள்வி என்ன தெரியுமா?

''நேற்று எத்தனை புஸ்தகம் படித்தாய்'' - என்பது தான்!

சதா படிப்பு! படிப்பு!! படிப்பு!!!

படிக்காமல் சோம்பித் திரிகிறவர்களை அவர் மனிதரென்றே மதிப்பதில்லை!

அவரைப் பற்றிய கதைகள் எவ்வளவோ கூறலாம்!

பொதுக் கூட்டத்தில் அவருக்கு மாலை போட்டாலோ, அல்லது அவர் பேசும் போது கை தட்டினாலோ ஒரே கோபம் வந்து விடும்! ''இது பூர்ஷ்வா மெண்டாலிட்டி என அறிக!'' - என்று பெருங்கூச்சல் போடுவார்!

''இந்தா, குருசாமி! காரில் போகிற போது ஜாக்கிரதையாகப் போ! அதிக வேகத்தில் ஓட்டச் சொல்லாதே! மீறி ஓட்டினால் ட்ரைவர் தலையில் குட்டு! நம் உயிர்கள் சாதாரணமல்ல; சமதர்மிகள் உயிரப்பா! விலை மதிக்கமுடியாத உயிரப்பா!'' -

என்று அடிக்கடி சொல்வார்!

வான நூல் முதல் நில நூல் வரையில் - தத்துவ நூல் முதல் தாவர நூல் வரையில், - பொதுவுடைமை நூல் முதல் - உடற்கூற்று நூல் வரையில், - அவர் படித்து அறிந்திருந்த துறைகள் ஒன்றல்ல, இரண்டல்ல! பலப்பல உண்டு!

முதிர்ந்த மூளை! நல்ல அநுபவம்! ஆனாலும் ஒரு சிறு தவறு செய்து விட்டார்! அவர் அக்கிரகாரத்தில் பிறக்கவில்லை! பிறந்திருந்தால் அவருக்கு ஒரு நினைவு மண்டபம் எழும்பியிருக்கும்! அவரை அக்கிரகாரமும் (முதலாளி உலகமும் கூட) தலைமீது வைத்துக் கொண்டாடும்!!

66. சுத்தப் பைத்தியம்!

(22.2.52)

பிரிட்டிஷாருக்கு வரவரப் பைத்தியம் முற்றிக் கொண்டேயிருக்கிறது என்றே நினைக்கிறேன்!

பஸ்களிலும், ரயில் வண்டிகளிலும் பிரயாணிகள் ஏதாவது பொருள்களை மறந்து வைத்துவிட்டு இறங்கிவிட்டால் எல்லாப் பொருள்களும் உடனே குறித்த இடத்தில் தவறாமல் கொண்டு வந்து சேர்க்கப்படுமாம்! அங்கு சென்று உரியவர்கள் தங்கள் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாமாம்! ஒரு தடவை கோவை. ஜி.டி.நாயுடு அவர்கள் வேண்டுமென்றே தமது விலையுயர்ந்த 'ஃபோட்டோ காமிராவை' பஸ்ஸில் வைத்துவிட்டுப் போய்விட்டாராம். காணாமற் போன சாமான்கள் பெறுகின்ற இடத்திற்குப் போய்ப் பார்த்தபோது அந்த 'காமிரா' அங்கிருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டு அதைப் பெற்றுக் கொண்டாராம்! இதை நாயுடுவே என்னிடம் கூறினார்.

ஏழை இங்கிலீஷ்காரனொருவன் கிழிந்த உடையுடன் லண்டனிலிருந்து ஒரு இந்திய மாணவனைத் தொடர்ந்து கொண்டே வந்தானாம். வீட்டுக்குள் நுழைந்தபோது, அம்மாணவன், ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டானாம்.

''பழைய கால்சட்டை வேண்டும்'' என்று அந்த இங்கிலீஷ் பிச்சைக்காரன் தெரிவித்தானாம். இந்திய மாணவன் தன்னிடமிருந்த ஒரு பழைய கால் சட்டையைக் கொடுத்துப் போகச் சொன்னானாம்.

பிறகு மறுநாள் என்ன நடந்தது தெரியுமா? அந்த இந்திய மாணவன் குடியிருந்த வீட்டுக்காரர் அய்ந்து ஷில்லிங் கரன்சிநோட் ஒன்றை அம்மாணவனிடம் கொடுத்தாராம்!

''இது ஏது?'' என்று மாணவன் கேட்டதற்கு, ''நேற்று யாரோ ஒரு பிச்சைக்காரனுக்குப் பழைய கால் சட்டையொன்று கொடுத்தீர்களாமே! அந்தச் சட்டையின் பைக்குள்ளே இந்த நோட் இருந்ததாம்! இதை உங்களிடம் திருப்பிக் கொடுப்பதற்காக வந்தான். நீங்கள் வீட்டிலில்லை; என்னிடம் கொடுத்து உங்களிடம் கொடுக்கச் சொன்னான்'' என்று வீட்டுக்காரர் கூறினாராம்!

இந்த நிகழ்ச்சியை நண்பர் என்.வி.நாயுடு அவர்கள் என்னிடம் கூறினார்.

கடந்த இரண்டாவது உலகப் போரின் போது ஒருநாள் திடீரென்று லண்டனில் சர்க்கரைப் பஞ்சம் வந்து விட்டதாம். மறுநாள் சர்க்கரை ரேஷன் கொடுக்க வேண்டிய நாளாம். ஆனால் ரேஷன் கடைகளிலோ

சர்க்கரை கையிருப்பில் கிடையாது. ஒரு வாரம் கழித்துத்தான் வரும். உடனே சர்க்கார் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியிட்டார்களாம்.

''வீட்டில் சர்க்கரை மீதியாக வைத்திருப்பவர்கள் அதைக் கடையில் கொண்டுவந்து தந்தால் அதற்குரிய விலையைப் பெற்றுக் கொள்ளலாம். சர்க்கரையே இல்லாதவர்களுக்கு ரேஷன் கொடுக்க வேண்டியிருக்கிறது. தயவு கூர்ந்து உதவி செய்க!'' -

என்று தெரிவித்தார்களாம்!

மறுநாள் ஒவ்வொரு ரேஷன் கடை முன்பும் நீளமான க்யூ வரிசையில், சர்க்கரைப் பைகளுடன் ஆணும் பெண்ணும் நின்று கொண்டிருந்தார்களாம்!

2 நாட்களுக்கு முன்பு ஒரு லண்டன் செய்தியைப் படித்தேன்.

பிரிட்டிஷ் வியாபாரி யொருவர் தாம் அளவுக்கு மீறிய லாபம் பெற்று விட்டபடியால், 5,33,000 ரூபாய் (40,000 பவுன்) பணத்தைத் தம் வாடிக்கைக்காரர்களுக்குப் பங்கு போட்டுத் திருப்பித் தந்துவிட்டதாக அறிவித்திருக்கிறாராம்!

இந்த வியாபாரி அட்டைப் பெட்டி செய்கிறவராம்! ஒவ்வொரு பவுனுக்கும் இரண்டு ஷில்லிங் வீதம் வாடிக்கைக்காரருக்குத் திருப்பித் தந்து விட்டாராம்! அட்டை விலை அதிகமாகும் என்று எதிர்பார்த்து பெட்டியின் விலையை அதிகமாக்கியிருந்ததாகவும், அந்த அளவுக்கு அட்டைவிலை ஏறாதபடியால், அதிகமாகப் பெற்ற லாபத்தைத் திருப்பித் தந்து விடவேண்டியது தான் நியாயம் என்றும் அந்த வியாபாரி கூறிகிறாராம்!

என்ன பைத்தியக்காரத்தனம், பார்த்தீர்களா?

லாபத்தைத் திருப்பித் தருவதாம்! அதுவும் ஒரு வியாபாரி! சுத்த கீழ்ப்பாக்கம்!

இங்கே, நம் பாரதமாதா புத்திரர்களைப் பாருங்கள்! தமிழ்த் தாயின் தவப் புதல்வர்களைப் பாருங்கள்! ஹிந்தித் தாயின் ஸ்வீகார புத்திரர்களைப் பாருங்கள்!

ஏழையின் குடலைப் பிடுங்கி அதில் பிரியாணி (''குடல் பிரியாணி'') செய்து சாப்பிடுகிறார்களே!

ஆமாம்! பணக்காரன் பணம் முழுதும் ஏழையின் குடல் பிரியாணி தான்!

பெரிய வியாபாரிகளைப் பாருங்கள்! அவர்கள் உடலிலிருக்கின்ற ஒவ்வொரு சொட்டு இரத்தமும் சொந்த இரத்தமே யல்ல! ஏழை மக்களின் இரத்தம்! தெரியாமலே உறிஞ்சிய இரத்தம்!

பெரிய தொழில் முதலாளிகள், நிலச்சுவான்தாரர்கள் ஆகியோரைப் பாருங்கள்! ஆஹா! அசல் முதலைகள்! பல பாட்டாளிகளை அப்படியே விழுங்கியிருக்கின்ற முதலைகள்!

ஆனால் இவர்களெல்லோரும் ஒழுக்கத்தைப் பற்றியோ, நேர்மையைப் பற்றியோ, பேச வேண்டுமா? வண்டி வண்டியாகப் பேசுவார்கள்! திருக்குறள் முதல் உபநிஷத் வரையில்! அடாடா! எல்லாம் தண்ணீர்ப் பாடந்தான்! கடவுள் பக்தியோ, சொல்ல வேண்டியதில்லை!

லாபத்தையாவது திருப்பித் தருவதாவது!

பாரதமாதா முதலாளிகளுக்கு முழுப்பைத்தியமே பிடித்தால் கூட அப்போதும் இந்தச் சங்கதி மட்டும் நடக்காது!

ஆதலால்,

ஜேய் ஹிந்த்!

வந்து - ஏமாத் - றோம்!!

சத்திய மேவ ஜெயதி!!!

67. அதில் ஒரு தனி ருசி!

(6.3.52)

இயற்கைக்கு விரோதமாயிருப்பதில் மக்களுக்கு ஒரு தனி ருசி!

சினிமா நடிகர்களும் நடிகைகளும் கிரிக்கெட் விளையாடுகிறார்களே! எதற்காக? அது ஒரு தனி வேடிக்கை! அதைப் பார்ப்பதற்காகவே (கிரிக்கெட் விளையாட்டுக்காக அல்ல) பலர் செல்கிறார்களல்லவா?

நான் படித்துக் கொண்டிருந்த சமயத்தில் திருச்சியில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. தலைசிறந்த 'பாட்மிண்டன்' விளையாட்டுக்காரர்களைக் கொண்டு இரவு எட்டு மணிக்குமேல் ரயில்வே இன்ஸ்டிட்யூட்டில் ஒரு விளையாட்டுப் பந்தயம் நடத்தினார்கள்! பல 'கியாஸ்லைட்'கள் வெவ்வேறான உயரத்தில் கட்டியிருந்துங்கூட அதில் கலந்து கொண்ட நாங்கள் பகலில் விளையாடுவதில் பாதிகூட விளையாட முடியவில்லை. பலவர்ணமான பந்துகளை மாற்றியுங்கூட எங்களால் பந்தை நன்றாகப் பார்க்கவே முடியவில்லை. ஆனாலும் அதற்கு டிக்கெட் பெற்றுக் கொண்டு வந்த கூட்டம் உண்டே! அடாடா! ஆயிரக் கணக்கில்! இடமில்லாமல் திரும்பியவர்கள் பலர்!

ஆண் நடிகர் பெண் வேஷம் போட்டு நடித்தாலும், பெண் நடிகர் ஆண் வேஷந் தாங்கி நடித்தாலும் அதில் ஒரு தனி ருசி! இது மட்டுமா? அரசியல்வாதிகள் நாடக மேடை மீது தோன்றினால் அதில் ஒரு தனி ருசி!

திரு. ராஜகோபாலாச்சாரியாரும், பெரியாரும், காமராசரும், பி.டி.ராஜனும், ராமமூர்த்தியும், வெங்கட்ராம சாஸ்திரியும் ஒரு நாடகத்தில் நடிக்கின்றார்கள் என்றால் அந்த நாடகத்துக்கு டிக்கெட் கிடைக்காமல் திரும்புகிறவர் எண்ணிக்கை மட்டும் பல்லாயிரம் இருக்குமே!

நடிப்புக் கலையில் இவர்கள் சிறந்தவர்கள் என்பதற்காகவா? அல்லவே அல்ல! இயற்கைக்கு விரோதமான நிகழ்ச்சியல்லவா? அதனால்!

பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருப்பவர்கள் அத்தனை பேரையும் சென்னை சட்டசபைக்குள் உட்கார வைத்தால் எப்படியிருக்கும்? அந்தக் காட்சியைப் பார்ப்பதற்கு எவ்வளவு பெரிய கூட்டம் வரும்?

மனித உணர்ச்சிகளில் இதுவுமொன்று. விநோத நிகழ்ச்சியில் ஒரு தனி விருப்பம்!

ராஜா சர். முத்தய்யா செட்டியார், 'ஹிந்து' சீனுவாசன், கோயங்கா, சங்கராச்சாரியார், பண்டாரசந்நிதி, ஏ.வி.தாமஸ், டி.வி.சுந்தரமய்யங்கார், ஹார்விதுரை, வடபாதி மங்கலம் முதலியார் - ஆகியோர் மாலை 6 மணிக்கு மவுண்ட்ரோடில் தெருக் கூட்டுகிறார்கள் என்றால், அங்கு எப்பேர்ப்பட்ட கூட்டமிருக்கும்? இவர்கள் நகர சுத்தித் தொழிலில் நிபுணர்கள் என்பதற்காகவா? அல்ல! செய்யாத தொழிலைச் செய்கிறார் கள் என்பதற்காகத்தான்!

ஏதாவதொரு பொதுநன்மைக்கோ, அல்லது சொந்த வசதிக்கோ, அல்லது இரண்டுங்கலந்த காரியத்துக்கோ பெருநிதி திரட்ட வேண்டு மானால் மேற்கண்ட முறைகளில் ஒன்றைக் கையாளலாம்! இவைகளைப் போன்ற வேறு ஏதாவது புது அதிசய முறையையும் கையாளலாம்.

சினிமா நடிகரின் கிரிக்கெட் பந்தயத்தைப் போலவே அரசியல் நடிகர் சடுகுடுப் பந்தயம் நடத்தலாம்!

பல அரசியல் தலைவர்களில் முக்கியமான 20 பேரைப் பொறுக்கி யெடுத்து இரண்டு கட்சிகளாகப் பிரித்து (இருபது கட்சிகளை இரண்டாகப் பிரிப்பது மகா வேதனைதான்! என்ன செய்வது?) சடுகுடு விளையாட்டுப் பந்தயம் நடத்தலாம்!

இந்த விளையாட்டில் காலைப் பிடித்து இழுத்துக் கோட்டைத் தொடாமற் செய்வதுதானே முக்கியம்? காலை வாரி விடுவதில் கைதேர்ந்த அரசியல் வாதிகளுக்கு இது ஒன்றும் பிரமாதமல்ல! ஒருவர் காலைப்பிடித்து இழுத்தவுடனே அவரைச் சேர்ந்த மற்ற விளையாட்டுக் காரர்கள் விழுந்தவர் மார்பில் உட்கார்ந்து அமுத்துவதும் சர்வ சாதாரணமாகப் பழக்கமான வேலை தானே!

சிறப்பாகத் தமிழ் நாட்டு அரசியல் வாதிகளுக்கு இந்த விளையாட்டுத்தான் ரொம்பப் பிடித்தமாகவும் பொருத்தமாகவும் இருக்கும்! பெருங்கூட்டமும் வரும்! இரண்டு ஆண்டுகளாக நின்று போயிருக்கின்ற சுதேசிப் பொருட்காட்சிக்குக் கிடைத்ததைவிட அதிக மான நிதியும் வசூலாகும். கணக்கும் அதுபோலவே காட்டிவிடலாம்!!!

68. இந்தியன் மேக்!

(17.3.52)

முன்பெல்லாம் 'ஜப்பான் மேக்' என்றால் எல்லோருக்கும் ஒரு நையாண்டி!

''ஓஹோ! இது ஜப்பான் மேக்கா? அதுதான் சீவும் போதே ஒடிந்து கொண்டிருக்கிறது!'' - என்று ஜப்பான் பென்சிலைப் பற்றிச் சொல்வ துண்டு!

எல்லாச் சாமான்களும் இதே புகழ்பெற்று விளங்கி வந்தன!

இதனால் ஜப்பான்காரருக்கு நல்ல சாமான் செய்யத் தெரியாது என்று பலர் கருதியிருந்தனர்! அப்பேர்ப்பட்டவர்களுக்கு உண்மை தெரிவதற்காகவே ஆறு கார்பன் காப்பி எடுக்கக் கூடிய 'பைலட்' ஃபவுண்டன் பேனாவைச் செய்தனுப்பித் தம் திறமையைக் காட்டி னார்கள்.

இந்தியாவிலிருப்பவர்களில் பெரும்பாலோர் ஏழைகள்! பணம் படைத்தவர்கள் கூட உயர்ந்த விலைகொடுத்து நல்ல பொருள் வாங்க மாட்டார்கள்! ''எதையெடுத்தாலும் ஒண்ணரையணா!'' - என்று நூறு தினுசு சாமான்களை வைத்துக் கொண்டு விற்றால், உதவாக்கரைச் சாமான்களைக் கூட வாங்கிவிடுவார்கள் என்ற இரகசியம் ஜப்பான் காரருக்கு நன்றாகத் தெரியும்! அணாவுக்கு 4 பென்சில் வாங்கி ஒரே வாரத்தில் நான்கையும் சீவிக் கொட்டினாலும் கொட்டுவார்களே தவிர, நாலணாவுக்கு ஒரு நல்ல பென்சில் வாங்கி அதை 4 மாதத்துக்கு வைத்திருக்கிற புத்தி பணக்கார இந்தியருக்கே கிடையாது என்பது குள்ள ஜப்பானியர்களுக்கா தெரியாது?

ஆதலால்தான் 'ஜப்பான் மேக்' என்ற புகழ் இந்தியா முழுதும் பரவியிருந்தது.

இனிமேல் ஜப்பானுக்கு அந்தப் பெயர் கிடைக்காது. நம் பாரதமாதாவாகிய இந்தியாவுக்குத்தான்!

சைக்கிள் முதல் குண்டூசி வரையில், எதையெடுத்துக் கொண்டா லும் அருமையான வேலைப்பாடு! சுயராஜ்ய சர்க்கார் வெளிநாட்டுச் சரக்கு இறக்குமதிகளை ஏராளமாகக் குறைத்து விட்டபடியால் உள்நாட்டு

உற்பத்தி முதலாளிகள் மண்ணைக் கூடப் பொன்னாக்கிக் கொண்டிருக் கிறார்கள்!

ஃபவுண்டன் பேனா மை (Ink) த் தொழிலுக்குச் சர்க்கார் போது மான பாதுகாப்பு அளிக்கவில்லையென்றும், வெளி நாட்டு முதலாளிகள் இங்கேயே மை உற்பத்தி செய்ய முயற்சி செய்வதைத் தடுக்க வேண்டு மென்றும் அகில இந்திய மை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் எழுதுகிறார்.

உண்மைதான். உள்நாட்டு உற்பத்திக்குப் பாதுகாப்புத்தர வேண்டியதுதான். ஆனால் இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு? இப்போதே அதிகமான இறக்குமதி வரி விதிக்கிறார்களே! இதற்குமேல் என்ன செய்வது? வெளிநாட்டுச் சரக்குகளுக்கு ஈடாக இந்திய சரக்குகளையும் கொண்டு வர வேண்டாமா?

சோப் உற்பத்தியை எடுத்துக் கொள்வோம்! ஏதோ சுமாராகத் தேவலாம்! ஆனாலும் 4-5 முதலாளிகளும் முதலாளி கம்பெனிகளுமே சுரண்டிக் கொண்டிருக்கின்றனவே!

மை உற்பத்தியையே கவனிப்போமே! நாட்டில் தண்ணீர்ப் பஞ்சத்துக்குக் காரணம், இந்த மை வியாபாரிகளும், பால் வியாபாரி களும், ஹோட்டல்காரர்களுந்தானே? கிடைக்கிற தண்ணீரில் பாதிக்கு மேல் இந்த மூன்று கூட்டத்துக்குந் தான் சரியாகி விடுகிறதே! பிறகு பயிருக்கு எங்கே தண்ணீர் கிடைக்கப் போகிறது?

எந்த மையை வாங்கினாலும் அடியிலே காஃபித் தூள் மாதிரி தங்கிவிடுகிறது! மேலே நீர் தனியாக நிற்கிறது! இந்தத் தொழிலுக்குத்தான் பாதுகாப்புவேண்டுமாம், பாதுகாப்பு! பித்தலாட்டத்துக்குப் பாது காப்பாம்!

இந்திய உற்பத்தியாளருக்குப் புத்தியில்லை என்று நான் சொல்ல மாட்டேன். பணமில்லையென்றும் சொல்ல மாட்டேன். இந்த இரண்டும் வெள்ளைக்காரருக்கு மட்டுமே சொந்த உடைமைகள் அல்ல.

ஆனால் ஒரே ஒரு சரக்கு மட்டும் நம் உற்பத்தியாளரிடம் சிறிது கூடக் கிடையாது! அது பிறவிக் குணம் என்று கூடக் கூறுவேன்!

அதுதான் நாணயம்! அதாவது நேர்மை. இது இங்கே சுத்த சுன்னம்! அதனால்தான் 'இந்தியன் மேக்' என்பது அகில இந்தியப் புகழ் பெற்று விளங்குகிறது!

என்னென்ன ஏற்றுமதிப் பொருள்களில் என்னென்ன கலப்புப் பொருள்கள் காணப்படுகின்றன என்பது பற்றி வெளிநாட்டுக்காரரைக் கேட்டாலல்லவோ தெரியும்?

பாரதமாதா புத்திரர்களான நாம் இதில் உலகப் புகழே பெற்று விட்டோம்! அதாவது பொருள்களுக்குக் கலப்பு மணம் செய்வதில்!

69. ஒப்பாரியே போதுமா?

(21.3.52)

''அய்யய்யோ! அடிக்கிறானே! படுபாவி உதைக்கிறானே! அருமையாக வளர்ந்தேனே! பல்லுக்கருவானுக்கு வாழ்க்கைப்பட்டுப் பரிதவிக்கிறேனே! குடித்த போதும் அடிக்கிறான்; குடிக்காத போதும் அடிக்கிறானே! ஒரு தவறும் செய்யவில்லையே! வேளா வேளை வடித்துக் கொட்டுகிறேனே! கால்பிடித்துத் தூங்கவைக்கிறேனே! பிணத்தைக் குளிப்பாட்டுவது போலக் குளிப்பாட்டியும் விடுகிறேனே! ஒரு நல்ல துணிகூட எனக்குக் கிடையாதே! நல்ல சாப்பாடு கூடக் கிடையாதே!குதிரைப் பந்தயத்துக்கும் மூணு சீட்டுக்கும் என் அப்பா போட்ட நகைகளையெல்லாம் கழற்றிக் கொடுத்துவிட்டேனே! மஞ்சள் கயிறு தவிர கழுத்தில் ஒன்றுகூட இல்லையே! இவ்வளவு போதாமல் அடியும் வாங்க வேண்டுமென்றால், அய்யப்பா! அய்யோ அப்பா! என்னால் முடியவில்லையே! என் அம்மா இதற்குத்தானா என்னைப் பெற்றெடுத்தாள்? கிணற்றிலே விழுந்து சாகலாமென்றால் அதிலும் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லையே!'' -

இப்படியெல்லாம் கதறிக் கதறி அழுகிறாள், ஒருத்தி!

ஒரு நாளல்ல; பல நாளல்ல! அய்ந்து வருஷமாக அழுகிறாள்! சதா அடி! சதா அழுகை! ஒரு நாள் கூட கணவனும் மனைவியும் ஒன்றுபட்டு இருந்தது கிடையாது.

இவளிடத்தில் சென்று, ''அம்மணீ! ஏன் அழுகின்றீர்கள்? ஒத்த ஒருவனும் ஒத்த ஒருத்தியும் கூடி இன்பம் நுகர்தலே இல்லறமாகும். இதுவே திருமணத்தின் குறிக்கோள். பூசல் வேண்டா!'' - என்று யாரேனும் இல்லற தர்மோபதேசம் செய்தால் பயன்படுமா?

இந்த நேரத்தில் எதிர் வீட்டுக்காரி வருகிறாள். அடிபட்டு மனம் முறிபட்டுக் கிடக்கும் அம்மணியை நோக்குகிறாள்! மை தீட்டிய கண்களி லிருந்து அவளையறியாமலே இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் விழுகின்றன! நாடக மேடையில் காண்கின்ற வாஸ்லின் (ஏமாற்று) கண்ணீரல்ல. உண்மையான கண்ணீர்!

''அக்காள்! நான் உன்னைவிட வயதில் சிறியவள்தான். ஆனாலும் என்வார்த்தையைத் தட்டாதே! 5 வருஷமாக நானும் எதிர் வீட்டிலிருந்த படியே இந்தக் கோலாகலத்தைப் பார்த்துக் கொண்டுதானிருக்கிறேன்! உன்னைப் போன்ற பொறுமைசாலியை நான் கண்டதேயில்லை.

கற்பனைப் புராணக் கதைகளிலுங்கூடப் படித்ததில்லை. இவ்வளவு கொடூரமானவனைக் கட்டிக்கொண்டு நித்திய வேதனைப்படுவதி லிருந்து மீள்வதற்கு உனக்கு வழியில்லையா? கோட்டையைப் போன்ற சிறைகளைக் கூடத்தாண்டிக் குதித்துக் கைதிகள் தப்பிவிடுகிறார்களாமே? நீயும் மனிதப் பிறவிதானே? யோசித்துப்பார்! தினசரி ஒப்பாரி சொல்லி ஓலமிட்டுக் கொண்டிருந்தால் போதுமா? சட்டபூர்வமாக அவனைவிட்டு விலகிவிட முடியாதா? பெண்களுக்குங்கூட இப்போது 'விவாகரத்து உரிமை இருக்கிறதாமே? ஒருக்கால் அதற்கு வசதியில்லையென்றால், அவனிடம் துணிச்சலாகக் கூறிவிட்டு எங்கேயாவது ஓடிப்போய்விடு! உலகம் பெரிது. நீயும் சோம்பேறியல்ல. எங்காவது கூலிவேலை செய்து பிழைத்துக் கொள்ளலாம்!''

இந்த மாதிரிச் சொல்கிறாள், எதிர் வீட்டுப் பெண்.

''நான் பதவியிலிருந்த காலத்திலிருந்தே டில்லியுடன் சதா போராடிக்கொண்டிருந்தேன். முடியவில்லை. நிலைமை வர வர மோசமாகிவிட்டது. மத்திய சர்க்காரின் போக்கினால்தான் சென்னை ராஜ்யம் இந்தக் கேடான நிலைக்கு வந்திருக்கிறது. மத்திய சர்க்கார் சென்னை விஷயத்தில் நேர்மையாக நடந்துகொள்ள வில்லை...''

இந்த விதமான நீண்ட ஒப்பாரி, 15 நிமிஷ ஒப்பாரி வைத்திருக் கிறார், ஓமந்தூர் ரெட்டியார்! நிதிநிலைமையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் கோபால்ரெட்டி இதைப்போலவே பலதடவை ஒப்பாரி வைத்து அழுதிருக்கிறார்! ''அய்யய்யோ! பணத்தையெல்லாம் மத்திய சர்க்கார் வாங்கிக்கொள்கிறார்களே! நாங்கள் புதுச்சேரிக்குத்தான் ஓடவேண்டும்!'' - என்று மாரடித்துக் கூட அழுதிருக்கிறார்!

டில்லி சர்க்கார் கணவனுக்குப் பல மனைவிகள்! அவர்களில் சென்னை மனைவிதான் ஓயாமல் அடிபடுகிறாள்! இன்று நேற்றல்ல! தாலிகட்டிய நாள் முதல்! அதாவது 5 ஆண்டுகளாகவே! கணவன் விறகுக் கட்டையால் மண்டையிலடிக்கிறான்! நெஞ்சில் எட்டி மிதிக்கிறான்! பல் உதிரும்படி அறைகிறான்! கூந்தலைப் பிடித்து இழுத்து சுவர் மீது மோதுகிறான்! ஆனால் இந்த மானங்கெட்ட மனைவி சொந்தச் செலவில் விமானமேறி அடிக்கடி கணவன் வீடு போகிறாள். போகும் போதெல்லாம் பலர் அறிய முகத்தில் எச்சிலைக் காரித் துப்புகிறான்!

இவ்வளவும் செய்தும் குடிகாரக் கணவனை சென்ட்ரல் ஸ்டேஷனில் மாலை போட்டு, ஆலார்த்தி எடுத்து வரவேற்கிறாள், மூளை கெட்ட மனைவி! மாமனார் வீட்டுக்கு வந்தாலும் இரண்டு மோது மோதிவிட்டுத்தான் போகிறான்! பிறகு ஒப்பாரிவைத்து அழுகின்றாள், தானும் மனிதப்பிறவியென்பதை மறந்த மூடமனைவி!

கறுப்புச் சேலையும் கறுப்பு ரவிக்கையும் அணிந்துள்ள எதிர் வீட்டுக்காரி கேட்கிறாள், ''அக்கா! அவனை ஒழித்துத் தலை முழுகக் கூடாதா?'' - என்று!

அப்படிச் சொல்லாதே, தங்கச்சி! மகாபாபம்! கட்டிய புருஷனைக் கைவிடக்கூடாது! எங்களுக்குள்ளே நீ பிளவை உண்டாக்காதே! சாஸ்திரம் பார்த்து, கோத்திரம் பார்த்து, சோதிடம் பார்த்து, நல்ல வேளைபார்த்து, நல்ல சகுனம் பார்த்து, வேதப் பிராமணாளை வைத்து, ஆறு மணி நேரம் மந்திரஞ்சொல்லி, நடத்திக் கொண்ட தெய்வத் திருமணமல்லவா?''

என்று பதில் சொல்கிறாள் அடிபட்டுச் சாகப்போகின்ற மனைவி!

70. நீ பாம்பு ''துவேஷியா?''

(28.3.52)

''நீ பார்ப்பன துவேஷியா?'' என்று யாராவது என்னைக் கேட்டால், ''நீ பாம்பு துவேஷியா?'' - என்று பதிலுக்குக் கேட்பேன்!

''நீ மதத்துவேஷியா?'' - என்று கேட்டால், ''நீ புலி துவேஷியா?'' - என்று கேட்பேன்!

''நீ முதலாளி துவேஷியா?'' - என்று கேட்டால், ''நீ மூட்டைப் பூச்சி துவேஷியா?'' என்று கேட்பேன்.

''நீ வைதீகத்தின் துவேஷியா?'' என்று கேட்டால், ''நீ கால்ராவின் துவேஷியா?'' என்று கேட்பேன்!

பாம்பிலே எல்லாப் பாம்புமே கெட்ட பாம்பல்ல. அதிலே நல்ல பாம்புமுண்டே! - என்று சிலர் கூறலாம்.

ஆமாம்! நல்ல பாம்பும் உண்டுதான்! அதாவது பார்ப்பதற்கு நல்ல பாம்பு! படத்துடன் கூடிய பாம்பு! பரத நாட்டியம் ஆடும் பாம்பு! பாம்பு இனத்திலேயே அழகான பாம்பு! இசை உணர்ச்சியே உருவான பாம்பு! மகுடி கேட்டுத் தலையசைத்துத் தாளம் போடும் பாம்பு!

ஆனாலும் இந்த நல்ல பாம்பைக் கண்டுதானே பலர் நடுங்கு கிறார்கள்? ஆடும்போது நன்றாகத்தானிருக்கிறது! ஆனால் கடித்து விட்டாலோ? உடலே நீல (ஆரிய) நிறமாகிவிடுகிறதே!

''அய்யோ! அடிக்காதே அப்பா! அழகான பாம்பு!'' - என்று யார் சொல்வார்கள்? விஷயந் தெரியாத சின்னஞ்சிறு பிள்ளைகள் தான் சொல்வார்கள். ஆனால் மற்றவர்கள்? துணிச்சலிருந்தால் தடியெடுத்துத் தாக்குவார்கள்! கோழையானால் ஓட்டமெடுப்பார்கள்!

பாம்பு விஷயம் இப்படியே நிற்க!


சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஏராளமான நல்ல பாம்புகளைப் பாலூற்றி வளர்த்து வருவதாகக் கேள்வி! பாம்புகளிலே தண்ணீர்ப் பாம்பும் உண்டு என்பது எனக்குத் தெரியும். ஆனால் கண்ணை மூடிக்கொண்டு கட்டியணைக்கும்போது, எது தண்ணீர்ப் பாம்பு, எது விஷப் பாம்பு என்பது எப்படி நமக்குத் தெரியும்?

''பாம்புக்குப் பாலூற்றி வளர்க்காதே!'' என்பது பழமொழி!

பல்கலைக்கழகத்தாரே! பாம்பை வளர்க்காதீர்கள்! கூடை கூடையாக நல்ல பாம்புகளை (பல் பிடுங்காமலே) வைத்து வளர்க்கிறீர்களாமே? உண்மைதானா?

பாம்பைப் பிடித்துப் பல்லையாவது பிடுங்கிவிட்டுத் தரலாமென்றால், பாம்புப் பிடாரனைப் பார்த்து, ''ஏய்! கறுப்புச் சட்டை! கிட்டே வராதே! போ! போ!'' என்று துரத்துகிறார்களே! என்ன செய்வது?

சட்டை எதுவானாலென்ன? அவன் சேவைதானே முக்கியம்? நல்ல பாம்புக் காதலர்களுக்கு என்றுதான் புத்தி வருமோ?



பத்திரிகை உரிமையாளர் எவரும்
எந்த எழுத்தாளருக்கும்
தர முடியாத அளவுக்கு
எனக்கு எழுத்துரிமை தந்து
ஊக்கப்படுத்திய
தலைவர் பெரியார்
ஈ.வெ.ரா. அவர்களுக்கு
இந்தத் தொகுப்பை
நன்றியுடனும்
அன்புடனும் பணிவுடனும்
உரிமையாக்குகிறேன்.



எஸ்.குருசாமி